# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

இரண்டாம் பதிப்பு

சுடர் 32 கதிர் 295 புரட்டாதி 01ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 17 செப்ரெம்பர் 2017 வள்ளுவர் ஆண்டு 2048

விலை: 30

பக்கங்கள்: 56


### உயர் நீதிமன்ற வியாக்கியானத்தின் பின்னரும்

# தேர்தல் அல்ல திருத்தமே அரசினது தீர்மானம் இது

### 20ஆவது திருத்தத்துக்குத் திருத்தம் 20ஆம் திகதி நாடாளுமன்றம் வரும் சட்டமா அதிபர் உள்ளிட்ட தரப்புகளுடன் தீவிர ஆலோசனை

யாழ்ப்பாணம், செப்ரெம்பர் 17

அரசமைப்புக்கான 20ஆவது திருத்தத்தைக் கைவிடுவதற்கு அரசு தயாராக இல்லை என்று தெரியவருகிறது. தற்போதைய வரைவின் அடிப்படையில் அந்தத்திருத்தத்தைநிறைவேற்றுவதானால் மக்களின் ஆதரவையும் பெறவேண்டும் என்று உயர் நீதிமன்றம் சொல்லியிருக்கும் நிலையில் அது குறித்துக் கூடி ஆராய்ந்த அரசின் உயர்மட்டம், நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோடு மட்டும் நிறைவேற்றக்கூடிய வகையில் வரைவை மீண்டும் திருத்துவது என்று முடிவு செய்துள்ளதாக உதயன் நம்பகரமாக அறிந்தது.

இதையடுத்து பொது வாக்கெடுப்புக்குச் செல்லாத வகையில், 20ஆவது திருத்தத்தை மாற்றியமைப்பதற்கு அரசின் உயர்மட்டம் தீவிர கவனம் செலுத்தி வருகிறது. சட்டமா அதிபர் உட்படச் சட்டத்துறை வல்லுநர்களுடன் இது தொடர்பில் தீவிரமான முழுநேரக் கலந்துரையாடல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உயர் நீதிமன்ற வியாக்கியானத்துடன் ஒத்துப் போகும் வகையில் பொது வாக்கெடுப்பை நோக்கிச் செல்லாதவாறு 20ஆவது திருத்தச் சட்டவரைவில் திருத்தங்களை மேற்கொண்டு எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றில் முன்வைப்பதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபட்டுள்ளதாகவும் தெரிகிறது.

எல்லா மாகாணசபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கும், அதற்கான திக >> 53



## திலீபனின் தூபிக்கு முன்பாகரயர் எரிப்பு

யாழ்ப்பாணம், செப். 17

நல்லூர் பின்வீதியில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவுத் தூபிக்கு முன்பாக இனந்தெரியாத ஒருவரால் நேற்றிரவு ரயர் போட்டு கொளுத்தப்பட்டது. திலீபனின் >> 53

## தேர்தலை எதிர்கொள்ள தமிழ்க் கூட்டமைப்பு தயார்

யாழ்ப்பாணம், செப். 17

அரசு, அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தைக் கைவிட்டால் கிழக்கு மாகாணசபைத் தேர்தலை எதிர்கொள்வதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தயாராகவே இருப்பதாக அதன் பேச்சாளர் தெரிவித்தார். >> 53

### 20ஐ அரசு கைவிட்டால்

# 3 மாகாண சபைகளுக்கு டிசெம்பர் 9இல் தேர்தல்

யாழ்ப்பாணம், செப். 17

அரசமைப்பின் 20ஆவது திருத்தம் நிறைவேற்றப்படுமா இல்லையா என்பது தொடர்பான குழப்பம் தோன்றியுள்ளபோதும் திருத்தம் கைவிடப்பட்டுத் தேர்தல் நடத்தப்படும் சூழல் ஏற்பட்டால் எதிர்வரும் டிசெம்பர் 9ஆம் திகதி தேர்தல் நடத்தப்படலாம் என்று தெரிகிறது.

"அரசமைப்பின் 20ஆவது திருத்தம் கைவிடப்பட்டால் கிழக்கு, வடமத்தி, சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல் டிசெம்பர் 9ஆம் திகதி நடத்தப்படுவதற்கு வாய்ப்பு அதிகம். அதற்குத் தேர்தல்கள் திணைக்களம் தயாராக இருக்கின்றது" இவ்வாறு மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். மொஹமட் 'உதயன்' பத்திரிகைக்குத் தெரிவித்தார்.

இலங்கை அரசு அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தல் நடத்தும் நோக்குடன் 20ஆவது திருத்தச் சட்டவரைவை முன்வைத்தது. இதற்கு எதிராக உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றம், 20ஆவது >> 53

## வடக்கில் இன்று மழை சாத்தியம்

கொழும்பு, செப். 17

வடக்கு உள்பட நாட்டின் பல பாகங்களிலும் இன்று பலத்த காற்றுடன் மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் உள்ளன என்று வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்தது. >> 53

## தேர்தலுக்கான பச்சைக்கொடி அரசிடமிருந்து இன்னுமில்லை

யாழ்ப்பாணம், செப். 17

மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலை நடத்துவதற்கு, தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு அரசின் உயர்மட்டத்திலிருந்து பச்சைக் கொடி நேற்றிரவு வரை காண்பிக்கப்படவில்லை என்று தெரியவருகின்றது. இருப்பினும், தேர்தலை நடத்துவதற்குரிய >> 53

## மின்சாரம் தாக்கி குடும்பத் தலைவர் உயிரிழந்தார்

*அரியாலையில் பரிதாபம்*

யாழ்ப்பாணம், செப். 17

மின்சாரம் தாக்கியதில் குடும்பத் தலைவர் ஒருவர் நேற்று உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் யாழ்ப்பாணம் அரியாலையில் இடம்பெற்றது. அதேயிடம் ஏ.வி.சாலையைச் சேர்ந்த தம்பையா தர்மசீலன் (வயது - 46) என்பவரே உயிரிழந்தார். >> 53

## தரம் 1 மாணவர் அனுமதிக்கு இணையத்தில் விண்ணப்பம்


*வடக்கு மாகாண கல்வி அமைச்சு அறிவிப்பு*

யாழ்ப்பாணம், செப். 17

வடக்கு மாகாணப் பாடசாலைகளில் தரம் ஒன்றுக்கு மாணவர்களைச் சேர்ப்பதற்கான விண்ணப்பங்களை இணையத்தளத்தின் ஊடாக >> 53

## பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதல் சட்டம் கடந்த காலத்துக்குத் தாக்கம் தராது

*இராணுவம் காப்பாற்றப்படும் என்பதில் ரணில் திட்டவட்டம்*



யாழ்ப்பாணம், செப். 17

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டாலும்கூட கடந்த காலங்களில் நடந்த காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்களுக்கு எதிராக அந்தச் சட்டத்தைக் கொண்டு நடவடிக்கை எடுக்க முடியாது என்று தெரிவித்திருக்கிறார் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க.

"எமது இராணுவத்தினரை ஒரு போதும் நாம் பன்னாட்டு நீதிமன்றங்களில் ஏற்றுவதற்கும் அனுமதிக்க மாட்டோம்" என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குருநாகல் மாவட்டத்தின் பொல்பிட்டிகம பிரதேசத்தில் நேற்றுக் காலை நடைபெற்ற >> 53

## குற்றம் செய்யாவிட்டால் ஏன் அச்சமடைகிறார்கள்

*இராணுவத்தினரைப் பார்த்து இப்படிக் கேட்கிறார் சரத் பொன்சேகா*

கொழும்பு, செப். 17

இராணுவத்தினர் எந்தக் குற்றங்களையும் காணாமல் ஆக்கப்படுதல் உள்ளிட்ட எவற்றையும் செய்யவில்லையாயின், காணாமற்போனோர் அலுவலகம் அமைப்பது தொடர்பில் ஏன் பயப்பட வேண்டும். இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதியும், அமைச்சருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன் >> 53


20

SDB TOP SAVER

20 வருட பூர்த்தியை முன்னிட்டு

சேமிப்பு கணக்குக்கு வழங்கும்

- எச் சந்தர்ப்பத்திலும் பணத்தை மீளப்பெறும் வாய்ப்பு
- SDB VISA Debit Card வசதி மற்றும் SMS சேவை
- வட்டி வீதம் 10% (வ.தே.வ 10.46%) வரை*

10%

அதிகூடிய வட்டி

011 5 411 411

SDB வங்கி

சணச அபிவிருத்தி வங்கி பீஎல்சீ, இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையினால் விசேடமாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. Fitch Rating BB+ (stable), Reg No: PB62PQ



வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய ஆரம்பப் பாடசாலை வளாகத்தில் நேற்று சிரமதானம் முன்னெடுக்கப்பட்டது. பெற்றோர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஒன்றிணைந்து சிரமதானப்பணிகளை மேற்கொண்டனர். (ற-10)

# ஜெகத்துக்கு எதிராகச் சாட்சி வழங்குவதில் சரத் தீர்க்கம்

## தன்னிடம் உறுதியுடன் தெரிவித்தார் என அமைச்சர் மனோ கணேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் செப்.17
முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரிய போர்க் குற்றச்சாட்டில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்களுடன் எந்தச் சந்தர்ப்பத்திலும் சாட்சியமளிக்க தயார் என்று பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா உறுதியளித்துள்ளார்.

இவ்வாறு தெரிவித்தார் அமைச்சர் மனோ கணேசன்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த அமைச்சர் மனோ கணேசன் யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளைச் சந்தித்தார். அதன்பின்னர் ஊடகவியலாளர்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா இலங்கையில் இடம்பெற்ற போரின் போது முன்னாள் இராணுவத் தளபதி ஜெகத் ஜயசூரிய போர்க் குற்றச்சாட்டில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் தன்னிடம் உள்ளன என்று அண்மையில் தெரிவித்திருந்தார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் நானும் சரத்தும் கலந்து கொண்டோம். அந்த நிகழ்வில் வைத்து ஜெகத்துக்கு எதிராக விசாரணைகள் இடம்பெறும் பட்சத்தில் என்னிடம் உள்ள அனைத்து ஆதாரங்களையும் சமர்ப்பிக்க தயாராக உள்ளேன். அதிலிருந்து எந்த சந்தர்ப்பத்திலும் நான் பின்வாங்க மாட்டேன் என்று என்னிடம் கூறினார்.

முன்னைய அரசு அரச சார்பற்ற நிறுவனங்களை எதிரிகளாகப் பார்த்தது. தற்போதைய அரசு அவர்களுடன் இணைந்து செயற்படத் தயாராக உள்ளது. சேர்ந்து பயணிக்கின்றது.

இலங்கை அரசு ஐ.நாவில் அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் பின்னடைவில் உள்ளது என்று மனித உரிமைகள் ஆணையாளர் கூறியுள்ளார். அடுத்த ஐ.நா. கூட்டத்தொடரில் இலங்கை அரசின் கழுத்தை சர்வதேசம் நெரிக்கவுள்ளது. இந்தத் தருணத்தில் நாம் என்னசெய்வதென்று எமக்கு தெரியவில்லை.

நாம் மேடைகளில் புத்த பிக்குகளையும் இந்துக் குருமார்களையும் அழைத்து நிகழ்வுகளை கொண்டாடுவதன் ஊடாக மட்டும் நல்லிணக்கத்தை ஏற்படுத்தி விட முடியாது. அடிமட்ட மக்களிடம் இருந்தே நாம் நல்லிணக்கத்தை வளர்க்க வேண்டும். எனது அமைச்சில் கூட மொழிப் பிரச்சினை காணப்படுகின்றது. எனது அமைச்சின் அதிகாரிகள் மொழிப் பிரச்சினைக்கு முகம் கொடுக்கின்றனர். அதற்கு முன்னைய அமைச்சரே காரணமாகும்.

வடக்கு, கிழக்கில் பொலிஸ் அதிகாரம் வேண்டும் என கோசமிடும் அரசியல் வாதிகள் முதலில் தமிழர்களை பொலிஸ் சேவையில் இணைய அறிவுறுத்த வேண்டும்.

பேச்சளவில் அதிகாரம் வேண்டும் என கூறிக் கொண்டிருப்பதில் பயனில்லை - என்றார். (ற-9)

## முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவி வழங்கல்



யாழ்ப்பாணம், செப். 17
இறுதிப் போரில் அங்கவீனமான வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்னாள் போராளிகள் 5 பேருக்கு வாழ்வாதார மற்றும் சுய தொழில் ஊக்குவிப்பு உதவிகள் யாழ். வணிகர் கழகத்தின் ஏற்பாட்டில் வழங்கப்பட்டன.

மானிப்பாய் வீதியிலுள்ள யாழ். வணிகர் கழகப் பணிமனையில் வணிகர் கழகத் தலைவர் இ.ஜனக்குமார் தலைமையில் இந்த நிகழ்வு நேற்று நடைபெற்றது.

இறுதி போரின் போது அங்கவீனமான முன்னாள் போராளிகள் மூவருக்கு சக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டன.

யாழ். வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவரும், வடக்கு மாகாணசபை உறுப்பினருமான இ.ஜெயசேகரன் மாகாண சபை உறுப்பினர் பதவிக் காலத்தில் தனக்கு வழங்கப்படுகின்ற சம்பளப் பணத்தைப் போரால் பாதிக்கப்பட்ட மற்றும் வறுமைக்கோட்டுக்குட்பட்ட வடக்கு மாகாண மக்களுக்கு வாழ்வாதார உதவியாக மாதாந்தம் வழங்க முன்வந்துள்ளார். அந்த உதவிகளை யாழ். வணிகர் கழகம் ஊடாக மாதாந்தம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமான முன்னாள் பெண் போராளியொருவரின் வாழ்வாதாரத்துக்காக 25 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. மற்றொரு முன்னாள் போராளியின் சுய தொழில் முயற்சிக்கு 30 ஆயிரம் ரூபா பெறுமதியான தொழில் உபகரணங்களும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். வணிகர் கழகத்தின் தலைவருடன் வடக்கு மாகாண சபை உறுப்பினரும், வணிகர் கழகத்தின் முன்னாள் தலைவருமான இ.ஜெயசேகரன், வணிகர் கழகப் பொருளாளர், வணிகர் கழக உறுப்பினர்கள், பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ற-10)

## தியாக தீபம் திலீபனின் 2ஆம் நாள் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், செப்.17
தியாக தீபம் திலீபன் நினைவேந்தல் நிகழ்வின் இரண்டாம் நாள் நினைவேந்தல் நேற்றுக் காலை நல்லூரில் உள்ள நினைவுத் தூபியில் நடைபெற்றது.

நினைவேந்தல் குழுவைச் சேர்ந்த திரு சு.சுதாகரன் திலீபனின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணிவித்தார்.

பொது மக்கள் மலர் வணக்கம் செலுத்தினர். உயிர்த் தியாகம் செய்த மாவீரர்கள், மக்களுக்கு 2 நிமிடம் அகவணக்கம் செலுத்தப்பட்டது. (ற)

# வடக்கு மீனவர்கள் சமூகத்தில் அரசு அக்கறை கொண்டுள்ளது

## கைத்தொழில் பிரதிப் பணிப்பாளர் தெரிவிப்பு

மன்னார், செப். 17
கடற்றொழில் தகவல் தொழில்நுட்ப நிலையமானது இலங்கையிலேயே முதலாவதாக மன்னார் மாவட்டத்திலேயே நிறுவப்படுகின்றது. இது வடக்கு மீனவர் சமூகத்தின் வாழ்வாதாரத்தையும் தேவையையும், ஆற்றலையும் மேம்படுத்துவதில் கொழும்பு அரசு கொண்டுள்ள கரிசனையை எடுத்துக்காட்டுகின்றது.

இவ்வாறு கைத்தொழில் பிரதிப் பணிப்பாளர் நிகால் பாலித தெரிவித்தார். மன்னார் கடற்றொழில் நீரியல்வளத்துறைத் திணைக்களத்தின் கீழ் உலக உணவுத் திட்டத்தால் 8 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட இலங்கை தகவல் தொழில்நுட்ப நிலையம் கைத்தொழில் பிரதிப் பணிப்பாளர் நிகால் பாலிதவால் நேற்று திறக்கப்பட்டது. இந்த நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

கடற்றொழிலாளர்களின் தொழில் விருத்தியை மேம்படுத்தவும், கடல்சார் கற்கை நெறிகளின் கல்வியை மேம்படுத்துவதற்காவும் இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது. கடற்றொழில் தொடர்பான தகவல்கள் மற்றும் புள்ளி விவரங்களை வழங்கி மாணவர்களின் கற்றலை மேம்படுத்தி அதன் மூலம் அந்த சமூகத்தையே உச்ச நன்மையை பெறும் வகையில் இலங்கையில் இந்த முதலாவது மீனவர் தகவல் தொழில்நுட்ப நிலையம் திறந்து வைக்கப்படுகின்றது. இதன் வெற்றியை பொறுத்து இந்தத் தகவல் தொழில்நுட்ப நிலையமானது இலங்கையில் 18 மீனவ மாவட்டங்களிலும் திறப்பதற்கு திட்டமிடப்படுகின்றது. இந்த தகவல் தொழில்நுட்ப நிலையத்தை ஆரம்பிப்பதற்கான நிதி உதவியை வழங்கிய உலக உணவுத் திட்டத்தினருக்கும் எனது நன்றிகள் - என்றார். நிகழ்வில் மன்னார் மாவட்ட கடற்றொழில் நீரியல்வளத்துறை திணைக்கள பிரதிப் பணிப்பாளர் மற்றும் மாவட்ட மீனவர் சமூகங்கள் மற்றும் உலக உணவுத் திட்ட பணிப்பாளர் உட்பட பலர் கலந்து கொண்டனர். (ற-10, 101)

# உதயனின் ஏற்பாட்டில் வழிகாட்டல் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், செப்.17
உதயன் பத்திரிகையின் ஏற்பாட்டில் உயர் கல்வி மற்றும் தொழில் வழிகாட்டல் கருத்தமர்வு நேற்று யாழ்ப்பாணம் உதயன் பணிமனையில் நடைபெற்றது.

ஜி.சி.ஈ.சாதாரண தரம் மற்றும் உயர் தரத்தின் பின்னர் மாணவர்களின் கற்றல் தெரிவுகள் அதன் ஊடான தொழில்வாய்ப்புக்களை எவ்வாறு பெறுதல் போன்ற விடயங்கள் தொடர்பாகத் தெளிவூட்டல்கள் வழங்கப்பட்டன. உயர் கல்வி வாய்ப்புக்களை எவ்வாறு தெரிவு செய்தல், பொருளாதார அடிப்படையான பாட நெறிகளை தெரிவு செய்தல், பன்னாட்டு கற்கை நெறிகளை எவ்வாறு அடைதல் போன்ற விடயப் பரப்புக்களில் விரிவுரைகள் நடைபெற்றன.

இதில் வளவாளர்களாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் மூத்த விரிவுரையாளர் எஸ்.சிவகாந்தன், பொறியியலாளர் எஸ்.செந்தில் குமரன் மற்றும் பேச்சாளர் மணிமாறன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர். (ற-10,ரி)





# சூழ உள்ளோருக்கு உரிமைகளை வழங்க வேண்டும்

## வடக்கு முதலமைச்சர் சுட்டிக்காட்டு

கிளிநொச்சி, செப். 17
நாங்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் எமக்கு உரித்துக்களையும், உரிமைகளையும் நன் மதிப்பையும் கொழும்பு அரசிடம் இருந்து கேட்கின்றோம். நாங்கள் அதே உரித்துக்களையும், உரிமைகளையும் நன் மதிப்பையும் எம்மைச் சுற்றியுள்ள எம் மக்களுக்கு வழங்குகின்றோமா என்று எண்ணிப் பார்க்க வேண்டும்.

இவ்வாறு வடக்கு மாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மாகாண மட்ட வணிக கண்காட்சியும், தொழில் சந்தையும் கிளிநொச்சியில் நேற்று நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வடக்கு மாகாண முதலமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது;

"சமதளத்தில் ஒன்றாக" எனும் தொனிப்பொருளில் கண்காட்சி நடத்தப்படுகின்றது. சமநிலையில் அனைவரும் என்பதே அதன் பொருள். மாற்றுத் திறனாளிகளை சமநிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்பதே இந்தச் செயற்றிட்டத்தின் குறிக்கோள். அவர்களை வாழ்வாதார உதவிகள் மூலமாக தொழில் முனைவோராக அல்லது வர்த்தகர்களாக மாற்றம் பெறச் செய்வதன் மூலம் அவர்களையும் ஏனைய மக்களுக்குச் சமனான ஒரு சமநிலை அந்தஸ்த்தைப் பெறக்கூடியவர்களாக உருமாற்றம் பெறச் செய்யலாம் என்பதே இந்தச் செயல்திட்டத்தின் உத்தேசம்.


கடந்த கால போரின் காரணமாக நாம் பல இழப்புக்கள், கசப்பு உணர்வுகளுக்கு ஆளானோம். மாற்றுத் திறனாளிகளாக வலிந்து உருவாக்கப்பட்ட எமது இளைஞர் யுவதிகள் பல்லாயிரக்கணக்கில் எத்தனையோ சோகச்சுமைகளை மனதில் ஏந்தியவாறு எம்மிடையே வாழ்கின்றனர். அவர்களின் சோகச் சுமை பற்றி எம்மில் பலர் சிந்திப்பதில்லை. அவர்களை நாம் அரவணைத்து அன்பு பாராட்டி எம்முடன் அழைத்துச் செல்ல நாம் முன்வர வேண்டும்.

மாற்றுத் திறனாளிகள் தாம் பெற்ற பயிற்சிகளின் அடிப்படையில் அவர்களின் தொழிற்திறன் உற்பத்திகளை இன்றைய இந்த கண்காட்சி நிகழ்வுகளில் காட்சிப்படுத்தியிருக்கின்றார்கள். இதன் மூலம் மாற்றுத் திறனாளிகளின் வர்த்தகத்துக்கான உற்பத்திப் பொருள்களை அவற்றின் தரங்களை மக்கள் அறிந்து கொள்வதற்கும் அந்தப் பொருள்களின் தேவை உடனடியாக இல்லாது விட்டாலும் பிறிதொரு சந்தர்ப்பத்தில் அந்தத் தேவைகள் உணரப்படும் போது இந்த உற்பத்தியாளர்களை அணுகி அவர்களின் உற்பத்திப் பொருள்களை கொள்வனவு செய்து கொள்வதற்கும் இன்றைய கண்காட்சி வழி வகுக்கும்.

இது போன்ற நல்ல கைங்கரியங்களை ஆற்றுவதற்கு வலுவுள்ளவர்கள், சமூக அமைப்புக்கள், பணமுடையவர்கள் முன்வர வேண்டும். அதன் மூலம் மாற்றுத் திறனாளிகளை பிரித்துப் பார்க்கின்ற ஒரு நிலை இல்லாமல் ஆக்கப்பட்டு அவர்கள் அனைவரும் வல்லவர்களாக மாற்றப்பட வேண்டும். அந்த நல்ல நாளை விரைவில் வரச் செய்வதற்காக அனைவரும் உங்கள் உதவிக் கரங்களை நீட்டுங்கள் - என்றார். (ҧ-10)



## வணிகக் கண்காட்சி கிளிநொச்சியில்



கிளிநொச்சி, செப்.17
மாகாண மட்ட வணிகக் கண்காட்சியும், தொழில் சந்தையும் நேற்றுக் கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமாகின. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் அவற்றை வைபவரீதியாக ஆரம்பித்தார்.

"சமதளத்தில் ஒன்றாக" எனும் தொனிப்பொருளில் நடைபெறும் இந்தக் கண்காட்சியில் மாற்றுத் திறனாளிகளால் உருவாக்கப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. விற்பனையும் செய்யப்பட்டன. நிகழ்வில் வடக்கு மாகாண கூட்டுறவு அமைச்சர் அனந்தி சசிதரனும் கலந்து கொண்டார். (ҧ-10,35)

## குளவிக் கொட்டுக்கு இலக்கானவர் மருத்துவமனையில்

திருகோணமலை, செப். 17
திருகோணமலை மஹதிவுல்வெவ சிவில் பாதுகாப்பு திணைக்களத்தில் கடமையாற்றிய உத்தியோகத்தர் குளவிக் கொட்டுக்கு இலக்கான நிலையில் மஹதிவுல்வெவ பிரதேச மருத்துவமனையில் நேற்றுச் சேர்க்கப்பட்டார்.

அதே இடத்தைச் சேர்ந்த கே.பீ.காமினி (வயது46) என்பவரே பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். சிவில் பாதுகாப்புத் திணைக்களத்துக்குச் சொந்தமான விடுதி ஒன்றுக்கு விறகு வெட்டுவதற்காக காட்டுப் பகுதிக்கு சென்று வீழ்ந்து கிடந்த மரத்தை வெட்டிய போது குளவிக்கூடு கலைந்து குளவிகள் தாக்கின என்று கூறப்படுகின்றது. (ҧ-10, 45)

## யானையின் தாக்குதலில் இளைஞர் ஒருவர் காயம்

மட்டக்களப்பு, செப்.17
காட்டு யானையின் தாக்குதலில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்தார். இந்தச் சம்பவம் மட்டக்களப்பு வெல்லாவெளிப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட சின்னவத்தையில் நேற்று நடந்துள்ளது. யானை 5 குடியிருப்புக்களையும், நெல்மூடைகளையும் சேதப்படுத்தியது என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரவு வேளை குடியிருப்புகளுக்குள் நுழைந்த யானை அங்கு சேமித்து வைக்கப்பட்டிருந்த நெல் மூடைகளைச் சேதப்படுத்தியது. உறக்கத்தில் இருந்த விஸ்வலிங்கம் சுபாஸ்கரன் (வயது22) என்பவர் யானையின் தாக்குதலுக்கு இலக்கானார். அவர் அம்பாறை போதனா மருத்துவனையில் சேர்க்கப்பட்டார்.

அந்தப் பகுதியில் தொடர்ச்சியாக யானைகளின் அச்சுறுத்தல் காணப்படுகின்றது என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (ҧ-10)

## ரஞ்சன், சரத்துக்கு எதிராகப் போராட்டம்







திருகோணமலை, செப். 17
திருகோணமலை வாழ் பௌத்த குருமார்களும், பௌத்த மக்களும் ஒன்றிணைந்து திருகோணமலை நகரின் மணிக் கூட்டுகோபுர சந்தியில் நேற்றுக் காலை 10 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க பௌத்த குருமார்களுக்கு எதிராக கருத்து கூறியமைக்கும், இராணுவத்தினர் போர்க் குற்றங்களில் ஈடுபட்டது குறித்து மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்கு முன்னால் சாட்சியம் அளிக்க தாம் தயார் எனக் கூறிய அமைச்சர் சரத்பொன்சேகாவுக்கும் எதிராகவுமே இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது என்று அதில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் முடிவில் ரஞ்சன் ராமநாயக்க மற்றும் சரத்பொன்சேகா இருவரின் உருவபொம்மைளும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களால் எரியூட்டப்பட்டன. (ҧ-10)

உங்கள் பிரதேசங்களில் நடக்கும் நிகழ்வுகளை உலகறியச் செய்ய எமக்கு அனுப்புங்கள்



உதயன் DIGITAL newuthayan.com
newuthayan.com
Leading Tamil News website in Sri Lanka
(+) 94 77 316 5555

# கற்கும் பாடங்களின் சரியான தெரிவே வேலை வாய்ப்புக்கு உதவி செய்யும்

## சரவணபவன் எம்.பி. அறிவுரை





யாழ்ப்பாணம், செப்.17
இனிவரும் காலங்களில் வேலை வாய்ப்பு சவாலான விடயமாகும். மாணவர்கள் சரியான பாடங்களைத் தெரிவு செய்து கற்பதே அவர்களின் எதிர்கால வேலை வாய்ப்புகளுக்கு உதவும்.
இவ்வாறு தெரிவித்தார் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.
யாழ்ப்பாணம், இணுவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு நிகழ்வு நேற்றுக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரியின் அதிபர் ரி.தேவதயாளன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது;
பல்கலைக்கழக நுழைவு கிடைக்க வேண்டும் என்பதற்காக பல மாணவர்கள் கலைத் துறையைத் தெரிவு செய்கின்றனர். பட்டம் பெற்ற பிறகு அவர்கள் வேலை தேடும் போது மிகவும் சிரமப்படுகின்றனர். உலகம் மிக வேகமாக முன்னேறிச் செல்கின்றது. தகவல் தொழில்நுட்பம், விஞ்ஞானம் வளர்ந்து செல்கின்றது. அவற்றுக்கு ஏற்ற விதத்தில்தான் வேலை வாய்ப்பின் தன்மைகளும் மாற்றமடைகின்றன. முன்னர் பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றால் ஒரு நல்ல வேலை கிடைத்து விடும் என்ற நிலை காணப்பட்டது. இப்போது அவ்வாறான நிலை இல்லை. இந்த மாற்றத்தை உணர்ந்து மாணவர்கள் கலைத்துறையை மட்டும் தெரிவு செய்யாமல் வேறு துறைகளிலும் நாட்டம் கொண்டு கற்கவேண்டும். குறிப்பாக விஞ்ஞான, கணிதத் துறைகளை நாட வேண்டும்.
அதேபோன்று பொருளாதாரம் சார்ந்த கற்கை நெறியிலும் மாணவர்கள் ஈடுபட வேண்டும். அப்போது தான் தொழிற்சாலைகளில் எமது பிள்ளைகள் பதவி வகிக்க முடியும்.
நகரப்புறப் பாடசாலைகளில் மாணவர்கள் எவ்வாறு அனைத்து வளங்களையும் பயன்படுத்தி கல்வி கற்கிறார்களோ அதைப் போன்று ஏனைய பகுதி மாணவர்களும் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக அயல் பாடசாலைத் திட்டம் நடைமுறைக்கு வந்துள்ளது. இதன் மூலம் மாணவர்கள் சிறப்பான கல்வி முறையைப் பெற்றுக்கொள்ள முடியும். அனைவரும் நகரப் புறத்தில் உள்ள பாடசாலைகளில் தங்கள் பிள்ளைகள் கல்வி கற்க வேண்டும் என்று விரும்புகின்றார்கள். ஆனால் ஏனைய பாடசாலைகளிலும் கற்றுப் பல்கலைக் கழகம் சென்ற மாணவர்களும் உள்ளனர். மாணவர்களைக் கற்றல் செயற்பாடுகளுடன் மட்டும் நிறுத்தி விடாமல் கலை சார்ந்த விடயங்களையும் அவர்கள் பெறுவதற்குப் பெற்றோர்கள் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும்.
தற்காலத்தில் பாடசாலைக் கல்வியை விட தனியார் கல்விக்கு அனைவரும் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றார்கள். அதனால் கலைத்துறையில் பிள்ளைகளை ஈடுபடுத்த முற்படுவது இல்லை.
தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை நிறைவடைந்து வினாத்தாள் திருத்தும் பணிகளுக்காக எமது ஆசிரியர்கள் சென்றனர். அங்கே பரீட்சைத் திணைக்களம் வழங்கிய வினாத்தாள் விடைகளின் ஒழுங்கமைப்புக்கு ஏற்ப வினாத்தாள்கள் திருத்தப்பட்டன. சில வினாக்களுக்குப் புள்ளிகள் வழங்கும்போது, இரண்டு விதமான பதில்கள் அமையக்கூடியனவாக இருந்தன. அதற்கான புள்ளிகளை வழங்கியே ஆக வேண்டும். பெரும்பான்மை இன ஆசிரியர்கள் துணிவாகக் கேட்டு அந்தப் புள்ளிகளைப் பெற்றுக் கொடுத்திருந்தனர். ஆனால் எமது ஆசிரியர்கள் அவ்வாறு அதிகாரிகளைக் கேட்கவில்லை. ஒரு புள்ளி தான் ஒரு மாணவனின் நிலையைத் தீர்மானிக்கும். வினாத்தாள்கள் திருத்தும் போது இவ்வாறான நிலை ஏற்பட்டு இருப்பின் என்னிடம் தெரிவியுங்கள் அதனை உரிய அமைச்சின் ஊடாகப் பெற்றுத்தர வழிவகைகள் செய்வேன் - என்றார்.
நிகழ்வில் கல்வி மற்றும் இணை பாட விதான செயற்பாடுகளில் வெற்றி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம் பெற்றன.
(ந-10, ரி)



## சாவகச்சேரிக்குள் புகுந்த 5 அடி முதலை சிக்கியது!

சாவகச்சேரி, செப்.17
சாவகச்சேரியில் நள்ளிரவு வேளை மக்கள் குடியிருப்புக்குள் புகுந்த முதலை அந்தப் பகுதி இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை கச்சாய் சாலை, புனித லிகோரியார் ஆலயத்துக்கு அருகே நடந்துள்ளது.
குடியிருப்புக்குள் புகுந்த முதலை ஆட்டைப் பிடிக்க முயன்றுள்ளது. அதைக் கண்ட வீட்டு உரிமையாளர் கூக்குரலிட்டுள்ளார். அங்கு திரண்ட அயலவர்கள் சுற்றிவளைத்து முதலையைப் பிடித்து ஆலய வளாகத்தில் உள்ள கம்பத்தில் கட்டி வைத்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.
அந்தப் பகுதிக் கிராம அலுவலர் ஊடாக வன ஜீவராசிகள் திணைக்களத்தினருக்கு அறிவிக்கப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டது.
அந்தப் பகுதியில் குளங்கள் இல்லாத நிலையில் முதலை வந்தமை அந்தப் பகுதி மக்களை ஆச்சரியப் படுத்தியுள்ளது.
(ந-10.9)

## பொலிஸ் உத்தியோகத்தர் உயிரிழப்பு

கொழும்பு, செப்.17
அப்புத்தளை, பொரலந்தை பொலிஸ் பயிற்சிக் கல்லூரியில் கடமையாற்றிய பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை நடந்துள்ளது.
அம்பாறையைச் சேர்ந்த 23 வயதான ஒருவரே உயிரிழந்துள்ளார். அவருக்கு வழங்கப்பட்டிருந்த துப்பாக்கியைப் பயன்படுத்தி உயிரை மாய்த்துக் கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.
இது தொடர்பில் பொகவந்தலாவப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ந-10)

## காணாமல் போனவர் சடலமாக மீட்பு

கொழும்பு, செப். 17
எஹெலியகொட - பரகடுவப் பகுதியில் உள்ள நீரோடையில் இருந்து பெண்ணின் சடலமொன்று மீட்கப்பட்டுள்ளது என்று குருவிட்டப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்தது. எஹெலியகொட - மெதிரிபிடிய பகுதியைச் சேர்ந்த 55 வயது நிரம்பிய திருமணமாகாத பெண் ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
இந்தப் பெண், கடந்த 13ஆம் திகதியில் இருந்து காணாமல் போயிருந்த நிலையில் நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகின்றது.
(ந-10)



## உயர் தொழில் வழிகாட்டல் கண்காட்சி கிளிநொச்சியில்

கிளிநொச்சி, செப்.17
வடக்கு மாகாணக் கல்வி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஏற்பாட்டில் 2017ஆம் ஆண்டின் உயர்கல்வித் தொழில் வழிகாட்டல் கண்காட்சி நேற்று ஆரம்பமானது.
கிளிநொச்சி மகா வித்தியாலயத்தில் நடைபெறும் கண்காட்சியை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரன் ஆரம்பித்தார்.
மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்துரைகளும் நடைபெற்றன.
நிகழ்வில் கல்வி அதிகாரிகள், அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.
கண்காட்சி இன்றும் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.
(ந-35)

## சமூக சேவையாளர்கள் பாராட்டு விழா



முல்லைத்தீவு தண்ணீரூற்றில் சமூகசேவையாளர்கள் பாராட்டுவிழா அகில இன நல்லுறவு ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று இடம்பெற்றது.
கல்வி, கலை, கலாசார, சமூகநலத் துறைகளில் தேசிய ரீதியில் தெரிவு செய்யப்பட்ட புத்திஜீவிகள் நிகழ்வில் கௌரவிக்கப்பட்டனர்.
நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினர்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா, மாவட்டச் செயலர் ரூபவதி கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிவசக்தி ஆனந்தன், காதர் மஸ்தான், மற்றும் சமூகசேவையாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.
(ந-10)

# உணவு ஒறுப்பிலுள்ள கைதிகளின் கோரிக்கைகளை ஆராயக் குழு

கொழும்பு, செப். 17
தண்டனைக் குறைப்பை வலியுறுத்தி கண்டி போகம்பரை சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள தூக்குத் தண்டனை மற்றும் ஆயுள் தண்டனைக் கைதிகள் உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களின் கோரிக்கைகளை ஆராய சிறப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பில் சிறைச்சாலைகள் ஊடகப் பேச்சாளர் துஷார உபுல்தெரனிய தெரிவித்த்தாவது:

போகம்பரை சிறைச்சாலையில் தூக்குத் தண்டனை மற்றும் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட 30 கைதிகள் நேற்றுக் காலை முதல் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். அவர்களின் போராட்டத்துக்கு ஆதரவளிக்கும் முகமாக வெலிக்கடை சிறைச்சாலையிலுள்ள 30 கைதிகளும் நேற்று மாலை முதல் உணவு ஒறுப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். தூக்குத் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் தமக்கு ஆயுள் தண்டனை வழங்குமாறும், ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட கைதிகள் தமது தண்டனைக் காலத்தை 20 வருடங்களாகக் குறைக்குமாறும் கோரியுள்ளனர்.

எதுஎவ்வாறு இருப்பினும், இது குறித்து ஆராய சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் நீதி அமைச்சு இணைந்து குழுவொன்றை அமைத்துள்ளன. அந்தக் குழுவினது அறிக்கை வெகு விரைவில் நீதி அமைச்சிடம் முன்வைக்கப்படும் - என்றார். (வ)

## மகிந்த தரப்புக் கட்சியின் பணிகளுக்காக

# பசில், சந்திரசிறி இணைந்து அடுத்த வாரம் யாழ். வருகை

கொழும்பு, செப். 17
முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ச மற்றும் வடக்கு மாகாண முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருகின்றனர். முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தரப்பால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பொதுஜன மக்கள் முன்னணியை வடக்கு மாகாணத்தில் காலூன்றும் செயற்பாடுகளை முன்னெடுக்கவே அவர்கள் இருவரும் யாழ்ப்பாணத்துக்கு வருகை தருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

மகிந்த ராஜபக்ச ஆட்சிக்காலத்தில் அவரது ஆலோசகராகவும் அமைச்சராகவும் இருந்த பசில் ராஜபக்சவே, வடக்கின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாகச் செயற்பட்டார். வடக்கின் வசந்தம் என்ற பெயரில், எல்லாத் திட்டங்களையும் அவரே கையாண்டார்.

அந்தக் காலகட்டத்தில் வடக்கு மாகாண ஆளுநராக இருந்த மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, பசில் ராஜபக்சவுடன் இணைந்து, வடக்கு மக்களையும், அரச நிர்வாகத்தையும் இராணுவ ஆட்சிப் பிடிக்குள் வைத்திருந்தார்.

ஆட்சிமாற்றத்துக்குப் பின்னர், வடக்கு அரங்கில் இருந்து அகற்றப்பட்ட இவர்கள் இருவரும், மீண்டும் ஒன்றிணைந்து வடக்குக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இவர்கள் இருவரும் எதிர்வரும் 21ஆம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து மூன்று நாள்களுக்குத் தங்கியிருப்பர். இதன்போது, கடந்த ஆட்சிக்காலத்தில் தமக்கு நெருக்கமாக இருந்தவர்கள், ஒத்துழைப்பு வழங்கியவர்களை அழைத்துப் பேசத் திட்டமிட்டுள்ளனர்.

மகிந்த ஆதரவு பொதுஜன மக்கள் முன்னணியின் யாழ்ப்பாண அமைப்பாளராக ஈ.பி.டி.பியின் முன்னாள் ஆதரவாளர் தம்பித்துரை ரஜீவ் நியமிக்கப்பட்டிருந்தார். அவருடன் இணைந்து மேலும் 40 பேருக்கு மகிந்த ஆதரவுக் கட்சியின் யாழ்ப்பாணத்துக்கான முக்கிய பொறுப்புக்களும் வழங்கப்பட்டிருந்தன.

அடுத்த சில மாதங்களில் நடத்தப்படவுள்ள உள்ளூராட்சித் தேர்தல், மற்றும் அடுத்த ஆண்டில் நடத்தப்படவுள்ள மாகாண சபைத் தேர்தல் ஆகியவற்றை இலக்கு வைத்தே, பசில் ராஜபக்ச சந்திரிசிறி கூட்டணி மீண்டும் வடக்கில் செயற்படத் தொடங்கியுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (வ-5)

## கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில்

# 6 மாதங்கள் விளக்கமறியலிலிருந்த குடும்பத் தலைவருக்குப் பிணை

யாழ்ப்பாணம், செப். 17
கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு 6 மாதங்களாக விளக்கமறி யலிலிருந்த அச்சுவேலியைச் சேர்ந்த குடும்பத்தலைவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் பிணை வழங்கியது.

கிளிநொச்சி, பரந்தனில் கடந்த மார்ச் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் கொழும்பு சேவையில் ஈடுபட்ட பேருந்தின் ஆசனத்துக்குக் கீழிருந்து ஒரு கிலோ 972 கிராம் கஞ்சா மீட்கப்பட்டது. அந்த ஆசனத்திலிருந்தவரையும் அவருக்கு அருகில் இருந்தவரையும் கிளிநொச்சிப் பொலிஸார் கைது செய்தனர். அவர்கள் இருவரும் கிளிநொச்சி நீதிவான் மன்றின் உத்தரவில் விளக்கமறியலில் வைக் கப்பட்டனர்.

இதில் கஞ்சா மீட்கப்பட்ட ஆசனத்திலிருந்தவருக்கு அருகே இருந்து பயணித்த அச்சுவேலியைச் சேர்ந்த குடும்பத் தலைவர் முதலாவது சந்தேகநபராக பொலிஸாரால் குற்றஞ்சாட்டப்பட்டார். அவர் சார்பில் அவரது குடும்பத்தின ரால் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் பிணை விண்ணப்பம் செய்யப்பட்டது. இந்த மனு மீதான விசா ரனை கடந்த வியாழக் கிழமை இடம்பெற்றது.


"சந்தேகநபர் 25 ஆயிரம் ரூபா காசுப் பிணையிலும், தலா 50 ஆயிரம் ரூபா பெறுமதியான இரு ஆள் பிணையிலும் விடுவிக்கப்படுகிறார். அவரிடம் கடவுச் சீட்டு இருப்பின் அதனை கிளிநொச்சி நீதிவான் மன்றில் ஒப்படைக்க வேண்டும். சந்தேகநபர் வெளிநாடு செல்வதற்கு தடை விதிக்கும் வகையில் குடிவரவு குடியகல்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிடப்படுகிறது" என்ற நிபந்தனைகளுடன் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் இளஞ்செழியன் பிணை மனு மீதான கட்டளையை வழங்கினார். (வ-8)

# ஐம்பதிலும் ஆசை வரும்

"ஐம்பதிலும் ஆசைவரும்" காட்சியும் கானமும் போட்டி நிகழ்வு இன்று காலை 8.30 மணிக்கு மருதனார் மடத்தில் அமைந்துள்ள வட இலங்கை சங்கீத சபை அரங்கில் இடம்பெறவுள்ளது. குபேரகா கலைக்கழக மன்றத்தால் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. உடுவில் பிரதேச செயலகத்தின் வழிகாட்டலில் நிகழ்வு இடம்பெறும். அத்தோடு 50 வயதுக்கு மேற்பட்ட கலைஞர்களுக்கு வடக்கு மாகாண ரீதியிலே இந்தப் போட்டி நடத்தப்படுகிறது என்று அறிவிக்கப்பட்டது. (21)

## மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 11 . 10 . 1960 | 15 . 09 . 2017 |



# Dr. பாலசுந்தரம் ஆனந்குமார்

**(Chairman - British Business College )**

கொழும்பைப் பிறப்பிடமாகவும், வெள்ளவத்தை பின்டோபிளேஸை வதிவிடமாகவும் கொண்ட Dr.பாலசுந்தரம் ஆனந்குமார் (15.09.2017) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுந்தரம் - தேவலக்ஷ்மி தம்பதியரின் அருமைமகனும் சுந்தரலிங்கம் - நாகபூசணிதேவி தம்பதியரின் மருமகனும் வாசுகி (முன்னாள் ஆசிரியை, புனித பிறிஜட்ஸ் கன்னியர்மடம்) அவர்களின் அன்புக்கணவரும் லினேஷ் (247 Tochies), கிரிஷான், கேஷான் (புனித பேதுரு கல்லூரி), நாராயினி, ஸ்ரீஹரி (சைவ மங்கையர் கழகம்) ஆகியோரின் அன்புத்தந்தையும் சுலோச்சனாவின் அருமைச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் இன்று (17.09.2017) ஞாயிற்றுக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் நாளை (18.09.2017) திங்கட்கிழமை பி.ப. ஒரு மணிக்கு ஆரம்பமாகி பி.ப. 3 மணிக்கு பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**4, பின்டோ பிளேஸ்,**
**கொழும்பு - 06.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

# கதிரேசு கோபாலகிருஸ்ணன்



வசாவிளானை பிறப்பிட மாகவும் கோப்பாய் தெற்கு, மாதாகோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரேசு கோபாலகிருஸ்ணன் 15.09.2017 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரேசு - தெய்வானைதம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்றவர்களான சின்னப்பு - சின்னக்குட்டி தம்பதியரின் அன்புமருமகனும் சின்னத்தங்கத்தின் அன்புக்கணவரும் காலஞ்சென்றவர்களானசெல்வமலர், சரஸ்வதி, யோகேஸ்வரி மற்றும் விஜயன் (அமெரிக்கா), பாலசுப்பிரமணியம் (பிரான்ஸ்), ரவிநாதன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புச்சகோதரனும் தர்மபாலன், யோகேஸ்வரன், தனங்குமார், தெரன்ஸ்(ரவி), எலிசபெத்ராணி (அமெரிக்கா), தேவராணி (பிரான்ஸ்), பிறேமசாந்தி (ராதா - அமெரிக்கா) ஆகியோரின் மைத்துனரும் கேமலதா (பிரான்ஸ்), றதீஸ் (லண்டன்), கோமதி (லண்டன்), கௌசல்யா, றொபின்சன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ரவிச்சந்திரன் (பிரான்ஸ்), பிரதீபா (லண்டன்), சந்திரகுமார் (லண்டன்), சில்வெஸ்ரர் (பிரான்ஸ்), அபிலாஷா(லண்டன்) ஆகியோரின் அன்புமாமனாரும் அபிஷா, அஜயந்தன், அவிந்திக்கா, அதுஷன், அனிஸ்கா, சுவிற்ஷா, அக்ஷிகா, சுஜித், டானியா, கம்ஷாயினி, பவித்திரா, றஸ்மிகா, அத்விக் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2017) ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்தகனக்கிரியைக்காககைதடிஇந்துமயானத்திற்குஎடுத்துச் செல்லப்படும். இந்ததகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: மருமகன்**
**தர்மபாலன் அரவிந்தன் (லண்டன்)**
**077 422 4801**

## மரண அறிவித்தல்

பிறப்பு 20 . 04 . 1971



இறப்பு 15 . 09 . 2017

## ஸ்ரீகஜேந்திரநாதன் துரைராசா

கிளிநொச்சி ஜெயந்திநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட ஸ்ரீகஜேந்திரநாதன் துரைராசா அவர்கள் 15.09.2017 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான துரைராசா - ஞானசக்தி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், நடராசா - நகுலேஸ் தம்பதிகளின் அன்பு மருமகனும், துஷ்யந்தி (லதா) அவர்களின் அன்புக் கணவரும், சகீதா, விதுஷா, சுகிர்தன், அனுதன், கஜலதன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற செல்வராணி, யோகராணி, காலஞ்சென்ற ஸ்ரீகந்தராசா, யமுனாராணி, ராதாராணி, ஸ்ரீபரந்தாமன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், துஷியந்தன், முகந்தன், சுகந்தன், காலஞ்சென்ற அனுதன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2017) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

ஜெயந்திநகர்,
கிளிநொச்சி.

தகவல்:
K.K.மூர்த்தி (மைத்துனர்)
077 962 0338 (ராதா)





Pearson | BTEC | UNIVERSITY OF CANBERRA | RICS | CIOB

BTEC HND in COMPUTING & SYSTEM DEVELOPMENT Leading to BSc (Hons)
BTEC HND in CIVIL ENGINEERING Leading to B.Eng (Hons)
BTEC HND in BUSINESS MANAGEMENT Leading to BA (Hons)
LLB (Hons)
BTEC HND in QUANTITY SURVEYING Leading to BSc (Hons)
BTEC HND in Biomedical Science Leading to BSc (Hons)
UGC Recognized
TVEC Approved

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES
Tenny 0766 693 681
Sanchu 0777 102 131
INTAKE NOW ON
BCAS Jaffna Campus, #. 16, Point Pedro Road, Jaffna
20 YEARS
021 221 9910 | 011 259 7217 | info@bcas.lk | www.bcas.lk

# உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறை

உலகின் தலைசிறந்த ஆங்கில பயிற்சிப்பட்டறையாக 7th World Scientific Congress இனால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது...

வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்

ISO 9001:2008 CERTIFIED

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

நிட்டம்புவ | காலி | மாத்தறை | அநுராதபுரம் | நுகேகொட | கம்பஹா | யாழ்ப்பாணம்
நீர்க்கொழும்பு | கண்டி | குருநாகல் | கிரிபத்கொட | இரத்தினபுரி | எம்பிலிப்பிட்டிய

## இரண்டு மாத காலப் பயிற்சி 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

03, October, 2017 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

## IELTS

சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

## வார இறுதி வகுப்புகள் 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

## KIDS' Class Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

சேர்வதற்கு இன்றே பதிவு செய்யவும்

British Way® English Academy

Contact (Jaffna Branch) : 021 300 55 55
நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk
No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

## பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள

# சுகாதர உத்தியோகத்தரின் சான்றிதழால் சிக்கல்

யாழ்ப்பாணம், செப்.17

யாழ்ப்பாண மாநகர சபையில் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களின் விவகாரம் தொடர் நெருக்கடிக்குள் அகப்பட்டுச் செல்கின்றது. சுகாதர உத்தியோகத்தர்களுடைய நிரந்தர நியமனத்தின்போது சுகாதார உத்தியோகத்தர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ் மீளாய்வுக்காக பரீட்சைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டது

கடந்த 4 மாதங்களாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட 5 சுகாதாரத் தொண்டர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். யாழ்ப்பாணம் மாநகர சபையில் அவர்கள் நீண்டகாலம் பணியாற்றினர். எனினும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்தே அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். சுகாதார அமைச்சின் உத்தரவை மீறி அவர்கள் பணிப்புறக் கணிப்பை தொடர்ந்ததால் 5 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களும் தாமாகவே பணியில் இருந்து விலகியதாக கருதப்படுவர் என சுகாதார திணைக்களம் அறிவித்தது. அதற்கான கடிதமும் அமைச்சால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த்து. இதனால் இலங்கையின் சகல பகுதியிலும் பணியாற்றும் சுகாதார உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி ஓர் போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர்.

> “பரீட்சை நடைபெற்ற தினம் அவர் தற்காலிகமாக பணியில் இருந்துள்ளார். பணிக்கான தினவரவு இடாப்பில் அவர் கையெழுத்திட்டுள்ளார். இவ்வாறு பணியில் இருந்த நபர் பரீட்சைக்குத் தோற்றியிருக்க முடியுமா, பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவர் எவ்வாறு பணியில் இருந்தார்”

இந்த நிலையில் யாழ்ப்பாணம் மாநகர சபையில் பணியாற்றி தற்போது பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ள 5 சுகாதார உத்தியோகத்தர்களில் ஒருவர் தற்காலிக பணியில் இருந்த போது நிரந்தர நியமனத்துக்காக அதிகாரிகளுக்கு அவரால் சமர்ப்பிக்கப்பட்ட பரீட்சைச் சான்றிதழ் தொடர்பாக சர்ச்சை எழுந்துள்ளது. பரீட்சை நடைபெற்ற தினம் அவர் தற்காலிகமாக பணியில் இருந்துள்ளார். பணிக்கான தினவரவு இடாப்பில் அவர் கையெழுத்திட்டுள்ளார். இவ்வாறு பணியில் இருந்த நபர் பரீட்சைக்குத் தோற்றியிருக்க முடியுமா, பரீட்சைக்குத் தோற்றியிருந்தால் அவர் எவ்வாறு பணியில் இருந்தார் என்ற சர்சசையே எழுந்துள்ளது என தெரிவிக்கப்பட்டது.

சர்ச்சைக்குரிய உத்தியோகத்தரால் சமரப்பிக்கப்பட்ட சான்றிதழின் பிரதியும், தினவரவு இடாப்பின் பிரதிகளும் தற்போது பரீட்சை ஆணையாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான முடிவினை வடக்கு மாகாண சுகாதர அமைச்சு கோரியுள்ளது. இதனால் குறித்த சுகாதார உத்தியோகத்தரின் பணியில் மேலும் நெருக்கடி ஏற்படுவதோடு பரீட்சையின் பெறுபேற்றினை பரீட்சை ஆணையாளர் மீளப்பெறும் சந்தர்ப்பத்தில் குறித்த திகதியில் இருந்து பெறப்பட்ட ஊதியம் முழுவதும் உத்தியோகத்தரால் மீளச் செலுத்த வேண்டிய நிலமையும் ஏற்படலாம் என தெரிவிக்கப்படுகிறது. (21, 101)

# வடக்கு சுகாதார அமைச்சரை விமர்சித்த பொதுச் சுகாதார பரிசோதகரிடம் விளக்கம்

## எழுத்து மூலம் வழங்குமாறு அமைச்சின் செயலர் கடிதம்

யாழ்ப்பாணம், செப்.17

வடக்கு மகாண சுகாதார அமைச்சரை விமர்சித்து உரையாற்றிய பொதுச் சுகாதார பரிசோதகரிடம் வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் விளக்கம் கோரியுள்ளார்.

கடந்த 4 மாதங்களாக யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட 5 சுகாதாரத் தொண்டர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர். யாழ்ப்பாணம் மாநகர சபையில் அவர்கள் நீண்டகாலம் பணியாற்றினர். எனினும் வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டது. இந்த இடமாற்றத்தை ஆட்சேபித்தே அவர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுகின்றனர். சுகாதார அமைச்சின் உத்தரவை மீறி அவர்கள் பணிப்புறகணிப்பை தொடர்ந்ததால் 5 பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களும் தாமாகவே பணியில் இருந்து விலகியதாக கருதப்படுவர் என சுகாதார திணைக்களம் அறிவித்தது. அதற்கான கடிதமும் அமைச்சால் அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் இலங்கையின் சகல பகுதியிலும் பணியாற்றும் 300க்கும் அதிகமான சுகாதார உத்தியோகத்தர்கள் யாழ்ப்பாணத்தில் ஒன்று கூடி ஓர் போராட்டத்தினை மேற்கொண்டிருந்தனர். யாழ்ப்பாணம் மாநகர சபையில் பணியாற்றிய சுகாதர பரிசோதர்களுக்கு சுகாதார அமைச்சின் ஊடாக இடமாற்றம் வழங்கப்பட்டதனைக் கண்டித்து தொடர் பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் அவர்களுக்குத் தொடர்ந்தும் மாநகரசபையிலேயே பணியாற்ற சந்தர்ப்பம் அளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியே அனைவரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இதன் போது வட மாகாணத்தைச் சேர்ந்த ஓர் பொதுச் சுகாதார உத்தியோகத்தர் வடக்கு மாகாண சபை தொடர்பிலும் மாகாண அமைச்சர் மற்றும் ஜெனிவா அரசியல் தொடர்பிலும் விமர்சனம் செய்திருந்தார்.

இதனை அடுத்து தொழிற் சங்கப் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டிருந்தவேளையில் அரசியல் விமர்சனம் மற்றும் உறுதி செய்யப்படாத விடயத்தை அமைச்சர் ஊழல் புரிந்த்தாக நேரடியாகக் குற்றம் சாட்டியமை தொடர்பில் அவரிடம் அமைச்சின் செயலாளர் எழுத்து மூலம் விளக்கம் கோரியுள்ளார்.

குறித்த பொதுச் சுகாதார உத்தியோகத்தர் அளிக்கும் பதிலின் பிரகாரம் அடுத்த கட்ட சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (21,101)

# பிறந்த நாள் பரிசாக வறிய மாணவிக்கு உதவி

## இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க உறுப்பினர் வழங்கினார்

யாழ்ப்பாணம், செப்.17

இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்க உறுப்பினர் ஒருவர் தனது 21ஆவது பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் வறிய நிலையில் இருந்த மாணவி ஒருவருக்கு கற்றல் ஊக்குவிப்புக்கான நிதியை வழங்கியுள்ளார்.




சங்கத்தின் உறுப்பினர் கஜானன் என்பவரே தந்தையை இழந்து நலிவான குடும்ப பொருளாதாரத்துடன் வாழ்ந்துவரும் குறித்த மாணவிக்கு அவரது உயர்தர கல்வியை தொடர்வதற்காக, கற்றல் ஊக்குவிப்புக்கென ஆயிரத்து 500 ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

இதனை அடுத்து இளவாலை வருத்தப்படாத வாலிபர் சங்கதினால் குறித்த மாணவி உயர்தர பரீட்சைக்கு தோற்றும்வரை அவரது தனியார் கல்விநிலைய செலவுகளிற்காகவும், கற்றல் செயற்பாடுகளுக்காககவும் மாதந்தம் கல்வி ஊக்குவிப்புத்தொகையாக ஆயிரத்து 500 ரூபா நிதி வழங்கப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டது. இம்மாத்த்திற்கான ஊக்குவிப்புத்தொகையையாக கஜானனால் வழங்கப்பட்ட நிதி அமைகிறது என தெரிவிக்கப்பட்டது. (21)

# ரஸ்ய நாடகம் யாழில் இன்று

யாழ்ப்பாணம்.செப்.17

ரஸ்ய நாட்டு நாடக ஆசிரியர் அன்ரன் செக்கொவ் எழுதிய “தான் விரும்பாத் தியாகி ” என்ற நாடகம் இன்று யாழ்ப்பாணம் இணுவில் பகுதியில் ஆற்றுகை செய்யப்படவுள்ளது.

இனுவில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் மாலை 6.30 மணிக்கு நாடக ஆற்றுகை இடம்பெறும் என அறிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நாடக அரங்கக் கல்லூரி நாடகத்தை தயாரித்துள்ளது. க.ரதிதரனின் நெறியாள்கை செய்துள்ளார். இந்த நாடகத்தை நாடகத்தை ரஸ்ய மொழியில் இருந்து ஆங்கிலத்துக்கு கொன்ஸ்டன்ஸ் கார்னெட் மொழிபெயர்தார். ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு ஈழத்து சிறுவர் நாடகத்தின் தந்தையான குழந்தை ம.சண்முகலிங்கம் மொழிபெயர்த்துள்ளார். 40 நிமிடங்கள் கொண்டதாக நாடகம் தயாரிக்கப்பட்டுள்ளது. (21,ரி)

# வவுனியா வர்த்தக சங்க தலைவருக்கு பிணை

வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே.இராஜலிங்கம் நேற்று முன்தினம் நீர்கொழும்பு மாவட்ட நீதிமன்றால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 31 ஆம் திகதி வியாழக்கிழமை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வருகை தந்த போது அவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டிருந்தார். இளைஞர் ஒருவர் கனடா செல்வதற்காக முகவர் ஒருவருடன தொடர்பை ஏற்படுத்தியுள்ளார். குறித்த முகவர் வவுனியா வர்த்தக சங்கத் தலைவர் ரி.கே.இராஜலிங்கத்தின் வங்கிக் கணக்கிற்கு பணத்தினை வைப்புச் செய்யுமாறு அந்த இளைஞருக்கு கோரியுள்ளார். அந்த இளைஞனும் நிதியை வைப்புச் செய்துள்ளார். எனினும் முகவரால் வெளிநாட்டுக்கு அனுப்பப்படாது இளைஞர் ஏமாற்றப்பட்டுள்ளார். இதனையடுத்து குறித்த பணத்தை மீள பெறுவதற்கு இளைஞர் முயற்சிகளை மேற்கொண்ட போதும் அது பயனளிக்காமையால் கொழும்பு குற்றத்தடுப்பு பொலிசில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாடு தொடர்பில் வவுனியா வர்த்தச சங்கத் தலைவரை நீதிமன்றில் ஆஜராகுமாறு அவருக்கு நீதிமன்றத்தால் அழைப்புக் கட்டளை அனுப்பியிருந்தது. அவர் ஆஜராகாமையால், இந்தியாவில் இருந்து இலங்கை வந்த போது கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். அவரது வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்த போதே இரண்டு பேரின் சரீர பிணையில் செல்வதற்கு நீர்கொழும்பு நீதிமன்றம் அனுமதி வழங்கியது. எதிர்வரும் டிசம்பர் 12 ஆம் திகதி மீண்டும் வழக்கு விசாரணை இடம்பெறவுள்ளது. (21)

# நியாய விலையில் விதை நெல் விநியோகம்

அச்சுவேலி, செப்.17

பெரும்பாக கமநல சேவை நிலையங்களில் சுத்திகரிக்கப்பட்ட விதை நெல் நியாய விலையில் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாணத்தில் விதை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தினால் (சீர்கோ) உரிய் முறையில் களஞ்சியப்படுத்தப்பட்டு பதர் மற்றும் களைகளின் விதை அகற்றப்பட்டதும், விவசாயத்திணைக்களத்தினால் அங்கிகரிக்கப்பட்டதுமான விதை நெல் இனங்கள் பெரும்போக கமநல சேவை நிலையங்கள் ஊடாக விநியோகிக்கப்படு கின்றன.

புத்தூர் பெரும்பாக கமநல சேவை நிலையத்தில் பி.ஜி 406 ரக விதை நெல் புசல் ஒன்று ஆயிரத்து 650 ரூபாவும் வழங்கப்படுவதாகவும் விதைநெல் தேவையான விவசாயிகள் பெற்றுக் கொள்ளுமாறும் புத்தூர் பெரும்பாக கமநல சேவை நிலையத்திற்கு பொறுப்பான கமநல அபிவிருத்தி அதிகாரி இ.சுகந்தராஜீ தெரிவித்தார். (21,11)

# அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

சாவகச்சேரி செப்.17

சாவகச்சேரி நகர சபையினரின் மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தித் தேவைகளை அடையாளப்படுத்துதல், முன்னுரிமைப் படுத்தல் தொடர்பான கலந்துரையாடல் சாவகச்சேரி நகரசபைக்குட்பட்ட 2ஆம் வட்டார பிரிவு மக்களுக்கு நாளை திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் மீசாலைக் கிழக்கு ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தில் பி.ப 3மணிக்கு நடைபெறும் என நகராட்சி மன்ற செயலாளர் .கா. சண்முகநாதன் அறிவித்துள்ளார். இதில் ஜே/318 (மீசாலைக் கிழக்கு ) கிராம மக்கள் கலந்து கொண்டு கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பாக முன்னேற்ற கரமான வேலைத் திட்டங்களினை முன்னுரிமைப்படுத்தி இந்தக் கிராமத்தின் அபிவிருத்தியில் பங்கு கொள்ளுமாறும் அவர் அறிவித்துள்ளார். ஏற்கனவே சபையின் நான்காம் வட்டாரமான கல்வயல் பிரிவிலும், 8ஆம் வட்டாரமான கோயிற்குடியிருப்புப் பிரிவிலும் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு மக்கள் தெரிவின் பிரகாரம் முன்னுரிமைப் பட்டியல் மூலம் வேலைத்திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

அடுத்த வாரமளவில் ஏனைய வட்டாரங்களிலும் மக்களுடன் கலந்துரையாடல்களை நடத்தி வேலைத் திட்டங்களுக்கான தெரிவு இடம்பெறும் என நகராட்சி மன்ற செயலாளர் தெரிவித்தார். (21,9)

## டெங்குக் கட்டுப்பாட்டு வாரத்துக்கான ஏற்பாடுகள் சாவகச்சேரியில் முன்னெடுப்பு

சாவகச்சேரி செப்.17

**சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு கட்டுப் பாட்டுச் செயற்பாட்டுக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

கொழும்பு சுகாதார அமைச்சின் டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினரால் எதிர்வரும் 20 ஆம்திகதிதொடக்கம்26ஆம்திகதிவரையான காலப் பகுதியை டெங்கு கட்டுப்பாட்டு வார மாக அறிவிக்கப்பட்டு கட்டுப்பாட்டுச் செயற் பாடுகளை மேற்கொள்ளுமாறு சம்பந்தப் பட்ட அரச திணைக்கள அலுவலகங்க ளுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இதன் பிர காரம் டெங்கு வாரத்தில் மேற்கொள்ளப்பட வுள்ள கிராம அலுவலர் பிரிவுகள் தொடர்பான அறி வித்தல் சாவகச்சேரி சுகாதாரத் திணைக்களத்தினால் அரச திணைக்கள அலுவலகங்களுக்கு அறிவிக்கப்பட்டு அதற் கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

அதனடிப்படையில் எதிர்வரும் 20ஆம் திகதி மந்துவில் பொது சுகாதாரப் பரிசோத கர் பிரிவுக்குட்பட்ட மந்துவில் கிழக்கு, மந் துவில் மேற்குப் பிரிவுகளிலும் 21ஆம் திகதி மட்டுவில் பொது சுகாதார பரிசோதகர் பிரி வுக்குட்பட்ட மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சரசாலை தெற்கு ஆகிய பகுதிகளி லும் 22ஆம் திகதி மீசாலை வடக்கு, இராமா வில்பிரிவுகளிலும்23ஆம்திகதி வரணிபொது சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மாசேரி, கரம்பைக்குறிச்சி, இடைக்குறிச்சி ஆகிய பிரிவுகளிலும் 25 ஆம் திகதி நாவற் குழி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக் குட்பட்ட நாவற்குழிகிழக்கு, நாவற்குழி மேற்கு, கோவிலாக்கண்டி ஆகிய பிரிவுகளிலும் 26 ஆம் திகதி எழுதுமட்டுவாழ் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் வடக்கு, மிருசுவில் தெற்கு, உசன் ஆகிய பிரிவுகளிலும் டெங்கு பரிசோதனைகள் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது.

டெங்குப் பரிசோதனையின் போது குடியி ருப்புகள், பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள், அரச அலுவலகங்கள், தனி யார் அலுவலகங்கள், தொழிற்சாலைகள், கட்டட நிர்மாணப் பணிகள் இடம்பெறும் இடங்கள், சமய வழிபாட்டுத் தலங்கள், பொது இடங்கள் உள்ளிட்ட பகுதிகளில் டெங்குப் பரிசோதனைகள் இடம்பெறவுள் ளன எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் வசிக்கின்ற மக்கள் தங்கள் குடியிருப்புகள் மற்றும் காணிகளின் உரி மையாளர்கள் தமது பகுதிகளைத் துப்புரவாக வைத்திருக்குமாறும் டெங்கு நுளம்பு பெருகு வதற்கு ஏதுவாகக் காணப்பட்டால் அவர் கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படு மெனவும் மேலும் அறிவிக்கப்பட்டது. (21,9)

## மாகாண மட்ட மழலைகள் விளையாட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், செப்.17

மாகாண மட்ட மழலைகள் விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியா லயத்தில் நடைபெறவுள்ளது.

ஆரம்பப் பிள்ளைப்பருவ அபிவிருத்திப் பிரிவுப் பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையா தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் முதன்மை விருந்தினராக கல்வி அமைச்சர் கலாநிதி க. சர்வேஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார். (21)

### போராளிகள், மாவீரர் குடும்பங்களுக்கு விடுதலைப் புலிகளால் வழங்கப்பட்ட

# கைவேலி 25 வீட்டுத்திட்டக் காணிகள் வனவளப் பாதுகாப்புப் பிரிவினரிடம்

### மீளப் பெற்றுத்தருமாறு மக்கள் வலியுறுத்து

முல்லைத்தீவு, செப்.17

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு கைவேலிப் பிரதேசத்தில் முன் னாள் போராளி குடும்பங்கள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு வழங்கப்பட்ட 25 வீட்டுத்திட்டக் காணிகள் தற்போது வனவளப் பாதுகாப்புப் பிரிவினருடைய கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தக் காணிகளைமீளக்கையளிக்கு மாறு குறித்த மக்கள் கோரிக்கை விடுத்தனர். நேற்று முன்தினம் குறித்த பகுதிக்குச் சென்ற மக்கள் தமது காணிகளில் இருந்த வீடு கள், கிணறுகள் மற்றும் மலசல கூடங்கள் என்பவை அழிக்கப் பட்டுள்ளதாகவும் கவலை வெளி யிட்டனர்.



இது தொடர்பில் அவர்கள் தெரி வித்ததாவது; தமிழீழ விடுத லைப் புலிகள் இயக்கத்தால் போராளி குடும்பங்கள் மற்றும் மாவீரர் குடும்பங்களுக்கு புதுக் குடியிருப்பு கைவேலி பிர தேசத் தில் 2000 ஆம் ஆண்டு காணி கள் வழங்கப்பட்டன. 2006 ஆம் ஆண்டு அந்தக் காணிக ளில் 25 வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எனினும் கடந்த 2009 ஆம் ஆண்டு இடம் பெற்ற இறுதிப் போரைத் தொடர்ந்து அங்கிருந்து இடம்பெ யர்ந்து சென்ற மக்கள் போர் நிறைவுற்ற பின்னர் மீண்டும் தமது பகுதிகளுக்குத் திரும்பி தமது காணிகளை சென்று பார் வையிட்டபோது குறித்த பகுதிக்குச் செல்வதற்கு இராணுவத்தால் தடை விதிக்கப்பட்டது. மக் களை உட்செல்ல விடாது இராணுவத்தின் அறிவித்தல் பலகையும் அங்கு நட்டனர். இந்த நிலையில் நாம் முன் னாள் போராளிகளாக இருந்தமையால் அச்சம் காரணமாக காணிக ளுக்குள் செல்லாது திரும்பிச் சென்றோம். தற்போது இராணுவத்தி னர் வெளியேறியுள்ள நிலையில் குறித்த காணியை வனவளப்பா துகாப்புப் பிரிவினர் கையகப்ப டுத்தியுள்ளனர். போர் நிறைவ டைந்த நிலையிலும் தற்போது வரை வறுமைக்கோட்டின் கீழேயே வாழ்ந்து வருகிறோம்.



எனவே எமது காணிகளை எம் மிடம் மீட்டுத் தந்தால் நாம் அதில் வீட்டுத் தோட்டங்களை அமைத்து வாழ்வாதாரத்தைப் போக்க முடியும். அத்தோடு எமது சொந்தக் காணிகளில் வீடு களை அமைத்து சுயதொழிலை முன்னெடுக்க முடியும். எமது காணிகளில் இருந்த வீடுகள், கிணறுகள் மற்றும் மலசல கூடங்கள் என்பவை அழிக்கப் பட்டுள்ளன அவற்றுக்கான நட்ட ஈட்டையும் பெற்றுத்தரவேண் டும் என அந்த மக்கள் கோரினர்.

நேற்று முன்தினம் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து. ரவிகரனுடன் குறித்த பகுதிக்குச் சென்ற மக்கள் தமது பகுதிகளைப் பார் வையிட்டதுடன் ரவிகர னிடம் இந்தக் கோரிக் கையை முன்வைத்த னர்.

குறித்த பகுதியைப் பார் வையிட்ட அவர் மக்க ளுடைய கோரிக்கைகள் தொடர்பாக வடக்கு மாகாண முதலமைச் சரின் கவனத்துக்குக் கொண்டு செல்வதாக வும் வருகின்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட் டத்திலும் கலந்துரையாடி காணிகளை பெற்றுத்தர நடவ டிக்கை எடுப்பதாகவும் மக்களி டம் தெரிவித்தார். (21)

## உள்ளூராட்சி பற்றிய உயர் பயிற்சி நெறியை முழுமைப்படுத்தியவர்களுக்குச் சான்றிதழ்

யாழ்ப்பாணம், செப்.17

உள்ளூராட்சி பற்றிய உயர் பயிற்சி நெறியைப் முழு மைப்படுத்தியவர்களுக்கான டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிகழ்வு எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதி மு.ப.8.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவுள்ளது. இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவ னத்தினரால் உள்ளூராட்சி சபைகளில் கடமையாற் றும் அலுவலர்களுக்கு இந்தப் பயிற்சிகள் வழங்கப் பட்டிருந்தன. குறித்த பயிற்சி நெறியை முழுமைப்படுத்திய யாழ்ப்பாண மாவட்ட உள்ளூ ராட்சி சபைகளில் கடமையாற்றும் முகாமைத்துவ உதவியாளர்கள், வருமானப் பரிசோதகர்கள், அபிவி ருத்தி அலுவலர்கள், சனசமூக அபிவிருத்தி அலுவலர் கள், கணக்காய்வு அலுவலர்கள் என 25 பேருக்கு இந்த உயர் சான்றிதழ் வழங்கப்படவுள்ளதென இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவனப் பணிப்பாளர் சுஜீவ சமரவீர சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறி வித்துள்ளார் (21, 9)

## சொந்த நிலத்தை மீட்கப் போராடுவதா? அல்லது வாழ்க்கைக்காகப் போராடுவதா?

### கேப்பாபிலவு மக்கள் கேள்வி

விவசாயம் மற்றும் மீன்பிடியை நம்பி வாழும் மக்களின் வளங்களை இராணு வத்தினர் கையகப்படுத்தியுள்ள நிலையில் பொருளாதார வசதிகளின்றி வாழும் நாம் சொந்த நிலத்துக்காகப் போராடு வதா? அல்லது நாளாந்த வாழக்கையை கொண்டு நடத்துவதற்காகப் போராடு வதா? என கேப்பாபிலவு மக்கள் கேள்வி எழுப்பினர்.

கேப்பாபிலவு பூர்வீக நிலத்தை விடுவிக் குமாறு வலியுறுத்தி கடந்த ஆறு மாதங் களுக்கு மேலாக கேப்பாபிலவு காணி உரிமையாளர்கள் தொடர் கவனவீர்ப்புப் போராட்டத்தைமுன்னெடுத்துவருகின்றனர். 138 குடும்பங்களுக்குச் சொந்தமான 482 ஏக்கர் காணிகளை விடு விக்குமாறு வலியுறுத்தி கடந்த மார்ச் மாதம் முத லாம் திகதி முதல் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்று வருகின்றது. எனினும் தமது போராட்டத்தை பல கஷ் டங்களுக்கு மத்தியிலே அந்த மக்கள் முன்னெடுத்து வருகின்றனர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போது அவர்கள் மேற்கண்டவாறு கூறினர்.

"காணாமல்ஆக்கப்பட்ட எம் பிள்ளையை தேடுவதா? அல்லது சொந்த நிலத்தை மீட்பதற்கான போராட்டத்தை முன்னெ டுப்பதா? ஒன்பது வருடங்களாக காணி களை இழந்து அவற்றை மீட்கும் போராட்டத்தில் நாம் ஈடுபட்டு வரும் நிலையில் இதுவரை காணிகள் விடுவிப் பது தொடர்பில் எந்தவித தீர்மான மும் மு ன்னெடுக்கப்படவில்லை" எனவும் அவர்கள் கவலையடைந்தனர். (21)

# வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள அலுவலர்களுக்கு ஜனவரியில் இடமாற்றம்

### மருத்துவர்களுக்கு விதிவிலக்கு எனவும் தெரிவிப்பு

யாழ்ப்பாணம் செப். 17

வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்கள நிறுவனங்களில் கடமையாற்றும் மருத்துவர் கள் தவிர்ந்த ஏனைய தர அலுவலர்களுக்கு 2018 ஜனவரியில் இடமாற்றம் வழங்குவ தற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதற்கமைவாக வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தினர் சுகாதார நிறுவனங்க ளில் கடமையாற்றும் அனைத்துத் தரப் பணி யாளர்களிடமிருந்தும் இடமாற்றத்துக்கான விண்ணப்பங்களைக் கோரிப் பெற்றுள்ள னர். இடமாற்றக் கொள்கைகளுக்கு அமை வாக வருடாந்த இடமாற்றம் மேற்கொள்ளப் பட்டு அடுத்த மாதம் இடமாற்றப் பட்டியல் வெளியிடப்படவுள்ளது. கடந்த வருடங்களில் வருடாந்த இடமாற்றத்துக்கான விண்ணப்பங்கள் பெறுவதில் ஏற்பட்ட தாம தங்கள் காரணமாக இடமாற்றங்களும் தாம தமாக மேற்கொள்ளப்பட்டதெனவும்; இத னால் சுகாதாரத்திணைக்களத்தினர் பல் வேறு சிரமங்களை எதிர்நோக்கியதைக் கருத்திற் கொண்டு அரசின் இடமாற்றக் கொள்கைக்கு அமைவாக கடந்த மாதம் மருத்துவர்கள் தவிர்ந்த ஏனைய அனைத் துத் தர பணியாளர்களிடமிருந்தும் இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டன. விண்ணப் பங்களை கடந்த ஆறாம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும் என அறிவிக்கப் பட்டதையடுத்து அலுவலர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன அவை இடமாற்றக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு இடமாற்றப் பட்டியல் ஒக்ரோபர் மாதம் வெளி யிடப்படும் என வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன. வெளியிடப்படும் இடமாற்றப் பட்டியலின் பிர காரம் இடமாற்றதம் செய்யப்படுவோர் 2018 ஆம் ஆண்டின் ஜனவரி மாதத்தில் புதிய நிலையங்களில் கடமைகளைப் பொறுப்பேற் பார்களெனவும் தெரிவிக்கப்பட்டது. (21, 9)



Anchor
Since 1886
இலட்சியப் பயணம்
மேன்மைகள் பெற வழிகாட்டும்
வாழ்வின் உயர் நிலையை அடைவதற்கு
அவசியமான வாழ்க்கை திறன்களை
மாணவர்களுக்கு கற்றுத்தரும் நிகழ்வு
செப்டம்பர் 23 ஆம் திகதி,
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில்
காலை 8.30 மணி - மாலை 5 மணி வரை
இந்நிகழ்வானது நவீன கல்வி கற்றல் முறைகளான ஞாபக படுத்தலுக்கான மன வரைபடம், விரைவான வாசிப்புமுறை, அபாகஸ், ஆங்கில எழுத்து பேச்சு திறமைகள் ஆகியவற்றோடு மாணவர்களின் ஆற்றல்களை அறிந்து கொள்வதற்கான வாழ்க்கை வழி காட்டுதல்களையும் கற்று கொள்வதற்கான வாய்ப்பை வழங்குகிறது
வாருங்கள் எம்முடன் இணைந்து கற்றலுக்கான
புதிய வழிகளை அறிந்திடுங்கள்




Copper Heating Element
Over Heat Protection
Precise Thermal Cut-Out
Built-In ELCB
Double Relay
5 Types of Shower Spray
Earthing Protection
Grounding Fault Indicator
Anti Dry-Heating Protection

உத்தரவாதம்
6 வருடங்கள் DC WATER PUMP
6 வருடங்கள் HEATING ELEMENT
விலை ரூ. 26,478/-

1st Dual Heating Element
ஏனைய வெப்பமூட்டும் மூலகத்தை விட 20% நீடித்த உழைப்பு

Low Noise DC Pump
AC அழுத்த மோட்டரை விட 55% சக்தி சேமிப்பு

* Terms and Conditions Apply.

இலங்கையில் ஏக பிரதிநிதி
Telesonic®
SINCE 1979

டெலிசொனிக் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்
இல.18, டெய்ஸி விலா அவெனியூ, ஆர். ஏ. டீ மெல் மாவத்தை, கொழும்பு 04.
மின்னஞ்சல்: info@telesoniclanka.com இணையத்தளம்: www.telesoniclanka.com
துரித அழைப்பு: 0112 508 160/1/2

பிரிட்டனில்

# ஈழத் தமிழர் கொலை மூவருக்குக் கடும் தண்டனை

கொழும்பு, செப். 17
பிரிட்டனில் தமிழ் இளைஞரைக் கொலை செய்த குற்றச்சாட்டில், ஈழத் தமிழர்கள் மூவருக்குக் கடும் தண்டனைகளை நீதிமன்றம் விதித்துள்ளது.

கனடாவில் வசித்த சுரேன் சிவநாதன் (வயது-32) என்ற ஈழத் தமிழர், 2017ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 20ஆம் திகதி பிரிட்டனின் மில்டன் கீனஸ் பகுதியில் கொலை செய்யப்பட்டார். அவரது உடலில் 87 காயங்கள் காணப்பட்டன. தலையில் மாத்திரம் 36 காயங்கள் காணப்பட்டன.

இந்தக் கொலை தொடர்பாக, ஈழத்தமிழர்கள் உள்ளிட்ட மூவர் கைது செய்யப்பட்டு லூட்டன் கிரவுண் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.


இந்த வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட மூவர் மீதான குற்றங்கள் உறுதி செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் தீர்ப்பு வழங்கப்பட்டது. ஞானச்சந்திரன் பாலச்சந்திரன் (வயது-36) மற்றும் 17 வயதுடைய இளைஞனுக்கும் ஆயுள்த் தண்டனை விதிக்கப்பட்டது.

ஞானச்சந்திரன் பாலச்சந்திரன் ஆயுள்த் தண்டனையை, குறைந்தபட்சம் 18 ஆண்டுகள் சிறையில் கழிக்க வேண்டும் என்று நீதிபதி உத்தரவிட்டார். மற்றைய இளைஞர் 18 வயதுக்குட்பட்டவர் என்பதால் இளைஞனின் பெயர் விபரங்கள் வெளியிடப்படவில்லை. எனினும், அவர் 11 ஆண்டுகள் குறைந்தபட்சம் சிறையில் இருக்க வேண்டும் என்று நீதிபதி உத்தர விட்டுள்ளார். மூன்றாவது குற்றவாளி யான, பிரசாந்த் தவராசா (வயது-24) என்ப வருக்கு 10 ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ளது. (5)

# டைனமைட்டுடன் ஒருவர் கைது

திருகோணமலை, செப். 17
திருகோணமலை இறக்கண்டிப் பகுதியில் 32 டைனமைட்டை வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்றுமுன்தினம் மாலை சந் தேகநபரைக் கைது செய்துள்ளதாகத் திரு கோணமலைப் பிராந்திய போதைப்பொருள் தடுப்புப் பிரிவினர் தெரிவித்தனர்.

சட்ட விரோத மீன்பிடியில் ஈடுபடுவதற்காகத் தனது வீட்டில் டைனமைட்டுக்களை மறைத்து வைத்துள்ளார். பொலிஸாருக்கு இது தொடர் பில் இரகசியத் தகவல் கிடைத்துள்ளது. இதற் கமைவாக அவரது வீட்டைச் சோதனையிட்ட பொலிஸார் டைனமைட்டை மீட்டதுடன் அவ ரையும் கைது செய்தனர். (5,45)



ashok™ STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், ஸசந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.105,000 + VAT

வட கிழக்கு மாகாணம் - 077 3781397/ 076 6084369, மத்திய மாகாணம் - 077 3825832,
வட மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS
375

## பல் தேசிய நிறுவனத்தில் வேலைவாய்ப்பு

Educational Technologies Pvt Ltd
இலங்கையில் தனது 20 ஆவது ஆண்டைப் பூர்த்தி செய்யும் வகையில் யாழ்ப்பாண கிளைக்கு பதவி வெற்றிடங்கள் கோரப்படுகின்றன.

(Jaffna Branch)

- Training Marketing Executive
- Marketing Executive (With one year Experience)

G.C.E.A/L சித்தி பெற்ற உங்களுக்கான ஓர் அரிய வேலைவாய்ப்பினை வழங்கவிருக்கின்றது.

After Training Rs.60,000

→ Over seas travel
→ Vehicle Allowance

Training Period Rs. 30, 000



ஆண், பெண் இருபாலாரும் தொடர்பு கொள்ளவும்.

G.Anthany- Branch Manager
077 356 6835
Jaffna Pioneerhouse@gmail.com
No 100,2nd Floor,Manipay Road,Jaffna.

---

**W.U.C.E** மற்றும் யாழ்பல்கலைக்கழக பொறியியல் பீடத்தின் அனுசரணையுடன் தேசிய நிர்மாணிகள் சங்க வடமாகாணக் கிளை நடத்தும்

## பிரத்தியேக விசேட விரிவுரை

**A Special Guest Lecture Session on "Project Governance & Management in Construction Industry"**

**Delivered by**

**Eng.Ranjith Gunathilake**

President Elect - Chamber of Construction Industry (CCI)
and CEO/Managing Director - Sanken Construction

- தலைப்பு: நிர்மாண வேலைச் செயற்திட்டத்தின் ஆளுகையும் முகாமைத்துவமும்
- விரிவுரை நிகழ்த்துபவர்: பொறியியலாளர். ரஞ்சித் குணதிலக
- இடம்: மாநாட்டு மண்டபம், பொறியியல் பீடம், யாழ். பல்கலைக்கழகம், அறிவியல் நகர், கிளிநொச்சி.
- காலம்: 22.09.2017 (வெள்ளிக்கிழமை)
- நேரம்: முற்பகல் 9.30 மணி

வடமாகாண ஒப்பந்தகாரர்கள் மற்றும் பொறியியலாளர்கள். பொறியியல் சம்பந்த திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள். பொறியியல் பட்டப்படிப்பாளர்கள் அனைவரையும் பங்கு பற்றி பயனடையுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

---

## St. John's Academy & College of Technology

TVEC

G.C.E O/L = NVQ 3
G.C.E A/L = NVQ 4

தொழில் உறுதி

TVEC Registration No.P25/0076
TVEC Accreditation No.K725001.1

| | |
|---|---|
| Application Form Issue | : 17.09.2017 |
| Closing Date for Applications | : 30.09.2017 |
| Course Duration | : Six months |
| Course Commencement | : 2nd October 2017 |

அனுமதி மட்டுப்படுத்தப்பட்டுள்ளது

Boys & Girls! Apply Immediately! ADMISSION FEE FREE!

### Available Courses

Language Courses

- Building Career Skills through English - NVQ 1
- Spoken Sinhala ( For office staff & students )

NVQ 3 Courses

- Hotel & Restaurants Management (Front Office Operations)
- Computer Network Technician
- Computer Hardware Technician
- Information and Communication Technology
- Radio, TV & Allied Equipment Repairer - Mobile
- Electrical Wiring
- Plumbing

❖ Additional Subjects for NVQ 3 Students:
English Language, Mathematics, Sinhala Language

Coordinator : Mr. A.Murugananthan 0718561252 , 0212216680
For more details, contact,
The Director, St. John's Academy & College of Technology
446 Main Street Chundikuli Jaffna
Tel: 021 222 8585 Email: stjohnsacademy@sltnet.lk

---

ஹற்றன்

## துதித்தோட்ட தேவ சபை

நடத்தும்

மன்னாரில்

## நற்செய்திப் பெருவிழா 2017

| | | |
|---|---|---|
| மன்னார் பொது விளையாட்டு அரங்கம் | செப் 22,23,24 (வெள்ளி, சனி, ஞாயிறு) | தினமும் மாலை 5 மணி |

செய்தியாளர்கள்:
தந்தை. S.J. பெர்க்மான்ஸ்
தந்தை. மைக்கல் ஞானராஜ்



சமாதான சந்தோசத்துடன்

தேவ ஆசிர்வாதத்தை பெற வாருங்கள் !
தொடர்புகளுக்கு மன்னார் போதகர் ஐக்கியம் : 0779178228/0766990326
அருட்தந்தை மைக்கல் ஞானராஜ் துதித்தோட்டம் பம்பரகல, நோட்டன் பிறிஜ், ஹற்றன். தொடர்பு: 051 2232008

---



நாளைய தலைவர்களுக்கு
வழங்கப்படும் கௌரவிப்பு

## பிரணாம புலமைப்பரிசில்

தொடர்ந்தும் 17வது தடவையாகவும்!

CEYLINCO LIFE Pranama Scholarships

நீங்களும் பிரணாம புலமைப்பரிசிலுக்கு விண்ணப்பியுங்கள்!

2017 செலிங்கோ லை.ப் பிரணாம புலமைப்பரிசில் கீழ்வரும் பிரிவுகளில் வழங்கப்படவுள்ளது:

- ஆண்டு 5 புலமைப்பரிசில் - 2017
- க.பொ.த (சாதாரண தரம்) - 2016
- க.பொ.த (உயர் தரம்) - 2016
- தேசிய திறமை விருதுகள் - 2016/2017

விண்ணப்பங்கள் 2017 நவம்பர் 30ம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள் (011) 2461461



CEYLINCO LIFE®

வாழ்க்கைக்கான நிரந்தர உறவு™

# சிறுவிளம்பரங்கள்

## விற்பனைக்கு




### கார் விற்பனைக்குண்டு
TOYOTA CORONA - AT 170
1991 ஆம் ஆண்டு மொடல் மிகவும் நல்ல நிலையில் உள்ள கார் விற்பனைக்குண்டு. **விலை 1050000/-**
**077 044 0570 (மல்லாகம்)**

### மாடி வீடு விற்பனைக்கு
உரும்பிராய், கோப்பாய் வீதியில் 4பரப்புக் காணியுடன் 2650 சதுரஅடி மாடி வீடு விற்பனைக்கு உண்டு.
**071 321 8883**

### வீடு விற்பனைக்கு
வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாலய வீதியில் 04 பரப்புக்காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.
**077 833 2954/ 004552724262**

### வீடு விற்பனைக்கு
யாழ்.நகரில் கொட்டடிச் சந்திக்கு அண்மையில் வீடு விற்பனைக்குண்டு. சுமார் 3 பரப்பில் நன்னீர் கிணற்றுடன் கூடியதுமாகும்.
**077 227 9219**

### விற்பனைக்கு
Lion பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.
**071 963 7236** (CS 8822) (14)

### விற்பனைக்குண்டு
Phone 4S - 13000/=, மற்றும் Phone 5S, 6,6S மற்றும் பாவித்த Lap tops 8000/= என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு :- 077 717 2325 www.Iway.lk

### காணி விற்பனைக்கு
இளவாலை பெரியவிளானில் 15 பரப்பு தனி அடைப்புத் தோட்டக் காணி தென்னை, மா மரங்களுடன் உடன் விற்பனைக்குண்டு. விலை பரப்பு ஒன்றேகால் இலட்சம்.
**077 880 7128**

### கார் விற்பனைக்கு
TOYOTA AX10
2007 ஆம் ஆண்டு நல்ல நிலையிலுள்ள கார் விற்பனைக்குண்டு.
077 386 8562

### விற்பனைக்கு
தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோயிலுக்கு முன்னால் உள்ள 12½ பரப்புக்காணி விற்பனைக்குண்டு.அத்துடன் MITSUBSI LANSER CAR,HONDA 125 Benly 32 இன்ஞ் Simart TV (HD) என்பனவும் விற்பனைக்குண்டு.
**076 449 2026, 075 044 7677**

## தேவை




### வாடகைத்தாய் தேவை
கருணை உள்ளம் கொண்ட 30 வயதிற்குக் குறை வான பெண் ஒருவர் IVF மூலம் செய்வதற்கு வாடகைத் தாயாகத் தேவை சன்மானம் வழங்கப்படும். இரகசியம் பேணப்படும்.
**077 637 5294**

### மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த யாழ்ப்பாணத்தை சொந்த இடமாகவும் கொழும்பில் சொந்த தொழில் புரியும் 47 வயதுடைய மணமகனுக்கு 35 வயதிற்கு குறைவான நற்குணத்தை உடைய அழகான மணமகள் தேவை. திருவாதிரை நட்சத்திரம் பாவக்கிரகம் 09 உடையவர் மிதுனராசி
077 163 3001

### சிறுநீரகம் தேவை
38 வயதுடைய சிறுநீரக நோயாளியொருவருக்கு O+ இரத்த வகையைச் சேர்ந்த சிறுநீரகம் தேவை. வழங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்.
**077 213 4497**

### மணமகள் தேவை
யாழ்.இந்து. 1989. அவிட்டம் 1ஆம் பாதம். 12 இல் செவ்வாய். பாவம் - 17. கொழும்பில் தனியார் நிறுவனத்தில் Web developer ஆகத் தொழில்புரியும் MSC Comp.Science முடித்த மணமகனுக்கு மணமகள் தேவை.
தரகர் தேவையில்லை.
**077 910 3340, 077 443 1504**

### தேவை
யாழ்ப்பாணம், கல்வியங்காட்டுக்கு அருகில் உள்ள ஒரு CD கடைக்கு வேலையாள் (ஆண்/பெண்) தேவை. தகுந்த ஊதியம் வழங்கப்படும்.
அழையுங்கள் - **077 764 3322**

### சேவை
உங்கள் முச்சக்கரவண்டியை Three Wheel எங்களுடன் இணைத்த மீட்டர் ரக்ஸியாக்குங்கள். இலகுவான நவீன தொழில்நுட்பம். இணைத்துக் கொள்ள அழையுங்கள். Speedy go
**077 764 3322**

### வீடு விலைக்குத் தேவை
யாழ்.நகரை அண்டிய பகுதிகளில் மூன்று அல்லது ஐந்து பரப்புக்குள் வீட்டுடன் காணி தேவை.
**077 361 1282**

### தேவை
பிரபல கல்லூரியின் யாழ்ப்பாணக் கிளைக்கு துண்டுப்பிரசுரம் வினியோகிப்பதற்கு ஆட்கள் தேவை தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்பு : 077-0729665

## ஏனையவை

### அறைகள் வாடகைக்கு
யாழ் பல்கலைக்கழகத்துக்க அருகில் ஆண் மாணவர்களுக்கும், உத்தியோகத்தர்களுக்கும் அறைகள் வாடகைக்கு உண்டு.
**076 804 6562**

### பணிப்பெண் தேவை
நல்லூர், திருநெல்வேலி ஆகிய இடங்களில் வீட்டில் சமையல் வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை.
**சம்பளம்**
15.000 தொடக்கம் 20.000 வரை
**076 851 4296**

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ, 1988 சுவாதி, செவ்வாய் தோஷமற்ற கிரகபாவம் 6. கொழும்பில் கணக்காளராக தொழில் புரியும் உயரம் 6' அடி மணமகனுக்கு மணமகள் தேவை.
**077 764 0155**

### சீனி அரியதரம் தேவை
நீங்கள் சீனி அரியதரம் செய்வதில் கை தேர்ந்தவரா? எங்களுக்கு ஏற்றுமதிக்குத் தேவையான சீனி அரியதரம் உங்களால் செய்து தரமுடியுமா?
**075 491 8984**

### மருந்து இல்லா மருந்து வைத்தியம்
நீண்ட காலமாக தீராத தீர்க்க முடியாது என்று கூறப்பட்ட சத்திரசிகிச்சை தான் முடிவு என்று கூறப்படும் முள்ளந்தண்டு முழங்கால், குதி, பாத வாதங்கள் மற்றும் Asthma, Psoriasis, ஆரம்ப Kidney Failure, High B.P, Sugar மூலம் High E.S.R, Low Hb, உடல் மெலிவு, உடற்பருமன் மனநோய்கள் பிற அனைத்து விதக் கோளாறுகள் மாற்றுவழி சிகிச்சைகள் மூலம் தீர்க்கப்பட முடியுமோ என இலவச ஆலோசனை மூலம் தெரிந்து கொள்ளுங்கள்.
**Dr.R.Sivagurunathan (Ayur)**
**077 730 1669**
யாழ்ப்பாணத்தில்
வரும் ஞாயிறு, திங்கள் மட்டும்.

### அமெரிக்க வீஸா லொத்தர்
இன்ரநெற்/ஆங்கிலம் தெரியாதவர்க்கு சேவை
அமெரிக்காவில் நேர்மையாக குடியேறுங்கள் அரிய சந்தர்ப்பம். உடன் விண்ணப்பியுங்கள்.
15ஆவது வருடசேவையில்.
எமது விண்ணப்பத்திற்கு இப்போதே ரூ15/- முத்திரையுடன் எழுதவும்.
**BBSNETTING,**
**3/14,PINWATTA ROAD**
**DEHIWALA.**
யாழ்ப்பாணத்தில் விண்ணப்பத்திற்கு உமா ஸ்ரோர்ஸ், 378, கே.கே.எஸ் வீதி (வண்.சிவன் கோவில் முன்பாக).
www.bbsnetting.com

### கடை வாடகைக்குண்டு
இல.378 -A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணத்தில் கடை வாடகைக்குண்டு.
**021 221 9446**

### வீடு வாடகைக்குத் தேவை
இரண்டு மாத காலத்துக்கு சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை. உயர்ந்த வாடகை தரப்படும்.
**077 172 2328**

### கடை வாடகைக்குண்டு
பலாலிவீதியிலுள்ள சிறாம்பியடிச் சந்தியில் 18 x 9 அடி விஸ்தீரணமுள்ள கடை வாடகைக்குண்டு.
**077 726 5141**

### கணினி ஆசிரியர் தேவை
முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் அமைந்துள்ள கணினி நிறுவனம் ஒன்றிற்கு கணினி கற்பிக்கக்கூடிய ஆசிரியர் ஒருவர் தேவை. உங்கள் சுயவிவரத்தை (CV) Kiliglobal@gmail.com என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம்.
அல்லது **077 550 8300** என்ற இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

### மணமகள் தேவை
யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1981.12.19 இல் பிறந்த செவ்வாய்க்குற்றமற்ற அத்தம் கிரகபாவம் 14 ¼ IT Executive ஆக பணி புரியும் இவருக்கு ஓய்வுநிலை அதிபரான தாயார். நற்குணமுள்ள A/L, IT/Accounting துறைகளில் கல்வி கற்ற ஆங்கில அறிவுள்ள மணப்பெண்ணை எதிர்பார்க்கின்றார்.
**மாமன் - 071 654 3988**
**தாயார் - 011 259 8902**

### விஜிதா ரேடிங்
பிரபல தனியார் நிறுவனத்தில் வேலை வாய்ப்புக்கள்
**01) வட்டா வாகனங்கள்**
மாதாந்த வாடகை அடிப்படையிலும்
Commision அடிப்படையிலும்
**02) சந்தைப்படுத்தல் அதிகாரிகள்** (Ref)
வயதெல்லை 18 வயதுக்கு மேற்பட்டவர்கள்)
**03) சேகரிப்பு அதிகாரிகள்** (R/O)
**கிளைகளாவன:-** கிளிநொச்சி, யாழ்ப்பாணம், வவுனியா, அம்பாறை, கல்முனை, அக்கரைப்பற்று.
தொடர்புக்கு :- 072 502 9966
யாழ் :- 077 821 1772,
வவுனியா :- 077 848 5389

### பாவித்த நல்ல நிலையிலுள்ள
Zoje ஐந்து நூல் overlock மெஷின் விற்பனைக்குண்டு.
071 154 4004

### வாடகைக்கு
யாழ்.திருநெல்வேலிக்கு அண்மையில் மாபிள் பதிக்கப்பட்ட சகல தளபாட வசதிகளுடன் Attach Bathroom உடன் கூடிய A/C Non A/C அறைகள் குறுகிய கால நீண்டகால வாடகைக்கு.
**077 254 3113, 077 301 3659**

### விஷேட பல் வைத்திய சேவை
- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:077 934 7687(லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

### பிரத்தியேக வகுப்புகள்
A/L இணைந்த கணிதம்,Grade 11 கணிதம் என்பன பிரத்தியேகமாக கற்பித்துத் தரப்படும்.
தொடர்பு: **077 832 4002**

### ஆங்கில வகுப்புக்கள்
O/L, A/L, வீட்டுப்பணிப் பெண்கள் அனைவருக்கும் உங்கள் வீட்டுக்கு வந்து கற்பிக்கப்படும்.
**தொடர்பு - 077 393 6964**

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்




JAFFNA INTERNATIONAL CINEMA FESTIVAL
10.30 / 1.30 / 4.30 / 7.30 / 10.00 PM




விசாரணை 021- 2227712
MajesticCineplexSL
www.ceylontheatres.lk

# கோத்தாவின் கையெழுத்துப் பரிசீலனை

## நிதி மோசடி விசாரணைப் பிரிவு நடவடிக்கை

கொழும்பு, செப். 17
முன்னாள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தபாய ராஜபக்சவின் கையொப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட உள்ளதாக, நிதி மோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது.

டி.ஏ.ராஜபக்ச மற்றும் அவரது மனைவியின் சமாதிகள் மறுசீரமைப்புப் பணிக்கு ஒன்பது கோடி ரூபா அரச பணம் பயன்படுத்தப்பட்டுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்த நிதியைப் பயன்படுத்தப்படுவதற்கு அப்போதைய பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ச உத்தரவிட்டிருந்தார் என்று சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

சட்டமா அதிபர் திணைக்களம் வழங்கிய ஆலோசனைக்கு அமையக் கோத்தபாய ராஜபக்சவின் கையொப்பங்கள் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட உள்ளன.

சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றதன் பின்னர், கோத்தபாய ராஜபக்சவிடம் வாக்கு மூலமொன்று பதிவு செய்யப்பட உள்ளதாக நிதி மோசடி விசாரணைப் பிரிவு தெரிவித்துள்ளது. (5)



# மின்சார சபை ஊழியர் பணிப்புறக்கணிப்பில் இராணுவத்தினரை களமிறக்கத் தயாராம்

கொழும்பு, செப். 17
மின்சார சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் இறங்கியுள்ளதால், தேவைப்பட்டால்- அழைப்பு விடுக்கப்பட்டால், இராணுவ வீரர்களின் உதவியுடன் தடையற்ற மின் விநியோகத்தை வழங்கத் தயார் என்று இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரொசான் செனவிரத்ன தெரிவித்தார்.

உதவி கோரப்படும் பட்சத்தில் அனுப்புவதற்காக இராணுவத்தின் 89 குழுக்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

எந்த வித இடையூறு ஏற்பட்டாலும் தமது வேலை நிறுத்தப் போராட்டத்தில் இருந்து பின்வாங்கப் போவதில்லை என்று மின்சார சபை தொழிற்சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

'எமது போராட்டத்தின் தாக்கத்தைக் குறைப்பதற்காக மின்சார சபையில் இருந்து ஓய்வு பெற்றுச் சென்றவர்களைப் பணிக்கு வருமாறு அரசு அழைப்பு விடுத்திருக்கிறது. இதுவரை ஓய்வுபெற்ற ஒருவரும் வேலைக்குச் சமுகமளிக்கவில்லை. என்ன நடந்தாலும் உரிய தீர்வு கிடைக்கும் வரையில் எமது போராட்டத்தை நாம் நிறுத்தப்போவதில்லை' என்று மின்சார சபை ஊழியர் சங்கத்தின் செயலர் ரஞ்சன் ஜெயலால் தெரிவித்தார்.

நாட்டின் சில பிரதேசங்களில் தமது ஊழியர்கள் நாச வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக மின்சக்தி மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சின் ஊடகப் பேச்சாளர் சுலக்சன ஜெயவர்தன தெரிவித்திருக்கும் குற்றச்சாட்டுக்களைத் தாம் மறுப்பதாகவும் அவர் தெரிவித்தார். (5)


### திருமண சேவை

www.thaalee.com என்பது website இல் இயங்கும் ஒரு திருமண சேவை. இந்த website இல் பல்லாயிரக்கணக்கான Unmarried, Divorce. Widow, nullified போன்றவர்களுடைய படங்கள், ஜாதகங்கள் மற்றும் முழுமையான விவரங்கள் உண்டு. இதில் ஆண்கள், பெண்கள், உள்நாட்டவர்கள் மற்றும் வெளிநாட்டவர்களும் உண்டு. ஆகவே திருமணம் செய்ய விரும்புபவர்கள் எமது www.thaalee.com என்பதைப் பார்த்து நீங்கள் விரும்புபவர்களைத் தெரிவு செய்து கொள்ள முடியும். மேலும் நீங்களாகவே அதில் பதிவு செய்து கொள்ளவும் முடியும். நீங்கள் எங்கும் போகாமல் வீட்டில் இருந்து கொண்டு திருமணத்தை முடித்துக் கொள்ள முடியும்.

விவரங்களுக்கு - S.Sarma, Phone - 077 539 3728, Viber - 077 829 7351

### CEYMED HOSPITAL SERVICES (PVT) Ltd.
A Ceyline Group Company

### வேலையாள்கள் தேவை

யாழ் நகரில் நீண்டகாலமாக இயங்கி வரும் பிரபல ஆய்வுகூடத்திற்கு காசாளர் (பெண்கள்) தேவை.

**தகைமைகள்**
- வயதெல்லை - 20 இற்கு மேல்
- சாதாரண தரம், உயர்தரம் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
- தமிழ், சிங்களம் (கட்டாயம்) தெரிந்திருத்தல் வேண்டும்.
- ஒருவருட முன் அனுபவமுள்ளவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும்.
- அனுபவமற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

சுயவிவரக்கோவையை தபாலில் அனுப்பவும்

முகவரி: இல, 514, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
021 464 1641

BUILDING BEYOND LIMITS

### வேலைவாய்ப்பு

இடம்:- டோக்கியோ ரெடிமிக்ஸ் கம்பனி (Tokyo Cement Company (Lanka) PLC) மிருசுவில்.

தொழில்நிலை:- மெக்கானிக் (Mechanic)
கனரக வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் திருத்துதல்

தகுதி:- வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் தொடர்பான பூரண அறிவு, குறைந்தது 03 வருட அனுபவம், தொழில்கல்வி சான்றிதழ், அனுபவக் கடிதங்கள்.

சம்பளம் மற்றும் அனைத்து விடயங்களும் நேரில் பேசி தீர்மானிக்கப்படும்.

தகுதியானவர்கள் சுயவிபரக் கோவையுடன் 10 நாட்களுக்குள் தொடர்பு கொள்ளவும்.

Manager, HR and Administration (R.M.C)
TOKYO CEMENT CO. (LANKA) PLC
No. 12D, Haig Road,
Colombo 04
Email: hrm.rmc@tokyocement.lk

www.tokyocement.lk TOKYO CEMENT GROUP

### உடல் எடை குறைய வேண்டுமா ?

*எடை கூடுகிறதா ?
*உடல் எடை கூடி பல்வேறு நோய்களால் அவதிப்படுகிறீர்களா ?
*வயிறு, மார்பு குறைக்க வேண்டுமா ?
*உடல் எடை குறைகிறதேயில்லை என்கிற கவலையா ?
ஊளைச்சதையா ?
வயிற்று கோளாறா ?

விலை 3500 5500, 9000

100% பக்கவிளைவற்ற ஆயுள்வேத ஔடதம் (பால்மா, குளிசை, கிறீம்) 2 வாரங்களில் அற்புதமான மாற்றத்தை உணர்வீர்கள்.

பதிவு இல : 16168
077 210 6155
221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்

### தலைமுடி நீளமாக வளரவேண்டுமா ?

*தலைமுடி வளரவேண்டுமா? *பேன் பொடுகு தொல்லையா?
*முடி கொட்டுகிறதா ? *இள நரையா ?
*தலையிடியா ? *முடி அடர்த்தி இல்லையா?

பொன்னாங்காணி, கரிசலாங்காணி, இலாமிச்சைவேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்து காய்ச்சிய எண்ணெய் 100 %ஆயுள் வேத முறைப்படி காய்ச்சிய இவ்வெண்ணெய்யை பாவித்து பலனடைய.

பதிவு இல : 16168
077 263 9037 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

### இம்முறை உயர்தரப் பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு அரிய வாய்ப்பு !

உங்கள் பெறுபேறு வரும் வரை காலத்தை வீணடிக்காது தனியார் துறையில் சாதிக்க விரும்புகின்றீர்களா ?
- ஆங்கிலம் சரளமாக எழுத, வாசிக்க, பேசக் கூடியவர்கள் மட்டும்.
- அடிப்படைக் கணினி அறிவு.

**வேதனம் : ரூ 50, 000/=**
**ஒப்பந்த காலம் : 2 மாதங்கள்**

நேர்முகத் தேர்வுகள் 18.09.2017 - 20.09.2017 வரை முற்பகல் 10 மணி முதல் நடைபெறும்.

இன்றே எமது அலுவலக வேலை வாய்ப்பில் இணைந்து உச்ச பயனைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

WINSTAR VISA CONSULTANTS
106, Post box Junction, Palaly Road, Thirunelveli.
021 300 4641
(CS 31067) (14)

### வல்வை முதியோர் இல்லம் பெண்கள்

பிள்ளைகளாலும், உறவினர்களாலும் உடனிருந்து பராமரிக்க முடியாது போனவர்களினதும் தமது தேவைகளைத் தாமே பூர்த்தி செய்து கொள்ள முடியாதவர்களினதும் பாது காப்பை உறுதிப் படுத்துவதற்காகவும் அவர்களது நலன் களைப் பேணுவதற்காகவும் அவர்களது தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவும் நடத்தப்படும் இல்லமாகும். இதுவரை தொடர்பு கொண்ட நபரும் இனிமேல் தொடர்பு கொள்ள இருப்பவர்களும் இவ் இல்லத்தின் சேவையைப் பெற்று பயனடைய விரும்புவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.

**ஊரிக்காடு, வல்வெட்டித்துறை, இலங்கை.**
தொடர்பு :- 021 300 7598/ 077 810 6857
077 259 4273, 00614 693 27826

### 100% புலமைப் பரிசில்

முற்றிலும் வேலைவாய்ப்பை நோக்கமாகக் கொண்ட பயிற்சிநெறி!

மென்பொருள் கம்பனியில் இணைந்து மென்பொருள் அபிவிருத்தியாளர் ஆகவேண்டுமா?
அல்லது
ஒரு தொழில்நுட்பம் சார்ந்த கம்பனியை ஆரம்பிக்கவேண்டுமா?

Apply Now For Batch 2

தகைமை : க. பொ. த உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிப் பெறுபேறுகளைப் பெற்றிருத்தல்
பயிற்சி நிலையம் : யாழ்ப்பாணம்
பயிற்சிக் காலம் : 6 மாதங்கள் (நவம்பர் 2017 - ஏப்ரல் 2018)
விண்ணப்பிக்கும் முறை : www.uki.life/apply
விண்ணப்ப இறுதித்திகதி : 06 October 2017

உள்ளடக்கம்
- Software Development
- Business English
- Business Management
- Personal Coaching

UKI
மேலதிக தகவல்களுக்கு
www.uki.life 0775694587 info@uki.life

### அபான்ஸ் சேவை மையம் பதவி வெற்றிடம்



### தொழில்நுட்பவியலாளர்கள்

(கிளிநொச்சி புதிய கிளை)

வளிச்சீராக்கிகள், குளிர்சாதனப் பெட்டிகள், சலவை இயந்திரங்கள் மற்றும் வீட்டு மின் உபகரணங்களை பழுதுபார்த்தல், பொருத்துதல் மற்றும் சேவை செய்தல் போன்ற பணிகளை செய்யக்கூடியவர்கள்.

**தேவையான தகைமைகள்:**
- ஆகக்குறைந்தது இத்துறையில் 3 வருட முன் அனுபவம்.
- NAB பயிற்சி பெற்றவர்கள் மற்றும் பயிற்சி பெறாதவர்கள்
- வளிச்சீராக்கி, குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் மற்றும் வீட்டு மின் உபகரணங்களுக்கான தொழில்நுட்ப அறிவு அவசியம்.
- மும்மொழி ஆற்றல் மற்றும் கணினி அறிவு மேலதிக அனுகூலமாகும்.

**நேர்முகத் தேர்வுகள்:**
வார நாட்களில் மு.ப. 10.00 மணிமுதல் பி.ப. 2.00 மணிவரை பின்வரும் முகவரியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தில் நேர்முகத் தேர்வுகள் நடைபெறும்.

மனிதவள முகாமையாளர்
அபான்ஸ் இலெக்ட்ரிகல்ஸ் பிஎல்சி [சேவை மையம்]
506B காலி வீதி கொழும்பு - 06
தொலைபேசி: 0702591986 / 0715857653
மின்னஞ்சல்: vacancies@abanservice.lk

Abans Service Centre
Always there to serve you better!

# அரசியல்வாதிகளுக்கு சரத் புத்திமதி

## அதிகாரம் உள்ளது என்பதற்காக தவறு செய்ய முடியாதாம்



கொழும்பு, செப். 17
"அரசியல்வாதிகளுக்கு கிடைக்கும் அதிகாரங்கள் தவறு செய்வதற்காக அல்ல. தவறுகளைச்செய்துவிட்டு, அதிகாரத்துக்கு அமையவே அதனைச்செய்ததாகக்கூறமுடியாது. இவ்வாறு அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:
எவராவது தவறு செய்து விட்டு, எனக்கு அதிகாரம் இருந்தது. அதன்படியே உத்தரவிட்டேன். முடிந்தால் எனக்கு எதிராக எதையாவது செய்யுங்கள் என்று கூற முடியாது. தவறாகப் பயன்படுத்தப்பட்டது மக்களின் பணம் என்றால் தகுதி தராதரம் பாராது சட்டத்தைநடைமுறைப் படுத்தவேண்டும்.

தண்டனை விதிக்கப்பட்டவர்களுக்காக பிக்குகள் பிச்சைப் பாத்திரம் ஏந்தி நிதி சேகரிக்கின்றனர். சேரிக்கும் பணத்தையும் இவர்கள் கொள்ளையிடுவார்கள் என்ற நம்பிக்கையே எனக்குள்ளது. கொள்ளையடித்து தானம் வழங்கினால், எந்த நன்மைகளும் கிடைக்காது என்று புத்த பகவான் தெளிவாக உபதேசித்துள்ளார்.

புத்த பகவனின் பிள்ளைகளுக்கு நாங்கள் இதனை தெளிவுப்படுத்த வேண்டிய அவசியமில்லை. என்னை அங்கொடைக்கு அனுப்பவேண்டும் என்று கூறுவார்கள். தற்போது அடிக்கடி நீதிமன்றத்துக்குச் சென்று வருபவர்கள். அவர்கள் எங்கு செல்ல வேண்டும் என்பதை நீதிமன்றமும் மக்களும் தீர்மானிப்பார்கள் - என்றார். (5)

# ரணில் மன்னிப்பு கோரவேண்டும்

கொழும்பு, செப். 17
பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். அவர் பௌத்த தேரர்களை நிந்திக்கும் வகையில் கருத்துத் தெரிவித்துள்ளார். அவர் ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பிரதியமைச்சர் என்பதால் குறித்த கருத்துத் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்ரம சிங்க, பிக்குகளிடம் மன்னிப்புக்கோர வேண்டும். இவ்வாறு மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, பௌத்த பிக்குகளை காவியுடைக்காரர் என்று பேசியிருந்தார். இந்தக் கருத்துக்குப் பல தரப்பிலிருந்தும் எதிர்ப்பு வெளியிடப்பட்டு வருகின்றது. இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே, நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். (5)

# மத்திய வங்கி பிணைமுறியால் பறிகொடுத்த பணத்தை எப்படி மீட்டெடுக்கப்போகின்றீர்கள்?

## அரசிடம் கேள்வி எழுப்புகிறது மகிந்த அணி

கொழும்பு, செப். 17
மத்திய வங்கி ஊழலால் இழக்கப்பட்ட ஒரு லட்சம் கோடி ரூபாவை எப்படி மீட்டெடுக்கப் போகிறீர்கள் என்று மகிந்த அணி நாடாளுமன்ற உறுப்பினர் ரமேஷ் பத்திரன அரசிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஊழல் மோசடிகளைத் தடுக்க வேண்டும் என்பதற்காகவே இந்த நாட்டுமக்கள் பெரிய அபிவிருத்திகளை மேற்கொண்டு வந்த மகிந்த அரசைக் கவிழ்த்து மைத்திரி ரணில் அரசை உருவாக்கினர். நல்லது நடக்குமாக இருந்தால் ஆட்சி மாற்றம் ஏற்பட்டாலும் பரவாயில்லை என்ற நிலைப்பாட்டில்தான் நாம் உள்ளோம். ஆனால், ஆட்சி மாற்றம் மக்களை ஏமாற்றியுள்ளது.

மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் அனைத்தும் பச்சை பச்சையாக மீறப்படுகின்றன. அபிவிருத்திகள் இல்லை. வெளிநாட்டு முதலீடுகள் இல்லை. திருட்டுக்கள் மட்டுமே உள்ளன. அதில் சிக்கி ரவி கருணாநாயக்க முதலாவதாக பதவி இழந்துள்ளார். அரச சொத்துக்களை வெளிநாடுகளுக்கு விற்பதுதான் இந்த அரசின் அபிவிருத்தி.

ஊழல் அதிகரித்துள்ளதால் இந்த நாட்டுக்கு வரவிருந்த வெளிநாட்டு முதலீடுகள் திரும்பிச் செல்கின்றன.

மத்திய வங்கி ஊழலால் இந்த நாட்டுக்கு ஒரு லட்சம் கோடி ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளது என்று அரசில் உள்ள அமைச்சர் லக்ஸமன் யாப்பா அபாயவர்தன தெரிவித்துள்ளார். அப்படியென்றால்இந்தப்பணத்தை அரசு எப்படி மீளப்பெறப் போகின்றது?

இந்த ஊழலில் சிக்கி ரவி கருணாநாயக்க அமைச்சுப் பதவியிலிருந்து விலகியதும் அந்தப் பதவி திலக் மாரப்பனவுக்கு வழங்கப்பட்டுள்ளது. அவரோ 300 கோடி ரூபா ஊழலுடன் தொடர்புபட்ட அவன்கார்ட் விவகாரத்தில் 'அமைச்சுப் பதவி விலகியவர்.

இப்படி மாறி மாறி திருடர்கள் வசமே நாட்டின் முக்கிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்படுகின்றன. இன்னும் மூன்று மாதங்களில் ரவி கூட மீண்டும் அமைச்சராகலாம். அப்படி நடந்தால் அதிசயப்படுவதற்கு எதுவுமில்லை. இந்த நிலைமையின் கீழ் இந்த நாட்டு மக்கள் இந்த அரசிடமிருந்து ஒருபோதும் நல்லாட்சியை எதிர்பார்க்க முடியாது என்றார். (5,3)

## கண்ணீர்க்காணிக்கையும் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

மண்ணில் 15.12.1942
விண்ணில் 19.08.2017



எமது கல்வி நிறுவன இயக்குனர்
**திரு. மு. ஜெயந்திக்குமார்** அவர்களின் அன்புமாமியார்.

### சரஸ்வதி சாம்பசிவம்

அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியைச் செலுத்துவதுடன் அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்.

**இல.52, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.**

**விக்னா கல்வி நிறுவன ஆசிரியர்கள்,
எழுதுவினைஞர், மாணவர்கள் மற்றும்
விக்னா ஹாட்வெயார் ஊழியர்கள்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்

கடந்த 19.08.2017 சனிக்கிழமை
சிவபதமடைந்த எங்கள் குடும்பத் தலைவி



### திருமதி தங்கேஸ்வரி (தங்கம்மா) பரஞ்சோதி

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (17.09.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு கண்ணீர் அஞ்சலி, துண்டுப்பிரசுரங்கள், மலர்வளையங்கள் வழங்கி தொலைபேசி மூலம் ஆறுதல் கூறியியோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

சிலம்புப்புளியடி வீதி,
சங்கானை.

**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி கமலபூசணி நடராசா

திருநெல்வேலி கிழக்கு, பூதவராயர் வீதியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலபூசணி நடராசா நேற்று (16.09.2017) சனிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசையா - தையலம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற பொன்னையா - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னையா நடராசா அவர்களின் அன்பு மனைவியும்,நந்தகுமாரின் (அஞ்சல் அலுவலகம் - யாழ்ப்பாணம்) அன்புத் தாயாரும், சசிகலாவின் அன்பு மாமியாரும், லக்ஷிகா, அக்ஷயன் ஆகியோரின் அன்பு பேர்த்தியும், தங்கலச்சுமி, தர்மரத்தினம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், காலஞ்சென்றவர்களான இராசநாயகம், மார்க்கண்டு, பொன்னம்மா மற்றும் பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2017) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**26, பூதவராயர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.**

**தகவல்:
ந.நந்தகுமார் (மகன்)**

## மரண அறிவித்தல்



### திருமதி பாக்கியலட்சுமி பொன்னம்பலம் (சின்னக்கிளி)

யாழ்.கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும், நவக்கிரி, கனடா ஆகிய இடங்களை வசிப்பிடங்களாகவும் கொண்டிருந்த திருமதி பாக்கியலட்சுமி பொன்னம்பலம் 14.09.2017 வியாழக்கிழமை கனடாவில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராசநாயகம் - அன்னம் தம்பதிகளின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பொன்னம்பலம் அவர்களின் ஆருயிர் மனைவியும், விஜயானந்தம் (விஜே - கனடா), காலஞ்சென்ற சச்சிதானந்தம் (குட்டி), பரமானந்தம் (ராசன் - Reginos Pizza), சர்வானந்தன் (செல்வா), ஜெகானந்தம் (ஜெயா -உரும்பிராய் கிழக்கு), சிவானந்தம்(சிவா - Reginos Pizza), விவேகானந்தன் (விவேகா - Reginos Pizza) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற சந்திராதேவி, சற்குணதேவி (கனடா), கணேசலிங்கம் (உரும்பிராய் கிழக்கு), காலஞ்சென்ற நல்லைநாதன், தனபாலசிங்கம் (கனடா), லீலாவதி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், பத்மநிதி (கனடா), வரலட்சுமி ( மைந்தா), பிறேமா, சிலோஜனா (உரும்பிராய் கிழக்கு), ஜெசிந்தா (யசி), கலாநிதி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலஞ்சென்றவர்களான ஆறுமுகம், பஞ்சலிங்கம், லீலாவதி, புவனேஸ்வரன், புஸ்பராணி (கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனியும், நோமிலா, மேகலா, பிரதீப், பிரவீன், பிரபா, தமிழினி, திலீபன், ஜனனி, யசிகன், யனுசினி, ஜனுசன், யனா, சங்கர், வசந்தன், ராயு, சச்சி, தீபன், சாலினி, ஹாசினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், அனுஸ்ரா, லக்சிதா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2017) திங்கட்கிழமை கனடாவில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்.**

**தகவல்:
பொ.ஜெகானந்தன் (ஜெயா)
0777743114**


மாதாந்தம் ரூ. 5,276/- செலுத்துங்கள்
Hero
ஹீரோ மோட்டார் சைக்கிளை இன்றே ஓட்டிச் செல்லுங்கள்!
ஹீரோவின் புதிய நட்சத்திரங்கள்
MAESTRO
ரூ. 239,999/-
ரூ. 5,903/-
110CC என்ஜின்
அலோய் வீல்
வெளிப்புறமாக அமைந்துள்ள எரிபொருள் நிரப்பி
கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்யும் வசதி
இண்டிகேட்டர் பிரேகிங் அமைப்பு
டியூப்லெஸ் டயர்கள்
Pleasure
ரூ. 227,500/-
ரூ. 5,596/-
ப்லெஷர் பிளக் காஸ்ட் வீல்
100CC என்ஜின்
அலோய் வீல்
டியூப்லெஸ் டயர்கள்
இண்டிகேட்டர் பிரேகிங் அமைப்பு
கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்யும் வசதி
கவர்ச்சிகரமான வர்ணங்கள்
splendor iSmart 110
It's Smart Thinking
ரூ. 235,000/-
ரூ. 5,781/-
110CC என்ஜின்
எரிபொருள் சேமிப்பு i3S
தொழில்நுட்பம் எலோய் வீல்
டியூப்லெஸ் டயர்கள்
GTR பிரேக் சிஸ்டம்
டுவல் டோன் கிரபிக்ஸ் நிறைவு
Pleasure
ரூ. 227,500/-
ரூ. 5,596/-
100CC என்ஜின்
ப்லெஷர் மெட்ல் ஷீட் வீல்
டியூப்லெஸ் டயர்கள்
இண்டிகேட்டர் பிரேகிங் அமைப்பு
கவர்ச்சிகரமான வர்ணங்கள்
கையடக்கத் தொலைபேசியை சார்ஜ் செய்யும் வசதி
Get closer on a Duet
ரூ. 227,999/-
ரூ. 5,608/-
110CC என்ஜின்
உலோக உடல் (Metal Body)
வெளிப்புறமாக அமைந்துள்ள எரிபொருள் நிரப்பி
இண்டிகேட்டர் பிரேகிங் அமைப்பு
டியூப்லெஸ் டயர்கள்
HF Deluxe
சிறந்த எரிபொருள் சேமிப்பைக் கொண்ட 100CC APDV என்ஜின்
அலோய் வீல் (பிளக்)
பவர் ஸ்டார்ட்
சைட் ஸ்டான்ட் இண்டிகேட்டர் மற்றும் எரிபொருள் காட்டி
GTR பிரேக் சிஸ்டம்
ரூ. 214,500/-
ரூ. 5,276/-
GLAMOUR
SIMPLY MAGNETIC
125CC என்ஜின்
முன்புற டிஸ்க் பிரேக்
கவர்ச்சிகரமான நிறைவு
5 ஸ்போர்க் அலோய் வீல்
தேவைக்கேற்ப சரிசெய்யக்கூடிய பின்புற சஸ்பென்ஷன்
கவர்ச்சிகரமான டிஜி அனலொக் மீட்டர் அமைப்பு
ரூ. 275,000/-
ரூ. 6,764/-
Achiever
Solid like you
150CC என்ஜின்
முன்புற டிஸ்க் பிரேக்
5 ஸ்போர்க் அலோய் வீல்
கவர்ச்சிகரமான நிறைவு
கவர்ச்சிகரமான டிஜி அனலொக் மீட்டர் அமைப்பு
ரூ. 309,999/-
ரூ. 7,625/-
Hunk
BECAUSE MUSCLES MATTER
சக்திவாய்ந்த 150CC ATFT என்ஜின்
டபள் டிஸ்க் பிரேக்
கவர்ச்சிகரமான நிறைவு
டியூப்லெஸ் டயர்கள்
டிஜிட்டல் மீட்டர் அமைப்பு
ரூ. 337,500/-
ரூ. 8,302/-
☎: 011 5777000
facebook.com/HeroMotoCorpSriLanka
Abans
மேலதிக விபரங்களுக்கு இன்றே அபான்ஸ் காட்சியறைகள் மற்றும் விற்பனை முகவர்களை நாடுங்கள்!


acer
8TH GENERATION
மடிக்கணினிகள்
இப்பொழுது இலங்கையில் முதல் முறையாக
அபான்ஸ் வழங்குகிறது!
FEEL IT | LIVE IT | BELIEVE IT
Acer மடிக்கணினிகளில் 8th Generation Intel® Core™ Processor இருப்பதனால் பல்வேறு பன்முக பணிகளை மிகச்சிறந்த செயல்திறனுடன் செய்திட முடியும். மேலும் இதிலுள்ள Quad Core CPU's 40% வேகத்துடன் சுமூகமான முறையில் இயங்கி ஆக்கத்திறன்மிக்க உங்கள் அனைத்து பணிகளையும் அசராமல் செய்கிறது.
intel CORE i7 8th Gen
intel CORE i5 8th Gen
Aspire E5-576G powered by 8th gen Intel® Core™ i7 processor.
Intel Inside®. Extraordinary Performance Outside.
ACER BLUELIGHTSHIELD
Skype
Skype Certified
ACER TrueHarmony
E5-576G-57QB
15.6" with Graphics
8th Gen Intel® Core™ i5-8250U Processor
linux
MX 150 2GB DDR5VGA
DVDRW
15.6" Display
4GB RAM, 1TB Hard Disk
E5-576G-801H
15.6" with Graphics
8th Gen Intel® Core™ i7-8550U Processor
linux
MX 150 2GB DDR5VGA
DVDRW
15.6" Full HD Display
8GB RAM, 1TB Hard Disk
ரூ.92,990 இலிருந்து
• 15 மாதங்கள் வட்டியில்லை | 3 வருட உத்தரவாதம் | நாடளாவிய சேவை •
us at www.facebook.com/abansit
Abans


சிறந்த வாழ்க்கைக்கு
சிறந்த ஆரம்பம்
Nestle
NAN GROW
4
2-5 Years
Milk Formula for 2 to 5 Years Children
Probiotic Culture
B
IMMUNITY GROWTH
With essential Nutrients and Probiotics
LONG TERM HEALTH
உங்கள் குழந்தையின் எதிர்காலத்திற்கு சிறந்த
ஆரம்பம். இயற்கையான வளர்ச்சியை
ஊக்குவிப்பதற்கும், நோய் எதிர்ப்புச்சக்தியை
அதிகரிப்பதற்கும், நலமான வாழ்விற்கும்
அவசியமான விஞ்ஞான ரீதியாகத் தயாரிக்கப்பட்ட
புறோபயோட்டிக்ஸ் மற்றும் போஷாக்கு நிறைந்தது.
Nestle
NAN GROW
Nestle
Good Food, Good Life


Acnes
ANTI -
BACTERIAL
தாக்குதல்
1 DEEP CLEANSE
2 HEAL AND SEAL
முகத்திலுள்ள எண்ணெய், அழுக்கு மற்றும் தூசு ஆகியவற்றை
அகற்றி, முகப்பரு மீண்டும் தோன்றுவதைத் தடுக்கும்.
Isopropyl Methylphenol முகப்பருவை உருவாக்கும் பக்டீரியாக்களை
(P - Acne) 99% இல்லாமற் செய்து, முகத்திலுள்ள எரிவுத்தன்மை
மற்றும் தொற்றுக்களைக் குறைக்கும்.
விட்டமின் C யும், E யும், அன்ரி-ஒக்சிடன்ற் ஆக செயற்படுவதுடன்,
விட்டமின் B6 சருமம் மீண்டும் வளருவதற்கு உதவும்.
ஜப்பானின் நம்பர் 1 முகப்பருவை அழிக்கும் உற்பத்தி
ரூ. 380/- தொடக்கம்
NEVER SAY NEVER
ROHTO
R&D


நான்கே மாதத்தில்....
ஒரே பாடநெறி
4 சான்றிதழ்கள்
A/L இன் பின்னர்
உங்கள் உயர் கல்விக்கோ அல்லது தொழிற் கல்விக்கோ
திடமான அத்திவாரமிடுங்கள்.
Business Management
English
Dip. in Computing
Sinhala
சவால்மிகு எதிர்காலத்தை
நோக்கி இன்றே
உங்களை
தயார்படுத்துங்கள்.
பாடநெறி முடிவில் சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழை பெற்றிடுங்கள்
மேலதிக தகவல்களுக்கு....
076 737 4444
விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ள விரையுங்கள்
BRC
BRITISH ROYAL COLLEGE
BRITISH ROYAL COLLEGE
267, Power House Road, Jaffna.
T-021 221 4191 M-076 584 22 22
E-mail: collegebritishroyal@gmail.com
Web: www.britishroyalcollege.com

# பிக்குகள் நாட்டின் காவல்த் தெய்வங்கள்

## கூறுகிறார் அஸ்கிரிய மகாநாயக்கர்

கொழும்பு, செப். 17

இது பௌத்த நாடு. பிக்குகள் நாட்டின் காவல்த் தெய்வங்கள். அமைச்சர்கள் பௌத்தத்தை மதிக்கத் தவறுகின்றார்கள். நாடாளுமன்றம் தற்போது கெட்டவர்களின் கூடாரமாக மாறியுள்ளது. இவ்வாறு அஸ்கிரிய பீடத்தின் மகா நாயக்கர் வரகாகொட ஞானரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

மகியங்கனை, முதியங்கனை விகாரையினால் நிர்மாணிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்ட அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் மரியாதைக்குரிய இடமாக நாடாளுமன்றம் இருக்க வேண்டும். இன்று வளரும் பிள்ளைகளை அங்கு அழைத்துச் செல்ல வேண்டாம் என்று கூறுமளவுக்கு நாடாளுமன்றம் தரம் தாழ்ந்துவிட்டது. கெட்டவர்களின் புகலிடமாக மாறிவிட்டது. நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர் பௌத்த தேரர்களைக் காவியுடைக்காரர்கள் என்று மரியாதையற்றுப் பேசுகின்றார். இது பௌத்த நாடு. பிக்குகள் இந்த நாட்டின் காவல்த் தெய்வங்கள். வரலாற்றுக் காலம் தொட்டு நிலவி வரும் அந்தப் பாரம்பரியத்தை மதித்து பேசுவதற்கு அமைச்சர்கள் கற்றுக் கொள்ள வேண்டும் - என்றார். (5)












உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com



## தேர்தல் நடக்கட்டும்

மாகாண சபைகள் தேர்தல் விரைவில் நடத்தப்படலாம் என்கிற பேச்சு மீண்டும் அடிபட ஆரம்பித்திருக்கிறது. எதிர்வரும் டிசெம்பர் மாதம் தேர்தல் நடக்கலாம் என்றும் எதிர்வுகூறப்படுகின்றது. மாகாணசபைகள் அனைத்துக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கான அரசமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றுவதானால், நாடாளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும், மக்களின் பெரும்பான்மை ஆதரவையும் பெறவேண்டும் என்று உயர்நீதிமன்றம் தெரிவித்திருப்பதாகக் கூறப்படும் நிலையிலேயே தேர்தல் சூடு பிடிக்க ஆரம்பித்துள்ளது.

கிழக்கு, வடமத்தி, சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாணங்களின் ஆயுள் இந்த மாதத்துடன் நிறைவடைகின்றது. புதிய ஆளும் தரப்பைத் தேர்தெடுப்பதற்கான மூன்று மாதங்களுக்குள் இந்த மாகாணங்களில் தேர்தலை நடத்தியாகவேண்டும். இதனைத் தடுத்து நிறுத்தி அனைத்து மாகாணங்களுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளே அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தின் ஊடாக மேற்கொள்ளப்பட்டன. நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் அதனை நிறைவேற்றிவிடலாம் என்று அரசு எண்ணமிட்டது. ஆனால், அதற்கு மக்களின் ஆதரவும் பெறப்படவேண்டும் என்கிற நெருக்கடி ஏற்பட்டுள்ள நிலையில் அரசமைப்புத்திருத்தத்தைக் கைவிட்டு அரசு தேர்தலுக்கே நேரடியாகச் செல்லக்கூடும் என்கிற எதிர்பார்ப்பு அதிகரித்திருக்கிறது.

இப்போது உள்ள சூழலில் தேர்தலை நடத்தினால் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவைப் பலப்படுத்துவதாகிவிடும் என்கிற அச்சம் காரணமாகவே அரசு தேர்தலைப் பிற்போட எத்தனிக்கிறது என்கிற விமர்சனம் ஒன்றுண்டு. எனவே அரசு எதிர்பாராத விதத்தில் இந்த விடயத்தில் இப்போது சிக்கலுக்குள் மாட்டுப்பட்டுக்கொண்டுவிட்டது என்கிற பார்வையும் உண்டு.

ஒருவேளை மாகாண சபைத் தேர்தல் நடந்தது என்றால் அது அரசுக்குச் சிக்கலாக இருக்கக்கூடும். மகிந்த தரப்புக்கும் மைத்திரி தரப்புக்கும் இடையிலான பலப்பரீட்சையாகவும் அது நிச்சயம் இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. அதே நேரத்தில் யார் பலசாலி என்பதும் தெரிந்துவிடும். அந்தப் பலசாலி யார் என்பதைத் தெரிந்துகொள்வது தமிழ் மக்களின் எதிர்கால அரசியலுக்கு மிக முக்கியமானது.

புதிய அரசமைப்பு உருவாக்கமாகட்டும், காணி விடுவிப்பாகட்டும், காணாமற்போனோர் விவகாரமாகட்டும், வடக்குக் கிழக்கில் படைகளைக் குறைப்பதாகட்டும், அரசியல் கைதிகள் விடுதலையாகட்டும், பொறுப்புக் கூறலை நிறைவேற்றாமல் இருப்பதாகட்டும் எல்லாவற்றுக்குமே மகிந்தவை ஒரு தடையாக இந்த அரசு இதுநாள்வரையில் காட்டி வந்தது.

புதிய அரசமைப்புக்கு எதிராக மகிந்த தரப்பினர் பரப்புரை செய்கின்றனர், எனவே அதில் வேகமாக நகர முடியாது என்றனர். படையினர் வசம் உள்ள மக்களின் காணிகளை விடுவித்தால், மகிந்த அணியினர் அதனைத் தெற்கு மக்களிடம் தவறாகப் பரப்புரை செய்கிறார்கள் என்றனர். போர்க்குற்ற விசாரணையை நடத்தினால், அது படையினருக்குச் செய்யும் துரோகம் என்று விசமப் பரப்புரை செய்து சிங்கள மக்களிடம் நஞ்சை விதைக்கின்றனர் என்கின்றனர். இப்படியெல்லாம் மகிந்த தரப்பினர் செய்வதால், இந்த விடயங்களில் எல்லாம் தாம் கவனமாகவும், பொறுமையாகவும் மட்டுமே செயற்பட முடியும் என்று இதுவரையில் காரணங்கள் கூறிவந்தனர்.

தமிழர்களுக்கு எதையாவது செய்தால், அதை மகிந்த தரப்பினர் சிங்களத் தரப்பினரிடம் தவறாக எடுத்துச் சொல்லி, இனவாதம் பேசி தமது செல்வாக்கை வளர்த்துக் கொண்டுவிடுவார்கள், பலம்பெற்றுவிடுவார்கள் என்று சொல்லிச் சொல்லியே செய்யப்படவேண்டிய பலவற்றைச் செய்யாமல் விட்டுவிட்டது இந்த அரசு.

3 மாகாண சபைகளுக்கும் தேர்தல் நடந்தால் மகிந்தவுக்கு உள்ள உண்மையான பலம் தெரியவந்துவிடும். மைத்திரி ரணில் அரசின் எதிர்காலம் குறித்த தெளிவும் கிடைத்துவிடும். அதற்கு மேலாக, தேர்தலில் தமிழர்களிடம் இருந்து ஆதரவைப் பெறவேண்டுமானால் எதையாவது கொஞ்சம் செய்தே ஆகவேண்டும் என்கிற இக்கட்டும் ஏற்பட்டுவிடும். அந்த வகையில் பார்த்தால் மாகாண சபைத் தேர்தல் நடப்பது நல்லதே!

# அருந்திக்கவை நீக்கியதன் மூலம் தலையிடி குணமாகிவிட்டதா?



எம்.ஐ.முபாறக்

அமைச்சர்கள் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதும், விலக்கப்படுவதும் இன்று சாதாரண நிகழ்வுகளாக மாறியுள்ளன. முதலில் திலக் மாரப்பன. அதன்பின் ரவி கருணாநாயக்க. அடுத்ததாக விஜயதாச ராஜபக்ச விலக்கப்பட்டார். அந்த வரிசையில் இப்போது அருந்திக்க பெர்னாண்டோவும் இணைந்துள்ளார்.

ஜனநாயகம் வளர்ச்சியடைந்துள்ள மேற்கு நாடுகளில் மாத்திரம் இருந்து வருகின்ற இந்த அரசியல் கலாசாரம், இப்போது இலங்கையின் அரசியலுக்குள்ளும் ஊடுருவியுள்ளமையை நாம் எவ்வாறு எடுத்துக்கொள்வது? இந்த அரசில் நல்லதோர் அரசியல் கலாசாரம் மலரத் தொடங்கியுள்ளது என்று எடுத்துக்கொள்வதா அல்லது தங்களின் குறுகிய அரசியல் இலாபத்துக்காக அரசியல் கட்சிகள் இந்தக் கலாசாரத்தைப் பயன்படுத்துகின்றன என்று எடுத்துக்கொள்வதா என இரண்டு கேள்விகள் எம்மிடையே எழுகின்றன.

மேற்கு நாடுகளில் உள்ள அரசியல் கலாசாரம் ஒரு சரியான இலக்கைக் கொண்டதாகவே இருக்கும்.

குறித்த அந்த நாட்டை உலக அளவில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்றுவதற்கான திட்டத்தை உள்ளடக்கியதாக அது காணப்படும். அப்படியான அரசியல் கலாசாரத்துக்குள் அனைத்து அரசியல்வாதிகளும் கட்சி பேதமின்றி உள்வாங்கப்படுவர்.

அடுத்தவர் காலை வாருதல் மற்றும் சூழ்ச்சி செய்தல் என்பவை அங்கு இருக்க மாட்டா. ஊழல், மோசடிகள் என்பது அரிதாகவே இடம்பெறும். அப்படி இடம்பெற்றால் அவர்கள் கௌரவமாகத் தாமாகவே பதவி விலகிவிடுவர். உண்மையையும் ஒத்துக்கொள்வர்.

ஆனால், இலங்கையில் அப்படியான ஒரு கலாசாரம் உண்டா? நாட்டை முன்னேற்ற வேண்டும் என்ற இலக்கு எவரிடமாவது உண்டா? சம்பந்தப்பட்ட அமைச்சின் ஊடாக, அந்த அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்களின் ஊடாக எப்படிப் பணத்தை கவரலாம். எப்படிச் சம்பாதிக்கலாம். எப்படி தரகுப் பணம் ஈட்டலாம் என்றுதான் எமது அரசியல்வாதிகள் யோசிக்கின்றனர்.

இலங்கையின் அரசியல் கலாசாரத்தைப் பொறுத்தவரை அரசியலுக்குவருவதே பணம் சம்பாதிப்பதற்குத்தான். இது எழுதப்படாத விதியாகும். பயன்படுத்துவதற்குச் சொந்தமாக ஒரு துவிச்சக்கர வண்டி கூட இல்லாமல் இருக்கும் ஒருவர், அரசியலுக்கு வந்து ஓரிரு வருடங்களில் 5 கோடி ரூபா பெறுமதியான வாகனத்துக்கு சொந்தக்காரராவதையும் பல கோடி ரூபா பெறுமதியான வீடுகளைக் கட்டுவதையும், சொத்துக்களை வாங்கிக் குவிப்பதையும் நாம் காண்கிறோம்.

இப்படியான ஓர் அரசியல் கலாசாரத்தின் கீழ்த்தான் எமது நாட்டு அமைச்சர்களின் பதவி விலக்கல்களும், விலகல்களும் இடம்பெறுகின்றன.

இவ்வாறு இடம்பெறுகின்ற விலகல்களும் விலக்கல்களும் அவரவர் மீது சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்களை மூடி மறைப்பதற்கான தந்திரோபாயமே அன்றி வேறில்லை என்பதுதான் உண்மை. இந்தச் செயற்பாடுகளுக்கு நல்லதோர் அரசியல் கலாசாரம் என்றும், அதி உச்ச ஜனநாயகம் என்றும் பெயரிடுவது மக்க

> **மகிந்த அணியில் இருப்பவர்கள் ஒரே நிலைப்பாட்டிலும் மைத்திரி அணியில் உள்ளவர்கள் மூன்று வெவ்வேறு நிலைப்பாடுகளிலும் இருப்பதே மைத்திரி இப்போது எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு அடிப்படைக் காரணம். அதாவது மகிந்த அணியினர் மகிந்தவின் விசுவாசிகளாகவும், மைத்திரி அணியினர் மகிந்த,மைத்திரி மற்றும் , மைத்திரி விசுவாசிகளாக இருப்பதையும் காணலாம். மைத்திரி அணியில் இவ்வாறு மூன்று வகையான விசுவாசிகள் இருப்பதே மைத்திரியின் தலையிடிக்குக் காரணம்.**

ளின் பார்வையை மறைப்பதற்கான திட்டமிட்ட செயலாகும்.
இந்த ஆட்சியில் இடம்பெற்றுக்கொண்டிருக்கும் பதவி விலகல்களும் விலக்கல்களும், பிரதானமான இரண்டு நோக்கங்களைக் கொண்டவையாகும். ஒன்று ஊழல், மோசடிக் குற்றச்சாட்டுக்களை மூடி மறைத்தல். மற்றையது அரசியல் பழிவாங்கல்.



**அருந்திக்க பெர்னாண்டோவின் பதவிவிலகல் அரசியல் பழிவாங்கலே**

இப்போது இறுதியாக இடம்பெற்றிருக்கும் பதவி விலக்கலானது, முற்றுமுழுதான அரசியல் பழிவாங்கலாகும். இந்தப் பழிவாங்கல்களுக்கு இலக்காகி இருக்கும் அருந்திக்க பெர்னாண்டோ, மைத்திரி தரப்பில் இருந்துகொண்டு ஆட்சிக்கு எதிராகவும் மகிந்தவுக்கு ஆதரவாகவும் செயற்பட்டமையே அவருக்கு இந்த நிலை ஏற்படக்காரணமாகியது.
இன்றோ அல்லது நாளையோ அரசில் இருந்து விலகுவது என்ற நிலைப்பாட்டில் அருந்திக்க இருந்ததால், அவரது பதவி விலக்கலைப் பரிதாபகரமான ஒன்றாகப் பார்க்க முடியாது. தாமாக விலகுவதற்கு முன் விலக்கப்பட்டார். அவ்வளவுதான். இதற்கான காரணம் என்னவென்பதை இப்போது பார்ப்போம்.
சுதந்திரக் கட்சியின் செயலாளராக இருந்த மைத்திரிபால சிறிசேன, 2015 ஆம் ஆண்டின் அரச தலைவர் தேர்தலில் மகிந்தவை எதிர்த்துக் களமிறங்கியதும், அந்தக் கட்சி மகிந்த தரப்பு என்றும் மைத்திரி தரப்பு என்றும் இரண்டாகப் பிளவு பட்டது. மைத்திரி வெற்றிபெற்றதும் சுதந்திரக் கட்சி மைத்திரி வசமானது. ஆனால், பிளவு என்பது விசாலமாகிக்கொண்டே வருகின்றது.
மகிந்த அணியில் இருப்பவர்கள் ஒரே நிலைப்பாட்டிலும், மைத்திரி அணியில் உள்ளவர்கள் மூன்று வெவ்வேறு நிலைப்பாடுகளிலும் இருப்பதே மைத்திரி இப்போது எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு அடிப்படைக்காரணம்.
அதாவது மகிந்த அணியினர் மகிந்தவின் விசுவாசிகளாகவும், மைத்திரி அணியினர் மகிந்த,மைத்திரி மற்றும் மைத்திரி விசுவாசிகளாக இருப்பதையும் காணலாம். மைத்திரி அணியில் இவ்வாறு மூன்று வகையான விசுவாசிகள் இருப்பதே மைத்திரியின் தலையிடிக்குக் காரணம்.

**மைத்திரியுடன் சேர்ந்து வெளியேறியோரே மைத்திரியின் உண்மையான விசுவாசிகள்**

2015 அரச தலைவர் தேர்தலில் மகிந்தவை எதிர்த்துப் பொது வேட்பாளராகப் போட்டியிடுவதற்கு மைத்திரி சுதந்திரக் கட்சியில் இருந்து வெளியேறிய போது, அவருடன் இணைந்து இன்னும் பலர் வெளியேறினர். அவர்கள்தான் மைத்திரியின் உண்மையான விசுவாசிகள். மகிந்தவின் தலைமைத்துவத்தை கடுமையாக எதிர்ப்பவர்கள். மைத்திரி அரச தலைவர் தேர்தலில் வெற்றிபெற்று சுதந்திரக் கட்சியின் தலைமைத்துவப் பதவியைக் கைப்பற்றியதும் மகிந்த அணியில் இருந்து பலர் மைத்திரி அணியில் இணைந்துகொண்டனர். அவர்களுள் இரண்டு பிரிவினர் உள்ளனர்.
அவர்களுள் ஒரு சாரார் சுதந்திரக் கட்சிக்கு மகிந்தவும் வேண்டும் மைத்திரியும் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். இருவரும் இணைந்தே சுதந்திரக் கட்சியை வழிநடத்த வேண்டும் என்கின்றனர் அவர்கள். இவர்கள்தான் மைத்திரி மகிந்த விசுவாசிகள்.
அடுத்த பிரிவினர் மகிந்தவை தலைமை அமைச்சராக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கக்கூடாது என்றும், மைத்திரிக்கு அழுத்தம் கொடுத்து வருபவர்கள். இவர்கள்தான் மைத்திரி அணிக்குள் இருக்கும் மகிந்தவின் விசுவாசிகள்.
இந்தப் பிரிவின் முக்கியஸ்தராக இருப்பவர்தான் இப்போது பதவி விலக்கப்பட்டிருக்கும் அருந்திக்க பெர்னாண்டோ. இந்தப் பிரிவினர்தான் மைத்திரிக்கு மிகவும் ஆபத்தானவர்கள்.

> ஒரு சாரார் சுதந்திரக் கட்சிக்கு மகிந்தவும் வேண்டும், மைத்திரியும் வேண்டும் என்ற நிலைப்பாட்டில் உள்ளனர். இருவரும் இணைந்தே சுதந்திரக் கட்சியை வழிநடத்த வேண்டும் என்கின்றனர் அவர்கள். இவர்கள்தான் மைத்திரிமகிந்த விசுவாசிகள். அடுத்த பிரிவினர் மகிந்தவை தலைமை அமைச்சராக்க வேண்டும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைக்கக்கூடாது என்றும், மைத்திரிக்கு அழுத்தம் கொடுத்து வருபவர்கள்.

**மகிந்தவை தலைமை அமைச்சராக்கும் திட்டத்துடன் செயற்பட்டவர் அருந்திக்க பெர்னாண்டோ**

ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்து சுதந்திரக் கட்சி ஆட்சி நடத்துவதை எதிர்த்து மகிந்தவைத் தலைமை அமைச்சராக்க வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து அருந்திக்க பெர்னாண்டோ மற்றும் மற்றொரு பிரதி அமைச்சர் நிமல் லான்ஸா உள்ளிட்ட குழுவினர் அரசில் இருந்து விலகுவதற்குத் தீர்மானித்தனர்.
இவ்வாறு 18பேர் விலகி எதிர்கட்சி வரிசையில் அமரப்போவதாகக் கூறினர். இது தொடர்பில் அவர்கள் அரச தலைவரைச் சந்தித்துப் பேசியபோது டிசம்பர் வரை பொறுத்திருக்குமாறு அரச தலைவர் மைத்திரி கேட்டுக் கொண்டதற்கு இணங்க அவர்கள் அவ்வாறே செய்வதற்குத் தீர்மானித்தனர்.
இருந்தும், அருந்திக்க பெர்னாண்டோ சுதந்திரக் கட்சியில் இருந்து மேலும் அதிகமானவர்களைத் திரட்டிக் கொண்டு போய் மகிந்த அணியில் அமருவதற்கான சூழ்ச்சியில் தீவிரமாக இறங்கினார். அதுதொடர்பில் மகிந்தவைஜப்பானில் சந்தித்துப்பேசினார்.
இதனைத் தொடர்ந்தே இவரை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கினார் மைத்திரி. தாமாக விலகவிருந்தவர் அதற்கு முன்னர் விலக்கப்பட்டார். இவரை விலக்கியதன் மூலம் கட்சிக்குள் மைத்திரிக்கு இருந்த தலையிடி நீங்கிவிட்டது என்று சொல்லமுடியாது.
மகிந்தவின் விசுவாசிகளையும் மைத்திரிமகிந்தவிசுவாசிகளையும் அருகில் வைத்துக்கொண்டு மைத்திரியால் பயணிக்க முடியாது. உண்மையில்மைத்திரிஅணியை விடவும் மகிந்த அணியில்தான் விசுவாசிகள் அதிகம். இந்த நிலையில் தனது தரப்பிலே மகிந்தவின் விசுவாசிகளை மைத்திரி வைத்துக் கொண்டிருப்பது எந்த வகையில் மைத்திரிக்கு நன்மை தரப்போகின்றது?
எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கு முன்னர், மைத்திரி இந்த ஆபத்தில் இருந்து விடுபட வில்லையென்றால், அந்தத் தேர்தலில் மைத்திரி தரப்பு தோல்வியையே எதிர்கொள்ள வேண்டிநேரிடும்.





## ஆசிரியருக்கான கடிதம்

### சம்பந்தர் சரியானவரே!

கடந்த 12 ஆம் திகதிய உதயனில் 'கொலு வேற்றியவர்கள் தம் மக்களைக் கழுவேற்றல் ஆகாது' என்ற தலைப்பில் வெளியான கட்டுரையில் கட்டுரையாளர் செ.அன்புராசா அடிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா பற்றி விமர்சித்திருந்தார்.
யாராவது ஒருவர் மின்னஞ்சல் அனுப்பினால் உடனே அதைப் பிரசுரிப்பீர்களா? அது எவ்வளவு கேவலமாக, ஒரு மக்கள் தலைவனைப் பற்றி எழுதினாலும் பரவாயில்லையா? மக்களின் பிரதிநிதிகள் தம் மக்களின் பக்கம் நின்று செயற்படாதபோது அவர்கள் துரோகிகளாகவே கருதப்படுவர். யாரால்? உதயன் ஆசிரியரால் கருதப்படுவார்களா?
சம்பந்தன் ஐயா பற்றி ஆயிரம் குறைகள் சொல்லலாம். ஆனால் அவர் ஒரு பயந்தாங்கொள்ளி என்று எவரும் சொல்ல மாட்டார்கள். இன்று நாடாளுமன்றத்தின் உள்ளும் வெளியிலும், இராசதந்திரிகள் மட்டத்திலும், வெளிநாட்டு தூதுவர்கள் மத்தியிலும் தமிழர் தரப்பு நியாயத்தை ஆணித்தரமாக முன்வைப்பவர் சம்பந்தன் ஐயா மட்டுமே! தலை பழுதானவர்களே அவருக்கு எதைக் கண்டாலும் பயம் என்று நையாண்டி பண்ணுவார்கள். ஒரு சனநாயக எல்லைக்குள் என்ன செய்ய வேண்டுமோ? எதைப் பேச வேண்டுமோ, அதனை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் செய்கிறார்கள், பேசுகிறார்கள். சம்பந்தனின் அரசியல் சாணக்கியம்தான் ஆட்சிமாற்றத்தைக் கொண்டுவந்தது. ஆட்சி மாற்றம் ஏற்பட்ட காரணத்தினால்தான் புதிய அரசமைப்பு ஒன்று எழுதப்பட்டு வருகிறது.
சம்பந்தன் ஐயா அமெரிக்க இராசாங்க அதிகாரிகளைக் கண்டு பேச்சு நடத்தியதன் காரணமாகவே (2011) அமெரிக்கா ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் 2012 இல் தீர்மானம் கொண்டு வந்தது. இது சாதனை இல்லையா? தமிழ்மக்கள் விவகாரம் இன்று ஐநா சபையில் பேசு பொருளாக இருக்கிறது. சிறிலங்கா அரசை ஐ.நா. மனித உரிமைகள் பேரவை ஆணையாளர் சரி, ஐநா சபை செயலாளர் நாயகம் சரி தட்டிக் கேட்கிறார்கள். கலப்பு விசாரணை இல்லாவிட்டால் பன்னாட்டு விசாரணைக்கு முகம் கொடுக்க வேண்டிவரும் என எச்சரிக்கிறார்கள். தமிழ் மக்களது பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு வலியுறுத்துகின்றனர், கைதிகள் சிறைகளில் பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் விசாரணை இல்லாமல் ஆண்டுக் கணக்கில் அடைக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் கடந்த இரண்டரை ஆண்டுகளில் இவை தொடர்பாக சில முன்னேற்றங்கள் காணப்பட்டுள்ளன. காணாமல் போனோர் பற்றிய சட்டம் வர்த்தமானியிர் பிரசுரிக்கப்பட்டு அலுவலகங்கள் திறக்கப்பட உள்ளன. வலி வடக்குக் காணிகளில் 30 விழுக்காடு விடுவிக்கப்பட்டுள் ளன. இவைகள் எல்லாவற்றுக்கும் சம்பந்தன் ஐயாவின் துணிச்சல் காரணமில்லையா?

தங்கா.

உதயன் நித்திய சுகம் 336

ச.சுதாகரன்



# ஜெலிமீன்களின் தாக்கம்

## கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் சுகநலப்பிரச்சினைகள் குறித்த ஆலோசனைகள்

நாளாந்தம் மருத்துவமனைக்கு வருகை தரும் நோயாளிகளில் கடற்றொழில் செய்யும் சாதாரண பொதுமக்கள் பின்வரும் பாதிப்புக்களுக்கு உள்ளாகியிருக்கின்றனர். அவர்களுள் சிலர் ஆபத்தான நிலையை அடைவதையும் அவதானிக்க முடிகிறது.

1.சுனையடிப்பு (சுனைநீர் Jelly Fish)
2.மின்னல் தாக்கம்.
3.குருதியில் குளுக்கோஸின் அளவு குறைந்த நிலை.
4.உயர்குருதி அமுக்கம்.
5.அதிகரித்த மதுப்பாவனை

**சுனைநீர்**

மீனவர்கள்,ஆழ்கடல் நீச்சல் செய்பவர்கள்,கடற்கரைவாழ் மக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் ஆகியோர் இதன் தாக்கத்திற்கு உள்ளாகின்றனர்.

**ஜெலிமீன்களின் அமைப்பும் செயற்பாடும்**

ஜெலிமீன்கள் கடல்வாழ் விலங்கினத்தைச் சேர்ந்தவை. இவை சில மில்லி மீற்றரில் இருந்து சென்ரி மீற்றர்வரை பருமன் அளவில் வேறுபடும். இவற்றைக் கைக்கண்ணாடியினால் அல்லது நுணுக்குக் காட்டியினால் மட்டுமே பார்க்க முடியும். இதன் உருவம் பல்வேறு படிநிலை மாற்றங்களைக் கண்டுகொள்வதால் நீருடனோ அல்லது பாசியுடனோ சேர்ந்திருக்கும். அவற்றை இனங்காணுதல் கடினம். இதன் காரணமாகவே அமுக்குநீர் அல்லது சுனைநீர் என்று ஜெலி மீன்களை பெயர் குறிப்பிட்டு அழைக்கின்றனர்.

கடல் அலைகள்,சுழி, சுழிகளின் ஒட்சிசன் செறிவு, நீரின் வெப்பம், உணவுச் செறிவு என்பன பல்லாயிரக்கணக்கான சிறிய ஜெலிமீன்களை ஒன்று சேர்க்கின்றன. ஜெலிக்கூட்டத்தை உருவாக்குகின்றன. பொதுவாக ஜெலிமீன்கள் கடல் மேற்பரப்பு நீரில் காணப்படும்.வெளிச்சம் குறைந்த நேரத்தில் இவை இயக்கம் கொண்டிருக்கும். சில வேளைகளில் கடல் அலைகளின் தாக்கத்தால் கடற்கரையிலும் இவை காணப்படலாம்.

பூரணை தினத்தில் இருந்து 8 தொடக்கம் 10 நாள்களில் இவை அதிகம் இனப்பெருக்கத்தில் ஈடுபடுவதால் அக் காலங்களில் சுனைநீர் தாக்கம் அதிகரித்துக் காணப்படும். ஜெலி மீன்கள் ஒட்சிசன் குறைந்த அயடீன் உப்புச் சேர்ந்த வெப்பமான கடல்நீரில் அதிக காலம் உயிர் வாழும் திறனைக் கொண்டுள்ளன.மேற்படி குடை போன்ற அமைப்புடைய ஜெலிமீன்களின் அடிப்பகுதியில் Nematocust எனும் பகுதி காணப்படுகிறது. பெரும்பாலான ஜெலிமீன்கள் ஆபத்தற்றவை. எனினும் சிலவகை ஜெலிமீன்கள் மனிதன் அல்லது விலங்குகள் தொடுகையுற்றதும் அவற்றின் நேஅயவழஉரளவ எனும் பகுதியில் இருந்து வெளியிடப்படும் நச்சுப் பதார்த்தமானது தோலைத் துளைத்து விசத்தை உள்ளீடு செய்கிறது. இதனால் சிலருக்கு தோல் எரிவு, தோல் சிவப்பு நிறமாக வீங்கிக் காணப்படல் பொதுவாக கை,கால், இடுப்புப் பகுதி மற்றும் ஆணுறுப்பு பகுதிகளில் இவை தாக்கத்தை ஏற்படுத்தலாம். பெரிய ஜெலி மீன்கள் மனிதனைத் தாக்கும் போது அவற்றில் வால்பகுதி தோலில் பதிந்து உடலில் நீண்ட அடையாளங்களை ஏற்படுத்தலாம். சிலருக்கு இந்தத் தோல் பதிப்பையும் தாண்டி வயிற்று நோ, வாந்தி, கை கால் விறைப்பு, தசை நோ, சுவாசிக்க இயலாமை, மயக்கம் போன்ற நோய் அறிகுறிகள் ஏற்படலாம். இதன்போது உடனடியாகவே மருத்துவ உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

**முதலுதவி**

ஆழ்கடலில் தாக்கம் ஏற்பட்டு அதிக நேரம் சுவாசிக்க இயலாமை ஏற்படின் பாதிக்கப்பட்டவர் நீரில் மூழ்குவதற்கான வாய்ப்பு உண்டு. எனவே பாதிக்கப்பட்டவரை உடனடியாக அப்புறப்படுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு முதலுதவி அளிப்பவர் கைஉறை அணிவதன் மூலமோ அல்லது ஈரமான கடலுடைகளை அணிவதன் மூலமோ ஜெலிமீன் தாக்கத்தில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளமுடியும்.

சில சந்தர்ப்பங்களில் சிலருக்கு ஜெலிமீன் பகுதிகள் ஒட்டிக் கொண்டு தொடர்ந்து விசத்தை ஏற்றிய வண்ணம் இருக்கலாம். இதன்போது பாதிக்கப்பட்ட பகுதியைக் கடல் நீரால் சுத்தம் செய்ய வேண்டும். உதாரணமாக கை, கால், இடுப்பு பகுதிகளை சுத்தம் செய்வது சிறப்பானது. ஸ்பிறிற் மதுபானங்களால் கழுவுதல் முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும். இவை பாதிப்புக்களை மேலும் அதிகரிக்க செய்யும்.சுனைநீரின் பாதிப்பு அதிகம் இருந்தால் உடனடி யாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டும்.

மருத்துவமனையில் நோயாளிக்குத் தேவையான ஒட்சிசன், அதீத ஒவ்வாமைக்குரிய மருந்துகள், தோல்கடிக்கான மருந்துகள் வழங்கப்படும். மேற்படி நோயாளியை 24 தொடக்கம் 48 மணித்தியாலங்கள் அவதானத்தில் வைத்திருக்க வேண்டும்.

கடலுக்கு செல்பவர்கள் பழக்கமில்லாத தாவரங்களையோ அல்லது விலங்குகளையோ கையுறை அணியாமல் கையாள்வதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

சிறுவர்கள், முதியவர்கள்,உடலின் பெரும்பகுதியில் ஜெலிமீன்களின் தாக்கத்திற்கு உட்பட்டவர்கள் உடனடியாகவே மருத்துவ உதவியை நாட வேண்டும். ஜெலிமீன் விசத்திற்கு உடனடியாக மருத்துவசிகிச்சை வழங்கப்படாவிடின் மாறாத தோல் புண்கள், சிறுநீரகம் செயல் இழந்து பேதல், சுவாசச் செயலிழப்பு மற்றும் மரணம் சம்பவித்தல் போன்ற விளைவுகள் ஏற்படலாம்.

**மின்னல் தாக்கம்**

கடற்றொழில் செய்பவர்களுக்கு மின்னல் தாக்கம் ஏற்படும் போது ஒரு மில்லி செக்கனுக்குள் பத்து மில்லியன் வேல்ட் வலுவுள்ள மின்சாரம் உடலினுள் சென்று வெளியேறும்.இதனால் இதயத் துடிப்பு நின்றுவிடும் நிலை ஏற்படும். மூச்சுத் திணறல் ஏற்படும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் பாதிக்கப்பட்டவரை கிடையாக மல்லாந்த நிலையில் படுக்க வைத்து நெஞ்சுப் பகுதியில் இடது பக்கம் இதயப் பகுதிக்கு மேல் இரு உள்ளங்கைகளையும் வைத்து நெஞ்சுப் பகுதியை ஆழமாக அழுத்துவதன் மூலம் தேவைப்படின் செயற்கை சுவாசமும் வழங்கி பாதிக்கப்பட்டவரை உயிர்பிழைக்க வைக்க முடியும். எனவே மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவருக்கு உடனடியாக சிகிச்சை வழங்கப்பட வேண்டும். இந்தச் சிகிச்சை மிக முக்கியமான சிகிச்சையாகும். அத்துடன் மின்னல் தாக்கத்தால் பாதிக்கப்பட்டவரை தொடுவதால் எந்த பாதிப்பும் இல்லை. எவருக்கும் மின்சாரமும் பரவாது.

மின்னல் தாக்குதலின் போது பாதிக்கப்பட்டவரின் மின்னோட்டம் உட்செல்லும் தலைப்பகுதியும் வெளிச் செல்லும் கால்ப்பகுதியும் பாதிப்புக்குள்ளாகும். சில சமயம் தலை, கால்பகுதியில் எரிவு நிலை காணப்படும். அத்துடன் சிலருக்கு காது கேளாமை, பார்வை இழப்பு, எலும்பு உடைதலும் காணப்படும். எனவே மின்னல் தாக்குதல் நிகழும் போது கீழே குனிந்து உங்கள் முழங்கால்களுக்கு இடையில் தலையை நுழைத்தவாறு அமர வேண்டும். அத்துடன் கைபேசி, குடை போன்றவற்றைப் பாவிப்பதைத் தவிர்க்கவும். பாதிக்கப்பட்டவரின் நாடித்துடிப்பையும் அவதானிக்கவும்.

**குருதியில் குளுக்கோசின் அளவு (சீனிச்சத்து) குறைவடையும் நிலை**

உணவு அருந்திய பின்பு கடற்றொழிலுக்குச் சென்றால் அதிக நேரம் சுழியோட முடியாது. சோம்பல், உடற் சோர்வு,நித்திரை போன்றவற்றைத் தவிர்ப்பதற்கு வெறுவயிற்றுடன் செல்வதால் பொதுவாக குருதி குளுக்கோசின் அளவு குறைவடையும் நிலை ஏற்படுகின்றது. கடலில் நீந்துதல், சுழியோடுதல் போன்ற செயல்நிலைகளின் போது அதிக கலோரி வெளியேறுவதாலும் குருதியில் உள்ள குளுககோசின் அளவு குறைவடைகிறது.

எனவே கடற்றொழிலுக்குச் செல்பவர்கள் உணவை உண்ணாவிட்டாலும் இனிப்புச் செறிவு கூடிய தேநீர், பானங்களை எடுத்தல் நன்று. தொழிலுக்குச் செல்லும் போது தங்களுடன் எடுத்துச் செல்வதும் நல்லது.

கடற்றொழிலில் ஈடுபடும் போது மயக்க நிலை ஏற்படின் முதலுதவி யாக குளுக்கோசினைக் கொடுத்தால் நன்று. உடலில் குளுக்கோஸின் அளவு மிகவும் குறையும் போது நினைவு இழக்கும் நிலை ஏற்பட்டு மருத்துவமனைகளில் அனுமதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் ஏற்படுவதும் உண்டு.

**உயர்குருதி அழுத்தம்**

உயர்குருதியமுக்கம் உடையவர்கள் கடற்றொழில் செய்பவர்களாக இருந்தாலும் அவர்களுக்கு மருத்துவர் வழங்கும் மருந்துகளை சீரான முறையில் பயன்படுத்த வேண்டும். இவர்கள் மருந்துகளை எடுக்காவிடின் தலைவலி, சிலருக்கு தலையின் பின்புறம் வலி, தலைசுற்றுதல், அம்மல நிலை, போலிக்காதொலி, காதுகளில் ரீங்காரம் அல்லது இரைதல் போன்ற உணர்வு, மாறிய கண்பார்வை போன்ற பல குணம் குறிகள் காணப்படலாம். இரவில் கடற்றொழில் செய்பவராக இருப்பின் பகலில் போதியளவு ஓய்வு எடுக்க வேண்டும். அதிக நேரம் கடலில் நிற்பவராக இருப்பின் குறிப்பிட்ட நேரத்திற்குரிய மருந்தினையாவது காற்றுப்புகாத சிறிய போத்தல்களில் இறுக்கமாக மூடிப் படகுகளில் தங்களுடன் எடுத்துச் செல்லலாம்.

**தொய்வு நோய்**

கூடிய வேலைப்பளு தொய்வு நோயை அதிகரிக்கும். அத்துடன் கடற்றொழில் செய்பவர்களுக்கு குளிரின் தாக்கமும் தொய்வு நோயை அதிகப்படுத்தும். இதன் தாக்கத்தை அதிகரிக்க விடாமல் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பதோடு சில மருந்துகள் ஆவி நிலை வடிவில் உள்ளன. அவற்றைத் தொடர்ச்சியாகப் பயன்படுத்தலாம். நோய் நிலையைப் பொறுத்து மருத்துவர் குறிப்பிட்ட அளவில் ஆவி நிலை மருந்துகளை பரிந்துரை செய்வார். மேற்படி புனை மருந்தானது குருதியில் கலக்காமல் நேரடியாக நுரையீரலுக்கு கிடைப்பதால் அவற்றின் பக்கவிளைவுகள் குறைவதோடு ஆஸ்த்துமாவை கட்டுப்படுத்தும் தன்மையும் அதிகமாகிறது. படகுகளில் கடற்றொழிலுக்கு செல்பவர்கள் மருத்துவரின் ஆலோசனையுடன் மேற்படி புகைப்பிடிக்கும் ஆவி நிலை சாதனங்களைக் கொண்டு செல்லுதல் நல்லது.அத்துடன் குளிரின் தாக்கத்தைக் குறைப்பதோடு தொப்பி அணிதல்,பீடி சிகரெட் புகைத்தல் செயற்பாடுகளைக் குறைத்தல், ஒவ்வாத உணவு வகைகளை உண்பதைத் தவிர்த்தல் போன்ற செயல்நிலைகளின் ஊடே கடற்றொழில் செய்பவர்களுக்கு ஏற்படும் தொய்வு நோயின் தாக்கத்தைக் குறைக்கலாம்.

**அதிகரித்த மதுப் பாவனை**

குறிப்பிட்டளவு கடற்றொழிலாளர்கள் தமது வேலைக்களைப்பைப் போக்குதல் என்ற காரண காரிய வெளிப்பாட்டை கூறி மதுசாரத்தை உபயோகிக்கின்றனர். ஆனால் இது எல்லையை மீறி அதிகரித்த மதுப் பாவனையாக மாற்றங் கண்டு மதுவுக்கு அடிமையாகும் நிலை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மது அருந்தியதும் சிந்தாமல் சிதறாமல் அனைத்தும் குருதியில் கலக்கிறது. உடலில் உள்ள ஏனைய கலங்களை விட மூளையில் உள்ள நரம்புக்கு ஆறு அல்லது ஏழு மடங்கான வீரியத்தோடு குருதி வழியே கலந்துவிடுகிறது. இதனால் மது அருந்தியதும் முதலாவதாக பாதிக்கப்படு வது மூளையில் உள்ள நரம்புத் தொகுதி ஆகும்.

மூளையின் சமநிலை பாதிக்கப்படுவதால், மூளைக்கும் தசைக்கும் இடையேயான ஒத்துழைப்பு மற்றும் உணர்வுகள் குறைவடைவதால் கடற்றொழிலில் நீந்துதலில் சிரமம், மூச்சுத் திணறல், கண்பார்வை மங்குதல் தெளிவற்ற பார்வை வெளி என்பன ஏற்படும்.மதுசாரத்தை எமது ஈரலானது அனுசேபத்தின் மூலம் தண்ணீராகவும்,காபனீரொக்சைட்டாகவும் மாற்றி உடலில் இருந்து வெளியேற்றினாலும் மேற்படி மாற்றம் நடைபெறும். இதன்போது அல்டிகைட் மற்றும் அசற்றல் டிகைட் போன்றன தோற்றம் பெறுவதுடன் ஈரலில் உள்ள கலங்களை அழிக்கின்றன.

*தாதிய உத்தியோகத்தர்,*
*போதனா மருத்துவமனை,*
*யாழ்ப்பாணம்.*

சூரியகாந்தி
உதயன்

# சூனியமான சூனியம்



கட்டுரை

த.திருகுலசிங்கம்

அந்த வீட்டில் வருடத்துக்கு ஒவ்வொருவராக அடுத்தடுத்து மூவர் தூக்கில் தொங்கிச் சாவடைந்து விட்டனர். கிராமத்துக் கோவிலில் 'கலை'யாடிக்கொண்டிருந்தவர்சொன்னார், "வீட்டு விறாந்தையில புதைச்சிருக்கு. உட னடியா அத அகத்த வேணும். இல்லாட்டி இன்னும் அது எடுத்துக் கொண்டே இருக்கும்" குடும்பத்தவர் உசாரானார்.
"உது உவன் சொத்தியின்ர வேலையாத்தானிருக்கும்",
"இல்லை இல்லை செய்வினை வைக்கிற குணத்தான்ர பொடியன்தான் தகப்பன் செத்த பிறகு அதுகளைப் படிச்சு ஆத்திரத்தில இப்பிடிச் செய்யிறான் போல கிடக்கு!",
"உவன்மணியமும் இப்பயெல்லாம்சுடலையிலதான் அதிகம் மினக்கெடுறான், சாம்பலக் கீம்பலக் கிள்ளிக்கொண்டு போய்அவன்தான்சூனியம்வைக்கிறானோவும்தெரியாது"
கிராமத்துப்பெரிசுகளுக்குள்ளும்அக்கம்பக்கத்தாரின்காதுகளிலும் கதை சூடுபிடித்தது.
வீட்டுவிறாந்தைகிளறப்பட்டுஅலசிஆராயப்பட்டது. கல்லைத் தவிரக் கண்ணுக்கு அகப்பட்ட அனைத்துப் பொருள்களும் சேர்க்கப்பட்டுச் 'செய்வினை' என்று பெயர் சூட்டப்பட்டது.

காதோடு காது வைத்தாற்போல அதைக் கொண்டு போய் எரித்துக் கடலில் கரைத்துவிட்டு வந்ததாக வும் பேச்சுக்கள் கிளம்பின. இத்தனைக்கும் முத லில் அங்கு தூக்கில் தொங்கியவர் ஒரு ஆண். காதல் தோல்வியால் விரக்தி அடைந்தவர். இரண் டாமவர் ஒரு பெண் நகைகள் அணிவதற்குத் தாய் மறுப்புத் தெரிவிக்க முதல் நாள் அங்கு புடுங்குப்பாடுகள் நடந்ததாகக் கதை. இப்போது அண்மையில் தொங்கியவர் ஒரு மாணவி. அவ ருக்குப் பரீட்சைப் பெறுபேறு குறைவாயிற்று. இப்படியாகத்தான் கிராமங்களில் செய்வினை, சூனியம் எனும் மூட நம்பிக்கைகள் வளர்ந்திருக் கின்றன. மனிதர்களில் பலர் மதம் மீது கொண்ட மூட நம்பிக்கையையும் தாமும் தாம் சார்ந்தவர்க ளும் கொண்டிருக்கும் உளம், அறிவு சார்ந்த பலவீனங்களையும் ஒன்று திரட்டி இந்தச் செய் வினை, சூனியங்களைக் கட்டியெழுப்பிக் கொண் டிருக்கின்றனர். மறுபுறத்தில் அதை வைத்துப் பலர் வயிற்றுப் பிழைப்பு நடத்தும் சூழலும் இல்லாம லில்லை. ஆக, மக்கள் மத்தியிலிருக்கும் மூடத் தனங்களை வைத்து குறிப்பிட்ட சிலர் பணம் சம் பாதிக்கின்றனர்.



உண்மையில் சூனியம் என்றால் எதுவுமே அற்றது, பூச்சியம் எனப் பொருள்படும். அதாவது எதுவுமே அற்ற ஒன்றை பற்றித்தான் நாம் நினைத்துப் பயந்துகொண் டிருக்கிறோம். இது நாம் கொண்டிருக்கும் மூட நம்பிக்கை.

**தாம் சார்ந்த பலவீனங்களுக்கு நல்லதொரு சாய்மனை**

இந்தச் செய்வினை சூனியம் என்பது மதம் சார்ந்த மூட நம்பிக்கையையே தன்னில் பெருமளவில் கொண்டுள்ளது. சைவர்களிடம் அதிகளவிலும் கிறிஸ்தவர்கள் ஏன் பௌத்தர்களிடம்கூட இதன் தாக்கம் இருக்கவே செய்கின்றது. மதத்துக்கு அடுத்து இந்த மூட நம்பிக்கையைக் கட்டியெழுப் புவதில் இந்த மனிதர்கள் கையிலெடுத்திருப்பது தாம் சார்ந்த பலவீனங்களையே.

தொழிலில் தொடர்ந்தும் வருவாய் இல்லாதிருக் கின்றதா...? அடுத்தடுத்துக் குடும்ப உறுப்பினர் கள் நோயால் பீடிக்கப்படுகின்றனரா...? பிள்ளை பரீட்சைகளில் தோல்வி அடைகின்றதா...? எதிர் பார்த்த புள்ளிகள் கிடைக்கவில்லையா...? வாலி பத் துடுக்குடன் இருக்கும் ஆண் பிள்ளையோ அல்லது பெண் பிள்ளையோ சாதி, மதம் மாறி ஓடித் திருமணம் செய்துவிட்டதா...? கணவன் மனைவி யரிடையே எந்நேரமும் சண்டையா...? கணவர் குடிக்கு அடிமையாகி விட்டுள்ளாரா...? வீடு வாசல், வியாபாரம் என எவற்றிலாவது தடைகளா...? இப் படிப் பலதரப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் இருக்கவே இருக்கிறது செய்வினை எனும் சாட் டுப்போக்கு. தமது பலவீனங்களை மறைத்துக் கொள்ள நல்லதொரு வாய்ப்பாகக் கிராமத்தினர் பலரும் இந்தச் செய்வினையைப் பயன்படுத்திக் கொண்டுள்ளனர். இதன் காரணத்தால் இவர்கள் கொண்டுள்ள செய்வினை, சூனியத்திலுள்ள நம் பிக்கைத் தன்மையை அதிகரிக்கச் செய்து அதை வைத்து வயிற்றுப் பிழைப்பு நடாத்திக் கொள்ளும் கள்ளச் சாமியார் கலாசாரமும் இன்றைக்குப் பரந்து விரிந்துவிட்டது. அதுவே உயிரைக் கொல்லுமள வுக்குத் துணிந்தும் விட்டது.

**கிளிநொச்சியில் ஒரு சம்பவம்**

கடந்த வாரம் கிளிநொச்சியில் ஒரு சம்பவம். ஒரு வர்த்தகர் கடுமையான கடன்தொல்லையால் அவ திப்பட்டிருக்கிறார். உறவினர்கள் சூனியம் இருப்ப தாகக் கூறியுள்ளனர். இவர் அதை நம்பி ஒரு சூனியம் எடுக்கும் ஆசாமியிடம் போயுள்ளார். அந்த ஆசாமியும் இவருக்கு யாரோ சூனியம் வைத்திருக்கின்றனர் என்றும் அதை எடுப்பதாக வும் கூறி அதற்கு ஒரு மருந்தைக் கொடுத்து அதைத் தினமும் அருந்தச்சொல்லியிருக்கிறார். அதைத் தொடர்ந்து அருந்தி வந்த சில நாளில் அந்த வர்த்தகருக்குக் கடுமையான வாந்தி ஏற்பட் டுள்ளது.

இதையும் அந்தச் சூனி யம் எடுக் கும் ஆசாமியிடம் சொன்னபோது; அது சூனியம் எடுபடுவதற்கான அறிகுறி என்று அந்த ஆசாமி கூறியுள்ளார். பின் வாந்தி கடுமை யாகிக் குருதி வெளியேறியுள்ளது. இயலாக் கட்டத்தில் அந்த ஆசா மியை நம்பாது வர்த்தகரை மருத்துவ மனைக்கு அழைத்துச் சென்றிருக் கின்றனர்.

ஆனாலும் மருத்துவர்களால் அந்த வர்த்தகரைக் காப்பாற்ற முடிய வில்லை. சூனியம் என்ற ஒன்றை நம்பி அந்த ஆசாமி கொடுத்த மருந்தை அருந்திய தால் உயிரை மாய்த்துள்ளார் வர்த்தகர்.



**சூனியம் என்றால் எதுவுமற்றது**

உண்மையில் சூனியம் என்றால் என்ன...? என்ற கேள்வி நமக்குள் இயல்பாகவே எழும். சூனியம் என் பதன் அர்த்தம் எதுவுமே அற்றது, பூச்சியம் எனப் பொருள்படும். அதாவது எதுவுமே அற்ற ஒன்றை பற்றித்தான் நாம் நினைத்துப் பயந்துகொண்டிருக்கி றோம். இது நாம் கெண்டிருக்கும் மூட நம்பிக்கை. உலக சுகாதார அமைப்பால் இந்தச் சூனியம் என்பது ஒரு உளவியல் நோயாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதவாது நாம் எதிர்கொள்ளும் சவால்களைச் 'சூனி யமாக்கி' விட்டுள்ளோம். அந்தச் சவாலகளை எதிர்க் கவும் சமாளிக்கவும் நம்மால் முடியாதபோது ஏற்படு கின்ற நமது இயலாமையையே நாம் சூனியம் என் கிறோம்.

வாழ்க்கை என்பது இன்பங்களாலும் துன்பங்களா லும் நிறைந்தது. அந்தத் துன்பங்கள் எமது வாழ்வை ஆட்கொள்ளும்போது தான் இந்தச் சூனியம் எனும் உளவியல் நோயும் எம்மை ஆட்கொள்கிறது. வீட்டுக் குள் ஒரு தேசிக்காயையோ குங்குமச் சரையையோ கண்டால் எமக்குச் சூனியம் வைத்துவிட்டார்கள் எனச் சிந்தித்துத் தற்செயலாக நடக்கும் அனைத்து விடயங் களையும் சூனியத்தால் ஏற்பட்ட பிரச்சினை என நம்பி வேறெதையும் செய்யவதற்குச் சிந்திக்கமுடியாமல் சிக்குண்டு போகிறோம். இப்படியான மூட நம்பிக்கைக ளுக்கு மிக நல்ல உதாரணம் "மட்டக்களப்புக்காரர் பாய் களுடன் ஒட்டவைத்து விடுவார்கள்" என்பதாக நமக்கு மத்தியில் ஒரு கருத்து இருக்கிறது. உண்மையில் அதன் உண்மை, மட்டக்களப்புப் பிரதேச மக்களின் விருந்து உபசரிப்பு எம்மைப் பாயுடன் ஒட்டவைத்து விடும் என் பதே. இதைத் தவிர்த்து வெறும் மூடநம்பிக்கையில் கிழக்கு மாகணத்தவர்களை அணுகும் யதார்த்தமும் எம் மத்தியில்தான் இருக்கின்றது.

**ஆசாமியை விடுத்து மனநல மருத்துவரை நாடுங்கள்**

ஒருவருக்குச் சூனியம் வைக்கப்பட்டுள்ளது என்று கதை புனையப்பட்டால் உண்மையில் அவர்கள் நாட வேண்டியது ஒரு மனநல மருத்துவரையே தவிர சாமியாரை அல்ல. உலகம் மிக வேகமாக வளர்ந்து எங்கோ சென்று விட்டது. இந்த நிலையில் தான் நாம் சூனியம் போன்ற மூடநம்பிக்கைகளில் வீழ்ந்து பெரும் பணத்தையும் கொட்டி ஏமாந்து போகிறோம். கடன் உட்பட்ட எதுவுமே என்றைக்கும் தீராத பிரச் சினை என்றில்லை.

எங்களுக்குப் பெரும் பிரச்சினையாக வந்திருக்கின்ற நுண்கடன் வசதிகள் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். இப்படியான பல காரணிகள் எமது சமூகத்தைப் பீடித் திருக்கின்ற தீய சக்திகளாக நிறைந்திருக்கின்றன. இந்த நுண்கடன் வசதிகள் கூடப் பலரது உயிரை மாய்த்துக்கொண்டே இருக்கின்றன. அவற்றில் சில வற்றுக்கும் கூட இந்தச் 'சூனியம்' சூட்டப்பட்டு விடும். மன தளவில் நீங்கள் சோர்வடையும் சந்தர்ப்பத்தில் நம் பிக்கை தரக்கூடியவர்களுடன் பேசுங்கள். நம்பிக்கை தரக் கூடிய இசையைக் கேளுங்கள் இந்த உலகில் மனித அறிவைவிட உயர்ந்த ஒன்று இல்லவே இல்லை. ஆகவே சிந்தித்து எதையும் வெல்லும் வலி மையைப் பெறுங்கள். ஆக, கல்வி அறிவில் முழுமை பெற்றுள்ள நாங்கள் எந்தப் பிரச்சினை யையும் பகுப் பாய்வு செய்து முடிவெடுக்காமல் பல்லி சொல்கிறது, காகம் பறக்கிறது, பூனை குறுக்கால் போகிறது, தொட் டால் துடக்கு, பார்த்தால் துடக்கு என்று படு முட்டாள்தன மான கருத்துருவாக்கங்களைக் கடைப்பிடித்து வருகி றோம். இனிவருங்காலங்களிலாவது இவற்றைத் தவிர்த்து புத்தியுடன் பகுத்தறிவைப் பயன்படுத்து கின்ற மனிதர்களாக மாறுவோம்.

வாழ்க்கை என்பது இன்பங்களாலும் துன்பங்க ளாலும் நிறைந்தது. அந்தத் துன்பங்கள் எமது வாழ்வை ஆட்கொள்ளும் போது தான் இந்தச் சூனி யம் எனும் உளவியல் நோயும் எம்மை ஆட்கொள்கிறது.

உலகம்

பிரகாஸ்

# 500,000 ரொஹிங்யர்கள் வெளியேறினர்



மியன்மார் அரசின் அடக்குமுறைகளில் இருந்து தப்பித்துக் கொள்வதற்காக இதுவரை சுமார் 5 இலட்சம் ரொஹிங்யர்கள் மியன்மாரை விட்டு வெளியேறி பங்களாதேஷை அடைந்துள்ளனர் என்று பன்னாட்டு அமைப்புக்கள் கவலை வெளியிட்டுள்ளன.

மியன்மார் பௌத்தர்களைப் பெரும்பான்மை இனமாகக் கொண்ட நாடு. அங்கு சிறுபான்மையினராக ரொஹிங்ய இஸ்லாமியர்கள் வாழ்கின்றனர். கடந்த மாதம் 25ஆம் திகதி ரொஹிங்ய ஆயுதக் குழு மியன்மார் அரசின் மீது நடத்திய தாக்குதலில் 10 சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதன்பின்னர் மியன்மார் மக்கள் மீதான தாக்குதல்களை இரட்டிப்பாக்கியது மியன்மார் அரசு. இதனால் மியன்மாரில் இருந்து தப்பித்து அயல்நாடான பங்களாதேஷுக்குள் அகதிகளாகப் படையெடுத்து வருகின்றனர் ரொஹிங்ய முஸ்லிம்கள். இதுவரையில் கிட்டத்தட்ட 5இலட்சம் ரொஹிங்யர்கள் இவ்வாறு பங்களாதேஷுக்குள் சென்றுள்ளனர் என்று பன்னாட்டு அமைப்புக்கள் பலவும் கருத்து வெளியிட்டுள்ளன.

**'பௌத்தம் என்றால் இனவாதம் என்று அர்த்தமோ...'**

# சிந்திய குருதி

பாப்பரசர் பிரான்சிஸ், தென்னமரிக்க நாடுகளில் ஒன்றான கொலம்பியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டிருந்தார். தனது பயணத்தின் இறுதி நாளான கடந்த செவ்வாய்க்கிழமை அங்குள்ள கார்ட்டஜினா நகரில் மக்களைச் சந்தித்தார். திரண்டிருந்த மக்கள் கூட்டத்தின் நடுவே திறந்த வாகனத்தில் நின்றவாறு அவர்களுக்கு ஆசி வழங்கிக்கொண்டு சென்றார். திடீரென நிலைதடுமாறிய அவர், வாகனத்தில் இருந்த குண்டு துளைக்காத கண்ணாடியின் மீது மோதினார். இதில் அவரது கன்னத்திலும், புருவத்திலும் இலேசான காயம் ஏற்பட்டுக் குருதி சொட்டியது. உடனே அவருக்கு முதலுதவி அளிக்கப்பட்டது. பின்னர் அந்த காயத்துடனே மக்களைச் சந்தித்து ஆசி வழங்கினார்.

**'தென்னமரிக்க நாடுகளுக்கு இனியாவது மீட்பு உண்டாகட்டும்...'**






# ரவுண்ட் த வேல்ட்

# 11 – 9 நினைவலைகள்

உலக வர்த்தக மையத் தாக்குதலில் உயிரிழந்த மக்களைக் கண்ணீர் மல்கக் கடந்த திங்கட்கிழமை நினைவுகூர்ந்துள்ளது அமெரிக்கா.

கடந்த 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம்11ஆம் திகதி நான்கு வானூர்திகளைக் கடத்திய 'அல்குவைதா' அமைப்பு அதில் இரண்டை உலக வர்த்த நிலையமான இரட்டைக் கோபுரங்களின் மீது மோதித் தாக்குதல் நடத்தியது. உலகின் மிகப்பெரும் பாதுகாப்பு இடமும் அமெரிக்க இராணுவத் தலைமையகமுமான பென்டகனின் மீது மற்றொரு வானூர்தியால் தாக்குதல் நடத்தப்பட்டது. நான்காவது வானூர்தியை அமெரிக்க அதிபரின் உத்தியோகபூர்வ இல்லமான வெள்ளை மாளிகை மீது மோதித் தாக்குதல் நடத்தத் திட்டமிடப்பட்டது. ஆனால் வானூர்திக்குள் இருந்த நாட்டுப்பற்றான சிலர் இந்தத் தாக்குதலைத் தடுத்து நிறுத்தினர். 2 ஆயிரத்து 997 அப்பாவிகள் உயிரிழந்தனர். இந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களை செப்ரெம்பர் 11 (11-9) என்ற தொனிப்பொருளில் வருடா வருடம் நினைவுகூர்ந்து வருகிறது அமெரிக்கா. இந்த வருடமும் கண்ணீர்மல்ல நினைவு கூரப்பட்டது அந்தத் தினம்.

**'அமெரிக்காவே ஆட்டம்கண்ட தினம் அது...'**



# தலைநகரில் தவிக்கிறான் தமிழ் மகன்

இந்தியத் தலைநகர் புதுடெல்லியில் மனித மலம் உண்ட பின்னரும் தமிழக விவசாயிகளின் போராட்டம் தொடர்ந்துகொண்டுதான் உள்ளது.

பருவமழை பொய்த்ததால், தமிழக நிலங்களில் பயிர் விளைச்சல் பெரியளவில் இல்லை. இதனால் விவசாயிகள் பெற்றுள்ள பயிர்க்கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்ய வேண்டும், தமக்கு வறட்சி நிவாரணம் வழங்க வேண்டும், கடன் சுமையால் உயிழந்த விவசாயிகளின் குடும்பங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும், காவிரி நதிநீர் பங்கீட்டை முழுமையாக மேற்கொள்ள வேண்டும். அதைக் கண்காணிக்க தனி அமைப்பு அமைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாயிகள் இந்தியத் தலைநகர் டெல்லியில் தொடர்ந்து போராட்டங்களை நடத்தி வருகின்றனர். கிட்டத்தட்ட 10 வாரங்களாக இவர்களின் போராட்டம் நீடித்து வருகிறது. தங்களுடைய போராட்டத்தின்பால் அனைவருடைய கவனத்தையும் ஈர்க்கும் பொருட்டு ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாகத் தமது போட்டத்தை முன்னெடுத்துவருகின்றனர். கடந்த திங்கட்கிழமை மனித மலத்தை (தமது மலத்தை) உண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர். எனினும் எந்தவொரு அதிகாரக் கதிரையும் இவர்களின் போராட்டத்தைக் கண்டுகொள்ளவில்லை. விவசாயிகளும் விடுவதாயில்லை. அவர்களின் போராட்டமும் தொடர்ந்துகொண்டுதான் உள்ளது.

**'கடைசில கக்காவும் திண்டாச்சு...'**

# தடை அதை உடை

'நீட்'டுக்கு எதிராகப் போராடக்கூடாது என்று ஒருகட்டளையைப் பிறப்பித்துக் கடைசியில் மூக்குடைபட்டு நிற்கிறது இந்திய உச்ச நீதிமன்றம்.

'நீட்' பரீட்சையைக் கைவிட வேண்டும் என்று போராடிய மாணவி அனித்தா கடந்த முதலாம் திகதி தவறான முடிவெடுத்துத் தற்கொலை செய்து கொண்டார். இதையடுத்து நீட்டுக்கு எதிரான போராட்டங்கள் வலுப்பெற்றன. தமிழகம் எங்கும் போராட்டம் தீவிரமடைந்ததை அடுத்து நீட்டுக்கு எதிராகப் போராட்டம் நடத்தக்கூடாது என்று எச்சரித்தது உச்சநீதிமன்றம். எனினும் தமிழக மாணவர்கள் தொடர்ந்தும் கொதித்தெழுந்து கொண்டுதான் உள்ளனர்.

**'உச்ச நீதிமன்றம் மீதிருந்த மதிப்பும் போச்சு...'**



கட்டுரை

இந்துமதி



# குழந்தைகளின் கைகளில் நாட்டின் எதிர்காலம்

குழந்தைகளை மலர்களுடன் ஒப்பிட்டுக் கூறுவார்கள். மலர்களை ஒப்ப அழகு, மென்மை ஆகியன குழந்தைகளிடம் நிறைந்து காணப்படுவதே இதற்கான காரணமாகும்.

குழந்தைகளை விரும்பாதவர்கள் எவருமே இவ்வுலகில் இருக்க மாட்டார்கள். குழந்தையின் சிரிப்பில் தமது துயரங்களை யெல்லாம் அதன் பெற்றோர் மறந்து விடுகிறார்கள். குழந்தைகளைத் தெய்வத்தின் உருவில் பார்ப்பவர்களும் உண்டு. இதனால் தான் குழந்தையும் தெய்வமும் ஒன்றெனக் கூறுகிறார்கள்.

பதினாறு செல்வங்களில் குழந்தைச் செல்வமே தலையாயது. ஏனைய செல்வங்கள் நிறைந்து காணப்பட்டாலும் குழந்தைச் செல்வம் இல்லாத வாழ்க்கை அர்த்தமற்றதாகிவிடுகிறது. சிலர் போதும் போதுமென்று கூறும் அளவுக்குக் குழந்தைச் செல்வத்தைக் கொண்டிருப்பார்கள். இதேவேளை சிலர் குழந்தைச் செல்வம் கிடைக்கவில்லையேயென ஏங்கிக் கொண்டிருப்பார்கள்.

குழந்தையொன்றைப் பெற்றுக்கொள்ளும் நாள் தொடக்கமே பெற்றோரின் பொறுப்புக்கள் ஆரம்பமாகி விடுகின்றன. தமது குழந்தை தொடர்பான சிந்தனையே அவர்களின் மனங்களை ஆக்கிரமித்து நிற்கின்றது. அதன் எதிர்காலம் தொடர்பான திட்டங்களை வகுப்பதில் தமது நேரத்தைச் செலவிடவும் ஆரம்பிக்கின்றனர். பாலர் வகுப்பில் இருந்து பல்கலைக்கழகம் வரைத் தமது குழந்தையின் கல்வி எவ்வாறு அமைய வேண்டுமென்பதே அவர்களுடைய முதன்மைக் கவலையாகவும் மாறி விடுகின்றது. ஒன்றுமறியாத குழந்தைப் ஏராயம் ஒரு முக்கியமான காலகட்டமாகும். பெற்றோர் குழந்தைகள் விடயத்தில் அதிக கவனம் காட்ட வேண்டியதும் இந்தப் பருவத்தில்தான். பின்னர் குழந்தை வளர வளர அதன் வளர்ச்சிக்கு ஏற்றாற் போன்று பெற்றோரின் சுமை அதிகரித்துச் செல்கிறது.

### புலமைப்பரிசினால் பெற்றோருக்குக் கௌரவம்

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை தற்போது குழந்தைகளின் வாழ்வில் பெரும் சுமையாக மாறிவிட்டது. பெற்றோர்கள் தமது கௌரவத்தை நிலைநாட்டுவதற்கான ஒரு பரீட்சையாகவே இதை நினைக்கின்றனர். இதனால் குழந்தைகள் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். அவர்களது ஓய்வு நேரங்கள் பறிக்கப்படுகின்றன.

விளையாட்டு, நித்திரை ஆகியவற்றைக் கூடக் குழந்தைகள் தியாகம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டு விடுகின்றது. எந்த நேரமும் படிப்பு என்பதே அவர்களின் மந்திரமாக மாற்றப்படுகின்றது. தமது குழந்தைகளின் படிப்பில் பெற்றோர் கவனம் செலுத்துவதில் தவறொன்றுமில்லை. ஆனால் தமது கௌரவத்துக்காகக் குழந்தைகளை வருத்துவதுதான் ஏற்றுக் கொள்ள முடியாதது.

### புலமைப் பரிசில் எதிர்காலத்தைத் தீர்மானிப்பதில்லை

பரீட்சைகள் முடிந்து அதன் முடிவுகள் வெளிவரும்போது இடம்பெறுகின்ற சில சம்பவங்கள் குழந்தைகளின் மனங்களை நோகடித்து விடுகின்றன. பரீட்சையில் தவறியவர்கள் அவர்களது பெற்றோர்களாலே உள ரீதியாகவும் உடல் ரீதியாகவும் தண்டனைக்கு உள்ளாகின்றனர். வீட்டில் மட்டுமல்ல பாடசாலைகளிலும் இவர்கள் மனம் நோகும் வகையில் அவமானப்படுத்தப்படுகின்றனர். பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மேடையில் ஏற்றிக் கௌரவிக்கப்படும்போது இந்த இளம் பிஞ்சுகள் அதை வேதனையுடன் பார்த்துக் கொண்டிருக்கின்றனர். சில வேளைகளில் இவர்களை இழிவாகப் பேசுவதையும் அவதானிக்க முடிகின்றது. இவை யாவுமே தவிர்க்கப்படல் வேண்டும். ஒரு பிள்ளையின் எதிர்காலத்தை ஒருபேதுமே புலமைப்பரிசில் பரீட்சை தீர்மானிப்பதில்லை, ஏனென்றால் இதில் தேறிய பலர் பல்கலைக்கழகக் கல்வியை எட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். ஆனால் அதில் தவறியவர்களில் பலரோ இன்றைக்கு உயர் கல்வியைக் கற்றுக் கொண்டிருக்கும் உண்மை நிலை இருக்கிறது. ஆகவே இது தொடர்பாக குழந்தைகளை வருத்துவதில் எந்தவித அர்த்தமும் கிடையாது.



### கடுமையான கட்டுப்பாடுகள் கூடாது

பெற்றோர்களில் சிலர் எந்த நேரமும் தமது குழந்தைகளைப் 'படி படி' என நச்சரித்துக் கொண்டே இருப்பார்கள். இத்தனைக்கும் அந்தக் குழந்தைகள் இயல்பாகவே படிப்பில் கெட்டிக் காரர்களாகக் காணப்படுவார்கள். பரீட்சைகளில் அதிக புள்ளிகளைப் பெற்று வகுப்பில் முதலிடத்தையும் வகிப்பார்கள். இத்தகையவர்களுக்கு நெருக்கடி கொடுப்பது சில வேளைகளில் எதிர்மறையான விளைவுகளையும் ஏற்படுத்திவிடும். ஆகவே பெற்றோர்கள் இவர்களது விடயத்தில் சற்றுத் தளர்வான போக்குடன் நடந்து கொள்வதே நல்லது. பிள்ளைகளின் படிப்பில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது தான். ஆனால் அதற்காக குழந்தைகளுக்குக் கடுமையான கட்டுப்பாடுகளை விதிக்கக் கூடாது.

இந்தியாவின் முதலாவது தலைமை அமைச்சரான மறைந்த ஜவர்கர்லால் நேரு குழந்தைகள் மீது அதிக அன்பு கொண்டிருந்தார். அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும்போது கூட அங்கு குழந்தைகளைக் கண்டுவிட்டால் அவர்களுடன் தமது நேரத்தைச் செலவிடுவார். குழந்தைகளும் அவரை "நேரு மாமா" என அழைத்துத் தமது பாசத்தை அவர் மீது பொழிவார்கள். இதனாலேயே நேருவின் பிறந்த தினம் குழந்தைகள் தினமாக இந்தியாவில் கொண்டாடப்பட்டு வருகின்றது. குழந்தைகள் வளர்ந்து பெரியவர்களாகும்போது நாட்டின் எதிர்காலமே அவர்களின் கரங்களில் ஒப்படைக்கப்படுகின்றது. குழந்தைப் பருவத்தில் இருந்தே அவர்களின் ஆற்றல்களை இனம்கண்டு ஊக்குவிக்க வேண்டும். அவர்களை 'மட்டம்' தட்டுகின்ற செயற்பாடுகள் ஒரு போதுமே இடம்பெறக்கூடாது. சுருக்கமாகச் சொல்லப்போனால் மலர்களைக் கையாளும்போது நாம் காட்டுகின்ற மென்மையைக் குழந்தைகள் விடயத்திலும் கைக்கொள்ள வேண்டும்.

## தொகுப்பு

அயக்கிரீவன்

## நூல் அறிமுகம்



**நூல்: உயிரி(சிறுகதைத் தொகுப்பு)**
**ஆசிரியர் : என்.கே.துரைசிங்கம்**
**வெளியீடு: இலக்கியா வெளியீட்டகம் கைதடி.**

சகோதரர் துரைசிங்கம் நாடறிந்த பத்திரிகையாளர். எழுத்தாளர். பன்முகத்திறன் கொண்ட ஊடகவியலாளர். 'ஈழநாடு' பத்திரிகையில் தன் ஆளுமையை வெளிப்படுத்தி, தன்னை ஒரு முழுமையான பத்திரிகையாளனாக நிலை நிறுத்திக் கொண்டவர். மூத்த பத்திரிகையாளர்களான பெருமாள், கே.ஜி. மகாதேவா, அமரர் சசிபாரதி (சபாரத்தினம்), குகநாதன் போன்றோர்களுடன் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். மிகவும் நெருக்கடி மிக்க சூழலில் யாழ்ப்பாணத்தில் போர்ச் சூழல் இறுக்கமடைந்திருந்த வேளைகளில் சமூகப் பொறுப்பு மிக்க ஒரு ஊடகவியலாளனாக அவர் ஆற்றிய பணியை வெறுமனே தொழில்சார் கடமைப் பொறுப்பாக அடையாளப்படுத்திவிட முடியாது. சமூகக் கடமையாகவும் அது முக்கியத்துவம் கொண்டது.

"ஏசுவார்கள் எரிப்பார்கள்
உண்மையை எழுதுங்கள்
உண்மையாய் எழுதுங்கள்"

என யோகர் சுவாமிகள் ஈழநாடு பத்திரிகைக்கு உபதேசித்த கருத்துக்கமைய சகோதரர் துரைசிங்கம் அவர்களும் தனது துறைசார் பணியை அர்ப்பணிப்புடன் செய்தவர்.

பத்திரிகையாளர் ஒரு படைப்பாளியாகவும் இருப்பது ஒரு சிலருக்கே கிடைக்கும் கலைப் பேறாகும். 'உயிரி' என்ற இத்தொகுதி துரைசிங்கம் அவர்களுள் உறைந்து உயிர்த்து நிற்கும் மண் வாசனை மிக்க படைப்பாற்றலின் வெளிப்பாடு. இத்தொகுப்பினூடாக அவர்தம் சமூகம் சார்ந்த பார்வையும் அதன் கருத்தியல் வெளிப்பாடும் ஒரு வரலாற்றுக் கடமையாகவும் அர்த்தம் கொள்கிறது.

(மூத்த ஊடகவியலாளர் ராதேயன்)

**நூல்: அலை அழித்த தமிழ்**
**ஆசிரியர்கள்: சுஜிந்தன் பரமேஸ், நீதுஜன் பாலா**
**வெளியீடு: அந்திவானம் பதிப்பகம்**




தமிழர் தம் வாழ்வுடன் கலந்திருக்கும் வீரத்தையும் தன் மானத்தையும் பல்வேறு கதைகளின் ஊடாக நிலைநிறுத்த முற்படும் நூலின் போக்கு எம்மை வெகுவாகக் கவர்ந்துள்ளது. வாசகர்களை ஈர்க்கக் கூடிய மொழிநடையைக் கொண்ட இந்நூல் அதனை வாசிக்கத் தொடங்கும் எவரும் இடையில் நிறுத்தாது தொடர்ந்து வாசிக்கத்தூண்டும் தன்மை கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது. இன்றைய இளைஞர்கள் வரலாற்றுக் கதைகளைத் தெரிந்து கொள்வது அவசியம் என்று நூலாசிரியர்கள் விரும்பினார்களோ? என்னவோ? தெரியவில்லை, இந்நூலின் போக்கு வரலாற்றுப் புகழ்மிக்க அரசர்களின் பெருமையை எடுத்துக்கூறும் வகையில் உருவாக்கம் பெற்றுள்ளது. குறிப்பாக எல்லாள மன்னனின் வரலாறும், வீரம் படைத்த அவனின் போர்த் தந்திரங்களும் இந்நூலில் புகழ்ந்து வைக்கப்பட்டுள்ளன. முழுமையாகக் கூறின் வரலாற்றுப் புகழ்மிக்க அரசர்களின் வரலாற்றுத் தொகுப்பை வாசித்தறிவதற்கு இந்நூல் வித்திட்டுள்ளது என்றே பெருமை கொள்ளுதல் வேண்டும்.

'அலை அழித்த தமிழ்' என்ற பெயரைத் தேர்ந்தெடுத்த இந்நூலாசியர்களுக்கு எனது பாராட்டினையும், வாழ்த்தினையும் தெரிவித்துக் கொள்கிறேன். நூலின் தலைப்பு எப்படி வாசகர்களைக் கவரும் என்ற நுட்பத்தைத் தெரிந்து கொண்டமையினாலேயே இந்நூலுக்கான பெயர் இவ்வாறு கவர்ச்சிகரமானதாகத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அத்துடன் நூலுக்கான மொழிநடையும் கதையின் போக்கும் பாராட்டப்பட வேண்டியதாகும். விஞ்ஞானத்துறை சார்ந்த மாணவர்கள் தமிழில், தமிழர் தம் வரலாற்றில் எத்தகைய ஆழமான அறிவை வைத்திருக்கிறார்கள் என்பதனைப் புலப்படுத்தும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. தற்காலத்து இளைஞர் சமுதாயத்துக்கு தமிழர் வரலாற்றையும் வீரத்தையும் எப்படிக் கவர்ச்சி கரமாகவும் மனதில் படியுமாறும் நிலை நிறுத்தலாம் என்ற நூலாசிரியர்களின் விருப்பம் நிறைவேறியுள்ளது என்றே கூறவேண்டும். நூலாசிரியர்கள் இருவருமே இணைந்து எழுதிய இந்நூலுக்கு வாசகர்களிடையே பெரு வரவேற்புக் கிடைக்கும் என்பதில் ஐயமில்லை.

(பேராசிரியர் க.தேவராஜா)

ஒவ்வொரு மாதத்திலும், அதன் மூன்றாவது வாரத்தில், ஈழத்துத் தமிழ்ச் சிறுகதை உலகுக்கு வளம்சேர்த்து மறைந்த சிறுகதையாசிரியர் ஒருவரின் சிறுகதை மறுபிரசுரம் செய்யப்படும். அந்த வகையில் இந்த வாரம் அமரர் சு.வேலுப்பிள்ளை அவர்களின் 'மண்வாசனை' எனும் சிறுகதை பிரசுரமாகின்றது.

## சிறுகதை


சு.வே.






**சு.வே**

சு.வே என அழைக்கப்படும் சுப்பிரமணியம் வேலுப்பிள்ளை ஈழத்துச் சிறுகதை எழுத்தாளரும் நாடகாசிரியரும் ஆவார். யாழ்ப்பாணம் நாவற்குழியில் பிறந்தவர். பயிற்றப்பட்ட ஆசிரியப் பணி புரிந்தவர். சு.வேயின் முதல் சிறுகதை 'கிடைக்காத பலன்' 1943இல் ஈழகேசரியில் வெளியானது. சு.வேயின் சிறுகதைகள், 'மண் வாசனை', 'பால்காவடி', ஆகிய தலைப்புகளில் தொகுதிகளாக வெளிவந்தன. 1965இல் இலங்கை கலைக்கழகம் நடாத்திய நாடகப்போட்டியில் இவரது 'வஞ்சி' என்ற ஓரங்க நாடகம் முதல் பரிசு பெற்றது. அடுத்த ஆண்டு இவரது 'எழிலரசி' என்ற முழுநீள நாடகம் முதல் பரிசு பெற்றது. 1960 இல் இலங்கை வானொலி நாடகப்போட்டியில் இவரது 'மண் வாசனை'க்கு முதல் பரிசு கிடைத்தது.



# மண்வாசனை

“உஸ்... ஸ்... அப்பாடா.”

காலை முழுவதும் காட்டியும் மறைத்தும் கண்ணாம்பூச்சி ஆட்டமாடி, ஈற்றிலே வைரமுத்தரிற் கவிந்து, அவரைப் பரிபூரணமாக ஆட்கொண்டுவிட்ட களைப்பின் சொல் வடிவங்கள் அவை. அவர் தமது தோளிற் கிடந்த கலப்பையையும் நுகத்தையும் அநாசயமாக ஆனால் வெகு பரிவுடன் இறக்கி, பல்லாண்டு பல்லாண்டாகக் கலப்பையும் நுகமும் கிடந்து தழும்பு கண்ட அந்தச் சுவரிலேயே சார்த்திவிட்டு, தலையிற் கட்டியிருந்த துண்டை அவிழ்த்து உதறி முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

அவர் இப்பொழுதும் வயலில் நின்றிருப்பாரானால் இன்னுங்கொஞ்ச நேரம் உழுதிருப்பார். கால்கள் மாடுகளின் பின்னால், அலை அலையாகச் சரிந்து கிடக்கும் உழவுச் சால்களில் நடக்க, அங்கிருந்து பரவும் அபூர்வமான புதுமண் வாசனையை முகர்ந்து கொண்டு, சிறுகுழந்தையைப்போல தள்ளாடித் தள்ளாடி நடைபழகியிருப்பார்.

அப்பொழுது அவர் மனம் பல பல எண்ணங்களை ஓடவிட்டு, அவற்றுக்கு அருத்தமும் அழுத்தமும் கொடுக்காமல், தொட்டுந் தொடாமலும் அலைந்து திரிய, நெற்றி வியர்வை வழிந்து நெற்றிப்பொட்டைக் குளிர்வித்துக் கீழிறங்கி வாயில் நுழைந்து, வெற்றிலைச் சாற்றோடு இணைந்து புதுச்சுவை கூட்ட, அவையெல்லாவற்றையும் அனுபவித்துச் சுவைத்துக்கொண்டு உழுதிருப்பார். இரண்டு நாட்களுக்கு முன் மழை பெய்திருந்தபோதிலும் பங்குனிமாத வெயில் தனது தனித்தன்மையைக் காட்டிக்கொண்டு தழலைச் சொரிந்து தகித்தது. பாவம்! மாடுகள் களைத்துப்போய் நுரை கக்கத் தொடங்கிவிட்டன. வாய் பேசாது ஏவியவற்றை முடிக்கும் அந்த எருதுகளே வைரமுத்தரின் கண்கண்ட தெய்வம். தெய்வமும் வாய் பேசுவதில்லையன்றோ? அவர் இலக்கணப்படி மாடுகள் உயர்திணைப் பொருள்கள் அதனால் அவைகளை – அவர்களை மேலும் வருத்தாமல் அவிழ்த்து விட்டார். அவை பக்கத்திலிருந்த குளத்தை நாடிச் சென்றன.

அவிழ்த்து விட்ட மாடுகள் இன்னும் வீடு வந்துசேரவில்லை. துண்டை உதறி விரித்துவிட்டு முற்றத்து மாமரத்தின் கீழ்ப் படுத்து விட்டார் வைரமுத்தர். களைப்பு வேசிப் பெண்ணைப் போன்றது. இரண்டும் சமய சர்ந்தர்ப்பத்துக்காகக் காத்திருந்து, முடிவிலே அவனவன் பெலவீனத்தை வாயிலாகக் கொண்டு, அவனவனை முழுதும் வசமாக்கி மயக்கிவிடும். இவ்வளவு நேரமும் எங்கோ பதுங்கிக் கிடந்த களைப்பு, அவரை முற்று முழுதாக ஆட்கொள்ள, அவர் அதனோடு புணர்ந்து, மோன நிலையிற் கிடந்து கண்களைச் செருக விட்டு, அதைச் சுவைத்துச் சுவைத்து அனுபவித்தார். களைப்பிலே பிறந்த சோர்வை, உள்வாங்கி அனுபவிப்பதென்பது பலருக்குக் கிட்டாத ஓரின்ப அனுபவம்.

“பூரணம்” என்று மனைவியைக் கூப்பிட்ட பின்னர்தான் தனது மோனப் பெருநிலையில் ஒரு பொள்ளல் விழுந்துவிட்டதை அவரால் உணர முடிந்தது. ஆண்டாண்டு காலமாகக் கூப்பிட்டுப் பழகிய வாய், குரல் கொடுத்ததையும் அவராலே தடுக்க முடியவில்லை. இத்தனை மூடுகூளையாய் இந்தக் களைப்பு எப்போது தன்னிலே கவியத் தொடங்கியது என்று எண்ணிய போது அவருக்குச் சிரிப்பு வந்தது. வயது ஒவ்வொன்றாக நழுவி நழுவி விழ, அந்த இடத்திலே சோர்வு வெற்றிக்கொடி நாட்டிவிடுகிறது. 'என்ன என்னில் இன்னும் வாலிபமா கொப்பளிக்கும்! போன தையோடு அறுபத்து நாலு முடிந்து அறுபத்தைந்தாகி விட்டதே! காடு வா வா எனக் கூப்பிடுகிறதே. இந்தப் பருவத்திலும் வயதைப் பாராமலிருக்க மனம் கேட்டால்தானே' என்று எண்ணிக் கொண்டார்.

“மே... மே ஏ எ... ஏஎ...” வீட்டுக் கோடியிற் கட்டியிருந்த தாயாடு அளபேடை சேர்த்துக் கத்தியது. பின் தாயோடு சேர்ந்து குட்டிகளும் முறை வைத்துக் கத்தின. 'நான் வீட்டுக்கு வந்த சங்கதியை இவர்களுக்கு யார் சொன்னவர்... பாக்குக் கடிக்கிற நேரம் பொறுங்கோ... ஏ! பூரணம், இவைகளுக்கு ஒண்டும் போடவில்லையா?' அவர் மனத்தளவில் ஆடுகளோடும் பூரணத்தோடும் பேசினார். வாய்விட்டுப் பேச முடியாத அவ்வளவு சோர்வு!

அவர் மௌனியாய் அண்ணாந்து கிடந்து, மீண்டும் கண்மூடி மௌனியாய் எண்ணமும் நினைப்புமற்றதொரு நிலையில் லயித்து விட்டார். எல்லாம் பழுத்து உதிர்ந்து, புதிய தளிர்களுக் இடங்கொடுத்துவிட, தப்பித் தவறிக் கிடந்த ஒரு பழுத்த மாவிலை, அவர் நெஞ்சில் விழுந்தது. அவர் திடுக்கிட்டுப்போய்க் கண்விழித்தார். கண்கள் மேலே சென்று, மாமரத்தின் பசிய இலைகளெல்லாவற்றையும் அளாவி அலைந்து சுழன்றன. கை பழுத்த இலையை எடுத்துச் சுழற்றியது. 'பழுத்துவிட்டால் இலையல்ல எதுவுமே விழவேண்டியதுதான். புதிய இலை வரும்வரையில் இருந்ததே பெருங்காரியம். ஆசைக்கும் ஓரளவு வேணும். இந்தக் காணி பூமியில் எத்தனையோ ஆண்டுகளாகப் புரண்டுரண்டும் ஆண்டனுபவித்தும் சலிப்புத் தட்டவில்லையே! இந்த மண் வாசனை பூரணத்தின் கூந்தல் வாசம்போல, நெஞ்சின் நெஞ்செலாம் இனிக்கிறது. ஆதி தெரியாத இந்தக் குல விருட்சத்திலும் எத்தனையோ பழுத்தல் இலைகள். புதுத் தளிர்களிடம் அதை வளர்க்கும் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அதனடியில் வீழ்ந்து அதற்கே உரமாகிவிட்டன. உடனடியாக இரு பிள்ளைகளையும் அழைத்து, காணி பூமி, பொருள் பண்ணடமெல்லாவற்றையும் பங்கிட்டு ஒப்படைத்துவிட வேண்டும். எப்போது காற்று வீசும் எப்போது பலுத்தலிலை விழும் என்று யாருக்குத் தெரியும்?' இந்த எண்ணம் மின்னலாய் வெட்டி, அவரது மனத்தின் மூலத்தானத்திலே பெருஞ்சோதியை எறிக்கவிட்டு மறைந்தது.

மின்னலையடுத்துப் பயங்கரவிருள் முழு மூர்க்கத்தனமாய் வந்து அவருள்ளத்திலே உறைந்தது. மனக் கண் அந்தவிருளிற் கூர்மையிழந்து தட்டுத் தடுமாறி ஊர்ந்தது. ஏதோ ஒருவகைத் தவிப்பு, மெல்ல மெல்லப் பெருகிப் பெருங்கடலாய் அலை மோதி, நெஞ்சச் சுவர்களைத் தாக்கியது. உள்ளதை இழக்குந் தவிப்பா? உள்ளத்திலே ஊறி ஊறி உயிருடன் கலந்துவிட்ட தன் மானத்தின் மரணாவத்தையிற் பிறந்த தவிப்பா?

'இனி நானும் பூரணமும் யாருக்குப் பாரமாவது? மூத்தவனுக்கா? இளையவனுக்கா? ஒவ்வொருவரும் ஒவ்வொருவருக்கா? யாருக்கும் யாரும் பாரமாக வேண்டாம். படுக்கையில் விழுந்து கிடக்கிறபோது, இருவரும் வந்து எதுவேண்டுமானாலும் செய்யட்டும், எங்கு வேண்டுமானாலும் கொண்டு போகட்டும், இப்போது நான் யாருக்காவது பாரமாவதோ, யார் நிழலையாவது அண்டுவதோ முடியாது. ஆகவே பூரணத்தாலும் முடியாது' இந்த எண்ணங்கள் அவரது தவிப்பின் பயங்கரக் கொந்தளிப்பை ஓரளவு தணித்தன.

தவிப்பு அடங்கிய நிலையிலே, சந்தேக வித்தொன்று முளைத்து மகாவேகமாக வளர்ந்து, கணப்பொழுதிலே பெருமரமாகி விட்டது. அது நிரந்தரமாகி உண்மைத்தன்மை பெற்றுவிட்டால், அதனால் விளையும் பயனை அவர் தெளிவாக உணர்ந்தார். அந்த மனசாட்சியின் ஒவ்வொரு சிறு தோற்றமும் புரண்டு நெளிந்து வழுக்கி ஊர்ந்து புழுக்கூட்டம் போலக் கிலுமொலுத்தது.

'மூத்தவனுக்கு நிலத்திலும் பார்க்க உத்தியோகமே பெரிது. இளையவனுக்கு வியாபாரமே பெரிது. இருவரின் இந்தப் பற்றுக்களின் முடிபு நிலத்தின் பற்றின்மைதானே. ஆமாம் அவர்களுக்கு ஒற்றைத் தீர்மானமாகச் சொல்லிவிட வேண்டும். 'அடே, இங்க பாருங்கோ, நீங்கள் சிரித்துச் சிரித்து வாழக் காரணம் உங்கள் படிப்பென்றும் வியாபாரமென்றும் நினைத்தால் நீங்கள் சுத்த மடையரே. அதற்குக் காரணம் இந்த நிலம் இந்த நிலத்திலே பரம்பரையாகச் சிந்திய வேர்வை அதனால் ஏற்பட்ட செழிப்பு.. இந்தப் பூமித்தாய் வரண்டு வெடித்துப் பாழாய்க் கொட்டாவி விட்டு, பெருமூச்சு விட்டால் அவ்வளவுதான். குல விருட்சம் படவேண்டியதுதான். இதோ ஒன்றாய்க் கிடைத்த நிலம் இரண்டாகி உங்களிடம் வருகிறது. இதோ உறுதிக் கடதாசி, குத்தகைக்கு விடுவேன் வராத்துக்கு விடுவேன் அப்படியிப்படி என்ற பேச்செதுவும் இருக்கக் கூடாது. ஒன்றில் நீங்கள் நிலத்துக்கு வரவேண்டும். அவ்வளவுதான் என்று அறுத்துறுத்துச் சொல்ல வேண்டும். பாம்பு மாதிரி நழுவி நொழுவிப் பேசுகிற பேச்சுக்கிடமில்லை. பிறகு அவரவர்கள் வந்த வந்த வழி'

அவர் மனதிலே கிடந்து நெளிந்த மனக் காட்சிகளெல்லாம் ஒன்றில் ஒன்று அடங்கி அந்த ஒன்றும் இல்லையாய் மறைந்தது. இந்நிலையில் அவர் மனம் ஆழ்ந்து அனுபவித்துத் தூங்குகிற குழந்தையாய், அது கனவிலே 'நரி வெருட்டச்' சிரிப்பது போலச் சிரித்தது அவரும் சிரித்தார்.

“என்ன சிரிப்பு கால் முகம் கழுவியாச்சோ” என்ற குரல் தூங்கும் இதயத்தை அருட்டி எழுப்பி இனிமையூட்டியது. வைரமுத்தர் ஒருக்கணித்துத் திரும்பி, தலைக்குக் கையை முட்டுக்கொடுத்துக் கொண்டு பார்த்தார். பூரணம் அவரை நோக்கி வந்து கொண்டிருந்தாள்.

உயர் சாதிப் பிராமணப்பெண்போல மஞ்சளிலே சிறிது செம்மையைக் கொட்டிய நிறம். வாட்டசாட்டமான பாரிய சரீரம். நடக்கும்போது சதை அதுங்கிப் பிதுங்கிக் குலுங்குவதும் ஒரு கவர்ச்சியாகத் தானிருந்தது. முன் நெற்றியில் தொடங்கி நடுவகிட்டின் இரு கரையையும் பற்றிக்கொண்டு மேலே மேலே பரவிச் செல்லும் நரை பளிச்சென்ற முகம் குளித்த பிறகு நெற்றியிலிட்டுக் கொண்ட ஒரு சத அகலக் குங்குமப் பொட்டு பார்த்தால் மனத்தூய்மையைப் பரவவிட்டுச் சிலிர்க்கச் செய்யும் முழுப்பொலிவு; அவள் அன்னபூரணி தான் பூரணம் தான். அவள் தாமரையிலையாள் மூடப்பட்ட சருவச் சட்டி ஒன்றை ஒரு கையில் ஏந்திக் கொண்டு, மறு கையிலே செம்புந் தண்ணீருங் கொண்டு வந்தாள்.

அவளிலே கண்ணைப் பதித்து, மனத்தால் விழுங்கி, பின் இரண்டினாலும் அளவிட்டுப் பூரித்தார் வைரமுத்தர். எத்தனையோ ஆண்டாய், ஒவ்வொரு நாளிலும் எத்தனை எத்தனையோ முறை பார்த்துங்கூட, அவருக்கு அலுக்கவில்லை அலுக்கப்போவதுமில்லை. இப்போது அவளைப் பார்த்து மெல்லச் சிரித்தார். நாணம் என்றுமே நித்திய கன்னி. முதுமையின் எல்லையைத் தொட்டு நிற்பவளிடங்கூட, தன் தனித்தன்னை மாறாமற் பரந்து நிற்கும் மகாமந்திர சக்தி அதனிடமுண்டு. அது ஐம்பத்திரண்டு வயதிலும் அவளையறியாமலே, அவள் முகத்தே செம்மை காட்டி, பதிலுக்குச் சிரித்துவிட்டு மறைந்தது.

“என்ன சிரித்துக்கொண்டு... எழும்புங்கோவன்...”

அப்போது தான் கணகணவென்ற கழுத்து மணியோசையோடு, எருதுகள், சுதந்திரமாகத் திரிந்துவிட்டு, அதுவும் சலித்துவிட உள்ளே நுழைந்தன.

“உதை இப்படி வை. மாடுகளைப் பிடித்துக் கட்டி, வைக்கல் இழுத்துப் போட்டிட்டு வா”

“இதைத் தின்னுங்கோவன், பிறகு போய்க் கட்டினாலென்ன”

“எனக்கென்ன அவசரம் வாயில்லாச் சீவன்கள் பாவம்! இன்றைக்கு நல்ல களை. அவைகளைக் கட்டி ஒரு திரணை வைக்கல் போட்டிட்டு வாளை என்ரை ராசாத்தி...”

கிழவன் வாய்விட்டுச் சிரித்தான். முன்னமே நாணத்தால் ஓரளவு செம்மை சாயம் தோய்ந்திருந்த கிழவியின் முகம் முழுவதும் சிரித்தது.


“சீச்சீ... கிழவனுக்கு வயது போனாலும் பகிடி போகாது”

48

# கலைப்பார்வை

தொகுப்பு

தி.இராஜநாயகி



## இந்திரன்

> கலை, இலக்கியப் படைப்பாளிகளின் பல்வேறு கருத்துக்களை அவர்களின் நூல்களில் இருந்தும் சிற்றேடுகளில் இருந்தும் தொகுத்து இந்தப் பகுதியில் தரப்படுகின்றது.

## கலை, இலக்கியத்தில் கொய்தலும் கொழித்தலும்



வெளிப்பார்வையின் சாராம்சம் உள்பார்வையாகவே இருக்கிறது. தன்னைச் சுற்றி உள்ள வெளி உலகத்தைத் தனது பார்வையினால் உள்வாங்குகிறான் மனிதன். இந்த உள்வாங்குதல் மனிதனுக்கு மனிதன் வேறுபடுகிறது. எமக்கு எதிரில் இருக்கும் ஒரு நாயைப் பார்க்கிறோம் என்றால் அது எமது பார்வை ரீதியான உள்வாங்குதல், எமது கவனம், நிறைவு, சிந்தனை முறை, இதற்கு முன்னர் பார்த்து எமது மனதில் பதிந்த பகுதிகள் ஆகிய பலவற்றைப் பொறுத்து அமைகிறது.

ஒரு நாற்காலியைப் பார்க்கிறோம் என்றால், பௌதீக ரீதியாக அந்த நாற்காலி தனக்கென ஒரு வடிவத்தைக் கொண்டிருக்கிறது. அதே நாற்காலியை நாம் உள்வாங்குகிறபோது அது எமது பார்வை ரீதியான நாற்காலியாக உருமாறி விடுகிறது. அது எமது தாத்தா உட்கார்ந்த நாற்காலி என்று பார்க்கின்றபோது அதன் மீது நமக்கு மரியாதை வருகிறது. அதே வேளை எமது வீட்டில் எவர் செத்தாலும் அதில்தான் உட்கார வைப்பார்கள் என்று இருந்தால், அந்த நாற்காலியை நாம் பார்க்கிற பார்வையே மாறிவிடுகிறது.

எமது கோயில்களில் உள்ள செப்புத் திருமேனிகள் மிகவும் உன்னதமான கலைப் படைப்புகள். சொல்லப்போனால், தமிழன் உலகக் கலைக் கருவூலத்துக்கு வழங்கிய சிறப்பான ஒரு கலைப் பரிசு இந்தச் செப்புத் திருவுருவங்கள்.

இவற்றின் அழகை, அவற்றின் உடல் ரீதியான ஒயிலை, அவற்றின் உட்கிடையாக இருக்கிற சாராம்சத்தை நாம் பல சந்தர்ப்பங்களில் பார்வை ரீதியாக உள்வாங்குவது இல்லை. கோயில்களில் இவற்றைக் காண்கிறபோது கடவுள் என்கிற நினைப்பில் பக்தி மேலிடுகிறது. இந்த பக்திப் பரவசத்தால் இந்தச் செப்புத் திருமேனிகளின் கலை ரீதியான அழகை நாம் பார்க்கத் தவறிவிடுகிறோம். அவற்றின் அழகை வெளியே தெரியாதவாறு மலர்களாலும், ஆடை அணிகலன்களாலும் மறைத்து வழிபடுகிறோம். இங்கு இவை கலைச் செல்வங்கள் அல்ல. வழிபடப்படும் தெய்வ உருவங்கள். சமூக ரீதியாகக் கற்றுக்கொடுக்கப்பட்ட சமய ரீதியான ஒரு பார்வையையே இங்கு நாம் கொண்டிருக்கிறோம். அழகியல் பார்வையைத் தவறவிடுகிறோம். உளவியல் ரீதியாகத்தான் நாம் எதையுமே பார்க்கிறோம் என்பதைத் திருமூலர் எனும் தமிழ்ச் சித்தர் மிகவும் அழகாகக் குறிப்பிடுகிறார்.

"மரத்தை மறைத்தது மாமத யானை
மரத்தில் மறைந்தது மாமத யானை"

மரத்தால் செய்யப்பட்ட ஒரு யானை பொம்மை. இந்த யானை பொம்மையைப் பார்க்கிறவர் மர வியாபாரியாக இருப்பாரானால், அது செய்யப்பட் மரம் தேக்கா, வேங்கையா என்கிற நோக்கில் பார்வையிடுகிறார். அங்கே யானை எனும் உருவம் இரண்டாம் இடத்தைப் பெறுகிறது. மரம் முதலிடம் பெறுகிறது. அதனை ஒரு மரச்சிற்பி பார்க்க நேர்ந்தால், அதில் இருக்கும் யானை உருவத்தையும், அதன் கலை நயத்தையும் பற்றியதாக அமைகிறது அவரது பார்வை.

இப்போது மரச்சிற்பியின் பார்வை பொருளின் அழகுக் கூறுகளை உணர்கிற பார்வையாக இருக்கிறது. இதை நாம் அழகியல் பார்வை என்று குறிப்பிடுகிறோம்.

இங்கே புலன் உறுப்புக்களில் ஒன்றான விழியின் மூலமாகத் தெரியும் பருப்பொருளை மட்டும் நாம் உள்வாங்குவதில்லை என்று தெரிகிறது. கண்ணில் தெரியும் வடிவம் தொடர்பான ஒரு சிந்தனை ஓட்டமும், இந்த பார்த்தல் எனும் செயற்பாட்டுடன் இணைந்து விடுகிறது. படைப்புச் சக்தி மிக்க மனித மூளையின் ஒரு பகுதி அந்த வடிவத்தை மாற்றி எமது மனதில் பதிய வைக்கிறது. இதன் மூலமாக அந்த வடிவம் தனதாக்கிக் கொள்ளப்படுகிறது. இங்கே தான் அழகியல் பார்வை என்பதே ஒரு படைப்புச் சக்தி மிக்க செயல்பாடு ஆகிறது.

மனிதனுக்கு வெளியிலிருக்கும் யதார்த்தம் அவனுக்குள் இருக்கும் உலகத்தின் கட்டளைக்கேற்ப அறியப்படுகிறது. இந்த உள் உலகம் ஒருவன் சார்ந்திருக்கும் சமூகம். அதன் பண்பாடு அதன் மூலப் படிவம் ஆகியவற்றைப் பொறுத்து கட்டப்பட்டிருக்கிறது. இங்கே தான் தமிழனுக்கென்று ஓர் அழகியல் பார்வை இருக்கிறது என்று கூறவேண்டி நேர்கிறது. இங்கு அழகியல் பார்வை என்று நான் கூறுவதை அழகியல் குறித்த ஒரு கோட்பாடு என்று புரிந்து கொள்ளக்கூடாது.

தத்துவத்தின் மடியில் கிடந்து, புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பல்வேறு துறைகளின் சீராட்டலும் கலந்து, ஒரே தொடர்ச்சி கொண்ட ஒரு துறையாக அழகியல் மேல் நாடுகளில் வளர்க்கப்பட்டது போல் தமிழில் இல்லை என்பதை நாம் ஒப்புக்கொண்டே தீரவேண்டும். தமிழ் மீது நமக்கிருக்கும் நியாயமான பாசத்தின் காரணமாக 'எல்லாப் பொருளும் இதன் பால் உள' எனும் மனோபாவம் எம் வளர்ச்சியைப் பாதித்துவிடக்கூடும். எமக்குள்ளிருக்கும் பழங்காலக் கீழ்வாலை குகை ஓவியங்கள் தொட்டு இன்றைய சந்துருவின் ஓவியங்கள் வரை கலை ரீதியான உன்னதமான புரிதலை நாம் வகுத்தும் தொகுத்தும் தொடர்ச்சியான ஒரு தத்துவப் பிரிவாக வளர்த்தெடுக்கவில்லை. நான் இப்படிக் கூறுவதின் பொருள் இங்கே தமிழில் சிந்தனைகள் ஏதும் கோட்பாடு ரீதியாக வைக்கப்படவில்லை என்பது அல்ல. அது கோட்பாட்டு ரீதியாக வளர்த்தெடுக்கப்படவில்லை என்பதுதான்.

எமது பழம்பெரும் இலக்கண நூலான தொல்காப்பியத்தில் அழகியல் கோட்பாடுகள், இந்தியாவின் வடகோடியில் காஷ்மீரில் தோன்றிய அபிநவகுப்தர் எனும் அழகியலாளருக்கு இணையாகப் பேசப்பட்டிருக்கின்றன. ஆனால் இவை தொடர்ந்து உரமூட்டி, தற்கால மாற்றங்களுக்கு ஏற்றவாறு வளர்த்தெடுக்கப்படாததால் அழகியல் பார்வையை மேலும் தீர்க்கமாக வளர்த்துக் கொள்ளும் வாய்ப்பை நாம் இழந்து நிற்கிறோம்.

காதுகளில் விழுகிற ஓசைகளை மொழியாக வளர்த்துப் புரிந்துகொள்கிறோம். கண்பார்வையில் படும் குறியீட்டு வடிவங்களை எழுத்தாகப் புரிந்து படிக்கத் தெரிந்திருக்கிறது. இத்தகைய ஒரு கல்வியை, பார்வை ரீதியான அழகியல் பாடங்களைக் கற்றுக்கொள்ள நாம் தவறி இருக்கிறோம். அழகியல் ரீதியாக நாம் நமது கண்களைப் பயன்படுத்துவதில்லை என்றுதான் கூறவேண்டி இருக்கிறது. வடிவம், கணபரிமாணம், முப்பரிமாணம், வண்ணம், குழைமைத் தன்மை, கோடு என்று ஒரு பொருளில் எந்தெந்த் அழகியல் கூறுகள் உள்ளன என்று பார்ப்பதற்கு நம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ளவில்லை.

பாண்டிச்சேரிக் கடற்கரையைப் பற்றிய ஒரு நீர்வண்ண ஓவியம் இருக்கிறது. அதே கடற்கரை பற்றிய ஒரு ஒளிப்படம் இருக்கிறது. அழகியல் ரீதியாகப் பயிற்சி பெறாத பார்வை கொண்டவர்களுக்கு இரண்டுமே பாண்டிச்சேரிக் கடற்கரையைப் பிரதிபலிப்பதாகத் தோன்றும். ஒரே மாதிரியானவயாகத் தென்படும். ஆனால் பார்வை ரீதியான கல்வி பெற்ற ஒருவருக்கு அந்த ஒளிப்படமும் ஓவியமும் பிரதிநிதித்துவப்படுத்துவது எது என்பதல்ல முக்கியம். ஒரு காளையைப் பற்றிய ஓவியத்தில் காளை முக்கியமல்ல. அந்த ஓவியத்தில் கைப்பற்றப்பட்டிருக்கும் காளைத் தன்மையை அழகியல் ரீதியாகப் புரிந்துகொள்வதுதான் முக்கியம். இதைத் தான் நாம் அழகியல் பார்வை என்று கூறுகிறோம்.

இதன் முதல் தேவை, எமது பார்வை பொருள்களைப் பற்றிய முன்கூட்டிய தீர்மானங்கள் அற்றதாக இருக்க வேண்டும். எம்மைச் சுற்றியுள்ள உலகை இதுவரை பார்த்திராதது போன்ற ஒரு அதிசய உணர்வுடன் நாம் பார்ப்போமானால் இதுவரை நாம் எவற்றையுமே பார்த்து வந்திருக்கவில்லை என்பதைப் புரிந்து கொள்ளலாம். நாம் இதுவரை பார்வை அனுபவமே இல்லாதவர்களாக இருந்திருக்கிறோம் என்பது எமக்குப் புரியும்.

அடுத்ததாக அழகியல் பார்வையில் ஒரு பொருளின் புறவடிவ அழகையும் கடந்து அதன் உள்நுழைகிற அனுபவத்தைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். ஒரு கிளியைப் பார்க்கிறோம் என்றால், அந்தக் கிளியின் வெளி வடிவத்தைப் பார்ப்பதைக் கடந்து, அந்தக் கிளியின் 'கிளித் தன்மை'யை உணர்தல் ஒரு படைப்பின் உட்கருத்தை உணர்கிறோம். உள் உணர்ச்சியை உணரும் இந்தப் பார்வை அனுபவத்தைக் 'குறிப்புப் பொருள்' என்று குறிப்பிடுவார் தொல்காப்பியர். அபிநவகுப்தர் இதனை 'ரசானுபவம்' என்று குறிப்பிடுவார்.

இங்கு தான் மிக முக்கியமான வினா ஒன்று எழுகிறது. அழகியல்பார்வை இருப்பவர்களுக்கு எந்தப் பொருளைப் பார்த்தாலும் கலையம்சம் அற்ற பொருளிலும்கூட அழகியல் அனுபவம் கிடைக்குமா? அழகியல் அனுபவம் என்பது அழகியல் பார்வையைப் பொறுத்ததா? அல்லது பார்க்கப்படும் பொருளின் கலை அம்சத்தைப் பொறுத்ததா?

அழகியல் அனுபவம் அல்லது கலை இன்பம் என்பது நாம் காணும்பொருளின் கலைப்பண்புக் கூறுகளைப் பொறுத்து இருக்கிறது. அதே நேரத்தில் அழகியல் ரீதியான பார்வை இல்லாதவன் மிக உயர்ந்த கலைப் படைப்பைப் பார்க்க நேர்கிறபோதுகூட அதிலி ருந்து கலை இன்பத்தைப் பிழிந் தெடுத்துக் கொள்ள முடியாதவனாகி விடுகிறான்.

மேற்குறித்த கேள்விக்கான விடையைத் தேடுகையில் நமக்கு ஒன்று நன்றாகப் புரிகிறது. அழகியல் பார்வை என்பது ஒரு குறிப்பிட்ட தன்மையிலான பார்வை மட்டுமல்ல. அழகியல் பார்வை பார்க்கப்படும் கலைப்பொருளின் தன்மைக்கேற்றவாறு மாறுபடுகிறது. ஒரு தைலவண்ண ஓவியத்தைப் பார்ப்பதற்கான அழகியல் பார்வையும், ஓர் இயங்கும் சிற்பத்தைப் பார்ப்பதற்கான அழகியல் பார்வையும் அடிப்படையில் ஒன்றுபோலத் தெரிந்தாலும், நிறைய வேறுபாடுகள் கொண்டவை. தினந்தோறும் புதுப்புதுக் கலை வடிவங்கள் தோற்று விக்கப்படும் இன்றைய உலகில் 'அழகியல் பார்வை' இதுதான் என்று தீர்க்கமாக வரையறுக்க முடியாது. அதே நேரத்தில் 'அழகியல் பார்வை' என்பது தன்னைச் சுற்றி உள்ள பொருள்களைப் பற்றிய கலை ரீதியான ஓர் அறித லா கும். இது தனி மனிதனைச் சார்ந்தும் அவன் பிறந்து வளர்ந்த பண்பாட்டுப் பின்னணியைச் சார்ந்தும் செயல்படுகிறது.

*(நன்றி: தமிழ் அழகியல்)*

தொடர்

ப்ரியமதா பயஸ்



19

# செல்லும் வழியின் தூரம்...

ஒரு கிலோமீற்றர் நடைக்குப் பின்னர் அம்மாவைக் கண்டுவிட்டேன். அம்மா எமக்கு முன்பே அந்த இடத்தைக் கடந்து 'நாம் முன்னே சென்றுவிட்டோம்' என எண்ணியவராகக் கடற்கரையின் மறுபக்கமாக நடந்து, மீண்டும் நாம் வந்த இடம்நோக்கி நடந்துகொண்டிருந்தார். அந்தத் தருணத்தை இப்போது நினைத்தாலும் நெஞ்சு வெடித்து எழும் வலி என்னை தாக்குகின்றது. தனக்குத் தேவையான ஒருசில பொருள்களை ஒரு சிறிய பைக்குள் போட்டு அதைத் தலையில் சுமந்துகொண்டு நடந்துவந்தார் அம்மா. நேரம் அதிகாலைப்பொழுதாக இருந்தமையால் அங்கிருந்த உடல்கள் எல்லாம் உறக்கத்தில் இருப்பதாக தான் நினைத்தார் என்று அம்மா என்னிடம் சொன்னார். உயிரற்ற நூற்றுக் கணக்கான உடல்கள் கடந்துவந்த இடம் எங்கிலும் சிதறிக் கிடப்பதை அம்மாவைத் தேடிப்போன நான் கண்டேன். இன்னும் ஒரு மணி நேரம் பிந்தியிருந்தால் திசை அறியாமல்போன என் தாயின் நிலைமை என்னவாகியிருக்கும்....?

## இரட்டைவாய்க்காலுக்குள் முடக்கம்

திசை மாறிப்போன தாயை நினைக்கையில் நெஞ்சு வெடித்துப் போகிறது. கணப்பொழுதில் அங்கிருந்து அம்மாவைக் கூட்டிக்கொண்டு ஓடி வருகின்றேன். பத்து நிமிடங்களுக்குள் எல்லோரும் இருக்கும் இடத்தை அடைந்துவிட்டேன். எனக்காகக் காத்துக்கொண்டிருந்த எங்கள் குடும்பமும், அதே சூழ்நிலைக்கு உட்பட்டுவிட்ட இன்னும் சில குடும்பங்களுமே அந்த இடத்தில் இருந்தன. நாம் சேர்ந்திருந்த இடத்தைத் தாண்டி ஒரு கிலோமீற்றர் தூரத்தில் மக்கள் நெருக்கமாக அடைக்கப்பட்டுவிட்டனர். அவர்கள் குழுமியிருந்த இடத்தை நோக்கி நாமும் வந்துவிட்டோம்.

இது இரட்டைவாய்க்கால் பகுதி - இங்கே மக்கள் நெருக்கமாகத் தஞ்சம் புகுந்து அந்தரித்துக்கொண்டிருந்தனர். இத்தனை அவலங்களையும் தாண்டி இரட்டைவாய்க்காலுக்கு வர எமக்கு மூன்று நாள்கள் எடுத்திருக்கின்றன. அது வரையில் நாம் உணவு எதையும் கண்டிருக்கவில்லை. தரைகளில் அவ்வப்போது, ஆங்காங்கே தென்படும் கிணறுகள் தாகம் தீர்க்கும். அதைவிட வேறு எதையும் வயிறு கண்டறியாது. கொதித்துக்கொண்டிருந்தன வயிறும் மனமும்.

## 'எமக்கு இனிச் சாவுதான்'

பயஸ் அங்கே தன் நண்பன் ஒருவரைக் கண்டுவிட்டார். அவரிடம் பேசும்போது அவர் 'தான் இருக்கும் இடத்தில் வந்து இருங்கள்' என எமை அழைத்தார். அந்த இடம் ஒரு நூறு மீற்றர் தூரத்தில் இருந்தது. சனக்கூட்டத்தைத் தாண்டி அவருடைய வீடிருக்கும் காணிக்குள் கால் வைக்கின்றோம். காணி முழுவதும் மக்கள் நிறைந்து இருக்கின்றனர். உணவோ, உறையுளோ அப்போது முதன்மையானதாகத் தெரியவில்லை. மக்கள் அதிகமாக இருக்கும் இடமாதலால் ஏதோ ஒருவகையில் எமது மனப் பயம் அவ்விடம் கொஞ்சம் நீக்கியது. காணி முழுவதும் பங்கர் மயமாக இருந்தது. நாம் போய் உள்நுழையும் நேரம் பார்த்து எங்கிருந்தோ வந்த கொத்துக்குண்டுகள் அவ்விடத்தை நிறைக்கின்றன. பனை வடலிகளுக்குள் அமைந்த பங்கருக்குள் அண்ணனும் அண்ணியும் குழந்தைகளும் நுழைந்துவிட்டனர். அதற்கு அருகில் விழுந்த பொஸ்பரஸ் குண்டுபங்கருக்குமேலே இருந்த பனை வடலிகளில் பட்டதில் அவை விளாசி எரிகின்றன.

குழந்தைகளோடு அந்தப் பங்கருக்குள் நுழைந்தவர்கள் வெளியேற முடியாமல் தவிக்கின்றனர். சிறிய இடைவெளியில் அங்கிருந்து புறப்பட்டு குழந்தைகளோடு ஓடி வருகின்றனர். இப்போது புரிந்துவிட்டது எமக்கு இனிச் சாவுதான். எம் கடைசித் தருணம் இது தான் என.

என் உறவுகள் யாரும் திசை மாறிவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தேன். அவ்விடமிருந்து ஐநூறு மீற்றர்கள் தூரம் நகர்ந்து இன்னொரு காணிக்குள் நுழைகின்றோம். அங்கும் பல பதுங்கு குழிகள் இருக்கின்றன. நகர்ந்து கொண்டிருக்கும் இடங்களில் எல்லாம் தென்படும் பதுங்கு குழிகள் எல்லாவற்றுக்குள்ளும் இறங்கி, ஏறி ஓடுகின்றோம்.

## அப்பாவுக்கு நேர்ந்த அவலம்...

இறுதிக்கட்டம் இப்போது. மாலை ஆகிவிட்டது. குண்டு மழை ஓயாமல் பொழிந்து கொண்டிருக்கிறது. பதுங்கு குழிக்குள் இடம் இல்லை. அவ்வளவுக்கு நெருக்கடியாக அதற்குள் அடைபட்டுக் கிடக்கின்றோம். அப்பாவும் அம்மாவும் பதுங்கு குழிக்கு வெளியே இருக்கின்றனர். சற்றும் எதிர்பாராத நேரம் எமக்கு முன்பாகக் கொத்துக்குண்டு ஒன்று வந்து வீழ்கின்றது. வெளியில் இருந்தவர்கள் அவலக்குரல் எழுப்புகின்றனர். என் பெயரைச் சொல்லியவராக என் அப்பாவும் அவலக்குரல் எழுப்புகின்றார்.

தான் காயப்பட்டுவிட்டதாகவும் தன்னால் எழும்ப முடியவில்லை என்றும் கதறி அப்பா என்னை அழைக்கின்றார். தொடராக எறிகணைகள் வருகின்றன. நான் பதுங்கு குழிக்குள் இருந்து எழுந்து ஓடி அப்பாவைத் தூக்கி வருகின்றேன். அப்பாவின் உடல்முழுதும் காயங்கள். துளைத்த குண்டுகள் உள்ளேயே இறுகி நிற்கின்றன. கால்களிலும், முழங் கைகளிலும் ஒரே மாதிரியாகப் பலத்த காயங்கள். எல்லாக் காயங்களில் இருந்தும் குருதி கொப்பளிக்கின்றது. பதுங்கு குழிக்குள் இருந்த இளைஞன் ஒருவன் ஒரு சாரம் தந்தான். முடிந்தவரைக் காயங்களுக்குக் கட்டுப் போட்டுக்கொண்டு அப்பாவைக் கைத்தாங்கலாகத் தாங்கிக்கொண்டு அந்த இடத்தில் இருந்தும் நகர்கின்றோம்.

> இறுதிக்கட்டம் இப்போது மாலை ஆகிவிட்டது. குண்டுமழை ஓயாமல் பொழிந்து கொண்டிருக்கிறது. பதுங்கு குழிக்குள் இடம் இல்லை. அவ்வளவுக்கு நெருக்கடியாக அதற்குள் அடைபட்டுக் கிடக்கின்றோம். அப்பாவும் அம்மாவும் பதுங்கு குழிக்கு வெளியே இருக்கின்றனர். சற்றும் எதிர்பாராத நேரம் எமக்கு முன்பாகக் கொத்துக்குண்டு ஒன்று வந்து வீழ்கின்றது. வெளியில் இருந்தவர்கள் அவலக்குரல் எழுப்புகின்றனர். என் பெயரைச் சொல்லியவராக என் அப்பாவும் அவலக்குரல் எழுப்புகின்றார்.

## அப்பாவால் நகர முடியாத நிலை

இப்போது முள்ளிவாய்க்கால் வந்துவிட்டோம். இன்று அப்பா காயப்பட்டு இரண்டாவது நாள். எந்தவொரு மருந்துகளையும் அவருடைய காயங்களுக்குப் போடவில்லை. 'டெற்றோல்' போத்தல் ஒன்று கையில் கிடைத்தது. அதை வைத்துக் காயத்தைச் சுற்றிய பகுதிகளைச் சுத்தம் செய்து கொண்டோம். முள்ளிவாய்க்காலின் நெடும் மணல்வெளிக்கு வந்துவிட்டோம். விடத்தல் பற்றைகள் எங்கும் மக்களின் அவல வாழ்வின் சுவடுகளும், பிணங்களுமாக இருந்தன. காயங்கள் அப்பாவுக்கு அதிக வலியை ஏற்படுத்தின. "இதற்குமேல் என்னால் நடக்கமுடியாது" என அப்பா ஓரிடத்தில் இருந்துவிட்டார். ஒரு கைத்தடி இருந்தால் ஊன்றிக்கொண்டு வரமுடியும் இல்லை எனில் அப்பாவால் நகரமுடியாத நிலை. மக்கள் இராணுவத்தை நோக்கிச் சரணடைவதற்காக நகர்கின்றனர். நாமும் அவ்வாறன நிலைக்கு வந்துவிட்டோம். ஆனால், அப்பாவால் நகர முடியவில்லை.

## அப்பா ஊன்றி நடக்க இப்போது ஒரு கைத்தடி தேவை

தான் ஊன்றிக் கொள்ள ஒரு கைத்தடி வேண்டும் என்கின்றார் அப்பா. கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஒரு சிறு தடியைக் கூடக் காணவில்லை. ஒரு பனை மரத்தின் கீழ் அப்பாவையும் மற்றோரையும் காத்திருக்கச் சொல்லிவிட்டுத் தடி தேடப் புறப்படுகிறேன். சுடுமணலில் கால்கள் புதைந்ததும் உடல் கொதிக்கின்றது. யாரோ விட்டுப்போன ஒரு மண்வெட்டி பிடியுடன் கண்களில் தென்படுகின்றது. அதை நோக்கி ஓடுகின்றேன். அதன் பிடியை மண்வெட்டியில் இருந்து பிரித்தெடுக்கப் பெரும் முயற்சி செய்தும் முடியாமல் போட்டுவிடச் சுற்றிச் சுற்றித் தேடுகின்றேன். மக்களின் ஏராளமான உடைமைகள் சிதறிப்போய்க் கிடக்கின்றன. ஆனால் ஒரு தடியை மட்டும் என்னால் எடுக்கமுடியவில்லை. இன்னும் கொஞ்சம் தொலைவில் நீளமாக ஒரு பொருள் தெரிகிறது. நிச்சயமாக அது தடியாகவோ அல்லது இரும்புச் சட்டமாகவோ, அல்லது பிளாஸ்டிக் குழாய் ஆகவோ தான் இருக்கவேண்டும். அது எதுவாயிருந்தாலும் பரவாயில்லை என்ற எண்ணத்தோடு அதை நோக்கி ஓடுகின்றேன்.

எண்ணற்ற உயிரற்ற உடல்களைக் கடந்திருப்பேன். தடிக்குக் கிட்டவாகச் சென்றுவிட்டேன். அந்தக் கைத்தடியை எடுக்கக் குனிகின்றேன். எதிரில் ஒரு ஆணின் கால் கிடக்கிறது. தொடைவரைத் துண்டிக்கப் பட்ட நிலையில் கிடந்தது. அந்தக் கால்கள் ஒரு போராளியினுடையதாகத்தான் இருக்கவேண்டும். அப்படியாயின் இது ஒரு போராளியின் கைத்தடியாகத்தன் இருக்கவேண்டும். மல்லாக்காய்க் கிடந்த அந்தக் கால், "பயப்படாமல் தடியை எடுத்துக்கொண்டு ஓடு... இவ்விடத்தில் நிற்காதே..." என்பதைப்போலக் கிடந்தது. மின்னல் வேகத்தில் கைத்தடியை எடுத்துக் கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்து அவரையும் அழைத்துக்கொண்டு இராணுவத்தினரிடம் சரணடையச் செல்கின்றோம்...

(தொடரும்)



கட்டுரை

வி. அருணாசலம்

# தமிழரின் தொன்மை அடையாளங்கள் எங்கே...?



யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மிக முக்கியமான ஒரு வரலாற்றாசிரியர் பேராசிரியர் பொ.ரகுபதி. இவர் தற்போது வெளிநாடொன்றில் வாழ்கிறார். இங்குள்ள வரலாற்றாசிரியர்கள் பலரும் யாழ்ப்பாணத்தில் கல்வெட்டுகள் இல்லையென்பதால் தமிழரின் வரலாற்றைத் தேடுவது சிரமம் என்று அதற்கு முற்றுப்புள்ளி வைத்திருக்க, எமது மூதாதையர் பாவித்த பொருள்களையும், பழமையின் தொடர்ச்சியான வழக்கங்களையும் வைத்து எமது வரலாற்றைக் கணிக்க முடியும் என்று கூறி, அதில் வெற்றியும் கண்டிருக்கிறார் பேராசிரியர் பொ.ரகுபதி.

காரைநகரைப் பிறப்பிடமாகக் கொண்ட ரகுபதி, ஒரு பாரம்பரிய அல்லது தொல்குடியான பழக்கவழங்கங்களை மிக நுணுக்கமாகச் சிறு வயதிலிருந்தே அறிந்திருந்தார். அவரது வாழ்வுச் சூழலே பின்னர் அவரது கண்டுபிடிப்புக்களுக்கு அத்திபாரமாய் அமைந்தது.

இவரிடம் காணப்பட்ட ஆங்கிலப் புலமையையும், ஆய்வுத் தன்மையையும் வைத்து ஆனைக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட சிறிய ஆதாரங்களையும் தமிழரின் வாழ்க்கை முறையையும் ஆராய்ந்து எழுதப்பட்டதே (Early settlement in jaffna) ஏர்லி செற்றில்மென்ற் இன் யெப்னா' என்ற நூலாகும்.

**வரலாறு பற்றிய அறிவைத் தரக்கூடிய எச்சங்கள்**

தமிழரின் வரலாற்றுத் தொன்மையை அறிந்து கொள்வதற்கு கொல்லன் உலை கீச்சுக்கிட்டான் (இரும்பு உருகும் போது வரும் கழிவுப்பொருள்), எப்போதிருந்தே வழிவழியாகப் பேணப்பட்டுவரும் தாலாட்டுப் பாடல்கள், நாட்டார் பாடல்கள், பிராமணர்கள் வருவதற்கு முன்புள்ள வணக்க முறைகள், வேள்விச் சடங்குகள், கொண்டாட்டங்கள், கோயில்கள் மற்றும் பழமையான இடங்களில் காணப்படும் சிற்பங்கள், ஓவியங்கள், பாரம்பரிய இசைகள், பனைமரத்தையும் ஓலைகளையும், நார்களையும் கொண்டு செய்யப்பட்ட கைவினைப் பொருள்கள், பாரம்பரிய உணவுகளைச் சமைக்கும் முறைகள், பூர்வீக மக்கள் பாவித்த கலப்பை, கத்தி, குத்தூசி, தொட்டில் போன்றன, கோயில்களில் பாடப்படும் பாரம்பரியப் பாடல்கள், பனை ஏடுகளில் காணப்பட்ட குறிப்புகள், மழை, வெயில், குளிர் காலங்களில் மக்களால் கடைப்பிடிக்கப்பட்டு வந்த உணவுப் பழக்கவழக்கங்கள், எந்தப் பருவ காலத்தில் குழந்தை பெற்றுக்கொள்வது என்ற அனுபவம், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்களுக்கான உணவுகள், பராமரிப்பு முறைகள், கிரந்தி போன்றவற்றைத் தடுக்கும் மூலிகை



எண்ணெய் வகைகள், சுதேச வைத்திய முறைகள், உலோகப்பொருள்கள், தலயாத்திரைகள், பழைய தமிழ்ச் சொற்கள், காகம் கரைதல், பல்லி சொல்லுதல் போன்றவற்றின் மூலம் அறியப்படும் இயற்கை உடனான வாழ்க்கை முறை, பழைய நாணயங்கள், பழைய கடவுள் சிற்பங்கள், சமயச் சடங்குகள், சவ அடக்கமுறை எனப் பல்வேறு விடயங்களையும் ஆராய்ந்தறிய வேண்டும். இவற்றினூடாக ஒரு மக்கள் கூட்டத்தின் வரலாற்றை, பாரம்பரியத்தை கலாசார விழுமியங்களைக் கண்டறியமுடியும்

**இந்துக்களிடம் இல்லாத பண்பு**

உங்கள் வீடுகளில் உங்கள் பூட்டன் அல்லது பூட்டி பாவித்த பொருள்கள் எவற்றையாவது பேணி வைத்திருக்கிறீர்களா? பாட்டன் பாட்டியின் பொருள்கள், அப்பா, அம்மா பாவித்த பொருள்கள் என்று தேடிப்பார்த்தால், எங்களிடம் எதுவும் இல்லை. இது எமது அடையாளங்கள் அல்லது பாரம்பரியங்களைப் பேணி வைக்காததற்குக் காரணம் தமிழ் மக்களிடம் வரலாறு பற்றிய அக்கறையின்மையும் அது சார்ந்த பொருள்களைப் பத்திரப்படுத்துகின்ற வழமை இன்மையுமே ஆகும்.

சிங்கள மக்களிடமும், கிறிஸ்தவ மக்களிடமும் தமது பழமையைப் பேணும் தன்மை உண்டு. இவை அவர்களது வணக்கஸ்தலங்களை மையமாக வைத்து இன்று வரை பேணப்பட்டு வருகிறது. இந்த இரு மதங்களிலும் மதத் துறவிகள் பெருமளவில் இருப்பதால், அவர்கள் தமது மக்களைப் போதனைகளின் மூலம் வழிப்படுத்தி வருகின்றனர். மிக அதிகமான வரலாற்றுத் தொல்லியல் அடையாளங்கள் புராதன இந்துக் கோயில்களில் காணப்பட்டன.

இந்து மதத்தில் துறவிகள் இல்லாததால் (முன்வருவதில்லை). தமது மக்களை முழுமையாக வழிநடத்த முடிவதில்லை. ஆனால், ஒவ்வொரு கோயில்களிலும் தாம் நினைத்தபடி அமைப்புக்களை உருவாக்கவும், கோயில்களை உடைத்து எறிந்துவிட்டு வெளிநாட்டு நிதியைப் பயன்படுத்தி நவீன கோயில்களைக் கட்டிக்கொள்ளவும் அவர்களால் முடிகிறது.

**தம்மைத் தாமே அழிக்கின்றனர் தமிழர்**

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் ஆகியோர் இந்துக் கோயில்களை அழித்ததாகக் கூறப்பட்டபோதிலும், அவர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறிய பின்பு எஞ்சியிருந்த பழைய அடையாளங்களை இந்துத் தமிழர்களே அழித்துவருகின்றனர் என்பது பலருக்குத் தெரிவதில்லை.

1815 பங்குனி 15ஆம் திகதிக்கு முற்பட்ட கட்டடங்களைப் பழமை எச்சங்களாக ஐ.நா.வின் யுனெஸ்கோ அமையத்தின் உரிமம் பெறப்பட்டுப் பேணப்படும் வாய்ப்பு இலங்கையில் காணப்படுகின்றபோதிலும், அதன்பொருட்டு பௌத்த, கிறிஸ்தவ அடையாளங்கள் மட்டுமே பேணப்பட்டு வருகின்றன. (பல கிறிஸ்தவ புதைகுழிகள்) அதைவிடவும் எவ்வளவோ பழமை வாய்ந்த ஆதாரங்கள் இந்துக்களிடம் இருந்தபோதிலும் அவற்றின் பெறுமதி உணரப்படாததால் அவை அழிக்கப்பட்டு விட்டன. இது விடயத்தில் தமிழ் வரலாற்று ஆசிரியர்களோ, அரசியல் தலைவர்களோ, கோயில் அமைப்புக்களோ, பிராமணர்களோ, பொது அமைப்புக்களோ தெளிவாக இல்லை. அவ்வாறு இருப்பதால்தான் யாழ்ப்பாணத்தில் உள்ள நூதனசாலை ஒரு சில பொருள்களுடன் மட்டும் பேணப்பட்டு வருகிறது.

**கிளிநொச்சிக் கட்டடக் கலையில் பௌத்தம்**

திரியாய் புத்தகோயில், கந்தரோடைப் புத்தகோயில் போன்றவை தமிழர்கள் வணங்கிய கோயில்களே. காலகதியில் அவை தமிழரால் கைவிடப்பட்டதால் இன்று சிங்கள பௌத்த அடையாளமாக அல்லது அவை சிங்களவர்களுக்குரிய இடம் என்ற நிலையும் ஏற்பட்டுவிட்டது. போர் முடிவடைந்து கிளிநொச்சி நகரம் மீள் உருவாக்கப்பட்டபோது பழயை செங்கல்லாலான அத்திபாரங்கள் கட்டப்பட்டுள்ளன. இன்னும் சில ஆண்டுகளில் அவை பாசி பிடித்து கறுப்பாகிவிடும். பிற்பட்ட காலத்தில் மிகப் பழைய எச்சங்களாக அவை ஆதாரப்படுத்தப்படவுள்ளமை பற்றித் தமிழ் வரலாற்று ஆசிரியர்களுக்குக் கூடத் தெரிந்திருக்கவில்லை. இது பொலனறுவை, அனுராதபுர பழமை எச்சங்களுடன் ஒத்ததாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பழைய பொருள்களுக்குப் பதில் பிளாஸ்ரிக் பொருள்கள்**

தமிழ் மக்களிடம் காணப்படும் வரலாற்று விழிப்புணர்வின்மை காரணமாகவே பழய பொருள்களை வாங்குபவனால் வெண்கலப் பொருள்கள், காற்சலங்கைகள், பெட்டகங்கள், பழைய புத்தகங்கள், பழைய கூறைச்சேலைகள் போன்றவற்றைப் பிளாஸ்ரிக் பொருள்களைக் கைமாற்றாகக் கொடுத்துவிட்டு வாங்கிச் செல்ல முடிகிறது.

ஒரு மூக்குப்பேணியின் 'பழம்பொருளுக்கான' பெறுமதி 5000ரூபா தொடக்கம் 25000ரூபா வரை உயர்வானது என்பது எம்மவர் பலருக்குத் தெரிந்திருப்பதில்லை.

பேரசிரியர் பொ.ரகுபதி ஒரு நாணயத்தை அல்லது மோதிரத்தை அல்லது ஒரு மட்பாண்டத்தை வைத்து தமிழரின் வரலாற்று அடையாளங்களைக் கண்டுபிடித்துவிட முடியும் என்று கூறியுள்ளபோதிலும், அவற்றை விடவும் பலமான அல்லது காத்திரமான அடையாளங்கூள் பலவற்றைத் தமிழரே இல்லாது அழித்து வருகின்றனர்.

இருப்பதை வைத்து எப்படி வாழ்வது என்ற போதனைகூட தமிழரிடம் இல்லை. ஒரு இனத்தின் அடையாளங்களை இல்லாது செய்வது என்பது ஒரு மிகப்பெரிய படையெடுப்பை விட எதிரிக்கு வாய்ப்பாக அமையக்கூடியது. அதைத் தமிழரே முன்னின்று நிறைவேற்றுவது தான் கொடுமையானது. ஒவ்வொரு வீடுகளிலும் தமது முன்னோர்கள் பாவித்த ஏதாவது ஒரு பொருளையாவது பாதுகாத்தால் அதுவே இப்போதைக்குப் போதுமானது.

# பயனற்ற செல்வம்



வசதி படைத்தவன் ஆயினும் விமலன் கஞ்சன். தானம் கேட்டால் ஒரு சதம் கூடக் கொடுக்கமாட்டான்.

ஒருநாள் ஆழந்த உறக்கத்தில் இருந்த விமலன் தனது செல்வம் எல்லாவற்றையும் யாரோ திருடிக் கொண்டு போவது போலக் கணவு கண்டான். அலறி அடித்துக் கொண்டே விழித்தெழுந்தான். அதன் பின்னர் அவனுக்குத் தூக்கமே வரவில்லை. இரண்டு நாள்களாக அவனால் திருப்தியாகச் சாப்பிடவும் இயலவில்லை. தனது நண்பர்கள் மீதும் அவனுக்குச் சந்தேகம் தோன்றியது. எவரையும் அவனால் நம்ப முடியவில்லை. "மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்பது போல் எதற்கும் பயந்தான்.

கடைசியில் புத்திசாலியும் நல்ல உள்ளம் கொண்டவருமான விஷ்ணு என்ற பெயரிவரைப் போய்ச் சந்தித்தான். தனது பிரச்சினையை அவரிடம் எடுத்துச் சொல்லித் தீர்வு கேட்டான். தனது செல்வத்தைப் பாதுகாக்கும் வழியைச் சொல்லுமாறும் வேண்டினான். அவரோ சிறிது நேர மௌனத்தின் பின்னர் "உன் பணத்தை எல்லாம் மூடையாகக் கட்டிக் கொண்டு போய் நான் குறிக்கும் மரத்தின் அடியிலே புதைத்துவிடு அது பாதுகாப்பாக இருக்கிறதா என்பதை அடிக்கடி அங்கே சென்று பார்த்துக் கொள்" என்று கூறினார். அதன்படி மரத்தின் அடியிலே புதைத்த பண மூடையை விமலன் இரண்டு நாள்களுக்கு ஒருமுறை சென்று பார்த்துச் சந்தோசப்பட்டான். இதை அவதானித்த திருடன் ஒருவன் விமலன் வராத வேளையில் அவனது பணமூடையை வாரிச் சுருட்டிக் கொண்டு தப்பிச் சென்றுவிட்டான்.

இரண்டு நாள்களின் பின்னர் அங்கே வந்து பண மூடையைத் தேடிய விமலனுக்குத் தலைசுற்றியது. தனது பணமூடையைத் தொலைத்தமைக்குப் பெரியவரான விஷ்ணு தான் காரணம் என எண்ணியவன் அவரை அணுகி ஆவேசத்துடன் பேசிக் கத்தினான். ஆனால் அவரோ மிகவும் அமைதியாக விமலனுக்கு ஒரு கோப்பை தண்ணீரைக் கொடுத்து "அமைதியாக இரு" என்றார். அவனோ தண்ணீர்க் கோப்பையைத் தட்டிவிட்டு எனக்கு நீதி வேண்டும் என்றான். அதற்கு அவர், "எதற்காக வருத்தப்படுகிறாய். நீ அந்தப் பணத்தை மூடையில் கட்டிப் புதைத்துத்தானே வைத்திருந்தாய். உபயோகிக்க உதவாத பொருள் எதுவாக இருந்தாலும் அது இருந்தாலும் ஒன்றுதான் இல்லாவிட்டாலும் ஒன்றுதான். அது போல நீ அந்தப் பணத்தை ஒரு போதும் உபயோகிக்கப் போவதில்லை. எனவே நீ வைத்த இடத்தில் அந்தப் பணம் இருப்பதாகவே நினைத்துக் கொள்" என்றார்.

கஞ்சத்தனத்தால் தான் செய்த தவறை உணர்ந்து பதிலேதும் சொல்லாமல் விமலன் திரும்பிச் சென்றான். தன்னிடம் எஞ்சி இருந்த செல்வமெல்லாவற்றையும் ஏழைகளுக்குத் தானம் செய்தான்.



சிங்கம் ஒரே தடவையில் 30 கிலோ இரையை உண்ணக் கூடியது.




குரங்குகளுக்கு இரண்டு மூளைகள் உள்ளன. ஒன்று உடலையும் மற்றொன்று வாலையும் செயற்பட வைக்கிறது.

ஆமைக்குப் பற்கள் கிடையாது.



முதலையைத் துப்பாக்கியால் சுட்டால் துப்பாக்கிக் குண்டு அதன் தோலைத் துளைக்காது. அந்த அளவுக்கு வலிமை வாய்ந்தது அதன் தோல்.





'டொல்பின்' மீனுக்குக் குரல்வளை கிடையாது. எனினும் 32 வகையான ஒலிகளைக் காற்றை ஊதி வெளிப்படுத்துகிறது.

## ஒரு சொல் இருபொருள்



மாதுளை என்றால் ஒரு வகைக் கனி
மா துளை என்றால் பெரியதுளை

நாவாய் என்றால் மரக்கலமாம்
நா, வாய் என்றால் இரண்டு உடல் உறுப்புகள்

பாவாடை என்பது பெண்கள் அணியும் உடை
பா வாடை என்றால் பாட்டு மணம்



மாதிரி என்றால் உதாரணம்
மா திரி என்றால் மாவு திரித்தல்

கவிகை என்றால் வளைவு, குடை
கவி கை என்றால் கவிஞர்கரம்



அதிகாரம் என்றால் ஆட்சி, உரிமை
அதி காரம் என்றால் அதிக உறைப்பு

செவ்வாய் என்றால் ஒரு கிரகம்
செவ் வாய் என்றால் சிவந்த வாய்

பார்த்திட ஒரு சொல் தான் இருக்கும் – பதம்
பிரித்திட மறுபொருள் உருவெடுக்கும்

வார்த்தைகள் இப்படிச் சுகம் கொடுக்கும் – சொல்
வாயொடு மனத்திலும் மகிழ்விருக்கும்




## ஏ.ரி.எம். அட்டை



அவசர தேவைகளுக்கும் விடுமுறை நாள்களிலும் வங்கிகளில் பணம் பெறுவதற்காக ஏ.ரி.எம். அட்டையைப் பயன்படுத்திப் பணம் பெறும் வசதி கண்டுபிடிக்கப்பட்டது. Automated Teller Machine என்று அழைக்கப்படும் இந்த இயந்திரத்தைக் கண்டு பிடித்தவர் லூதர் ஜோர்ஜ் சிம்ஜன். அவர் 1959ஆம் ஆண்டுக்கு முன்னரே இந்த இயந்திரத்தை வடிவமைத்திருந்தார். பரீட்சார்த்தமாக ஆறு மாத காலம் வரை அமெரிக்காவின் நியூயோர்க் நகர வங்கியில் அது பயன்படுத்தப்பட்டது. அது பெருமளவில் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை.

இன்று நாம் பயன்படுத்தும் புதிய இயந்திரத்தை ஆக்கியளித்தவர் ஜோன் செப்பேட் பரன் ஆவார். அவரால் ஆக்கப்பட்ட இயந்திரம் பிரிட்டனில் நிறுவப்பட்டது. அதிலிருந்து முதன் முதலாகப் பணத்தைப் பெற்றவர் அந்த நாள்களில் புகழ் பெற்றிருந்த நடிகரான றெக்வமி என்பவராவார். மக்களிடையே அந்த நாளில் இதனை விளம்பரப்படுத்த நடிகரைக் கொண்டு அரம்பிக்கப்பட்ட ஏ.ரி.எம். இயந்திரத்தின் பயன்பாடு இன்று உலகம் முழுவதும் இலங்கையிலும் பிரபல்யம் பெற்று விளங்குகிறது.



## மயில்

மயிலும் இங்கே ஆடுது நல்ல
மழையும் வரப் போகுது!
குயிலும் கூவிப் பாடுது தன்
குரலால் தாளம் போடுது!

வட்டத் தோகை விரிக்குது
வண்ண மயில் சிலிர்க்குது!
நீண்ட கழுத்தை ஒடிக்குது...
நல்ல ஆட்டம் நடக்குது...

என்ன என்ன வண்ணங்கள்...
எங்கும் அழகுச் சின்னங்கள்...
பார்க்க பார்க்க அழகுதான்...
பாலர் நமக்கு விருந்துதான்...

முருகன் மட்டும் போகவே
முதுகைக் காட்டும் வாகனம்!
நமக்கும் கூட ஆசையே
நாமும் ஏறிப் போகணும்!

## பொது அறிவு

1. உலகிலேயே மிக உயரமான மலைச்சிகரம் எது?
எவரெஸ்ட் (நேபாளம் 8ஆயிரத்து848 மீற்றர்கள்)
2. பூச்சி இனங்களில் அறிவு மிக்கது எது?
எறும்பு
3. உலகில் மிக அதிக அளவில் கப்பல் போக்குவரத்து இடம்பெறும் இடம் எது?
பனாமா கால்வாய்
4. ஈபிள் கோபுரத்தின் உயரம் என்ன?
300.65 மீற்றர்கள்
5. 'தங்கத் திரவம்' என்று அழைக்கப்படுபவை எவை?
பெற்றோலியம், பாம்பு விஷம்
6. அதிக தூரம் தாவிப்பாயும் மிருகம் எது?
கங்காரு (ஒரு தாவுதலில் 13 மீற்றர்கள் நீளத்தைத் தாண்டும்)
7. ஆயிரம் ஏரிகளின் நாடு என்று அழைக்கப்படும் நாடு எது?
பின்லாந்து
8. தபால்தலையை வட்டவடிவமாக வெளியிட்ட நாடு எது?
மலேசியா
9. உலகிலேயே மிக உயர்ந்த பீடபூமி எது?
திபெத்
10. நதிகளே இல்லாத நாடு எது?
சவூதி அரேபியா



பா.அகிலேஷன்,
தரம் - 2
ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்



கேதீசன் அக்ஷிதா
வளர்மதி முன்பள்ளி, கொக்குவில்.

வரலாறு

அருணா செல்லத்துரை

# 2500 வருடங்களுக்கு முன்பிருந்த நாகர்களுடைய ஐந்து தலை நாகவழிபாடு 11



**நீர்த்தேக்கங்கள்**

இயக்கர்களின் நீர்ப்பாசனத் தேவையை நிறைவு செய்வதற்கு பெருநிலப்பரப்பில் நீண்ட தூரம் பாயும் பெரிய ஆறுகளை மறித்து, அணைக்கட்டுக்களைக் கட்டி, நாகர்கள் நீர்த்தேக்கங்களை உருவாக்கியுள்ளனர். இதனை இந்தப் பிரதேசத்தில் 'குளம் கட்டுதல்' என்று அழைத்துள்ளனர். சமதரைப் பிரதேசங்களில் நிலத்தைத் தோண்டி, ஆழமாக்கி நீரைத்தேக்கி வைக்கும் இடங்களைக் 'குளங்கள்' என்றும், சமநிலப் பிரதேசங்களில் இயற்கையாக நீர் தேங்கி நிற்கும் இடத்தை 'மடு' என்றும் அழைப்பதுண்டு. மடு என்பதற்கு உதாரணமாகச் சின்ன இத்திமடு, பெரிய இத்திமடு, மாமடு, கற்சிலைமடு, கருடமடு, அலியாமருதமடு, சிலையினாமருதமடு(மடு), பெரியமடு, மருதமடு, நயினாமடு, சேமமடு, கரம்பைமடு போன்ற பெயர்ளை உடைய பிரதேசங்களைக் குறிப்பிட லாம். வறட்சிக் காலத்தில் நீர் தேங்கி நிற்கும் இடங்களில் எருமை மாடுகள் (கிடா மாடுகள்) இறங்கிப் படுத்திருந்து நீரைக் கலக்குவதால் நீரின் கீழ்ப் படிந்திருந்த மண் படலங்கள் தண்ணீருடன் கலந்து சுரியாக மாறும் இடங்களை 'மோட்டை' என்று அழைத்ததாகப் பெரியோர்கள் விளக்கம் கூறுகின்றனர். இதற்கு உதாரணமாக காஞ்சூரமோட்டை, நொச்சிமோட்டை, சின்னக்கோரமோட்டை, கோரமோட்டை, மருக்காரைமோட்டை, பாலைமோட்டை, கோயில்மோட்டை, அத்திமோட்டை, கிடாச்சுரி போன்ற பிரதேசப் பெயர்களைக் குறிப்பிடலாம். பிற்காலத்தில் மடுக்களும் மோட்டைகளும் மண்ணினால் கட்டுகள் கட்டப்பட்டுக் குளங்களாக மாற்றப்பட்டுள்ளன. அந்த இடங்கள் அந்தப் புராதன பெயர்களைக் கொண்டே அழைக்கப்படுகின்றன. அடங்காப்பற்று வன்னிப்பிரதேசத்தில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிறுகுளங்களும், பாவற்குளம் (வைகை கட்டின ஓலுக்குளம்), கட்டுக்கரைக்குளம், பாலிக்குளம் (வவுனிக்குளம்), மண்மலைக்குளம் (முத்தையன் கட்டுக்குளம்), நாகராச வாவி (தண்ணிமுறிப்புக்குளம்), போன்ற பெரிய குளங்களையும் உதாரணமாகக் குறிப்பிடலாம். இரணைமடு, அக்கராயன்குளம் போன்ற பெயர்களிலானவை பெரிய குளங்கள்.

**நாகர்களின் நடுகல் வழிபாடு**

ஆரம்பத்தில் நடுகற்களாகவிருந்த நாகர்களின் வழிபாட்டு முறையே பிற்காலங்களில் ஐந்து தலை நாக வழிபாட்டுக்கு வழிசமைத்திருக்கிறது. நாகசிலைகளுக்கு முந்தைய நடுகற்களை ஆராய்ந்ததன் மூலம் இது தெளிவாகிறது.

பெருநிலப்பரப்பில் நீர்த்தேக்கங்களின் அணைக்கட்டுகளிலும் அதன் அருகிலும் குளக் கட்டுக்களைப் பாதுகாக்க, ஐந்துதலை நாகத்தை உருவகிக்கும் நடுகற்களை வைத்து வழிபட்டுள்ளார்கள்.

ஒட்டுசுட்டான் - புதுக்குடியிருப்பு வீதியில் கற்சிலைமடு இருக்கின்றது. இங்கு இலிங்க வழிபாடு மற்றும் நாக வழிபாடு ஆகியன இடம்பெற்றமைக்கான அடையாளங்கள் இருக்கின்றன. இங்குள்ள கற்சிலைமடுக் குளத்தின் கீழும், காட்டுப் பகுதிகளிலும் கண்டெடுக்கப்பட்ட இலிங்கங்கங்கள் இதற்குச் சான்று பகருகின்றன. இயற்கையாக நீர்தேங்கி மடுவாக இருந்த பகுதியில் கற்சிலைகள் அநேகம் இருந்த காரணத்தால் 'கற்சிலைமடு' என்ற பெயர் வைக்கப்பட்டிருக்கிறது. தற்போது அந்த நீர்நிலையைச் சுற்றிக் கட்டுக்கள் கட்டி குளமாக்கப்பட்டுள்ளது.

ஒட்டுசுட்டான் வடக்குப் பகுதியில் இருக்கும் தட்டய மலையின் ஊடாகப் பேராறு பாய்கின்றது. தட்டய மலையையும், ஆற்றுக்கு மறுபக்கத்தில் இருந்த மண் மேட்டையும் இணைத்து அணைக்கட்டுக் கட்டி 'மண் மலைக் குளம்' (முத்தையன்கட்டுக்குளம்) உருவாக்கப்பட்டுள்ளது.

கற்சிலைமடுவுக்கு வடக்கே நீர்ப்பாசனத் தேவைக்காக, இன்னொரு இடத்தில் பேராற்றைக் குறுக்கே மறித்துத் தூண்போன்று பொளியப்பட்ட கருங்கற்கள் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி அணைக்கட்டு கட்டப்பட்டுள்ளது.

இதனை 'அடுக்குக்கல்லு அணைக்கட்டு' என்று அழைத்துள்ளார்கள். இந்த அணைக்கட்டின் மத்தியில் நாகர்களின் வழிபாட்டுத்தலத்தை அடையாளப்படுத்தும் நடுகல் வைக்கப்பட்டுள்ளது. இந்த நடுகல்லில் நாகர்களின் 'மணிணாகன் பள்ளி' என்ற பிராமிக் எழுத்துக்கள் இருப்பதாகப் பேராசிரியர் சி. பத்மநாதன் கூறியிருக்கிறார்.

கூழாமுறிப்பு என்ற இடத்துக்கு வடக்கே பேராறு பாய்கின்றது. மலைக்குன்றுகளும் மண்மேடுகளும் நிறைந்துள்ள பிரதேசம் இதுவாகும். இந்தப் பிரதேசத்தில் உள்ள குளங்களில் இருந்து எடுக்கப்படும் களி மண், ஓடு செய்வதற்குப் பொருத்தமானது என மண் சம்பந்தமான ஆய்வுகளைச் செய்தவர்கள் தெரிவித்த காரணத்தால் ஓட்டுத் தொழிற்சாலை ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்தத் தொழிற்சாலையை அண்மித்த இடத்தில் பல கருங்கல் சிலைகள் இருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஓட்டுத்தொழிற்சாலையின் வாயிலில் உள்ள பிள்ளையார் கோவிலில் நாகர்களின் வழிபாட்டைக் குறிக்கும் நடுகல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. இந்த நடுகல், அருகிலுள்ள மலைக் குன்றிலிருந்து எடுக்கப்பட்டதாக அறியக் கிடைக்கிறது. அண்மைகாலத்தில் இந்தக் கல்லில் நாயின் உருவம் பொளியப்பட்டுள்ளது. அதற்குப் பின்னாலும் நாகர்களின் வழிபாட்டைக் குறிக்கும் 'மணிணாகன் பள்ளி' என்ற தமிழப் பிராமிக் எழுத்துக்கள் இருப்பதைப் பேராசிரியர் பத்மநாதன் உறுதி செய்திருக்கிறார்.



(கூழாமுறிப்பு மணிநாகன் பள்ளி நடுகல்)

வவுனியாவில் இருந்து நெளுக்குளம் ஊடாகச் செல்லும் வீதியில் இராசேந்திரம் குளம் இருக்கின்றது. இந்தக் குளத்தின் இடது கரைப் பகுதியில் சைவ சமய புராதன வழிபாட்டிடங்களின் கருங்கல் சிதைவுகள் காணப்படுகின்றன. தற்போது இங்கு மூன்று புதிய ஆலயங்கள் கட்டப்பட்டுள்ளன. கருங்கற்களால் கட்டப்பட்ட கேணி ஒன்றும் சிதைந்த நிலையில் உள்ளது. இராசேந்திரம் குளத்தின் வலது கரைப் பகுதியில் 'நாகர் இலுப்பைக் குளம்' இருக்கின்றது. இந்தக் குளத்தில் இருந்து வடிந்து பாயும் நீர் அருவி ஆற்றுடன் கலக்கின்றது. நாகர் இலுப்பைக் குளத்தின் கட்டில் நாகர்களின் வழிபாட்டைக் குறிக்கும் நடுகல் ஒன்று வைக்கப்பட்டுள்ளது. இதன் அமைப்பு வித்தியாசமானதாக உள்ளது. இது சிதைந்துள்ள காரணத்தினால் அதன் முழு உருவத்தைத் தீர்மானிக்க முடியவில்லை. இந்த நடுகல்லில் மேலிருந்து கீழ் வரிசையாகப் பத்து வரிசைகளில் கோடுகள் பொளியப்பட்டுள்ளதைக் கவனிக்க முடிகிறது.

(தொடரும்)




(அடுக்குக் கல்லு அணைக்கட்டில் மணிநாகன் பள்ளி நடுகல்)



(நாகர் இலுப்பைக்குளம் நாக வழிபாட்டு நடுகல்)

கவிதை

கை. சரவணன்



2

# மண்

- அவதானக் குறிப்புகள் சில -

விதை விருட்சமாகிறது
கரு உயிராகிறது.

நிமிர்த்தும் வலு
எல்லாவற்றுக்கும்.
எல்லாவற்றுக்குமே
மண் ஒன்றுதான்.

வேர் ஆழவிடவும்
கால் உறுதியாய் ஊன்றவும்
அவசியமாகிறது.

அலைகளை வென்றுவரும்
கடலோரம்
காலாறுவதும்
முகிலைப் பிளந்து
வானை அளந்து மிதக்கும்
ஊர்தி
இளைப்பாறுவதும்
மண்ணின்றிச் சாத்தியப்படா.

அலை
தன் கரத்தால்
அத்தனையையும் வாரிக்
குவிப்பதற்கு
ஆழமும்
விரிவும் எதுவும் எப்படியும்
மூன்றென்ன முப்பதுகோடி
மடங்குகள் பங்கிருந்தாலும்
மண்தான் வேண்டும்.

மண்
இன்றியமையாதது.
இல்லாமல் எதுவுமாகாது.

தமிழ் சினிமா





# கதாநாயகன்

## ஏதோ முயற்சித்திருக்கிறது...

**கதைப்பார்வை**

வருமானத்துறை அலுவலகத்தில் பணியாற்றுகிறார் விஷ்ணுவிஷால். விஷ்ணு, வாகன நெரிசல்களுக்கு மத்தியில் வீதியைக் கடப்பது, கூட்டமான பேருந்தில் பயணிப்பது என்றால் தயங்குபவர், பயப்படுபவர். இவருக்கு கேத்ரின் திரேசா மீது காதல் எழுகிறது. அவரோ, "பெற்றோருடன் வந்து பெண் கேள்" என்கிறார். பெண் கேட்க வீட்டுக்குச் சென்ற இடத்தில் கேத்ரினின் தந்தை "வீரனுக்குதான் பெண்ணைக் கொடுப்பேன். உன்னைப்போன்ற கோழைக்கு அல்ல" என்று கூறித் திருப்பி அனுப்புகிறார். கூனிக்குறுகும் விஷ்ணு விஷால், எப்படி வீரனாகிறார்? காதலியை எப்படிக் கரம் பிடிக்கிறார்? என்பதே கதாநாயகன்.

**ஏராளம் சொதப்பல்கள்...**

வேலை வெட்டியில்லாமல் காதலித்துத் திரியும் இளைஞர்களுக்கு மத்தியில் அரச வேலையிலிருந்து கொண்டு அரட்டையடித்துத் திரிகிறார் நாயகன். மது அருந்திய பிறகே அவருக்குப் பத்து ரவுடிகளை அடித்து வீழ்த்தத் தைரியம் வருகிறது. இது எவ்வளவு கேடான ஒரு விடயம்.

மேலும், கிண்டலடிக்கும் கதாபாத்திரங்களைத் தாழ்த்தப்பட்டவர்களாகவும் காட்டியிருக்கிறார்கள். படத்தில் ஏகப்பட்ட கதாபாத்திரங்களை நுழைத்திருக்கிறார் இயக்குநர் த.முருகானந்தம். இரண்டு ரவுடிக் கும்பல்கள், விஷ்ணு-சூரி நகைச்சுவை, விஜய் சேதுபதியின் கௌரவ வேடம் எனப் படத்தில் தனித் தனியாகப் பல பகுதிகள். அவற்றை இணைக்க இயக்குநர் பகீரதப் பிரயத்தனம் செய்தும், முழுமையாக அது சாத்தியப்பட்டிருக்கவில்லை. சில தமிழ்த் திரைப்படக் காட்சிகள், பாடல்களை நினைவுபடுத்திச் சிரிக்க வைத்துவிடலாம் என்றும் நினைத்தி ருக்கிறார் இயக்குநர். ஆனால், எந்தப் புதுமையும் இல்லாததால், வெறுமையான காட்சிகளாக நகர்கின்றது படம். ஒருகட்டத்தில், அயற்சி தரும் காட்சிகளுக்கு இடையிடையே தோன்றும் இந்த நகைச்சுவையே பரவாயில்லை என்ற முடிவுக்கும் வரக்கூடியதாகவிருக்கிறது.

**சிரிக்க வைப்பதற்குக் கடும் முயற்சி**

முதல் பாதியில் விஷ்ணு - கேத்ரின் காதல் காட்சிகள், பாடல்கள் பொறுமையைச் சோதிக்கின்றன. இரண்டாம் பாதியில் வந்துபோகும் ஆனந்த்ராஜ், அருள்தாஸ், சூரி, இரண்டு காட்சிகளில் மட்டுமே வந்துபோகும் விஜய் சேதுபதி ஆகியோர் அதைத் தொடர விடாமல் காப்பாற்றி விடுகின்றனர். ஓஷோவின் கருத்துக்களை விளக்கும் மருத்துவராக வரும் விஜய் சேதுபதி அதிக கைதட்டல் அள்ளுகிறார். இருட்டிலேயே அமர்ந்துகொண்டு சிகரெட் புகைத்தபடி சிவப்புநிற 'காண்டஸா வின்டேஜ்' காரில் வரும் 'சிங்கம்' தாதா, அவர் புகைத்து விட்டுப் போடும் சிகரெட்டைக் காலால் மிதித்து அணைக்கும் அவரது வலது கையாள் அருள்தாஸ், இறுதியில் 'மைக் மோகனாக' வந்து கர்ண கொடூர குரலால் தாக்குதல் நடத்தும் பாடகர் மொட்டை ராஜேந்திரன் ஆகியோரும் பரவாயில்லை சிரிக்க வைக்கிறார்கள்.

குறும்பும் நக்கலும் ஆட்சி செய்யும் வசனங்கள் ஓரளவு ஈர்க்கின்றன. ஷான் ரோல்டனின் இசையில் 'உன் நினைப்பு பேபி' பாடல் கவர்கிறது. ஒரு பயந்தாங்கொள்ளி இளைஞன், காதலியின் கரம்பிடிப்பதற்காகத் துணிச்சல்காரனாக மாறுவதை நகைச்சுவையுடன் சொல்ல முயற்சித்திருக்கிறது 'கதாநாயகன்'. அவ்வளவுதான்.



**கதைப்பார்வை**

சிறு வயது முதல் தீயணைப்பு வீரர் ஆகவேண்டும் என்ற கனவோடு இருக்கிறார் விக்ரம் பிரபு. அவரது 4 நண்பர்களும் அவரைப்போலவே எண்ணுகிறார்கள். சொந்தமாகத் தீயணைப்பு வண்டியை வைத்துக்கொண்டு, எங்கு தீப்பிடித்ததாகத் தகவல் கிடைத்தாலும் உடனே ஓடிச்சென்று அதை அணைக் கின்றார்கள். இதை வெகுவாகப் பாராட்டும் தீயணைப்பு அதிகாரி ஒருவர் இவர்களுக்குத் தீயணைப்புத் துறையில் வேலை வாங்கிக் கொடுக்க விரும்புகிறார். அதன்போது அந்த அதிகாரியின் மகளான நிக்கி கல்ராணிக்கு விக்ரம் பிரபு மீது காதல் மலர்கிறது. இந்த நிலை யில் விக்ரம் பிரபுவின் நண்பர் வருண், எதேச்சையாக ஒரு ரவுடியுடன் மோதுகிறார். அதில், ரவுடி சாவடைய, விக்ரம் பிரபு தரப்பு பல பிரச்சினைகளை எதிர்கொள்கிறது. அவர்களது கனவும் இடையே வந்த காதலும் என்னவாகியது என்பதே 'நெருப்புடா'.

**பாத்திர வார்ப்புக்கள்**

தனது உயரம் மற்றும் உடல் மொழியால் பாத்திர வார்ப்புக்குச் சரியாகப் பொருந்துகிறார் விக்ரம் பிரபு. நண்பர்களுக்காக வாழ்வது, ரவுடியுடன் நெஞ்சை நிமிர்த்தி மோது வது, பார்த்தவுடன் காதல் பற்றிக்கொள்வது என அனைத்திலும் முன் நிற்கி றார். மருத்துவ மாணவியாக வரும் நிக்கி கல்ராணிக்குக் காதலிப்பது மாத்திரமே வேலையாக இருக்கிறது. விக்ரம் பிரபுவின் அப்பா பொன்வண்ணன், கழிவுநீர் அகற்றும் தொழிலாளியாகச் சில காட்சிகளிலே வந்தாலும் மனதில் நிற்கிறார். அவர்கள் இடையிலான தந்தை – மகன் உறவு நெகிழ வைக்கிறது. இறுதிக்காட்சியில் திருநங்கையாக வந்து அசத்துகிறார் சங்கீதா. காதல், பாசம், சேவை மனப்பான்மை என்று விறுவிறுப்புடன் வேகமாகப் பயணிக்கிறது திரைக்கதை. தீயணைப்பு வீரர்களின் பணி எவ்வளவு ஆபத்தானது என்பதை முதல் காட்சியிலேயே அழகாகச் சொல்லிவிடுகிறார் அறிமுக இயக்குநர் அசோக்குமார். பற்றியெரியும் குடிசைகளில் இருந்து குழந்தைகள், முதியவர்களை விக்ரம் பிரபு காப்பாற்றும்போது பரபரப்பும், பதற்றமும் நம்மைத் தொற்றிக்கொள்கிறது. ஆனால் அது படத்தில் தொடரவில்லை.



# நெருப்புடா

**திரைக் கதையின் வேகத் தணிப்புக்கள்**

சங்கீதா தோற்றம், பாவனை, உடல்மொழி என்பவற்றினூடாக பாத்திரத்துக்கு நன்கு பொருந்தி நடித்திருக்கிறார். ஆனால், அத்தனை ரவுடிகளையும் ஒரே இடத்தில் கொலை செய்வது நம்பும்படி இல்லை. 'நான் கடவுள்' ராஜேந்திரன், இன்னும் எத்தனை காலத்துக்குதான் இப்படியான எடுபடாத நகைச்சுவைகளைச் செய்யப்போகிறாரோ தெரியவில்லை. 'ஆடுகளம்' நரேன் விறைப்பான பொலிசாக வருகிறார். ரவுடிகளைக் கண்டவுடனேயே சுட வேண்டும் என முடிவெடுக்கும் அவர், ஒரு அறைக்குள் அமர்ந்துகொண்டு வெறும் பேச்சளவிலேயே இதைப் பேசிக் கடத்தி விடுகிறார். இப்படியான சில படத்தின் வேகத்தைக் குறைக்கின்றன. திடீர் மோதலில் இறக்கும் ரவுடி, அவருக்காகத் துடிதுடிக்கும் மற்றொரு ரவுடி என்று படத்தில் திருப்பம் கொடுக்க முயற்சித்து உள்ளிழுக்கப்பட்ட புதிய கதாபாத்திரங்கள் அனைத் தும் சுவாரசியமின்றி வெறு மனே கடக்கின்றன.

**இசை, ஒளிப்பதிவு, காட்சியமைப்பு**

ஷான் ரோல்டனின் இசையில், 'ஆலங்கிளியே..' பாடல் தாளம் போட வைக்கிறது. தீச் சுவாலையை கொதிநிலை குறையாது படம்பிடித்துள்ளார் ஆர்.டி. ராஜசேகர். சிலேட்டர் புரப் பிரதேசத்தின் பின்னணியில் ஆங்கிலேயர் கால மணிக்கூட்டுக் கோபுரத்தை வடிவமைத்த கலை இயக்குநர் எம்.பிரபாகரனின் உழைப்பும், இரசனையும் அழகு. ஆனாலும் திரைக்கதைக்குள் வலிந்து திணிக்கப்பட்ட வேகத் தடைகளால் 'நெருப்புடா' காபலிக்குக் கிட்டவாகவே போய் நிற்கிறது.

> **காதல், பாசம், சேவை மனப்பான்மை என்று விறுவிறுப்புடன் வேகமாகப் பயணிக்கிறது திரைக்கதை. தீயணைப்பு வீரர்களின் பணி எவ்வளவு ஆபத்தானது என்பதை முதல் காட்சியிலேயே அழகாகச் சொல்லிவிடுகிறார் அறிமுக இயக்குநர் அசோக்குமார். பற்றியெரியும் குடிசைகளில் இருந்து குழந்தைகள், முதியவர்களை விக்ரம் பிரபு காப்பாற்றும்போது பரபரப்பும், பதற்றமும் நம்மைத் தொற்றிக் கொள்கிறது. ஆனால் அது தொடரவில்லை.**

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

அறிவியல்

க.அகலிகா

# 'குளோனிங் மனிதன்' சாத்தியமா...?



குளோனிங் என்றவுடன் உங்கள் நினைவுக்கு வருவது 'ஜுராசிக் பார்க்' தொடங்கி நிறையவே வந்துவிட்ட ஹொலிவூட் படங்கள், எஸ்.ஜெ. சூர்யாவின் வியாபாரி மற்றும் 'டாலி' என்றழைக்கப்படும் குளோனிங் முறையில் உருவாக்கப்பட்ட செம்மறி ஆடு போன்றவையாகத் தான் இருக்க முடியும். திரைப்படங்களில் மெருகூட்டப்பட்டுச் சித்திரிக்கப்பட்டிருந்த இந்தக் குளோனிங் பற்றிய ஆராய்ச்சிகள் உலக அரங்கில் பெரிய அளவில் இன்றும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கின்றன.

### கலவி கொள்ளாமல் இனம்பெருக்கம்

'டாலி' தவிர 'காப்பிகேட்' என்றழைக்கப்படும் பூனை. 'டியூவி' என்றழைக்கப்படும் மான். 'ஸ்நூபி' என்றழைக்கப்படும் நாய் உள்ளிட்ட பல்வேறு மிருகங்களை இதுவரை குளோனிங் முறையில் உருவாக்கியிருக்கிறார்கள் விஞ்ஞானிகள். கலவி இல்லாத இனப்பெருக்கம் குறித்து விலங்கியல் பாடத்தில் நிறைய விளக்கங்கள் இருக்கின்றன. கலவி கொள்ளாமல் இனம்பெருக்கம் செய்து கொள்வதே இந்தக் குளோனிங் முறையின் அடிப்படை. இது வரைக்கும் குளோனிங் மிருகங்களிலேயே ஆராய்ச்சியாகி இருக்கிறது. இனி வருங்காலங்களில் அது மனிதர்களிலும் சாத்தியமாகலாம் என்று எண்ணுமளவுக்கு வளர்ந்தும் வருகிறது.

### 'குளோனிங்'கின் வகைகள்


குளோனிங் பொதுவாக மூன்று வகையில் செய்யப்படுகிறது. ஒன்று. 'ஜீன்' குளோனிங். இரண்டாவது இனப்பெருக்கக் குளோனிங். மூன்றாவது சிகிச்சைமுறைக் குளோனிங் இதில் 'ஜீன்' குளோனிங் என்பது வெறும் ஜீன்களையும். டி.என்.ஏ கூறுகளையும் கொண்டு புதிய உயிரியை உருவாக்குவது. இனப்பெருக்கக் குளோனிங் என்பது ஒரு முழு மிருகத்தை அப்படியே உருவாக்குவது. சிகிச்சைமுறை குளோனிங் என்பது அங்கீகரிக்கப்பட்ட மருத்துவ சிகிச்சைமுறைமூலம் புதிய உயிரியை உருவாக்கிக் கொள்வது. இத்தகைய விஞ்ஞான நுட்பங்களைக் கொண்ட குளோனிங் என்பது ஏதோ ஏறமுடியாத மலையளவு விஞ்ஞானக் கோட்பாடுகளைக் கொண்டது என்றெல்லாம் மலைக்கத் தேவையில்லை. அடிப்படை அறிவியலில் அதன் எளிமையான விளக்கம் இதுதான்! இனப்பெருக்கத்துக்காகக் குளோனிங் செய்யப்படவேண்டிய மிருகத்திலிருந்து இரண்டு 'செல்'கள் எடுப்பார்கள். அதில் ஒன்று முதிர்ந்த 'சீமாடிக் டி.என்.ஏ' மற்றொன்று 'டி.என்.ஏ' கூறுகள் நீக்கப்பட்ட முட்டை செல். இதில் சீமாடிக் உயிரணுவில் இருக்கும் டி.என்.ஏ கூறுகளை முட்டை செல்லுக்குள் செலுத்தி மரபணுவில் ஒத்த தாய் உயிரிக்குள் உட்புகுத்திவிடுவார்கள். அது உருவாக்கும் குட்டி. இரண்டு செல்களைத் தரனமளித்த மிருகத்தைப் போன்றிருக்கும்.

### குளோனிங் ஆராய்ச்சியின் வளர்ச்சி

இந்தக் குளோனிங் ஆராய்ச்சியின் உச்சமாக மனிதர்களைக் குளோனிங் செய்வது சாத்தியமா? என்று வினாவினால் அது வெகு விரைவில் சாத்தியப்படும் போல் தான் தெரிகிறது. குளோனிங் பற்றிய ஆராய்ச்சிகள் ஆரம்பமான காலத்தில் மனிதரில் அதை நிகழ்த்துவதற்கான சாத்தியம் வெகு தொலைவில் இருந்தாலும் இப்போது அந்த மைல் கல்லை எட்டிவிடும் தூரத்தில்தான் அது பற்றிய ஆராய்ச்சிகள் இருப்பதாகக் கூறுகிறார்கள் அறிவியலாளர்கள். தற்போது சிகிச்சைமுறை குளோனிங் மூலம் மரபணு நோய்கள், வயதாகியதும் வரும் உடல் பிரச்சினைகள் போன்றவற்றைச் சரி செய்கிறார்கள். இந்த ஆண்டின் ஆரம்பத்தில் ஜப்பானில் ஒரு பெண்மணிக்கு வயதானவர்களுக்கு ஏற்படும் கண்தசைச் சீர்கேடு எனும் ஒருவகைப் பார்வைக் குறைபாடு வந்திருக்கிறது. அவரின் தோல் 'செல்'களைப் பயன்படுத்தி சிகிச்சைமுறைக் குளோனிங் முறையில் பாதிக்கப்பட்ட அந்த விழித்திரையைச் சரி செய்திருக்கிறார்கள்.

### 2020க்குள் மனிதர்கள்...!

'குளோனிங் தொழில்சாலை' என்றழைக்கப்படும் சீனாவின் 'போயாலைவ்' நிறுவனம் தற்போது வீடுசார்ந்த விலங்குகள் மட்டுமல்லாது பந்தயக் குதிரைகள், மோப்ப நாய்கள் எனச் சிறப்பாற்றலுடைய, பலதரப்பட்ட, விலங்குகளையும் குளோனிங் முறையில் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபடத்தொடங்கியிருக்கின்றது. இதே முக்கியத்துவம் உலகம் முழுவதும் குளோனிங் தொடர்பான ஆராய்ச்சிகளுக்கு இருக்கும் பட்சத்தில் எதிர்காலத்தில் குளோனிங் முறை மூலம் மனிதனும் உருவாக்கப்பட்டு விடுவான். அதனால் தானோ என்னவோ 2020ஆம் ஆண்டுக்குள் 'குளோனிங் மனிதன்' நிச்சயம் சாத்தியம் என உறுதிபடச் சொல்கிறார்கள் அறிவியலாளர்கள்.



அறிவியல்

தவபாலன் திருநிலவன்





# குப்பை அள்ள வருகிறது 'ப்றேன் கிறாவ்'

> பூமியின் ஈர்ப்பில் கிட்டத்தட்ட 5இலட்சம் வரையான குப்பைத் துண்டங்கள் சுற்றிக்கொண் டிருக்கின்றன. இதில் அதிக மானவை அபாயகரமான குப்பைகள்.



விண்வெளிக் குப்பையைப் பொறுக்கும் சிந்தனையானது விஞ்ஞானிகளிடையே பசி வெறிகொண்ட ஒரு புலி தன் இரையைப் பாய்ந்து பிடிப்பதைப்போல் எழுந்திருக்கிறது. இது தொடர்பாக 'ஏரோஸ் பேஸ் கோப்பிரேசன்' நிறுவனம் தெரிவிக்கையில் 'ப்றேன் கிறாவ்' எனப்படும் குப்பைபொறுக்கும் புதிய ஓடம் பூமியைச் சுற்றிக் கிடக்கின்ற அத்தனை விண்வெளிக் குப்பைகளையும் இழுத்துக்கொண்டு செல்லும் ஆற்றலுடையது. அதனால் இனி எந்தச் செய்மதியும் விண்வெளிவீரரும் விண்வெளியில் உலாவும் குப்பை தாக்கிக் காயப்படும் நிலை ஏற்படாது என்றுள்ளது.

### 'ப்றேன் கிறாவ்' ஓடத்துக்கான திட்டம்

இது நாசாவால் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் திட்டமாகும். இப்போது இரண்டாம் கட்டமாக நிதியிடப்பட்டு இதன் இறுதி வேலைகளில் நாசா ஈடுபட்டிருக்கிறது. 'ப்றேன் கிறாவ்' எனப்படும் விண்வெளிக் குப்பைகளை அள்ளும் இந்த ஓடத்தின் தடிப்பு மனிதத் தலைமுடியின் தடிப்பை விடக் குறைந்ததாகும். இலகுவில் வளையக் கூடிய விதத்திலேயும் அது இருக்கிறது. இது மெல்லியதாக இருப்பதால் சிக்கல் இருக்கிறது. இவ்வளவு மெலிதான இந்த ஓடத்தை இலத்திரனில் காந்த அலைக்கற்றைகளில் இருந்து காப்பாற்றுவதில் சிக்கல்கள் இருக்கின்றன. ஆகவேதான் இது மிகமெல்லியதாக இருந்தாலும் மிகவும் கடினமானதாகவே (குண்டு துளைக்காத கண்ணாடி, உலோக வார்ப்புப் போன்று) வடிமைக்கப்பட இருக்கிறது. தற்செயலாக இந்த ஓடத்தின் 'சோளர் செல்லில்' ஒன்று சேதமடைந்தாலும் மற்றையவை இயங்கிக்கொண்டே இருக்கும்படி வடிவமைப்பதிலும் முயற்சி செய்து கொண்டிருக்கின்றனர். இது மேலெழும்புவதற்கான எரிபொருளை இதற்குள்ளேயே அடக்கவேண்டிய பெரும் சவாலும் இதன்போது இருக்கிறது. இந்தக் குப்பை பொறுக்கும் ஓடத்தை அலைக்கற்றைகளில் இருந்து பாதுகாப்பது பற்றிய பல யுத்திகளில் ஈடுபட்டிருக்கும் நாசா, மிகக்குறைந்த நிறை, குறைந்தளவு எரிபொருள் பாவனை உள்ளிட்ட பலவசதிகள் பொருந்தியதாகவும் இதை தயாரிக்க முயல்கிறது.

### பலகோடிகளை நாசம் செய்யக் கூடிய சிறு துகள்கள்

விண்வெளிக் குப்பைகள் எதிர்கால விண்வெளி ஆராய்ச்சிகளில் பெரிய பிரச்சினையாக மாறும், அதற்கான தீர்வைகண்டு பிடிப்பது முக்கியமானது என்றிருந்தது நாசா. உண்மைதான், ஆயிரக்கணக்கான தொன்கள் நிறையுடைய குப்பை கூழங்களாலும் செயலிழந்த செய்மதிகளாலும் சூழ்ந்திருக்கின்றது விண்வெளி. அங்குள்ள ஒரு சாதாரண கைக்குண்டளவு குப்பைகூட பல கோடி மதிப்புள்ள ஒரு செய்மதியைப் பழுதடையச் செய்துவிடக் கூடியது. இதன் விளைவாகவே 'ப்றேன் கிறாவ்' திட்டம் உருவாகி இருக்கிறது. இந்த ஓடத்துக்குச் சக்தியை வழங்கப்போவது மிக மெல்லிய சூரியப்படலமாகும். விண்ணில் ஏவப்படும் இது வித்தியாசமான கரடுமுரடான குப்பைகளைத் தனக்குள் சேகரித்துக்கொள்ளும். அத்துடன் விண்கற்கள் போன்றவற்றைத் தனக்குள் ஈர்ப்பதை முடிந்தளவு தவிர்க்கும். அத்துடன் இதில் ஒரு பகுதி சேதமடைந்தால்கூட சேதமடைந்த பகுதி தவிர்ந்த அனைத்துப் பகுதிகளும் இயங்கிக் கொண்டிருக்கும். சேகரித்த குப்பைகளை இது பூமிக்கு அனுப்பும். பூமிக்கு அனுப்பும் குப்பைகள் வரும் வேகத்தில் வழியில் எரிந்து சாம்பராகி விடுகின்றன. பூமியின் ஈர்ப்பில் கிட்டத்தட்ட 5இலட்சம் வரையான குப்பைத் துண்டங்கள் சுற்றிக்கொண்டிருக்கின்றன. இதில் அதிகமானவை அபாயகரமான குப்பைகள். 17ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் சுற்றிக் கொண்டிருக்கும் இவை ஒரு விண்வெளி ஓடத்துடன் மோதினால் நிலைமை எப்படியிருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள்.

### நாசா மட்டுமன்றி நாமும் முயல்வோம்

இந்தக் குப்பை அள்ளும் விண்வெளி ஓடம் பூமியின் சுற்றுப்பாதையில் இருக்கின்ற குப்பைகளை அகற்றிவிடும் சந்தர்ப்பத்தில் பல நன்மைகள் ஏற்படும். குப்பைகளால் ஏற்படும் விபத்துக்கள், இழப்புக்கள் தவிர்க்கப்படுவது மாத்திரமன்றி விண்வெளியில் இருக்கின்ற செய்மதிகள் பூமியுடன் தொடர்புகளை ஏற்படுத்தும்போது இடையிலிருக்கும் குப்பைகள் ஏற்படுத்திவருவதாகக் கருதப்படும் தடங்கல்கள் கூடக் குறைவடையும். இந்தக் குப்பை அள்ளும் திட்டத்தை ஆரம்பித்திருக்கும் நாசா, இந்த மாதிரியான குப்பை அள்ளும் விண்வெளி ஓடங்கள் ஏவப்பட்ட ஒரு சில வருடங்களில் விண்வெளி ஓரளவுக்கேனும் சுத்தமாகிவிடும் என்கின்றது. உலகம் விண்வெளியைச் சுத்தமாக்குவதற்குச் சிந்தித்துவிட்டது. நாம் எப்போது எங்கள் வீடு வளவுகளையும், வீதிகளையும் சுத்தமாக வைத்திருப்பது பற்றிச் சிந்திக்கப்போகிறோம்...?

# சின்னதா ஒரு அரட்டை...



அலசல்

மேரிகிரேஸ் வரதராஜன்

## கனடாவில் ஈழத்துச் சன்னி லியோன்

கடந்த மாதம் லண்டனில் நடிகை சன்னி லியோனை அழைத்து அவருடன் 'டின்னர்' சாப்பிட 100 பவுண்ட் டிக்கட் போட்டிருந்தார்கள் நம்மவர்கள்.
இப்போது கனடாவில் எமது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் தன்னுடன் 'டின்னர்' சாப்பிட 100 டாலர் டிக்கட் போட்டுள்ளார். சொந்த ஊரில் தான் கட்டிவரும் வசந்தமாளிகையை முடிப்பதற்காக இந்தப் பணச் சேகரிப்பை அவர் நடத்துகிறாரோ தெரியவில்லை. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நாடாளுமன்ற உறுப்பினர், ஒரு கட்சியின் தலைவர், நடிகைபோல் தன்னைச் சந்திக்க டிக்கட் போடுவது கேவலமில்லையா...?

## மிரட்டுகிறார் மோடி

நேற்று - பன்சாரே, கல்புர்கி, தபோல்கர்
இன்று - கவுரி லங்கேஷ்
நாளை - யாரோ...?
குஜராத் படுகொலை பற்றிய ஆவணப் படத்தைக் கன்னடத்தில் மொழிபெயர்த்த கவுரி லங்கேஷ் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். மோடி, இந்துத்துவாவின் கோரப் பற்களுக்கு அடுத்துப் பலியாவது இதனை மௌனமாகப் படித்துக் கொண்டிருக்கும் நீங்களாகவும் இருக்கலாம்! ஊடக சுதந்திரத்துக்கு, கருத்து சுதந்திரத்துக்கு மோடியின் இந்து பாசிசம் விடுத்துள்ள மிரட்டல் இது.



## 'நீட்' க்கு எதிராக...




அரசு ஒரு வாசலை அடைத்தால், போராடும் மாணவர்கள் ஒன்பது வாசலைத் திறக்கிறார்கள்! மாணவர்கள் மெரினா கடற்கரையில் ஒன்று சேரக்கூடாது என்று தமிழகப் பொலிஸார் மெரினா கடற்கரைக்குப் பூட்டு போட்டுள்ளனர்.
உலகிலே கடற்கரைக்கு பூட்டு போட்ட பெருமை தமிழக அரசுக்கே சேரும். அரசு மெரினா கடற்கரைக்குப் பூட்டுப் போட்டு விட்டதால் மாணவர்கள் பெசன் நகர் கடற்கரையைத் திறந்திருக்கிறாகள்.

## கேரள டயரீஸ்

வேர் தேடிப் புறப்பட்ட 'கேரள டயரீஸ்' இன் பயணம் திசை தடுமாறி, முகநூலில் பல சர்ச்சையான விடயங்களைத் தோற்றுவித்தது. கேரள டயரீஸ் பொது வெளியில் அதிகளவு வாசிப்புக்கு வரும்போதுதான் உண்மை தெரியவரும்.




## 200ஆவது நாள்!

"200ஆவதுநாள்" என்று பெருமையாகப் போடுவதற்கு இது தல அஜித் நடித்த படம் இல்லை. தளபதி விஜய் நடித்த படமும் இல்லை. இது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் கிளிநொச்சியில் நடத்தும் கவனவீர்ப்புப் போராட்டம். இவர்களிடம் வாக்குபெற்று பதவியைப் பெற்றவர்களோ 5கோடிரூபா பெறுமதியுடைய சொகுசு வாகனத்தில் பவனி வந்துகொண்டிருக்கின்றனர். இவர்களின் வாக்கில் தலைவரான 'எளிமையான தலைவர்' மைத்திரியாரோ 60 கோடிரூபா பெறுமதியான சொகுசுக் காரில் பவனிவருகிறார்.
ஆனால் வாக்களித்த இந்த மக்களோ 200ஆவது நாளாக வீதியோரமிருந்து போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். 200ஆவது நாளாகப் போராடும் இவர்களுள் பலரும் துன்பப் படுகிறார்கள், நோய்வாய்ப்படுகிறார்கள். ஆனால் நாட்டின் சுகாதார அமைச்சருக்கு ஒருகோடி ரூபா செலவில் சிங்கப்பூரில் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. இந்த மக்கள் ஈழத்தில் தமிழ் இனத்தில் பிறந்ததைத் தவிர வேறு என்ன தவறு செய்துள்ளார்கள்? இவர்களுக்கு மட்டும் ஏன் இந்தத் தண்டனை?

## தமிழீழத் தலைமை அமைச்சர்

நாடு கடந்த தமிழீழத் தலைமை அமைச்சருக்கு இந்திய எதிர்ப்பு உணர்வு வந்திருக்குது! 80 வயதில் பெண் 'வயதுக்கு வந்தால்' கொண்டாடுவதற்கில்லை. "வயசுக்கு வந்தால் என்ன? வரவிட்டால் என்ன?" என்று சலிப்பாகவே சொல்வார்கள். அதுபோல் எங்கட நாடு கடந்த தமிழீழப் பிரதமரும் இத்தனை நாளும் இந்திய அக்கிரமங்கள் குறித்து மௌனமாக இருந்துவிட்டு இப்போது மாணவி அனித்தாவுக்காகக் குரல் கொடுத்துள்ளார்.
தமிழ் நாட்டில் ஒரு மாணவியின் மருத்துவக் கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்டமைக்காகத் தலைமை அமைச்சர் உருத்திரகுமார் குரல் கொடுத்தமை பாராட்டப்பட வேண்டியதே. ஆனால், இதே தமிழ்நாட்டில் கடந்த வருடம் மாணவி நந்தினியின் மருத்துவக் கல்வி மறுக்கப்பட்டதே, அப்போது உருத்திரகுமார் ஏன் குரல் கொடுக்கவில்லை? இத்தனைக்கும் அந்த மாணவி ஒரு ஈழ அகதி. அகதி என்பதற்காகவே அவரது உயர் கல்வி வாய்ப்பு தமிழக அரசால் மறுக்கப்பட்டிருக்கிறது. அகதி மாணவி நந்தினி உயர்நீதிமன்றில் வழக்கு தொடர்ந்து நியாயம் கேட்டார். அப்போது பல தலைவர்கள் நந்தினிக்காகக் குரல் கொடுத்தார்கள். ஆனாலோ நாடுகடந்த தமிழீழத்தின் தலைமை அமைச்சர் உருத்திரகுமாரே அந்த அகதி மாணவிக்காக குரல் கொடுக்கவில்லை? மாணவிக்கு ஆதரவாகக் குரல் கொடுக்காவிட்டாலும் பரவாயில்லை. ஆனால் இவரோ மாணவியின் கல்வி வாய்ப்பை மறுத்த 'ஜெயா' அம்மையாருக்கு ஆதரவாக அல்லவா குரல் கொடுத்தார். மக்கள் பணத்தை ஊழல் செய்த குற்றத்துக்காக அம்மையாருக்கு நீதிமன்றம் 4வருட தண்டனை வழங்கிச் சிறையில் அடைத்தபோது அவரை விடுதலை செய்யுமாறு இவர் அறிக்கை விட்டார். அதே ஜெயா அம்மையார் பல அப்பாவி ஈழ அகதிகளை முகாமில் அடைத்து வைக்க வழி சமைத்தவர். அந்த அகதிகளை விடுதலை செய்யும்படி இந்த உருத்திரகுமார் கேட்கவில்லை. கடந்த வருடம் மதுரை அகதிமுகாமில் அதிகாரியின் கொடுமை தாங்க முடியாமல் 7பிள்ளைகளின் தந்தையான தமிழ் அகதி ஒருவர் மின்சாரக்கம்பியைப் பிடித்துத் தற்கொலை செய்தார்.
அப்போதெல்லாம் இந்திய அரசுக்கு எந்தவித கண்டனமும் தெரிவிக்காமல் மௌனமாக இருந்த இவர் இப்போது அனித்தா சாவுக்குக் கண்டனம் தெரிவிப்பது ஆச்சரியமாகத் தான் இருக்கிறது. இருந்தாலும் பரவாயில்லை. தாமதமானாலும் இந்திய அரசுக்கு எதிராக இவர் குரல் கொடுக்க ஆரம்பித்துள்ளமை பாராட்டுக்குரியதே. வரவேற்கிறோம்.



## சிரித்துக்கொண்டே களம் கண்ட வளர்மதி!

தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்த மாணவி வளர்மதியைக் கைது செய்தார்கள். குண்டர் சட்டத்தில் சிறையில் அடைத்தார்கள். சிறையில் நிர்வாணச் சோதனை என்று பல சித்திரவதைகளைச் செய்தார்கள். 'நக்சலைட்' தீவிரவாதி என்று பொய் பரப்பினார்கள். அவர் குடும்பத்தையே பொலிஸ் மூலம் மிரட்டினார்கள். இத்தனை செய்தும் அவர் அசரவில்லை.
மனம் தளரவில்லை, உறுதி குன்றவில்லை. அவரின் போராட்ட உணர்வு மங்கிவிடவில்லை. 60 நாள்கள் சிறைவாசத்தின் பின் அவரை விடுதலை செய்துள்ளது தமிழக அரசு.
விடுதலையானதும் அவர் வீடு செல்லவில்லை. நேராக 'நீட்' போராட்டக் களத்துக்கு வந்துள்ளார். அவர் சிறையில் இருக்கும்போது சிரித்துக் கொண்டிருந்தார். அவர் களத்தில் இருக்கும்போதும் சிரித்துக் கொண்டிருக்கிறார். அவர் சிரிப்பைப் பார்க்கும்போது 'போராட்டம் இன்பமயமானது' என்ற கூற்று உண்மைதான் என்பதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

கவிதைகள்



## எனக்கும் மூன்று நிழல்கள்

எஸ்.தர்சி

"எல்லா நம்பிக்கைகளும்
தொலைந்து விடுமோ"
என்ற பயம்
நெருங்கி வரலாயிற்று

தனிமைக்குள் ஆழ்கையில்
அர்த்தங்கள் வெளிச்சங்களாயின
நான், அவன், அவனுக்குண்டான
வேறு வேறு முகங்கள்
நகங்கள் முளைத்த
வார்த்தைகள்
அவற்றுள் சில

அழுவதற்குத் திராணியற்று
விக்கித்து நிற்கும் என் மனது
கனவுகளைப் போல
என்னுள்ளே குதறப்பட்ட
நம்பிக்கைகள்
அந்த இரவில் என்
அறைக்குள் திரும்புகையில்
பார்த்தேன்
எனக்கும்
மூன்று நிழல்கள்

## விட்டுக் கொடுப்போம்

தொட்டுவிடக் கூடாதென்று நீயும்....
பட்டுவிடக் கூடாதென்று
நானும்
பாதுகாத்த நம் வாழ்கை...
இப்போது
ஊரின் பகட்டுக்காகவும்
உறவுகளின் கௌரவத்துக்காகவும்
விட்டுக் கொடுப்போம்.
காதலை அல்ல
நம் வாழ்வை...!

## பிரிவே நீயானதால்...

உன்னைப்
பிரிந்து சென்ற
அந்தத் தருணம்
துடிப்பதை மறந்தது
என் இதயம்!
பார்க்கும் இடமெங்கும்
போகும் இடமெங்கும்
நிழல்களாய்
உன் தரிசனம்

கதறியழ
உள்ளம்
நினைத்தும்
வீடு செல்லும்வரை
துடிக்கும் இதயத்தை
இறுக்கிப் பிடித்தபடி
நகர்கிறது
அனல் நிமிடங்கள்

நம் உறவின் மிச்சம்
உனக்காய்
நான் சிந்தும்
கண்ணீரும்
உறவோடு நான்
எழுதிய கவிதையும்
தான்.



பாரம்பரியம்

சி. சந்திரகலா

# எங்கள் வாழ்வோடு இணைந்த பழங்கள்



மா, பலா, வாழை ஆகிய மூன்றும் 'முக்கனி' என்று இந்து மதத்தவர்களால் சிறப்பாக அழைக்கப்படுகின்றன. தற்போது இந்தப் பழங்களை 'நச்சுக்கனிகள்' என்று ஒதுக்கி விட்டு தெருவோரம் பரப்பிவிட்டுள்ள அப்பிள், திராட்சை மற்றும் பெயர் அறியாத இன்னோரன்ன வெளிநாட்டுப் பழங்களை உண்பதை ஆரோக்கியமாகவும், ஒரு சமூக அந்தஸ்தாகவும் கருதுகின்ற நிலை ஏற்பட்டுவிட்டது. இதற்கு நம்மவர்களின் கையில் கிடைக்கும் மேலதிக பணமும் ஒரு காரணம் எனலாம்.

**ஆபிரிக்க நாட்டவரின் முன்னுதாரணம்**

ஆபிரிக்க நாட்டவரான ஹென்றி என்பவர் உலக வங்கியின் ஓர் உயர் அதிகாரியாகப் பணியாற்றியவர். அவர் உலக வங்கி நிகழ்வு ஒன்றுக்காக யாழ்ப்பாணம்- வலிகாமத்துக்குப் பயணம் செய்திருந்தபோது 100 இற்கும் மேற்பட்ட உள்நாட்டு, வெளிநாட்டு உணவு வகைகள் அங்கு வருகை தரவிருக்கும் பல்வேறு நாட்டுப்பிரதிநிதிகளுக்கு ஏற்றவாறு படைக்கப்பட்டிருந்தது. இறால், நண்டு எனக் கடல்வாழ் உயிரினங்கள் எல்லாம் அங்கிருந்தபோதிலும் ஹென்றி ஒரு சாப்பாட்டுத் தட்டை எடுத்து அவித்த மரவள்ளிக்கிழங்கு, சீனிவற்றாளை, சோளம், அவித்தகச்சான், அவித்த வாழைப்பழம் (ஒரு நாட்டு உணவு வகையில் கப்பல் வாழைப்பழத்தைத் துண்டாக வெட்டித் தோலுடன் அவித்துச் சாப்பிடும் வழக்கம் உண்டு) என்பவற்றையே தெரிவு செய்து உண்டார். அவர் எந்த நாட்டுக்குச் சென்றாலும் தனது உணவு முறையில் மாற்றம் செய்வதில்லை என்று கூறினார். 60வயதுக்கும் மேற்பட்ட அவர் ஓர் இரும்பு மனிதனைப்போல உறுதியாக இருந்தார்.

**பருவ காலங்களுக்கு ஏற்ப பழங்கள்**

ஒரு மனிதன் தான் வாழும் சூழலில் அந்த சீதோஷ்ண நிலைக்கு ஏற்ப வளரும் பழங்கள், தானியங்கள், கிழங்குகள் என்பவற்றை உண்பதே சிறந்தது. அவற்றிலே அதிக கனிப்பொருள்களும் இருக்கும். அதிலும் மிகச் சிறிய பழங்களில் கனிப்பொருள்களின் செறிவு அதிகமாக இருக்கும். (மாம்பழத்தை விட இலந்தை, நாவற்பழங்களில் அதிக சத்துண்டு)

இந்த அடிப்படையில் பார்த்தால், இலங்கையில் ஒவ்வொரு பருவகாலத்துக்கும் ஒவ்வொரு வகையான பழங்கள் கிடைக்கின்றன. (உதாரணமாக: சரஸ்வதி பூசைக்காலத்தில்நாவற்பழம்கிடைப்பது) இந்தச் சத்துமிக்க பழங்கள் இயற்கையாக எங்கும் கிடைப்பவை. அது அந்தந்தப் பருவகாலம் தந்த மகத்தான சத்துணவு என்பது பலருக்குத் தெரிந்திருப்பதில்லை. மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம், ஜம்பு, லாவுள், சீத்தாப்பழம், அன்னமுன்னாப்பழம், விளாம்பழம், இலந்தைப்பழம், பனம்பழம், வில்வம்பழம், மாதுளம்பழம், அன்னாசிப்பழம், நாவற்பழம், பாலைப்பழம், வீரைப்பழம், உலுவிந்தம்பழம், நறுவிலிப்பழம், தோடம்பழம், தேசிப்பழம், கொய்யாப்பழம், இத்திப்பழம், கொவ்வைப்பழம், மிலிஞ்சிப்பழம், காரைப்பழம், சூரைப்பழம்..... என நூற்றுக்கணக்கான பழங்கள் உண்டு.

**இயற்கையில் ஏது ஒவ்வாமை...?**

தற்போது இவற்றை உண்ணும்பழக்கம் அறவே இல்லாது போய்விட்டது. இது எமக்காக இயற்கை தந்த செல்வத்தைக் காலால் உதைத்துவிட்டதற்குச் சமனாகும். குடும்பத்தில் ஒருவர் "உந்தப்பழம் கூடாது", "சாப்பிட்டால் அது வரும் இது வரும்" என்று கூறினால் அந்தக் குடும்பமே பல பழங்களைச் சுவைத்துப் பார்க்காது கைவிட்டிருக்கும். மூத்தோர்கள் காட்டிய வழி பிழையென்றால், அடுத்த சந்ததி அதில் ஆர்வப்படாதது மட்டுமல்லாது, அதனை ஒரு நச்சுப்பொருள் என உள்ளூர் பழங்களை ஒதுக்கிவிட்டு வெளிநாடுகளிலிருந்து கொண்டுவரப்படும் இரசாயனப் பொருள் சேர்த்த பழங்களை ஆவலுடன் உண்ணும் வழமை நீடித்துவிடும்.

உணவுப் பழக்கவழங்கங்கள் தொடர்பில் மக்களுக்குப் பல விடயங்கள் தெரிந்திருப்பதில்லை. ஓர் உணவுப்பொருள் எமக்குச் சாதகமாக அமைவதற்கு அந்த மனிதனுக்கு அவனது முன் சந்ததியினர் உண்ட உணவுகளே அதிகம் பொருந்தும். ஏனையவை ஒவ்வாமையைக் கொண்டுவரும் அல்லது புதிய நோய்களைத் தோற்றுவிக்கும். ஒரு மனிதனின் மரபணுவில் இல்லாத உணவுப்பழக்கம் பல்வேறு நோய்களைக் கொண்டுவந்து விடுகிறது.



**பாரம்பரிய உணவுப்பழக்கத்தை நிறுத்தியதால் பல நோய்கள்**

ஆஸ்திரேலியாவின் ஆதிவாசிகளான அபொறிஜின்ஸ் மக்கள் காட்டில் வாழ்ந்தவர்கள். இறைச்சி, கிழங்குகள் எனப் பல்வேறுபட்ட இயற்கை உணவுகளை ஒவ்வொரு பருவத்துக்கும் ஏற்ப உண்ட மக்கள் தற்போது அந்தக் காட்டுவாழ்க்கையிலிருந்து மாற்றப்பட்டிருக்கிறார்கள். பாண், ரொட்டி போன்ற புதிய உணவுகள் மற்றும் செயற்கை உணவுகளை உண்ண ஆரம்பித்திருக்கிறார்கள். பின்னாள்களில் அவர்கள் மிக மோசமான நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதன் காரணமாக அந்த ஆதிவாசிகள் மிக வேகமாக அழிந்து வருகின்றனர்.

எமது சூழலில் நோய்களை விரட்டி ஆரோக்கியமாக வாழும் வழி வகைகள் ஏராளம் இருக்கின்றபோதிலும் எமது சூழலுக்கு ஒவ்வாத பல கனிகளை இறக்குமதி செய்வது என்பது புதிய நோய்கள் பலவற்றை எமது உடலில் புகுத்திவிடுவதற்கு வாய்ப்பளிக்கிறது.

இதைத்தான் எம் முன்னோர் "வானத்தால போற சனியனை ஏணி வைத்து கீழே இறக்குவது" என்றார்களோ தெரியவில்லை? இயற்கை எமக்களித்த எல்லாமே மிகவும் உயர்வானவை என்று நினைப்பதும் ஒருவகைச் சுற்றுச்சூழல் நேசிப்பேயாகும்.



ஹொலிவூட் சினிமா

கோமளவண்ணன்




# IT இற்

பிரபல அமெரிக்க எழுத்தாளர் 'ஸ் ரீபன் கிங்' எழுதிய 'இற்'(ஐரி) என்ற திகிலூட்டும் நாவலின் அடிப்படையில் எடுக்கப்பட்டிருக்கிறது இந்தத் திரைப்படம். 1986இல் வெளிவந்த இந்த நாவல் ஏற்படுத்திய எதிர்பார்ப்புக்கள், வரவேற்புக்களால் 1990லேயே அதைத் தொலைக்காட்சித் தொடராகவும் எடுத்திருந்தனர். அதுவே இப்போது ஒரு முழுத் திரைப்படமாவும் வெளிவந்திருக்கிறது.

## கதைப்பார்வை

அமெரிக்காவின் மெய்ன் நகரில் உள்ள ஒரு சிறுநகரம் டெர்ரி. ஒரு மழை நாளில் தன் தம்பி 'ஜார்ஜி'க்கு மழையில் விடுவதற்கென கடதாசியில் ஒரு தோனி செய்து கொடுக்கிறான் பில். ஜார்ஜி அதை வழிந்தோடிக்கொண்டிருக்கும் மழை நீரில் விட்டு விளையாடிக்கொண்டிருக்கிறான். திடீரென நீரோடும் திசையில் வேகமெடுக்கும் கப்பல் ஒரு வடிகாலுக்குள் புகுந்து விழுந்துவிடுகிறது. வடிகால் துவாரத்தைப் புகுந்து பார்க்கும்போது ஜார்ஜியை, கோமாளி வடிவிலிருக்கும் 'அது' கடித்துவிடுகிறது. பிறகு கொன்றும் விடுகிறது. தம்பியின் இழப்பிலிருந்து மீள முடியாமல் தவிக்கிறான் பில். அவனைப் போலவே வெவ்வேறு பிரச்சினைகளில் சிக்கித்தவிக்கும் ஏழு சிறுவர்கள் ஒன்று சேர்கிறார்கள். அவர்களில், தந்தையால் வன்புணர்வுக்குட்பட்ட சிறுமியும் ஒருத்தி.

இவர்கள் ஏழு பேரும் சேர்ந்து, பள்ளிக்கூடத்தில் தங்களைத் துன்புறுத்தும் ஹென்றியின் குழுவை எதிர்கொள்வதோடு, டெர்ரி நகரை ஆட்டிப்படைக்கும் 'அதை' எதிர்கொள்ளவும் முடிவுசெய்கிறார்கள். 'அதை' எதிர்கொள்வதால் அவர்கள் சந்திக்கும் பிரச்சினைகளே மிகுதி இற்.

## முடிந்தளவுக்கு சுவாரஸ்யம்

'ஸ்ரீபன் கிங்'கின் நாவல்கள் அச்சத்தை சம்பவங்களின் மூலமாகவோ, காட்சிகளின் மூலமாகவோ ஏற்படுத்தாமல், நம் ஆழ்மன உணர்வுகளை வாசித்துக்கொண்டிருக்கும் சொற்போக்கிலேயே பீதிக்குள் ஆழ்த்திவிடக்கூடியன. அதைச் சினிமாவில் செய்வது மிகக் கடினமான காரியம். ஸ் ரீபன் கிங்கின் 'இற்' நாவலில், அந்த 'அது' எப்படி டெர்ரி நகருக்கு வந்தது. அதன் பின்னணி என்ன, அதை எதிர்கொள்வது எப்படி, அந்தச் சிறுவர்களுக்குள் உருவாகும் உறவு எத்தகையது என்பதெல்லாம் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கும்.

ஆனால், இந்தப் படத்தில் மேலே சொன்ன விடயங்கள் ஏதும் இல்லை என்பதால், நாவலைப் பற்றி அறியாமல் படம் பார்ப்பவர்களுக்கு, 'அது' என்பது பேயா...? ஆவியா...? எங்கிருந்து இந்த நகரத்துக்கு வந்தது...? ஏன் வந்தது...? என்ற கேள்விகள் எழக்கூடும். இந்தக் கேள்விகளுக்குப் பதிலளிக்காமல் படத்தை முடிந்தளவு சுவாரஸ்யமாக நகர்த்திச் செல்ல முயற்சிக்கிறார் இயக்குநர் ஆண்டி மஸ்சீட்டி.

இதற்கு முதலில் இவர் எடுத்திருந்த 'மம' (ம)என்ற இதுபோன்ற திகில் படத்தில் பீதியையும் பயத்தையும் படம் பார்ப்பவர்களிடம் ஏற்படுத்தக் கடும் முயற்சி செய்திருந்தும் அவருக்கு அதில் முழு வெற்றி கிடைக்கவில்லை. ஆனால் அதற்கு மாறாக 'இற்' அவருடைய அந்த எதிர்பார்ப்பை ஓரளவுக்காவது பூர்த்தி செய்திருக்கிறது.

## பக்க பலமாக இசையும், ஒளிப்பதிவும்

படத்தில் வரும் ஏழு சிறுவர்களும் ஏழு விதமான குணாதிசயங்களையும் பிரச்சினைகளையும் கொண்டவர்கள், வெவ்வேறுவிதமானவர்கள். அதனை மனதில் பதியவைப்பதில் வெற்றிபெற்றுவிடுகிறார் இயக்குநர். படத்தின் இசை, ஒளிப்பதிவு ஆகிய அம்சங்களில் குறைசொல்ல முடியாது. காட்சிகளில் தங்கியிருக்கும் பயம் குறைவடையும்போது இசையும் ஒளிப்பதிவும்தான் தொடர்ந்தும் அதைத் தக்கவைக்கின்றன.

இந்த சிறுவர்கள் அனைவருக்கும் வெவ்வேறுவிதமான பயம் இருக்கிறது. அவர்கள் எதைப் பார்த்துப் பயப்படுகிறார்களோ அந்த உருவத்தை எடுத்துத்தான் 'அது' அவர்களை அச்சுறுத்துகிறது. இதைப் படத்தில் புரிந்துகொள்வதில் சற்றுச் சிரமம் ஏற்படுகிறது. இந்தப் படத்தில் ஜார்ஜி, முதன்முதலாக 'அதைச்' சந்திக்கும்போது பார்வையாளர்களும் படுபயங்கரப் பயத்துக்குள் புதைந்துபோகிறார்கள். ஆனால், அதே கனதியுடைய அச்ச உணர்வைப் படம் முழுக்க இயக்குநரால் தக்கவைக்க முடியவில்லை. ஆனாலும் ரசிக்க வைக்கிறது 'இற்'.

> படத்தில் வரும் ஏழு சிறுவர்களும் ஏழுவிதமான குணாதிசயங்களையும் பிரச்சினைகளையும் கொண்டவர்கள், வெவ் வேறுவிதமான வர்கள். அதனை மனதில் பதியவைப்பதில் வெற்றிபெற்றுவிடுகிறார் இயக்குநர்.



மார்வெல் சினிமா உலகில் அனைத்துச் சுப்பர் ஹீரோக்களையும் இணைக்கும் படமாக அவெஞ்சர்ஸ் இருக்கிறது. இரசிகர்கள் மத்தியிலும் ஏகோபித்த வரவேற்பை 'அவெஞ்சர்ஸ்' வரிசைப் படங்கள் பெற்றுள்ளன.



# 'அவெஞ்சர்ஸ் 4'

ஹொலிவூட் உலகைக் கலக்கி வந்த படவரிசையில் 'அவெஞ்சர்ஸ்' க்கு முக்கிய இடமுண்டு. 'அயன்மன்', 'கப்டன் அமெரிக்கா', 'ஹல்க்', 'ஸ்பைடர்மன்' 'தோர்' எனத் தனித்தனியாகக் கலக்கி வந்த பலரும் ஒன்றிணைந்து கலக்கினால் எப்படியிருக்கும். அதுவே 'அவெஞ்சர்ஸ். ஒன்று. இரண்டு. மூன்று என்று அடுத்தடுத்து அதன் நான்காம் பாகமும் பிரமாண்டமாகத் தாயாரிக்கப்பட விருக்கிறது.

'அவெஞ்சர்ஸ் 4'ஆம் பாகத்தின் படப்பிடிப்பு தொடங்கிவிட்டதாகப் படத்தின் இயக்குநர் ரூஸோ. குழுவினர் அண்மையில் தெரிவித்துள்ளனர். 'அவெஞ்சர்ஸ் 4' படத்தைச் சித்திரிக்கும் ஒரு ஒளிப்படத்தைப் சமூக வலைதளத்தில் பகிர்ந்து இதை அறிவித்துள்ளனர்.

மார்வெல் சினிமா உலகில் அனைத்துச் சுப்பர் ஹீரோக்களையும் இணைக்கும் படமாக அவெஞ்சர்ஸ் இருக்கிறது. இரசிகர்கள் மத்தியிலும் ஏகோபித்த வரவேற்பை 'அவெஞ்சர்ஸ்' வரிசைப் படங்கள் பெற்றுள்ளன. 'அவெஞ்சர்ஸ்' படத்தின் 3ஆவது பாகம் வெளியாகவுள்ள நிலையில் தற்போது 4ஆவது பாகத்தின் படப்பிடிப்பு ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தப் படத்தின் தலைப்பு இன்னும் அறிவிக்கப்படவில்லை. ஜாஷ் ப்ராலின் (தானோஸ்), ஜெரிமி ரென்னெர் (ஹாக் ஐ) ஆகியோர் இந்தத் திரைப்படத்தில் நடிப்பது மாத்திரம் இப்போதைக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது.

கட்டுரை

அ.அச்சுதன்

# சஞ்சலங்கள் தீர்க்கும் புரட்டாதி சனி விரதம்



கரியவன், முடவன், சனி, சூரிய புத்திரன் என அழைக்கப்பட்டு, 108 பெயர்களால் அர்ச்சிக்கப்பட்டு, இந்து மக்களால் மிகவும் பயபக்தியோடு வழிபடும் கிரக நாயகனாகப் போற்றிப் புகழப்படுபவர் சனிபகவான். நவக்கிரகங்களில் மேற்கு திசையை நோக்கிய பார்வையுடன் காக்கை வாகனத்தில் காட்சி தருபவர். 'சனியைப்போல் கொடுப்பவரும் இல்லை கெடுப்பவரும் இல்லை' என்பார்கள் அதே வேளை சனிகொடுத்தால் தடுப்பார்கள் எவருமில்லை. மும்மூர்த்திகளாக இருந்தாலும் அவர்களால் தடுக்க முடியாது என்பதும் நம்பிக்கை. இதிகாச, புராணக் கதைகளில் இருந்தும் இதை உணர்ந்துகொள்ளலாம். இத்தகைய வல்லமை பொருந்திய சனி பகவானை வேண்டி விரதம் அனுஷ்டிக்கின்ற புனித மகத்துவ காலமாகக் கன்னி மாதமான புரட்டாதியில் வரும் சனிக்கிழமை தினங்கள் விளங்குகின்றன.

### சிறப்புப் பொருந்திய புரட்டாதிச் சனி

வருடா வருடம் வரும் புரட்டாதி மாதத்தின் சனிக்கிழமைகள் இந்த வருடம் நான்கு நாள்களாக வருகின்றன. இனிவரும் செப்ரெம்பர் 23,30, ஒக்ரோபர் 07,14 ஆகிய திகதிகளில் வரும் சனிக்கிழமைகள் தமிழ் மாதமான புரட்டாதிக்குரிய சனிக்கிழமைகள் ஆகும். இந்தப் புரட்டாதி மாதத்தில் வரும் சனிக்கிழமைகளில் மாத்திரமன்றி ஏனைய சனிக்கிழமைகளிலும்கூட சனிக்கிரக வழிபாட்டைச் செய்யமுடியும் ஆனாலும் புரட்டாதிச் சனிக்கிழமை வழிபாடே சிறப்பம்சம் பொருந்தியது. போற்றிப் புகழப்படுவது. ஒரு இராசி வீட்டில் 212 ஆண்டுகள் தங்கும். சனிபகவான் தான் இருக்கும் ராசி வீட்டிலிருந்து (லக்கினம் எதுவானலும்) 3 - 7 - 10 ஆகிய இடங்களைப் பார்வை செய்வார். அவர் இருக்கும் இடத்தைப் பொறுத்து பலன் பார்வையால் அமையும்.

அடுத்த சனிமாற்றம் 25.01.2020ஆம் திகதியாகும். திருக்கணிதப் பஞ்சாங்கத்தின்படி விருச்சிக ராசியில் சஞ்சரித்த சனிபகவான் 26.01.2017இல் தனுசு ராசிக்கு மாறி 2017 யூன் 20இல் விருச்சிகத்துக்குச் சென்று 26 ஒக்ரோபர் 2017இல் மீண்டும் தனுசுக்கு மாறவுள்ளார். இதனால் பின்வரும் ஸ்தான காரர்களான 1,2,4,5,7,8, 9,10,12க்குரிய ஜாதகர்கள் தவறாது, அவசியம் சனிக்கிரக தோச பரிகாரங்களை முறைப்படி செய்து கொள்ள வேண்டும். இதனால் அவரவர் தீய பலன்களில் இருந்து விடுபட ஏதுவாகும்.

### சனி வழிபாடும் குரு பார்வையின் நன்மையும்

முக்கியமாகப் புரட்டாதிச் சனி தோறும் எள்ளெண்ணெய் வைத்து ஸ்னானம் செய்து, பரிசுத்தமாக விரதமிருந்து, எள்ளெரித்து நீல மலரால் அர்ச்சித்து, எள்ளுக் கலந்த நிவேதனம் வைத்து வழிபட்டுக் காக்கைக்கு அன்னமிட்ட பின் ஒரு நேர உணவுண்டு விரதத்தை நிறைவு செய்வதன் மூலம் சனிபகவானின் திருவருள் பெறலாம். கெடுவினை அகலும்.

3,6,11ஆம் இடங்களுக்கான துலாம், கடகம், கும்பம் ராசியினருக்குச் சனிக்கிரகத்தினால் அனுகூலமான பலன்கள் கிடைக்கக்கூடும். மேலும் துலாம் ராசியிலிருந்து குருபார்வை செய்யும் 5ஆம், 7ஆம், 9ஆம் இடங்களிலுள்ள கும்பம், மேடம், மிதுனம் ராசியினருக்கு எந்தத் தோசம் இருப்பினும் குருபார்வையால் அது இல்லாமல் போய்விடும். குருபார்வை கோடி நன்மைகளைத் தருவதாக அமையும்.

“முக்கியமாகப் புரட்டாதிச் சனி தோறும் எள்ளெண்ணெய் வைத்து ஸ்னானம் செய்து, பரிசுத்தமாக விரதமிருந்து, எள்ளெரித்து நீல மலரால் அர்ச்சித்து, எள்ளுக் கலந்த நிவேதனம் வைத்து வழிபட்டுக் காக்கைக்கு அன்னமிட்ட பின் ஒரு நேர உணவுண்டு விரதத்தை நிறைவு செய்வதன் மூலம் சனிபகவானின் திருவருள் பெறலாம். கெடுவினை அகலும்.

### பாவமும் சுபமும் ஆகும் சனி

மேட லக்கின ஜாதகருக்குச் சனி பாவக்கிரகமாகும். இடப லக்கினகாரருக்குச் சனி சுபக்கிரகமாகும். மிதுன லக்கின ஜாதகருக்குச் சனி சுபக்கிரகமாகும். கடக லக்கினகாரருக்குச் சனி அசுபக்கிரகமாகும். சிம்ம லக்கினகாரருக்குச் சனி ஒரு தீய கிரகமாகும். கன்னி லக்கினகாரருக்குச் சனி சுபக்கிரகமாகும். துலா லக்கினகாரருக்குச் சனி சிறந்த சுபக்கிரகமாகும். விருச்சிக லக்கினகாரருக்குச் சனி மாரகக் கிரகமாகும். தனுசு லக்கினகாரருக்குச் சனி ஒரு பாவியாவார். மகர லக்கினகாரருக்குச் சனி ஒரு மாரகக்கிரகமாகும். கும்ப லக்கினகாரருக்குச் சனி சுபக்கிரகமாகும். மீன லக்கினகாரருக்குச் சனி பாவக்கிரகமாகும்.

லக்கினம் என்பது ஜோதிடத்தில் உயிர் ராசி எனக் குறிப்பிடப்படுகிறது. உடல் உயிரான லக்கினத்துக்குச் சனி பாவியானால் அவ்வகையான ஜாதகர்களுக்குச் சனியால் நன்மையான பலன்கள் இடம் பெறமாட்டாது. கோசார ரீதியாக சனி சுப ஸ்தானத்தில் இருந்தாலும், முழுக்க முழுக்க உன்னத பலனை எதிர்பார்க்க முடியாது. மத்திம சுப பலனே நிகழும் எதுவானாலும் சனீஸ்வர வழிபாடு, ஆஞ்சநேய வழிபாடு, நாராயணர் வழிபாடு புரட்டாதிச் சனிக்கிழமை விரத வழிபாடு என்பவற்றின் மூலம் சில பல நன்மைகளை, சுபத்தை அனைவரும் அடையலாம்.

---

கவிதை

வளவை வளவன்

## நலம் காண முடியாது

புத்தனின் தத்துவங்கள்
புரியாத மனிதர்க்கு
புத்த மதம் ஏதுக்கம்மா?
சித்தி பெற்ற சித்தர்கள்
கைக்கொண்ட
எண்ணங்கள்
புரியாது போவதும் ஏன்?

எத்திக்கும் புகழ்பாடும்
அகிம்சையின் தாற்பரியம்
அறியாத மனிதர்க்கு ஏன்?
மெத்தப் படித்தவர்
மேதினி வாழ்ந்திட
அகிம்சையைப்
பேணாததேன்?

கத்தும் கடல் கூறும்
வரலாற்றில் நிலைத்தோரை
புரியாத மனிதர்களா?
சித்தமது தெளிவற்று
போனவரின் சொற்கேட்டு
பின் செல்வோர்
மனிதர்களா?

அறிவின் தெளிவுக்கு
ஆதாரம் அகிம்சை எனில்
பின்பற்ற ஏன் மறந்தீர்?
அறிவோடு அறிவுதரும்
அறநூல்கள் தனை விட்டு
பிறநூல்கள்
கொள்வதுமேன்?

வரலாறு தெரியாது
மொழி நூலும் புரியாத
அறிவுக்குத்
துணைபோவதா?
வரலாறு தனைப்பேணி
வழிவகைகள் காணாது
நலம் காண முடியாதறி.



---

கவிதை

தனபால்ராஜ் திேனஜிகன்

## மாமன்னன் பண்டார வன்னியன்

அஞ்சாது களத்தில்
நெஞ்சு நிமிர்த்தி
குஞ்சரத் தமிழை
குட்டிக் குனியவைக்க
நினைத்தவரை
குழறவைக்க
குமுறி எழுந்த
தமிழ்க்குடிமகனே!

பிரபஞ்சத்தில்
விட்டிழந்து போகாது
எம் வீரவரலாறு என
எமக்குரைத்த பெரியவனே
உமை எப்பவும் எமது
மனதில்
நினைப்பேன் ஐயா

கட்டுரை

ஸுடோ ஸ்வாமி

# பொது நினைவிடத்துக்குள் உண்மைகள் புதைந்துபோகக் கூடாது

போரின்போது உயிரிழந்த மக்களை நினைவு கூர்வதற்கான நினைவுத் தூபி ஒன்றை அமைப்பது தொடர்பாகவும், அந்த மக்களை நினைவு கூர்வதற்கான பொதுத் திகதி ஒன்றைக் குறித்தொதுக்குதல் தொடர்பாகவும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவால் கொண்டுவரப்பட்டிருந்த தீர்மானம் கடந்த 8ஆம் திகதி விடிவைக் கண்டிருக்கிறது. குறித்த தீர்மானம் பல காலமாக நாடாளுமன்ற ஒழுங்குப் பத்திரங்களை நிரப்பிக் கொண்டிருந்த நிலையில் கடைசியாக இப்போது நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட இந்தப் பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் வேலுகுமார் வழிமொழிந்திருக்கிறார்.

**வழிமொழிய ஆள் இல்லாமல் போயிற்று...**

குறித்த பிரே ணையில் குறிப்பிடப்பட்ட நினைவுத்தூபி மற்றும் நினைவுத் திகதி என்பவற்றை ஆதரித்துப் பேசிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜய வர்த்தன, குறித்த தூபியை அனுராதபுரத்தில் அமைப்பது சிறந்ததெனவும், நினைவு கூருவதற்கான நாளாக மே மாதத்தின் மூன்றாவது வாரத்தில் வரும் ஒரு தினத்தை ஒதுக்கிக்கொள்ளலாம் எனவும் ஆலோசனை தெரிவித்திருக்கிறார். வழி மொழிய ஆள் இன்றி இந்தத் தீர்மானம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் ஆதரவுக் கருத்துடன் நாடாளுமன்றில் நிறைவேறியது ஒருபுறம் இருக்க, இதனை அமைப்பது மற்றும் பாதுகாப்பது பற்றியும் அவர் கரிசனை செலுத்தியிருக்கின்றார். போர்க்குற்ற விசாரணைகளுக்கு முகம்கொடுக்கத் தமது படைகளை அனுமதிக்கத் தயங்கும் தரப்பின் ஆசீர்வாதத்துடன் பொது நினைவுத் தூபி ஒன்றை அமைப்பதும், வருடாவருடம் மே மாதத்தின் 18ஆம் திகதி அன்றும் அந்த வாரத்திலும் பாதுகாப்புத் தரப்பினருக்கு ஏற்படும் சிக்கலைத் தவிர்ப்பதற்குமான சமயோசிதமான வழிதான் இது. ஆனால் இது பல விடயங்களைப் பூசி மெழுகுவதற்கான வாய்ப்பினையும் தந்துவிடுகின்றது. போரில் கொல்லப்பட்ட மக்களுக்கான நினைவுத்தூபி - அது பொது நினைவுத்தூபியாக அமைவது நினைவுத்தூபி அனுராதபுரத்தில் அமைவது - அதற்குரிய நாள் மே மாதத்தின் மூன்றாம் வாரத்தில் அமைவது போன்றவை தொடர்பில் தெற்கில் வாதப்பிரதிவாதங்களுக்கு இடமிருக்கிறது. ஆனால் மேற்படி இரு விடயங்களுக் கும் (தூபி மற்றும் நினைவுநாள்) அரசு சம்மதித்ததை வைத்து அதைச் சாதித்துவிட வேண்டிய அவசியம் அண்மையில் நாடாளுமன்றில் நிகழ்ந்த மற்றொரு விடயத்தில் உறைத்திருக்கிறது. கடந்த ஜூலை மாத இறுதியில் கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில, தான் தெளிவு பெறுவதற்காக எழுப்பிய கேள்வியொன்றுக்கு அரசு வழங்கியிருந்த பதில் குடி மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தது.

**ஒரு பூசணித் தோட்டத்தையே சோற்றில் மறைத்த கதை.**

தமிழ் மக்கள் மூக்கில் விரல் வைக்கவும் தலையில் கை வைக்கவும் வழிவகுத்த அந்தக் கேள்வி - பதில், 1983ஆம் ஆண்டில் இடம்பெற்ற 'ஜூலை இனக்கலவரம்' பற்றியதாகும். அந்த இனக்கலவரத்தில் பாதிக்கப்பட்ட, கொல்லப்பட்ட, காயமடைந்த மற்றும் இடம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய விவரத்தையே கம்மன்பில விரிவாகத் தரும்படி சட்டம் ம ்றும் ஒழுங்கு அமைச்சிடம் கோரியிருந்தா சட்டம் மற்றும் ஒழுங்கு அமைச்சுக்குப் ப ாக ஆளும் கட்சியின் பிரதம கொரடா கயந் ந கருணாதிலகவால் சபையில் சமர்ப்பிக் ப்பட்டிருந்த பதில், காற்பானை சோற்றில் பூசணிக்காய் தோட்டம் ஒன்றையே மறைத்ததை நிகர்த்திருந்தது. 1987ஆம் ஆண்டுக் கலவரத்தில் 7 தமிழர்கள் மாத்திரமே உயிரிழந்ததாகவும் முழுவதுமாக 117 பேர் இடம்பெயர்ந்ததாகவும் அவருடைய பதில் அமைந்தது. தவிரவும் வன்முறைச் சம்பவங்கள் கேகாலை, மாத்தறை, கண்டி மற்றும் பதுளை மாவட்டங்களில் மாத்திரமே இடம்பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இலங்கையின் இனமுரண்பாட்டு வரலாற்றில் 1983 இல் இடம்பெற்ற அந்தச் சம்பவம் ஒரு சாதாரண சண்டை போன்றதல்ல. இலங்கையில் சிறுபான்மையினரின் வரலாற்றை 1983க்கு முன், 1983க்குப் பின் என்று தெளிவாக வேறுபிரிக்கக்கூடிய விதத்திலான வடுவினை விட்டுச் சென்றிருந்தது. நாட்டில் சிறுபான்மைத் தரப்பினரிலிருந்து கணிசமான மூளை வெளியேற்றத்துக்கும் இந்த வரலாற்றுத் தழும்பே காரணமாய் இருந்தது. குறித்த வரலாற்றுச் சம்பவத்தை பற்றிய பதிவுகளை, புள்ளி விவரங்களைக் கொண்டிராமையினாலோ அல்லது அது தொடர்பான விடயத்துக்குக்கு இருட்டடிப்பு செய்யும் நோக்குடனோதான் அன்று சிறுபான்மையினருக்கு ஏற்படுத்திய இழப்புக்களைக் குறைத்து மதிப்பிட்டுப் பதில் வழங்கப்பட்டிருக்கிறது.

**வடக்கின் உதவிகளை தெற்குக்குத் திருப்பும் திட்டம்.**

போரில் கொல்லப்பட்டவர்கள், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், என்றெல்லாம் பட்டியல்கள் இருக்க அதற்குரிய சரியான ஆள் தொகையை அடையாளம் காண்பதில் பின்னடிப்பு நிகழ்த்தப்பட்டே வருகின்றது. அந்தப் பட்டியலில் இடம்பிடிப்போரில் பெரும்பான்மையினர் வடக்குக் கிழக்குப் பிரதேசத்துக்கு உரியவர்களாகவும் அல்லது தமது வேர் வழியை வடக்கு கிழக்கில் கொண்டவர்கள் மாத்திரமே இருக்கின்றனர். அத்தகைய இந்தப்பட்டியலுக்குள் போர் நடவடிக்கைகளில் பங்கு கொண்டு பலியான மற்றும் காணாமல் போன படையினரின் எண்ணிக்கைகளை இடைச்செருகல் செய்வதன் மூலம் 'சுத்து மாத்து' செய்து தரவுகளை முழு இலங்கைக்கும் உரியதாக மாற்றியமைக்கும் சாத்தியம் இருக்கிறது. இது தமிழர் தரப்பு முகம் கொடுத்த விளைவுகளின் கனதியைக் குறைப்பதுடன் பருத்தித்துறையில் வசிப்பவர் ஒருவர் போரால் பாதிக்கப்பட்டது போலவே தெய்வேந்திரமுனையில் உள்ள ஒருவரும் பாதிக்கப்பட்டார் எனும் புதுவியாக்கியானத்தையும் தோற்றுவிக்கப் போகிறது. மேலும் போரிழப்புக்களிலிருந்து மீண்டு வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக வெளிநாடுகளிலிருந்தோ பன்னாட்டு அமைப்புக்களில் இருந்தோ உதவிகள், திட்டங்கள், சலுகைகள் வந்தடையுமிடத்து இடைச்செருகப்பட்ட குறித்த புள்ளிவிபரங்களைக் காட்டி அந்தக் கொடுப்பனவு வழிவாய்க்கால்களைத் தெற்குக்குத் திருப்பவும் யோசனை தோன்றினால் நாம் ஆச்சரியப்பட முடியாது. பொதுத் தூபி மற்றும் பொது நினைவுநாள் பற்றிய விடயப்பரப்பினுள் இத்தகைய இடைச்செருகல்கள் ஏன் ஞாபகமூட்டப்படுகின்றன என்றால், பொது எனும் பாவனைக்குள் அடங்கக் கூடிய நிகழக்கூடிய தில்லுமுல்லுகள் தொடர்பில் நாம் விழிப்பாக இருக்க வேண்டும் என்பதற்காகவே..

**தூபியைக் காரணம் காட்டி ஏனைய அஞ்சலிகள் தடுக்கப்படலாம்**

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பாக ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மக்ஸ்வெல் பரணகமவின் ஆணைக்குழுவுக்கான முறைப்பாடுகளிலும் இடைச்செருகல்கள் சில மேற்கொள்ளப்பட்டிருந்தது. அந்த ஆணைக்குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளில் படைநடவடிக்கைகளின்போது காணாமல் போனதாகக் கூறப்பட்ட 5 ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்ட சிப்பாய்கள் தொடர்பான முறைப்பாடுகளும் அடங்கியிருந்தன. ஆக மொத்தத்தில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டிருக்கும் பொதுத்தூபி, போரில் கொல்லப்பட்ட மக்களுக்காக அஞ்சலிக்கப்படுவது நல்லது வரவேற்கத்தக்கது. வடக்கின் நண்பனும் தெற்கின் தோழனும் இலங்கையன் என்கிற ரீதியில் 'சமரசம் உலாவும் இடமாக' அந்த இடத்தைத் தொழுவது சாலச்சிறந்ததே. மறுபறத்தில் இந்தத் தூபியைக் காரணம் காட்டி, இன நல்லிணக்கத்துக்கு இடைஞ்சல் செய்வதாக மட்டக்களப்பு மகிழடித்தீவுச் சந்தியில், சத்துருக்கொண்டானில், யாழ் வீரசிங்கம் மண்டபம் முன்பாக, நூலகம் முகம் கொடுத்த, நவாலி தேவாலயச் சூழலில், நெடுந்தீவு இறங்குதுறையில் இன்னும் வடக்குக் கிழக்கின் பல்வேறு இடங்களில் காணப்படக்கூடிய அஞ்சலி இடங்களையும் நினைவுத்தூண்கள் மற்றும் சதுக்கங்களையும் சம்ஹாரம் செய்ய முயற்சிக்கப்படுமென்றால் இந்த நினைவிடம் வரவேற்பைப் பெறுமா...? என்பது கேள்விக்குரியது. "குறித்த நினைவிடம் இறுதிப்போர் இடம்பெற்ற பகுதியில் ஒரு பிரதேசத்தில்தான் அமைய வேண்டும்" என்று பிரேரணையை முன்வைத்திருந்த டக்ளஸ் தேவானந்தா கூறியிருக்கிறார். ஆனால், அனுராதபுரம்தான் அதற்குச் சிறந்தஇடம் என்கிறார் ருவான் விஜயவர்த்தன. ஏன் அந்த நினைவிடம் தங்காலை கோல்டன் இல்லத்துக்கு முன்னால் அமைந்தாலும் தவறில்லை. ஆனால் அது உண்மைகள் எதனையும் விழுங்கவோ மழுங்கடிக்கவோ கூடாது.





# அரசியலில இதெல்லாம் சாதாரணமப்பா!



கட்டுரை

எம்.ஐ.முபாறக்

## அமைச்சரின் ஆங்கிலம் சுப்பர்



எமது நாட்டுக்குச் சாபக்கேடே கல்வி அறிவு குறைந்த, காடைத்தனம் கொண்ட அரசியல்வாதிகளை நாம் அதிகம் அதிகமாகத் தெரிவு செய்திருப்பதுதான். அதிலும் மொழி அறிவு மிகவும் குறைவானவர்களே அதிகம். குறிப்பாகத் தமிழ் பேசும் அரசியல்வாதிகள் சிங்களம் மற்றும் ஆங்கிலம் பேசுவதைக் கேட்டால் கேட்டுக்கொண்டு இருப்பவர்களுக்கு வாந்தியே வந்துவிடும். அவ்வளவு கேவலமாக இருக்கும் அவர்களுடைய பேச்சு. ஆனால், கோட் சூட் போட்டுக்கொண்டு அவர்கள் காட்டும் பகட்டுக்குக் குறைச்சல் இருக்காது.

இப்படியான ஓர் அரைகுறை அரசியல்வாதி ஒருவர், தனது ஆங்கிலப் புலமையைக் காட்டப் போய் அசடு வழிந்த சம்பவம் ஒன்று நடந்துள்ளது. கிழக்கு மாகாணத்தின் அமைச்சர்களுள் ஒருவர் அவர். ஒரு வேலைத் திட்டம் தொடர்பாக ஒருவர் அவரைப் போய்ச் சந்தித்தார். போனவர் ஓரளவு படித்தவர். ஆங்கிலம் தெரிந்தவர். இதை அறிந்திராத அமைச்சர் தன்து ஆங்கிலப் புலமையை அவரிடம் காட்டப்போய் அநியாயமாகச் சிக்கிக்கொண்டார். "இந்த வேலை முடிந்துவிட்டது. அந்த வேலை முடிந்துவிட்டது" என்பதை அமைச்சர் தவறுகளுடன் ஆங்கிலத்தில் சொன்னாராம். போனவருக்கோ சிரிப்புத் தாங்க முடியவில்லை. வெளியே வந்து வயிறு குலுங்கச் சிரித்துவிட்டார்.

*"இப்படியொரு தரமான ஆங்கிலத்த எங்கதான் படிச்சாரோ"*

சுதந்திரக் கட்சியின் 66ஆவது மாநாடு வெற்றி பெற்றமைக்கு நன்றி தெரிவிப்பதற்காகச் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்கள் அனைவரையும் கடந்த வாரம் ஒன்றுகூட்டினார் மைத்திரி. அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்து, எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்குத் தயாராகுமாறு அமைச்சர்களுக்குக் கூறினார்.

அப்போது எழுந்த அமைச்சர் தயாசிறி ஜயசேகர, மகிந்த அணியினர் சுதந்திரக் கட்சிக்குள் இருந்துகொண்டு புதுக் கட்சி ஒன்றின் கிளைகளை நாடெங்கிலும் அமைத்துக் கொண்டு போவது தொடர்பில் கவனமெடுத்து அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு கோரினார்.

அமைச்சர்கள் விஜித முனி சொய்சா மற்றும் செனவிரத்ன ஆகியோர் தாயாசிறியின் கருத்தை ஆமோதித்துப் பேசியபோது அமைச்சர் சுசில் பிரேமஜயந்த அதை எதிர்த்தார். "எமது கட்சி பலவீனமாக உள்ளது. மகிந்த அணிக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதை விட்டுவிட்டு அவர்களை ஒன்றிணைப்பதன் மூலம்தான் எம்மால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றிபெற முடியும்" என்றும் கூறினார்.

அருந்திக்க பெர்னாண்டோ அதை ஆமோதித்துப் பேசியதோடு, "ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்பைத் துண்டிக்க வேண்டும்" என்றும் கூறினார்.

"இதனால் ஆத்திரமடைந்த சந்திரிகா, ஐக்கிய தேசியக் காட்சியால்தான் எம்மால் மகிந்தவைத் தோற்கடிக்க முடிந்தது. அந்தக் கட்சியைப் பகைத்துக்கொள்ள முடியாது" என்றார். "மக்கள் மட்டத்தில் இருக்கின்ற நிலைமை தெரியாமல் பேசாதீர்கள். ஐக்கிய தேசிய கட்சி புரிகின்ற திருட்டுக்களை நாம்தான் சுமக்க வேண்டியுள்ளது" என்று அருந்திக்க கூறினார். இதைச் சந்திரிகா கடுமையாக எதிர்த்ததோடு இருவருக்கும் இடையில் வாக்குவாதம் முற்றியது. நிமல் லான்ஸா மற்றும் சுசில் ஆகியோர் அருந்திக்கவுக்கு ஆதரவாகக் களத்தில் இறங்கினர். பெரும் அமளி துமளி ஏற்பட்டது.

நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மைத்திரி அனைவரையும் சாப்பாட்டுக்கு அழைத்தார். சாப்பாட்டின்போது சுசில், அருந்திக்க, நிமல் லான்ஸா ஆகியோரிடம் பேசினார்.

"உங்களால் முடிந்தால் அடுத்த தேர்தலுக்கு முன் மகிந்த தரப்பை சுதந்திரக் கட்சியுடன் ஒன்றிணைத்துக் காட்டுங்கள். இந்தப் பணியை நான் உங்களிடம் ஒப்படைக்கின்றேன்" என்றார்.

இந்தச் செய்தி உடனடியாக மகிந்த அணிக்கு எட்டியது. மகிந்த அணியினர் இது தொடர்பில் கூடிப் பேசினர். "நாடாளுமன்றத் தேர்தலில் ஏமாந்ததுபோல் இனியும் நாம் ஏமாறக்கூடாது. நாம் பல கட்சிகளை ஒன்றிணைத்து ஒன்றிணைந்த எதிர்க்கட்சியாக இருக்கின்றோம். இந்தக் கூட்டமைப்பில்தான் நாம் தேர்தலில் போட்டியிட வேண்டும். முடிந்தால் சுதந்திரக் கட்சியினர் மைத்திரியுடன் வந்து எமது அணியில் இணையட்டும்" என்று பிரசன்ன ரணதுங்க அந்தக் கூட்டத்தில் கூறினார். எல்லோரும் ஆமோதித்தனர். இந்தச் செய்தி மைத்திரிக்கு எட்டியது. மைத்திரி கடுப்பாகிவிட்டார். "அவர்களோடு நான் இணைவதா...? என்னை அவர்கள் கேலி செய்கிறார்களா...?" என்று கேட்டாராம் அவர்.

## கடுப்பானார் மைத்திரி!



## அடிமட்ட மக்கள்போல் வாழ்கிறாராம் அமைச்சர்!

சில அரசியல்வாதிகள் அவர்களின் வாழ்க்கையில் என்னதான் உயர்மட்டத்துக்கு வந்தாலும் அடி மட்ட வாழ்வியல் பண்புகள் அவர்களிடம் இருக்கவே செய்கின்றன. சில அமைச்சர்கள் சாதாரண உணவகங்களில் சாப்பிடுவது, பேருந்துகளில் பயணிப்பது, தோட்டங்கள் செய்வது, வீடுகள் துப்புரவு செய்வது என சர்தாரண மக்களைப்போல் வாழத்தான் செய்கிறார்கள்.

ஒரு சில அமைச்சர்களிடமே இப்படியான அடி மட்ட மக்களின் ஏதேவொரு வாழ்க்கை இருக்கிறது. அப்படியொரு பழக்கம் அமைச்சர் சுசில் பிரேம ஜயந்தவிடம் உள்ளதாம். கம்பஹா மாவட்டதில் தெல்கந்த எனும் இடத்தில் வாரா வாரம் கூடும் சந்தைக்குப் போகும் பழக்கம் அவருக்கு உண்டாம். கம்பஹாவில் இருக்கும்போது தவறாமல் சந்தைக்குச் சென்று மக்களோடு மக்களாகச் சேர்ந்து சாதாரண ஒருவர்போல் பொருள்களைத் தேடித் தேடி வாங்குவாராம். இதன்மூலம் மக்கள் படும் கஷ்டம், நாட்டின் பொருளாதார நிலைமை போன்றவற்றை அவரால் இலகுவாக அறிய முடிகிறதாம்.

*"ம்ம்.. அறிந்தும் தான் என்ன பயன்?"*

## ஹக்கீமிடம் வாங்கிக்கட்டினார் முதலமைச்சர்



அடுத்தவர் காலை வாராது அரசியல் இல்லை என்றே சொல்ல வேண்டும். அவ்வாறு காலை வாரி மாட்டிக்கொண்டு செம்மையாக வாங்கிக் கட்டிய ஒருவர்தான் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸீர் அஹமட். மட்டக்களப்பு ஏறாவூர் நகர சபைக்கெனப் புதிய கட்டடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டு அண்மையில் தலைமை அமைச்சர் தலைமையில் அது கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது. அதை நிர்மாணித்து முடித்தவர் கிழக்கு முதலமைச்சர் அஹமட் நசீர்.

ஆனால் இதை ஆரம்பித்தவர் முதலமைச்சர் அல்ல. சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சாகிர் மௌலானா ஆவார். அவர் ஏறாவூர் நகர சபைத் தவிசாளராக இருக்கும்போதுதான் இதன் நிர்மாணப் பணி முன்னெடுக்கப்பட்டது. அது பூரணமாவதற்கு முன்பே நகரசபை கலைக்கப்பட்டுவிட்டது. இருந்தும் அதில் 80 வீதமான வேலைகள் முடிவுற்று இருந்தன. இந்த நிலையில் இருந்த வேலைகளை முதலமைச்சர் நஸீர் பொறுப்பேற்றுப் பூரணப்படுத்தினார்.

ஆனால் அந்தக் கட்டடத்தை முற்று முழுதாக முதலமைச்சரே கட்டி முடித்ததுபோலவும் மௌலானாவுக்கு அதில் எதுவித பங்கும் இல்லாததுபோலவுமே முதலமைச்சர் தரப்பால் பரப்புரை செய்யப்பட்டது. நகர சபை நினைவுப் படிக்கல்லில்கூட மௌலானாவின் பெயர் இடம்பெற்றிருக்கவில்லை. இந்த நிலையில், கட்டடத் திறப்பு விழா கோலாகலமாக ஆரம்பமானது. தலைமை அமைச்சர் மற்றும் அமைச்சர் ரவூப் ஹக்கீம் போன்றோரும் நிகழ்வுக்கு அழைக்கப்பட்டிருந்தனர். மேடையில் பேசுவதற்கு எழுந்தார் ஹக்கீம். மேடையை ஒரு பார்வை பார்த்தார். மௌலானாவைக் காணவில்லை.

மௌலானாவை வெட்டிவிட்டு முதலமைச்சர் காய் நகர்த்தி இருப்பதை அறிந்துகொண்டார். வந்த ஆத்திரத்தைக் ஹக்கீமால் அடக்க முடியவில்லை. அந்த மேடையில் வைத்தே முதலமைச்சரை வாங்கு வாங்கு என்று வாங்கிவிட்டார். இதைச் சற்றும் எதிர்பார்த்திராத முதலமைச்சர் நிலை குலைந்து போனார். முழு ஊரே அறிந்த ஓர் உண்மையை மூடி மறைக்கப் பார்த்தமை பிழைதான் என்பதை உணர்ந்தவர்போல் ஆனார்.

ஒரே ஊர்க்காரர், ஒரே கட்சிக்காரர் தனக்குப் போட்டியாக வந்துவிடக்கூடாது என்பதற்காக முதலமைச்சர் செய்த இந்த வேலை மௌலானாவின் ஆதரவாளர்களை ஆத்திரமடையச் செய்தது.

இப்படியேபோனால் இனிவரும் தேர்தல்களில் மௌலானாவுடைய ஆதரவாளர்களின் ஒரு வாக்கைக்கூடப் பெற முடியாமல் போகும் என்று புரிந்ததும் இனி இடம்பெறும் எல்லா நிகழ்வுகளுக்கும் மௌலானாவை அழைப்பது என்று முதலமைச்சர் முடிவெடுத்துள்ளாராம்.

*"மௌலானாவின் தனிப்பட்ட வாக்கு வங்கியைத் தவிர்த்துத் தன்னால் எதுவும் செய்ய முடியாது என்று முதலமைச்சர் இப்போது தான் உணர்ந்துள்ளார் போலும்."*

கட்டுரை

றெமோ டினேஷ்




# முடிவுக்கு வருமா சிறைச்சாலை வசந்தம்?

> சிறை வைத்திய சாலை வசதி முறைகேடான வகையில் பயன்படுத்தப்படுவதையிட்டு சுகாதார அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கும் பதில் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, குறித்த நடவடிக்கைக்கு உடந்தையாக இருக்கும் வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையின் தற்காலிகத் தலைமை மருத்துவ அதிகாரியை இடமாற்றம் செய்யுமாறு கோரியிருக்கிறார்.

சிறைச்சாலை வைத்தியசாலையைத் தனது கவனத்தில் எடுத்திருக்கிறது அரசு. கடந்த அரசின் பிரமுகர்கள் மீதான சட்டநடவடிக்கைகளில் முதலாவதாகக் கொள்ளப்படும் பௌத்த அனுஷ்டான (சில்) துணி விவகாரம் தொடர்பில் இலங்கை தொலைத் தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக் குழுவைநிர்வகித்த இரண்டுபிரபலங்கள் சிறைத்தண்டனைக்குட்படுத்தப்பட்டதை அடுத்து இந்த முனைப்பு ஏற்பட்டிருக்கிறது. குறித்த இருவரும் சிறை எண் வழங்கப்படுவதற்கு முன்னரே சிறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதையடுத்து சிறைச்சாலை வைத்தியசாலையில் சேர்க்கப்படும் கைதிகள் மூன்று மருத்துவர்களின் ஒப்புதல் பெறப்பட வேண்டும் எனும் கட்டாய நிபந்தனையை உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பிரேரித்திருக்கி றது சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு. இதன்படி, ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்த தனி ஒரு மருத்துவரின் ஒப்புதலைப் பெறும் முறைமை நீக்கப்படுவதோடு, கைதி ஒருவர் வைத்திய சாலைக்கு சேர்க்கப்படுகையில் அவருடைய மருத்துவ அறிக்கைகள் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சுக்குச் சமர்ப்பிக்கப்படவும் வேண் டும் எனும்; நிலை ஏற்பட்டிருக்கிறது.

### சிறை வைத்தியசாலையைச் சொகுசுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் உத்தி

2015இல் அரச தலைவர் தேர்தல் அறிவிக்கப்பட்ட காலத்தில் முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவுக்கு ஆதரவு கோரும் வகையில் அரச நிதியில் 600 மில்லியன் ரூபாவைத் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவால் பௌத்த அனுஷ்டானங்களுக்குப் பயன்படுத்தப்படும் வெள்ளைத் துணியை விநியோகிப்பதற்காக சட்டவிரோதச் செலவழிக்கப்பட்டிருந்தது. குறித்த வழக்கின் தீர்ப்பு அண்மையில் வெளிவந்த நிலையில் குற்றவாளி யாகக் காணப்பட்ட அந்த ஆணைக்குழுவின் அப்போதைய பணிப்பாளர் நாயகம் அனுஷ பெல்பிட்ட மற்றும் ஆணைக்குழுவின்




தலைவர் லலித் வீரதுங்க ஆகியோர் சிறைத்தண்ட னைக்கு உள்ளாகியிருந்தனர்.

சிறைத் தீர்ப்பிடப்பட்ட பல அரசியல் புள்ளிகள் தேக ஆரோக்கிய நிலமையைச் சாட்டாகக் கொண்டு சிறை வைத்தியசாலையைத் தமது சுகபோக தஞ்ச இடமாகக் கொள்வது பல சந்தர்ப்பங்களில் கவனிக்கப்பட்டே வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக முன்னைய ஆட்சிக்காலப் பிரபலங்கள் தமது வாடிக்கையான நிகழ்வாக இதனைக் கைக்கொண்டு வந்திருந்தமை சட்ட நடைமுறையில் உள்ள பின்னடைவைக் காட்டி நின்றது. லலித் மற்றும் அனுஷவினைத் தவிர கடந்த 4ஆம் திகதி காவலில் வைக்கப்பட்ட முன்னாள் பெற்றோலிய வளத்துறைப் பதில் அமைச்சரும் அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவருமான சரண குணவர்த்தனவும் கடந்த 8ஆம் திகதி சிறை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருந்தார். பஷில் ராஜபக்ச, ஜாலிய விக்கிரமசூரிய, திஸ்ஸ அத்தநாயக்க ஆகிய பலர் தீர்ப்பின் பின்படுத்த படுக்கை நோயாளிகளாகியிருந்தனர். பிரபலங்கள் சிறைத்தண்டனைக்கு உள்ளாகிப் பின்னர் உடனடியாக வைத்தியசாலையின் உள்ளக நோயாளிகளாக மாற்றம் பெறும் அதிசயத்துக்குப் பின்னால் சிறை வைத்தியசாலை மருத்துவ அதிகாரியின் கையே ஓங்கி இருப்பதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. குறித்த விடயம் ஏற்கெனவே கண்டறியப்பட்டிருந்த நிலையில் சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன சிறை மருத்துவமனை மருத்துவர்கள் அனைவருக்கும் இடமாற்றம் வழங்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

### அமைச்சர் ரஞ்சனின் பாய்ச்சல்

சிறை வைத்தியசாலை வசதி முறைகேடான வகையில் பயன்படுத்தப்படுவதையிட்டு சுகாதார அமைச்சின் செயலாளருக்குக் கடிதம் ஒன்றை எழுதியிருக்கும் பதில் அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, குறித்த நடவடிக்கைக்கு உடந்தையாக இருக்கும் வெலிக்கடைச் சிறைச்சாலை வைத்தியசாலையின் தற்காலிகத் தலைமை மருத்துவ அதிகாரியை இடமாற்றம் செய்யுமாறு கோரியிருக்கிறார். ரஞ்சன் ராமநாயக்கவைத் தவிர வேறு சில சிவில் சமூக ஆர்வலர்களாலும் கையெழுத்திடப்பட்டிருக்கும் மேற்படி முறைப்பாட்டுக் கடிதத்தில் நான்கு மருத்துவர்கள் தெரிவு செய்யப்பட்ட கைதிகளுக்குச் சிறப்புச் சிகிச்சை வழங்குகின்றனர் எனச் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது.

### அதிரடிச் சோதனை

சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு மற்றொரு அதிரடி நடவடிக்கையையும் கடந்த செவ்வாய்க்கிழமை மேற்கொண்டிருந்தது. வெலிக்கடைச் சிறைச்சாலையின் மருத்துவமனை, அதுசார்ந்த விடயங்களுக்குப் பொறுப்பாகவிருக்கும் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனின் உத்தரவின் பேரில் திடீர்ச் சோதனைக்கு உள்ளாகியிருந்தது. சிறைச்சாலைப் புலனாய்வு அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் மருத்துவமனையின் உள்ளும் புறமுமாக இரண்டு அலைபேசிகள் கைப்பற்றப்பட்டிருக்கின்றன. குறித்த இரு கைபேசிகளும் தற்போது புலனாய்வுப் பிரிவினரிடம் கையளிக்கப்பட்டிருக்கின்றன. இதைவிட எல்லா அரசியல்கைதிகளும் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தனர்.

### ஒப்பந்தம் எதுவும் உண்டா?

கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பில் நடந்த அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படுத்தும் இயக்கம் நடத்திய ஊடக மாநாட்டில் கருத்துத் தெரிவித்த தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவர் அசாத் சாலி, கடந்த அரசில் இருந்து தற்போது ஊழல் மோசடிகளுக்காகத் தண்டனை பெற்றவர்களைச் சிறைப்ப டுத்தும்போது அவர்களை வைத்தியசாலையில் அனுமதிப்பது தொடர்பில் சிறை நிர்வாகம் ஒப்பந்தம் எதையாவது மேற்கொண்டுள்ளதாவென விகடமாகக் கேள்வி எழுப்பியிருக்கிறார்.

அரசு மருத்துவக் குழுவொன்றை வெலிக்கடைக்கு அனுப்பி உண்மையான நோயாளர்களை இனங்கண்டு ஏனையவர்களைச் சிறைச்சாலைக்கு அனுப்பி விடவேண்டும் என்றும் பரிந்துரைத்திருக்கிறார் அவர்.

### சிறைக் கலவரம் தொடர்பிலும் நகர்வுகள்

2012ஆம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் நடந்த சிறைக்கலவரத்தில் 27 கைதிகள் கொல்லப்பட்ட விவகாரம் தூசுதட்டப்பட்டு அது தொடர்பான இரகசிய அறிக்கை பொலிஸ்மா அதிபரால் சட்டம் ஒழுங்கு அமைச்சரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டிருக்கிறது.

குறித்த சம்பவம் நிகழ்ந்த வேளையில் கைதிகள் மீது துப்பாக்கிச்சூடு நடத்துவதற்கு அனுமதி வழங்கும், கட்டளையிடும் நிலையிலிருந்தவர்கள் மீது விசாரணை நடத்தப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. நடந்த அந்தச் சிறைக் கலவரத்தின்போது கண்கண்ட சாட்சியாக விளங்கிய சுதேஷ் நந்திமல் சில்வாவினால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் ரிட் மனு, கவனத்தில் கொள்ளப்பட்டிருக்கிறது. முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தாபய ராஜபக்ச, முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜயசூரிய மற்றும் முன்னாள் பொலிஸ்மா அதிபர் அனுர சேனநாயக்க போன்றோரிடம் மேற்படி சிறைக்கலவரம் தொடர்பில் வாக்குமூலம் பெறப்பட உள்ளது.

சிறை மருத்துவமனை வசந்த மண்டபமாகப் பயன்படுத்தப்படுவதை முடி வுக்குக் கொண்டுவரத் தீர்மானித்திருக்கும் அரசு, உண்மையான நோயாளிகள் பாதிக்கப்படுவதைத் தவிர்க்கவும் நடவடிக்கை எடுத்திருக்கிறது. இது முன்னர் கைதிகளைச் சுட உத்தரவிட்டவர்கள் சிறைப்படுத்தப்படுவதற்கு முன்னதான எச்சரிக்கை நகர்வாகவும் இருக்கலாம். எதுவும் போகப்போகத்தான் தெரிய வரும்.

# ஆவணப்படுத்தல்!

கிழக்கின் முக்கிய நகராகத் திகழும் கல்முனையிலுள்ள தமிழ்க் கிராமங்கள் குறித்த ஆவணப்படுத்தல் முயற்சி ஒன்று முன்னெடுக்கப்படவிருக்கின்றது.
'கல்முனை நெற்' ஊடகவலையமைப்பின் முயற்சியால் முன்னெடுக்கப்படவிருக்கும் இந்த ஆவணப்படுத்தல் செயற்றிட்டத்துக்குள் கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள தமிழ்க் கிராமங்கள் உட்படுத்தப்படவுள்ளன.
இந்தத் தமிழ்க் கிராமங்களின் வரலாறுகள், அங்குள்ள வரலாற்றுச் சின்னங்கள், வழிபாட்டுத்தலங்கள், வழிபாட்டு முறைகள், கலை, கலாசார அம்சங்கள் கிராமியத்தலைவர்கள், சாதனையாளர்கள், இலக்கியகர்த்தாக்கள் என்பன போன்ற விவரங்கள் திரட்டப் பட்டு ஆவண நூலாக வெளியிடப்படவிருக்கின்றது. நல்லதோர் முயற்சி தானே இது!




**செய்திக்கோர்வை**

அனார்கலி

# அதிரடி மாற்றம்!

முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் பதவி தொடர்பில் அந்தக் கட்சியின் தலைவர் ரவூப்ஹக்கீம் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை மூலம் கல்முனை மாநகர சபையின் முன்னாள் தலைவரும், அரசதலைவர் சட்டத்தரணியுமான நிஸாம் காரியப்பர் கட்சியின் புதிய செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.
கிழக்கில், குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் கட்சியின் செல்வாக்கையும், பலத்தையும் வலுப்படுத்தும் வண்ணம் அதிரடியாக இந்த மாற்றம் தலைவரால் மேற்கொள்ளப்பட்டதாகக் கூறப்படுகின்றபோதிலும், இந்த மாற்றம் மக்கள் மத்தியில் பெரிதாக உணர்வலைகள் எவற்றையும் ஏற்படுத்தவில்லை.
தேர்தலில் போட்டியிட முடியாது, தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பிரதி நிதித்துவத்தைக் கோர முடியாது என்றெல்லாம் விலங்கிடப்பட்ட இந்தச் செயலாளர் பதவியுடன் நாம் திருப்திப்பட முடியாது எனவும் கட்சிக்காக அன்றிலிருந்து இன்று வரை அர்ப்பணிப்புடன் செயற்பட்டுவரும். அவரை (நிஸாம் காரியப்பரை) ஒரு நாடாளுமன்ற உறுப்பினராகக் காணும் எமது ஆசை நிறைவேற்றுவதற்குத் தலைவர் சந்தர்ப்பம் அளிக்கமாட்டாரா? எனவும் முஸ்லிம் காங்கிரஸ் போராளிகள் பலரும் ஆதங்கம் வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது..
''அட்டாளைச் சேனை தேசியப் பட்டியல் விவகாரத்திலும் அதிரடி நடவடிக்கையைத் தலைவர் ஹக்கீம் எடுப்பாரா?" எனக் கேட்பாருமுள்ளனர்.





## அஷ்ரப் நினைவுதினம்!

முஸ்லிம் காங்கிரஸின் ஆரம்பத் தலைவரும் முன்னாள் அமைச்சருமான எம்.எச்.எம். அஷ்ரபின் 17ஆவது நினைவு தினத்தையொட்டிய பல நிகழ்வுகள் இந்த வாரம் தென்கிழக்கு முஸ்லிம் பிரதேசங்கள் பலவற்றிலும் நடைபெறவுள்ளன.
நேற்று 16ஆம் திகதி அஷ்ரபின் 17ஆவது நினைவு தினமாதலால், அந்த நினைவு தினநிகழ்வை பொத்துவில் பிரதேசத்தில் நடத்துவதற்கு முஸ்லிம் காங்கிரஸ் ஏற்பாடு செய்திருந்தது.
இதேவேளை இந்த வாரம் முழுவதும் தென்கிழக்கின் முஸ்லிம் பிரதேசங்கள் பலவற்றிலும் அன்னாரை நினைவுகூர்ந்து கத்தமுல்குர்ஆன், அன்னதானம் வழங்கல், மரநடுகை, நினைவுப் பேருரை நிகழ்வுகள் பலவும் நடைபெறவுள்ளன.
இலங்கை முஸ்லிம்களுக்கு முகவரி பெற்றுத் தந்த பெருமகன் அஷ்ரபின் பாசறையில் வளர்ந்தவர்களெனக்கூறி அரசியல் நடத்திக் கொண்டிருக்கும் முஸ்லிம் தலைமைகள் ஒன்றுபடுவது பற்றி இதன்பேதாவது சிந்திப்பார்களா?



## வாகனப் பேரணி

சைட்டம் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், அதை இல்லாதொழிக்குமாறும் வற்புறுத்திக் கல்முனை மாநகரூடாக வாகனப் பேரணி ஒன்று இடம்பெற்றது.
கடந்த செவ்வாய், புதன்கிழமைகளில் இடம்பெற்ற இந்தச் சைட்டம் எதிர்ப்பு வாகனப் பேரணியை மக்கள் கண்டு கொள்ளவே இல்லை! ஆனாலும் அதனால் ஏற்பட்ட போக்குவரத்து நெரிசல் குறித்துப் பலரும் பெரும் விசனம் தெரிவித்தனர்.
சைட்டம் எதிர்ப்பு நடவடிக்கையின் முக்கிய அம்சமாக எதிர்வரும் 21 ஆம் திகதி சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறை சார் தொழிற்சங்க உறுப்பினர்கள் ஒன்றிணைந்து மாபெரும் வேலை நிறுத்தமொன்றை நடத்தவுள்ளனர் என்றும் அபாயச் சங்கு ஊதப்பட்டுள்ளது!



## தட்டிப் பறிக்காதீர்!



"இந்த நாட்டில் பலமிக்கதாகக் காணப்படும் சிங்கள சமூகம் அபிவிருத்தியடைந்த, நாகரீகமான சமூகமென்றால், பலவீனர்களான சிறுபான்மை தமிழ் முஸ்லிம் மக்களின் உரிமைகளைத் தட்டிப்பறிக்கக் கூடாது"
இவ்வாறு கிழக்குமாகாண சபை உறுப்பினரும், முஸ்லிம் காங்கிரஸின் இளைஞர் காங்கிரஸ் தேசிய அமைப்பாளருமான மூத்த சட்டத்தரணி ஆரிப்சம் சுடீன் கூறினார்.
பன்னாட்டுத் தெங்கு தினத்தையொட்டி நிந்தவூரில் நடைபெற்ற தெங்கு உர மானியம் வழங்கல் மற்றும் தென்னங்கன்றுகள் விநியோக நிகழ்வில் முதன்மை அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
"கிழக்கில் தமிழ், முஸ்லிம் மக்களின் ஒற்றுமை மேலோங்க வேண்டும் எனவும், இதற்கு கிழக்கு மாகாணசபை ஆட்சி முன்னுதாரணமாக் திகழ்வதாகவும்" அவர் மேலும் தெரிவித்தார்.

## சுயேச்சை அணி?

கல்முனை மாநகரசபையின் கீழுள்ள சாய்ந்தமருது பிரதேசத்துக்குத் தனியான உள்ளூராட்சிசபைக் கோரிக்கை நிறைவேறப் போகிறது என்றிருந்த நிலை பின்தள்ளப்பட்டுள்ளது. அந்தப் பிரதேச மக்கள் அந்தச் தனிச்சபையைப் பெற்றே தீர வேண்டுமென்பதற்குகான காய்நகர்த்தல்களை முன்னெடுத்து வருகின்றனர்.
இதன் ஓர் அங்கமாகச் 'சாய்ந்தமருது ஷூராகவுன்சில்' அதிரடித்தீர்மானம் ஒன்றை அறிவித்துள்ளது.
அது, எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தல் அறிவிப்புக்கு முன்னதாகச் சாய்ந்த மருதுக்கான தனி உள்ளூராட்சி சபை வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாவிட்டால், கல்முனை மாநகரசபைத் தேர்தலில், சாய்ந்தமருது பெரிய ஜூம் ஆ பள்ளி வாசலை மையப்படுத்தி சுயேச்சை அணி ஒன்றைக் களமிறக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதாகும்.
தேர்தல் திருவிழாவில் களமிறங்கக் காத்திருக்கும் முஸ்லிம் கட்சிகளுக்கு இந்தச் செய்தி அடிவயிற்றைக் கலக்காமலா இருக்கும்?

## நூல் வெளியீடு இன்று!

பன்னூலாசிரியரும், பிரபல கவிஞருமான ராஜகவி ஏ.ஸி.ராகிலின் 'ஓவியனை வாசித்த புல்லாங்குழலில் வர்ண இசை' எனும் கவிதை நூலின் வெளியீட்டு விழா இன்று நிந்தவூர் பிரதேச சபை மண்டபத்தில் நடைபெறவிருக்கின்றது. மணிப்புலவர் மருதூர் ஏ.மஜீத்தலைமையில் நடைபெறவிருக்கும் விழா்வில், கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.அப்துல் நிஸாம் தலைமை அதிதியாகக் கலந்து கொள்கின்






**மேடம்:** புதிய முயற்சியில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்கும்.

**இடபம்**: பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்களுக்கு, சக ஊழியர்களின் ஆதரவு உண்டாகும்.

**மிதுனம்:** மற்றவர்களிடம் நிதானமுடன் பேசுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணிச்சுமையைச் சந்திப்பர்.

**கடகம்:** திட்டமிட்டு செயல்பட்டு முன்னேறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர்.

**சிங்கம்:** தகுதிக்கு மீறிய வாக்குறுதி வழங்கி வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**கன்னி:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபார வளர்ச்சியால் பண வரவு அதிகரிக்கும். வெகுநாள் எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும்.

**துலாம்:** பேச்சால் அனைவரையும் கவர்ந்திழுப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் ஆதாயம் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் வளர்ச்சி காண்பர்.

**விருச்சிகம்:** சமூகத்தில் அந்தஸ்து மிக்கவராக விளங்குவீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் மூலதனத்துடன் அபிவிருத்தி பணிபுரிவீர்கள். இலாபம் உயரும்.

**தனுசு:** புதிய முயற்சியில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். சமூகத்தில் அந்தஸ்து உயரும். தொழில், வியாபாரத்தில் இலாபம் அதிகரிக்கும். மனைவியின் பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள்.

**மகரம்:** மனக்குழப்பம் நீங்கி நிம்மதி காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் மந்தகதி அகலும். இலாபம் படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்கள் பணிச்சுமையில் இருந்து விடுபடுவர்.

**கும்பம்:** குடும்ப விஷயத்தை பிறரிடம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த வருமானம் கிடைக்கும். பணியாளர்கள் பணி விஷயமாக வெளியூர் செல்வர்.

**மீனம்:** உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பணியாளர்கள், நிர்வாகத்தினரின் நன்மதிப்பைப் பெறுவர்.




## இயக்குநர் ராம் படத்தில் விக்ரம்

விஜய் சந்தர் இயக்கத்தில், `ஸ்கெட்ச்', கௌதம் மேனன் இயக்கத்தில் `துருவ நட்சத்திரம்' போன்ற படங்களில் நடித்துவருகிறார், விக்ரம். இந்தப் படங்களைத் தொடர்ந்து, விக்ரம் அடுத்து நடிக்க விருப்பது ராம் இயக்கத்தில்.

`கற்றது தமிழ்', 'தங்க மீன்கள்', 'தரமணி' படங்கள்மூலம் தனக்கென ஒரு தனி அடையாளத்தை உருவாக்கியவர், இயக்குநர் ராம். இவர், அடுத்ததாக மம்மூட்டி, அஞ்சலி நடிப்பில் 'பேரன்பு' படத்தை இயக்கி முடித்திருக்கிறார். இதைத் தொடர்ந்து, ராம் இயக்கவிருக்கும் அடுத்த படத்தைத் தயாரிக்கிறார், தாணு. 'காசி', 'பிதாமகன்', 'அந்நியன்', 'தெய்வத்திருமகள்' எனப் பல படங்களில் மிகச் சவாலான கதாபாத்திரங்களில் நடித்தவர், விக்ரம். இயக்குநர் ராமும் தனது படங்களில் நடிக்கும் முதன்மைக் கதாபாத்திரங்களின் நடிப்பை முழுமையாக வெளிப்படுத்துவதற்காக இடம் கொடுப்பவர்.

மாறுபட்ட கதைக்களங்களில் படம் இயக்கும் ராமும், விதவிதமான கதாபாத்திரங்களில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தும் விக்ரமும் இந்தப் படத்தில் இணைந்திருப்பதால், நிச்சயம் சினிமா ரசிகர்களுக்குத் திருப்திகரமான படமாக இது இருக்கும் என நம்பலாம்.

**நிலாவை ரசிக்கலாம் எண்டு மொட்டை மாடிக்குப் போனேன்... என்னை ரசிக்க ஒரு கூட்டம் கூடியது...**



**வேற யாரு நுளம்புங்க தான்**

**மீன் சாப்பிடும்போது... முள் குத்தாமலிருக்க...**



**செருப்புப் போட்டுக்கிட்டு சாப்பிடனும்...**



கணவன் மனைவிக்கு இடையே நடந்த சண்டையின்போது....


**கணவன்:** உன்னைப் பார்த்து நான் பயப்படுறேன்னு நினைச்சுடாதே...
**மனைவி:** பொய் சொல்லாதேங்கோ...
என்னைப் பொண்ணு பார்க்க வரும்போது 6 போரோட வந்தீங்க..
நிச்சயம் பண்ணும்போது 100 பேரோட வந்தீங்க...
தாலி கட்டும்போது 500 பேரைக் கூட்டிட்டு வந்தீங்க...
ஆனால் கல்யாணத்துக்கு அப்புறம் நான் உங்க வீட்டுக்கு தனியாகவே வந்திருக்கேன்.
பார்த்தீங்களா? இப்ப புரியுதா யாரு தைரியசாலி எண்டு..

**உலகில் 3 பங்கு கடல், ஒரு பங்கு நிலம் இருக்கிறதா சொல்றாங்க... தண்ணிக்குக் கீழேயும் நிலம்தானே இருக்கு...**




**அப்படின்னா 4 பங்கும் நிலம் தானே**

**இதுக்குத்தான்**



**ஊருக்குள்ள ஒரு அறிவாளி வேணும்னு சொல்றது**

**தியேட்டர்ல படம் பாக்கலாம்னு போயிருந்தேன்..., மகளிர் மட்டும்னு போட்டிருந்திச்சு அப்டியே திரும்பி வந்துட்டேன்**



| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 4 | 9 | | 2 | | | | |
| 2 | | | | | | 5 | 4 | |
| | 3 | | | 4 | | | | 2 |
| | | 1 | 7 | | | | | 4 |
| | 2 | | 6 | 1 | 3 | | 7 | |
| 9 | | | | | 4 | 3 | | |
| 8 | | | | 5 | | | 1 | |
| | | 2 | | | | | | |
| | | | | 6 | | 4 | 5 | |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 4 | 8 | 2 | 3 | 7 | 1 | 6 |
| 2 | 6 | 1 | 9 | 7 | 4 | 3 | 8 | 5 |
| 7 | 3 | 8 | 5 | 1 | 6 | 2 | 4 | 9 |
| 6 | 8 | 2 | 4 | 3 | 7 | 5 | 9 | 1 |
| 3 | 1 | 9 | 6 | 5 | 2 | 8 | 7 | 4 |
| 4 | 7 | 5 | 1 | 8 | 9 | 6 | 2 | 3 |
| 8 | 4 | 6 | 2 | 9 | 5 | 1 | 3 | 7 |
| 5 | 2 | 7 | 3 | 4 | 1 | 9 | 6 | 8 |
| 1 | 9 | 3 | 7 | 6 | 8 | 4 | 5 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளே 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை.



## முருங்கைப்பூ பொரியல்

**தேவைப்படும் பொருள்கள்:**
முருங்கைப்பூ - 2 கோப்பை
துருவிய தேங்காய் - 1 கோப்பை
பச்சை மிளகாய் - 2
சீரகம் - 2 தே.க
மஞ்சள் தூள் - சுவைக்கேற்ப
எண்ணெய் -தேவையான அளவு
உப்பு -தேவையான அளவு

**செய்முறை:**
துருவிய தேங்காய், பச்சை மிளகாய், சீரகம் என்பவற்றைச் சேர்த்து மையப் பதத்திற்கு அரைத்துக்கொள்ளவும். ஒரு சட்டியில் கொஞ்சம் எண்ணெய் விட்டு அரைத்த விழுதை மஞ்சள் சேர்த்து சில நிமிடங்கள் வதக்கவும். நன்கு வதங்கிய பின்னர் முருங்கைப்பூ, ஒரு கோப்பைத் தண்ணீர், தேவையான அளவு உப்புச் சேர்த்து 10 நிமிடம் மூடி வேகவைத்து இறக்கினால் சுவையான முருங்கைப்பூ பொரியல் தயார்.

# உடல்நலம் காக்கும் பப்பாளி



விற்றமின் 'ஏ' அதிகம் உள்ள பழங்களுள் முதலிடத்தில் மாம்பழமும் இரண்டாம் இடத்தில் பப்பாளியும் உள்ளன. பப்பாளி பழுக்கப் பழுக்க விற்றமின் சி சத்து அதிகரித்துக் கொண்டே செல்லும். 100 கிராம் காயாக உள்ள பப்பாளி யில் 32 மில்லி கிராமும், சிறிது பழுத்த பப்பாளியில் 4,072 மி.கிராமும், பாதிக்கு மேல் பழுத்ததில் 5,395 மி.கிராமும் நன்கு பழுத்ததில் 68 .136 மி.கிராமும் வைட்டமின் சி இருக்கும்.
விற்றமின்பி1, பி2, போலிக் அமிலம், பொட்டாசியம், பாஸ்பரஸ், நார்ச்சத்து போன்ற சத்துகளும் உள்ளன.
நன்கு வளர்ந்த பழுக்காத காய் வாட்டான பப்பாளிக் காயில் உள்ள புரோடியா லிடிக் என்சைம்ஸ் என்ற தாது புரதத்தையும் மேலும் சிலவற்றையும் செரிக்க வைக்கும் தன்மை உடையது. அர்ஜினைன் போன்ற அமினோ அமிலங்களை, இந்தப் புரதத்தைச் செரிக்க வைக்கும்போது உற்பத்தி செய்ய உதவுகிறது.
எமது உடலில் உள்ள தசைகளைப் பலப்படுத்தவும் கொழுப்பைக் குறைக்கவும் சமிபாட்டுக்கு பெரிதும் உதவுகிறது. இதயம், கல்லீரலைக் காப்பதுடன், பித்தம் நீக்கி உடலுக்குப் புத்துணர்ச்சியூட்டும். பல் தொடர்பான குறைகள், சிறுநீர்ப் பிரச்சினைகள், குருதிச் சோகை போன்றவற்றிற்கும் மருந்தாகப் பயன்படுகிறது.
பப்பாளிப் பழத்தைத் தேனில் தோய்த்துச் சாப்பிட்டால் நரம்புத் தளர்ச்சி குறையும். புற்றுநோய் செல்களிலுள்ள ஃபைப்ரின் (Fibrin) என்பதை அழிக்க பப்பாளியில் உள்ள பப்பைன் பயன்படுகிறது. உடலின் மற்ற பகுதிகளுக்கு புற்றுநோய் கலங்கள் பரவாமல் தடுக்கும் ஆற்றல் இதற்கு உள்ளது.
பப்பாளிப் பழத்தில் உள்ள சர்க்கரை குருதியில் நேரடியாகச் சேர்வதில்லை. எனவே, நீரிழிவு நோயாளிகளும் தினமும் பப்பாளி சாப்பிட்டு உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாத்துக் கொள்ளலாம். பட்டினி இருப்பவர்கள் பப்பாளிச் சாற்றையும், வெள்ளரிச் சாற்றையும் பருகி பயன் அடையலாம்.
பப்பாளி மரத்திலிருந்து வரும் பால் காயங்களைக் குணமாக்கும் வல்லமை கொண்டது. பப்பாளி மரத்தின் பச்சைப் பகுதிகளிலும் விதைகளிலும் உள்ள கார்பைன் (Carpine) எனும் ஆல்கலைட் இதயத் துடிப்பைச் சீராக வைக்க உதவுகிறது. பப்பாளி கண் பார்வைக்கும் உறுதுணை புரிகிறது.
தினமும் பப்பாளி சாப்பிடுபவர்களை எந்த நோயும் எளிதில் தாக்காது.
நோய்த் தொற்றுகளும் ஏற்படாது. இயற்கையிலேயே விசக் கிருமிகளைக் கொல்லும் சத்து பப்பாளியில் இருப்பதால், குருதியில் நோய்க்கிருமி தாக்கி நோயை உருவாக்கும் வாய்ப்பு இல்லை.



## இது புதுசு

பெண்களுக்கான முத்து மாலை வகைகள் சில சந்தைக்கு அறிமுக மாகியுள்ளன. இவை 950 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

## கடலுணவின் நேற்றைய விலை நிலவரம்



| | மன்னார் | கிளிநொச்சி | பருத்தித்துறை | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| இறால் | 600 | 800 | 1000 | 850 |
| நண்டு | 400 | 300 | 600 | 250 |
| கணவாய் | 600 | 700 | 800 | 400 |
| பாரை | 500 | 700 | 700 | 450 |
| சுறா | 500 | 800 | 1000 | 800 |
| சீலா | 400 | 350 | 400 | 300 |
| விளை | 500 | 600 | 500 | 200 |
| முரல் | 400 | 400 | 400 | 200 |
| கும்பிளா | 300 | 350 | 400 | 400 |
| கிளாக்கன் | 800 | 400 | 600 | 300 |
| ஓரா | 300 | 300 | 450 | 400 |
| திரளி | 200 | 300 | 200 | 150 |
| நகரை | 200 | 200 | 400 | 200 |
| சூடை | 150 | 150 | 200 | 100 |
| ஒட்டி | 200 | 200 | 300 | 300 |
| திருக்கை | 300 | 200 | 500 | 250 |
| மதனம் | 200 | 150 | 250 | 200 |
| கொய் | 150 | 80 | 80 | 20 |
| பாலை | 200 | 400 | 600 | 600 |
| வாளை | 150 | 250 | 500 | 300 |

## மரக்கறிகளின் நேற்றைய விலை

| மரக்கறிகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | சுன்னாகம் | நெல்லியடி | திருநெல்வேலி |
|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 90 | 70 | 80 | 70 | 40 |
| கத்தரி | 100 | 100 | 100 | 100 | 80 |
| மரவள்ளி | 70 | 90 | 80 | 60 | 70 |
| பயிற்றை | 100 | 100 | 120 | 120 | 120 |
| பாகல் | 200 | 160 | 250 | 180 | 180 |
| க.கிழங்கு | 80 | 120 | 100 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 140 | 140 | 140 | 160 | 120 |
| சி.வெங்காயம் | 300 | 320 | 250 | 250 | 220 |
| பூசணி | 40 | 50 | 40 | 50 | 40 |
| தக்காளி | 200 | 220 | 180 | 220 | 180 |
| வாழைக்காய் | 100 | 80 | 100 | 80 | 80 |
| கீரை | 30 | 40 | 30 | 15 | 30 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 30 | 30 | 30 |
| ப.மிளகாய் | 280 | 230 | 200 | 240 | 240 |
| புடோல் | 70 | 80 | 80 | 80 | 60 |
| கோவா | 100 | 80 | 80 | 80 | 60 |
| வெண்டி | 80 | 60 | 50 | 80 | 40 |
| போஞ்சி | 140 | 160 | 180 | 160 | 160 |
| லீக்ஸ் | 120 | 120 | 150 | 140 | 130 |
| தேங்காய் | 70 | 75 | 80 | 80 | 70 |
| உ.கிழங்கு | 120 | 110 | 110 | 120 | 120 |
| தேசிக்காய் | 250 | 300 | 350 | 240 | 300 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 15 | 15 |
| கறிமிளகாய் | 140 | 130 | 160 | 140 | 140 |
| கரட் | 70 | 120 | 200 | 120 | 160 |
| முருங்கைக்காய் | 70 | 50 | 80 | 20 | 100 |

# சிறுநீரகக் கற்களை கரைக்கும் கற்பூரவல்லி

அழகுக்காக வளர்க்கப்படும் செடி கற்பூரவல்லி. நறுமணத்தைத் தரக் கூடியது. இதற்கு ஓமவல்லி என்ற பெயரும் உண்டு. தொட்டால் மணம் தரக்கூடியது. சிறுநீரகக் கற்களைக் கரைக்கும் தன்மை கொண்டது. சளியைக் கரைத்து வெளித்தள்ளக் கூடியது. உள் உறுப்புகளைத் தூண்டக் கூடியது. காக்கா வலிப்புக்கு மருந்தாகிறது. பல்வேறு மருத்துவ குணங்களைக் கொண்டது. ஒரு கிளையை மட்டும் எடுத்து தொட்டியில் நட்டு வைத்தால் அது நன்றாக வளரும்.
கற்பூரவல்லியைப் பயன்படுத்தி சைனஸ், நெஞ்சுச் சளியை போக்கும் மருந்து வகைகளைத் தயாரிக்கலாம். பெரியவர்கள் என்றால் 2 கரண்டி, குழந்தைகளுக்கு ஒரு கரண்டி எடுக்கவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து குடித்துவர சளி குணமாகும். குழந்தைகளுக்கு மந்தத்தை போக்கும். இருமல் இல்லாமல் போகும். பசியைத் தூண்டக் கூடியது. மூக்கடைப்பு, தலைவலிக்கான மேல் பூச்சு மருந்து தயாரிக்கலாம்.
ஒரு ஸ்பூன் நல்லெண்ணெய், அரை ஸ்பூன் கற்பூரவல்லி இலை பசை, சிறிது சர்க்கரை சேர்த்து லேசாக சூடு செய்தபின் மூக்கு, நெற்றியில் பத்தாகப் போடும்போது மூக்கடைப்பு, தலைவலி சரியாகும். தலைப்பாரம், சைனஸ் குணமாகும். இதயம், உணவுப்பாதை, சிறுநீரகப் பாதைக்கு பலம் கொடுக்கும். அக்கி, அம்மை கொப்புளங்களுக்கான மருந்து தயாரிக்கலாம். கற்பூரவல்லி இலைச் சாறு அல்லது பசையை கொப்புளங்களுக்கு மேல் பூசினால் அவை சரியாகும்.
கற்பூரவல்லி இலையைப் பயன்படுத்தி வெள்ளைப்போக்கு, சிறுநீரகக் கற்களை கரைக்கும் மருந்து தயாரிக்கலாம். ஒரு வேளைக்கான தேனீர் தயாரிக்க 3 இலைகளை எடுத்து துண்டுகளாக்கிப் போடவும். இதனுடன் ஒரு கரண்டி தனியா, சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டுகொதிக்கவைக்கவும். இதை வடிக்கட்டி எடுத்துக் கொண்டால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கும். சிறுநீர்ப் பையில் தங்கியிருக்கும் கற்களைக்கரைத்துவெளித்தள்ளும்.



வெள்ளைப்படுதல் சரியாகும். கற்பூரவல்லியை பயன்படுத்தி குளிர்காய்ச்சலைப் போக்கும் மருந்து தயாரிக்கலாம். 3 கற்பூரவல்லி இலைகள், அரைக் கரண்டி சீரகத்துடன் சிறிது பனங்கற்கண்டு சேர்க்கவும். ஒரு குவளை நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும். வடிகட்டி காலை, மாலை வேளையில் குடித்துவர குளிர் காய்ச்சல், மலேரியா காய்ச்சல் குணமாகும். கல்லீரல், மண்ணீரல் பலப்படுவதுடன் அவைகளின் செயல்பாடுகள் சீராகும். கற்பூரவல்லி வீட்டில் இருக்க வேண்டிய உன்னதமான மூலிகை.
இதன் மணம் கொசுக்கள், பூச்சிகளை விரட்டக் கூடியது. கடலை மாவுடன் கற்பூரவல்லியை பஜ்ஜியாக செய்து குழந்தைகளுக்கு கொடுக்கும்போது இருமல், சளி, காய்ச்சல் குணமாகும்.கற்பூரவல்லி உணவுச் சமிபாட்டைத் தூண்டக் கூடியது. வலியைக் குறைக்கும். புண்களை ஆற்றும். மருக்களைக் கரைக்கும் தன்மை கொண்டது. ஆண்கள் ஓரிரு இலைகளை சாப்பிடுவதால் கற்கள் கரைந்து போகும். கற்பூரவல்லி சாற்றை மேலே பூசுவதால் அக்கி கொப்புளங்கள் வற்றும்.

## கட்டுரை

ஜோதா நகுலதாஸ்



# 'பச்சை' உடலை பாழாக்கும்

யாழ்ப்பாண இளைஞர்களுக்கிடையில் முளைவிடும் மற்றொரு நாகரீகமாக உருவெடுத்துக் கொண்டிருக்கிறது 'பச்சை'குத்திக் கொள்ளும் மரபு. இதைக் கொண்டு தமது உடல் அங்கங்களை அலங்கரித்து மகிழ்கிறார்கள் இவர்கள். எமது பெண்களுக்குள் முளைவிட்டுப் படர்ந்துவிட்ட நகை, நட்டுக்களால் உடலை அலங்கரித்துக் கொள்ளும் கலாசாரத்தை ஒத்த தொன்றாகவே 'பச்சை' குத்திக் கொள்ளும் பழக்கம் இளைஞர்களிடத்தில் காணப்படுகிறது. அதிலும் போருக்குப் பிற்பட்ட, வெளிநாட்டு, புலம்பெயர் தொடர்புகள் அதிகமிருக்கும் சம காலத்திலேயே இது உச்சங்கண்டிருக்கிறது.

**பச்சை குத்துதலில் ஏற்பட்ட மாற்றங்கள்**

ஆரம்பத்திலிருந்த 'பச்சை' குத்திக்கொள்ளும் போக்குக்கும், தற்போதுள்ள போக்குக்கும் சில பல வேறுபாடுகள் இருக்கின்றன. ஆரம்பத்தில் ஊர்மனைகளிலுள்ள ஒருசிலர் இயற்கையாகப் பெறப்பட்ட தாவரச் சாறுகளைப் பயன்படுத்தி தோல் மேற்பரப்பில் கைகளால், சில உள்ளூர் உபகரணங்களைப் பயன் படுத்தி உருவங்களை உருவாக்கினர். அந்த உருவங்கள் கிராமத் தெய்வ உருவங்களாக இருந்தன. இன்றைய 'பச்சை' குத்துதலில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. நவீன இயந்திர சாதனங்கள் கொண்டு அவை நிகழ்த்தப்படுகின்றன. அத்துடன் உடலில் வரைந்து கொள்ளும் உருவங்களும் விளங்கிக் கொள்ள முடியாதவையாகவிருக்கின்றன. சில இளைஞர்களின் கழுத்துப் பகுதிகளில் நீட்டமாக சீன மொழி எழுத்துருக்களும் வரையப்பட்டிருக்கும். இன்னும் சில புரியாத மொழிகளும் வரையப்படுகின்றன. அவை பார்வைக்கு அழகான வடிவங்களாகவிருக்கும். இத்தகைய 'பச்சை' குத்துதல்கள் தோலில் நிலையானவையாக இருக்கின்றன. இவற்றால் நோய் எதிர்ப்புச் சக்தி கடுமையாகப் பாதிக்கப்படும் என்று அண்மைய ஆய்வு ஒன்றில் எச்சரிக்கப்பட்டுள்ளது. ஏலவே இவ்வாறானவர்களின் குருதியைப் பரிமாறிக்கொள்ள முடியாது எனும் ஒரு கருத்தும் இருந்து வருகிறது.

**பச்சை குத்தும் 'மை'யில் ஏராளம் இரசாயனங்கள்**

இன்றைய காலத்தில் பச்சைக்குத்துவதற்குப் பயன்படுத்தும் 'மை' நச்சு நுண் துகள்கள் இருப்பதால் அது உடலின் உள்ளே சென்று நிணநீர் முடிச்சுகளைப் பெரிதாக்கும் ஆபத்து இருப்பதாக எச்சரிக்கப்படுகிறது. இதற்குப் பயன்படுத்தப்படும் பெரும்பாலான மைகளில் உயிர்ம நிறமிகள் உள்ளன. அத்துடன் இதில் நிக்கல், குரோமியம், மாங்கனீஸ் அல்லது கோபால்ட் போன்ற நச்சுப்பொருள்களும் உள்ளன. பொதுவாகவே இதில் காபன் கருப்பு என்ற பொருளுடன் ரைற்றனியம் டை ஒக்சைட்டும் பயன்படுத்தப்படுகிறது. இது தீந்தைகள் தயாரிப்புக்கும் பயன்படுத்தப்படுவது. இதனால் ஏற்படும் தீங்குகள் அதனை இரசாயனப் பகுப்பாய்வுக்கு உட்படுத்திய பிறகே தெரியவருகிறது. ஜெர்மனியில் உள்ள ஐரோப்பிய சிங்க்ரோட்ரான் கதிர்வீச்சு சோதனைக் கூடத்தில் 'எக்ஸ்ரே' கதிர்களைக் கொண்டுபச்சைகுத்தியிருப்பவர்களின் உடற் பாகங்களை ஆய்வு செய்ததிலேயே இந்த மைகளில் ரைற்றனியம் டை ஒக்சைட் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

**இளைஞர்களுக்கு அவதானம் தேவை**

பச்சை குத்தியவர்களின் தோலில்இதன்நுண்துகள்கள் பல மைக்ரோ மீற்றர்கள் அளவுக்கு உள்ளே பரவியிருப்பதும், அவை நிணநீர் முடிச்சுகளுக்குள் புகுந்து விடுவதும் தெரியவந்துள்ளது. இந்த நுண் துகள்களை உள்வாங்கியதும் நிண நீர் முடிச்சுகள் பெரிதாகிவிடுகின்றன. நீண்ட காலம் நீடித்து உடலின் நோய் எதிர்ப்புச் சக்திகளுக்கு இது தீங்கு விளைவிக்கும். இந்தக் குறிப்புக்கள் உண்மையானவை. இது குறித்த ஆய்வு ஒன்று 'சயண்டிபிக் றிப்போர்ட்ஸ்'எனும் ஆங்கில இதழிலும் வெளியாகியுள்ளது. இதில் நாட்டமுள்ள எமது இளைஞர்கள் இனியாவது அவதானமாக இருக்கவேண்டும்.

---

## சொற்சிலம்பம் போட்டி இல: 489

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | 3 | | ■ | 4 |
| | ■ | | ■ | | ■ | 5 | |
| 6 | | | | | 7 | | ■ |
| | ■ | | ■ | 8 | | | ■ |
| ■ | 9 | ■ | 10 | | | ■ | 11 |
| 12 | | | | ■ | 13 | 14 | |
| ■ | | ■ | ■ | 15 | ■ | 16 | |
| 17 | | ■ | 18 | | | | |

**அனுப்புபவர் பெயர்:**..............................................

**முழுமையான தபால் விலாசம்:** ..............................

..............................................................

**கைபொப்பம்:**..............................................

**இடமிருந்து வலம்**

1. கொடுமை / அநியாயம்
5.வழங்கு
6. புத்த மத பிடகங்களில் இரண்டாவது
8. நெஞ்சு
10. உள்ளம் (குழம்பியுள்ளது)
13. குற்றமில்லாத
13. கத்தி தீட்டப் பயன்படும் சிறிய கருவி(குழம்பியுள்ளது)
16. பார்க்க்
17. பிரணவ மந்திரம்
18. கண்கட்டி வித்தை

**மேலிருந்து கீழ்**

1.அறிவில்லாதவன்
2. விலை
3. தரம் குறைந்த
4. மத்தி
5. ஆண் மானுக்கு இது அழகைக் கொடுக்கும்
7. வினைப் பயன்
9. இருக்கை
10. கைவிடு
11. காடு
14. வேளையற்ற வேளை / நடுநிசி
15. பெரிய வீடுகளில் பிள்ளை வளர்ப்போரை இப்படி அழைப்பர்

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால்பரிசுக்கும்பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 487 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) சுகதேகி (6)காமன் (7)காமதேனு (9)தால (10)சுடுகாடு (11)ரம்பை (16)அகிம்சை (17)பறி (18)சளி (19)தகவு (21)கால் (22) மா (23)சிறுமை

**மேலிருந்து கீழ்**
(1)சுகாதாரம் (2)கமலம் (3)தேன் (4)சமகாலம் (5)ஈனு (7)காடு (8)தேடு (12)பைங்கிளி (13)நெற்றி (15)அசைவு (16) அசல் (17) பதறு (20)கசி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 487 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
க.தையல்நாயகி,
'இந்திரகிரி', வதிரி,
கரவெட்டி.

**2 ஆம் பரிசு**
கே.இராஜகோபால்,
அடைக்கலம் தோட்டம்,
கந்தசுவாமி கோயிலடி,
வட்டுக்கோட்டை

**3 ஆம் பரிசு**
லி.சோதிசந்தானலட்சுமி,
"கோபல கிரி" மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

**4 ஆம் பரிசு**
த.நித்தியகலா,
ஏழாலை மத்தி,
ஏழாலை.

**5 ஆம் பரிசு**
தா. ஸ்ரீதரன்,
சுழிபுரம் மேற்கு,
சுழிபுரம்.

**பாராட்டுப் பெறுவோர்**

இ.சனோஜன்,
சங்கம் வீதி,
நுணாவில் மத்தி,
சாவகச்சேரி.

திருமதி ப.திருவேங்கடவல்லி,
இல. 422(614) கே.கே.எஸ் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே
ரூபா 300/=, ரூபா 250/=,
ரூபா 200=, ரூபா 150/=
ரூபா 100/=
பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி இல.489**

பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (27.09.2017 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.489இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 01.10.2017 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில் போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ள இயலும். போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 487 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

## மேடம்

குரு, சுக்கிரன், சந்திரன் நன்மை வழங்குவர். செயல்களில் நேர்த்தி நிறைந்திருக்கும். உடன்பிறந்தவருக்கு உதவி செய்து மகிழ்வீர்கள். வாகனப் பயணம் இனிதாக அமையும். பூர்வீகச் சொத்தில் பராமரிப்பு செலவு கூடும். புத்திரரின் குழப்பமான எண்ணங்களை சரி செய்வீர்கள். சீரான ஓய்வு உடல்நலத்தை பாதுகாக்கும். மனைவியின் அன்பும், பாசமும் நம்பிக்கை அளிக்கும். தொழில், வியாபாரத்தில் கடின உழைப்பால் வருமானம் அதிகரிக்கும். பணியாளர்கள், நிர்வாகத்தின் வழிகாட்டுதலை தவறாமல் பின்பற்றுவது நல்லது. பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

## இடபம்

ராகு, சுக்கிரன், புதன் நற்பலன் தருவர். சமூக நிகழ்வுகளால் மனதில் புதிய மாற்றம் உண்டாகும். நண்பரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாகனப் பயணத்தால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகளின் மனதில் நல்ல சிந்தனை வளர உதவுவீர்கள். ஆரோக்கியம் பலம் பெறும். ஆடம்பரச் செலவை தவிர்ப்பது அவசியம். மனைவியின் செயல் குடும்பத்தின் ஒற்றுமைக்கு வழிவகுக்கும். தொழில், வியாபாரத்தில் பங்குதாரர்களின் ஆலோசனையால் லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் கூடுதல் வேலை வாய்ப்பு மூலம் வருமானத்தை பெருக்குவர். பெண்கள் குடும்ப நலனைப் பேணிக் காத்திடுவர். மாணவர்கள், பெற்றோரின் சொல்லுக்கு மதிப்புக் கொடுப்பர்.

## மிதுனம்

பெரும்பான்மை கிரகங்களால் நன்மை உண்டாகும். சூழ்நிலை உணர்ந்து செயல்படுவது நல்லது. உடன்பிறந்தவர்களின் தேவையறிந்து நிறை வேற்றுவீர்கள். வீடு, வாகனத்தில் நவீன மாற்றம் செய்ய வாய்ப்புண்டு. பிள்ளைகள் நற்செயலில் ஈடுபட்டு பெருமை தேடித் தருவர். பணக்கடனில் ஒரு பகுதியை செலுத்துவீர்கள். மனைவி குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்க துணை புரிவார். தொழில், வியாபார வளர்ச்சியால் பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சிறப்பாக பணிபுரிந்து பரிசு, பாராட்டு பெறுவர். பெண்கள் இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் படிப்பில் முன்னேற்றம் அடைவர்.

## கடகம்

சுக்கிரன், சந்திரன் அனுகூலம் தர காத்திருக்கின்றனர். புதிய உத்தி மூலம் பணிகளை முடிப்பீர்கள். அன்றாட வாழ்வில் இனிய அனுபவம் உண்டாகும். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகள் உங்களின் வழிகாட்டுதலை ஏற்று முன்னேறுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். உடல்நிலை சீர் பெறும். மனைவியின் செயல் பாராட்டும்படி அமைந்திடும். தொழில், வியாபாரத்தில் லாபம் அளவுடன் இருக்கும். பணியாளர்களுக்கு எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் வீட்டுச் செலவில் சிக்கனம் பின்பற்றுவர். மாணவர்களுக்கு படிப்பில் ஞாபகத்திறன் வளரும்.

## சிங்கம்

கேது, சுக்கிரன், சந்திரனால் நற்பலன் உண்டாகும். எதிர்பார்த்த நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் அதிக அன்பு பாராட்டுவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனத்தில் மிதவேகம் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் மேம்படுவர். பணவரவுக்கேற்ப ஆடம்பரச் செலவும் அதிகரிக்கும். மனைவி உங்களின் நற்குணம் அறிந்து பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் புதிய சாதனை படைப்பீர்கள். பணியாளர்கள் எளிதாக பணி இலக்கை நிறைவேற்றுவர். வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் உண்டாகும். பெண்களுக்கு, தாய் வீட்டினரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் மட்டும் கவனம் செலுத்துவது நல்லது.

## கன்னி

ராகு, குரு, சுக்கிரன் சனீஸ்வரர் ராஜயோக பலன் தருவர். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். நற்பெயரும், புகழும் தேடி வரும். வாகனத்தின் பயன்பாடு திருப்தி அளிக்கும். பிள்ளைகள் படிப்பு, வேலைவாய்ப்பில் மேம்பாடு காண்பர். உடல்நிலை சீராக இருக்கும். வழக்கு, விவகாரத்தில் வெற்றி கிடைக்கும். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்குத் துணை நிற்கும். தொழில், வியாபாரத்தில் வியத்தகு முன்னேற்றம் உண்டாகும். பணியாளர்கள் கூடுதல் தொழில்நுட்பம் அறிந்து கொள்வர். பெண்கள் இஷ்டதெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

# வார ராசிபலன் உங்களுக்கு எப்படி?

## 17.09.2017 தொடக்கம் 23.09.2017 வரை

## துலாம்

சூரியன், புதன், செவ்வாய் ஆதாய இடத்தில் அமர்ந்துள்ளனர். செயல்களில் இருந்த குளறுபடி மறையும். இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நல்லது. குடும்பத்தில் ஒற்றுமை பேணுவது அவசியம். வாகனப் பயணத்தால் ஓரளவு நன்மை உண்டாகும். பிள்ளைகளின் விருப்பம் அறிந்து நிறைவேற்ற முயல்வீர்கள். விருந்து, விழாவில் கலந்து கொள்வதில் ஆர்வம் குறையலாம். மனைவியின் கருத்தை குறை சொல்ல வேண்டாம். தொழில், வியாபாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய்யவும். பணியாளர்கள், நிர்வாகத்தின் சட்டதிட்டம் மதித்து செயல்படவும். மாணவர்கள் முயற்சியுடன் படித்தால் முன்னேற்றம் உண்டாகும்.

## விருச்சிகம்

சூரியன், புதன், சுக்கிரன், கேது அனுகூல அமர்வில் உள்ளனர். மனதில் தயக்கம் விலகி தைரியம் உண்டாகும். அன்றாட பணிகளை அக்கறையுடன் நிறைவேற்றுவீர்கள். அவமதித்தவரும் வியந்து பாராட்டுவர். பூர்வீகச் சொத்தில் வருமானம் அதிகரிக்கும். பகைவரால் குறுக்கிட்ட தடைகளை சரி செய்வீர்கள். மனைவியின் அன்பு, பாசம் கண்டு மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபிவிருத்தி பணியில் ஈடுபடுவீர்கள். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்களுக்கு தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்புக்காக கூடுதல் நேரம் ஒதுக்குவர்.

## தனுசு

குரு, சுக்கிரன், சந்திரனால் நன்மை கிடைக்கும். மனதில் உற்சாகமும், செயல்களில் வசீகரமும் உண்டாகும். குடும்பத்தில் சுப நிகழ்வு பற்றிய பேச்சு நடக்கும். பணவரவும், நன்மையும் அதிகரிக்கும். புத்திரரின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். எதிரியால் இருந்த தொந்தரவு மறையும். உறவினர்களின் ஆலோசனை வளர்ச்சிக்கு துணை நிற்கும். மனைவி குடும்பநலனில் கவனம் செலுத்துவார். தொழில், வியாபாரத்தில் கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் உயரும். பணியாளர்கள் விண்ணப்பித்த கடனுதவி கிடைக்கும். பெண்கள் புத்தாடை, நகை வாங்குவர். மாணவர்கள் படிப்புடன் விளையாட்டிலும் ஈடுபடுவர்.

## மகரம்

சந்திரன், புதன், சனீஸ்வரர் நற்பலன் தருவர். மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். நண்பரின் உதவி தக்க சமயத்தில் கிடைக்கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். பிள்ளைகளின் ஆர்வம் மிகுந்த செயல் நிறைவேற உதவுவீர்கள். அலைச்சல் பயணத்தைத் தவிர்ப்பது நல்லது. சொந்தச் சிரமங்களால் எதிரிகள் இடம் மாறிச் செல்வர். ஆரோக்கியம் பலம் பெறும். மனைவி வழி உறவினர்கள் இணக்கமாகச் செயல்படுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் புதிய சாதனை படைப்பீர்கள். பணியாளர்கள் பணியிலக்கை விரைந்து முடிப்பர். பெண்கள், உறவினர் குடும்பத்தில் சுப நிகழ்ச்சி நடத்த உதவுவர். மாணவர்கள் படிப்பில் விருப்பத்துடன் ஈடுபடுவர்.


## கும்பம்

ராகு, குரு, சந்திரனால் நன்மை உண்டாகும். பேச்சிலும், செயலிலும் நேர்மை நிறைந்திருக்கும். உறவினர்கள் இணக்கமுடன் செயற்படுவர். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை அதிகரிக்கும். பிள்ளைகளை வழி நடத்துவதில், இதமான அணுகுமுறை பேணுவது நல்லது. ஆரோக்கியம் மேம்படும். நண்பருக்கு கடனாகக் கொடுத்த பணம் கிடைக்கும். மனைவி விரும்பிக் கேட்ட பொருளை வாங்கித் தருவீர்கள். வெளியூர் பயணம் மூலம் இனிய அனுபவம் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இடையூறு நீங்கி ஆதாயம் அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய இடமாற்றம் கிடைக்க வாயப்புண்டு. பெண்களுக்கு, தாய் வீட்டாரின் உதவி கிடைக்கும். மாணவர்கள் படிப்பில் தரத் தேர்ச்சி காண்பர்.

## மீனம்

பெரும்பான்மை கிரகங்கள் வியத்தகு நற்பலன் தருவர். செயல்களில் சமயோசிதம் நிறைந்திருக்கும். நண்பர்களின் தேவையறிந்து உதவுவீர்கள். குடும்பத்துக்கான தேவை எளிதில் பூர்த்தியாகும். புதிய வீடு, வாகனம் வாங்க அனுகூலம் உண்டாகும். பிள்ளைகள் நற்செயலில் ஈடுபட்டு பெருமை சேர்ப்பர். இஷ்டதெய்வ அருளால் துன்பம் விலகும். மனைவியின் செயற்பாடு வளர்ச்சிக்கு வழிவகுக்கும். அரசு வகையில் உதவி கிடைக்க வாய்ப்புண்டு. தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்ததை விட ஆதாயம் உயரும். பணியாளர்களுக்கு விரும்பிய சலுகை ஒவ்வொன்றாகக் கிடைக்கும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.

அகிம்சையை அகிலத்துக்கு அறிமுகப்படுத்தியதாக சொல்வித்தை காட்டிய பாரத தேசத்துக்கு சரிநிகர் சமானமாய் ஆகாரத்தின் ஆதாரமின்றிய தியாக வில்வித்தையை புயபலமாக, மனதிடமாக திலீபன் எடுத்தியம்புகிறான்.



# தியாகத்தின் நேசக்கரம்

செ.கயல்விழி

1987 ஆம் ஆண்டு காலப்பகுதி தமிழர்களின் வாழ்வியலில் பல போராட்ட வரையறைகளுக்கான தோற்றுவாய்களை தந்திருந்தது. குறிப்பாக இந்தியப் படைகள் அமைதி காக்கும் படைகள் என்ற போர்வையில் தன்னலன் சார்ந்த திட்டமிடல்களின் கோர்வையாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் வந்திறங்கிய பின்பும் இராணுவத்தின் அட்டூழியம் ஒருபுறம் தொடர்ந்து கொண்டேயிருந்தன. தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை சீண்டும் வகையிலான 'ஈ.என்.டி.எல்.எவ்.' அமைப்பின் வியூகங்கள் அமைந்திருந்தன. புலிகள் மீதான துப்பாக்கிச் சூடுகளாக அவை மாற்றங்கண்டிருந்தன. இந்த இடைவிலகல்கள் அதிலிருந்து மீண்டதான இலட்சிய அடைவு நோக்கம் என்பதன் வழி விடுதலைப்புலிகளின் பயணப்பாதைகள் செப்பனிடப்பட்டன.

### விடுதலை உணர்வின் பயணம்

இந்த சந்தர்ப்பத்தில் விடுதலை உணர்விலும் உரிமையின் பற்றுதல்க் கள நகர்விலும் உறுதியாக இருந்த முதன்மை போராளியான திலீபனின் சிந்தனை வெளியில் அகிம்சையின் மாற்றுவழி தென்பை தந்தது. காந்தியத்தின் வழி இந்திய அடக்குமுறையை எதிர்த்து தமிழரின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து உணவு ஒறுப்பு போராட்டத்தை தொடர அவனை முன்மொழிந்தது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் அனுமதியோடும் நெறிப்படுத்தலோடும் அகிம்சை வழிபோராட்டம் காத்திரம் பெறுகிறது. 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 11 ஆம், 12 ஆம் திகதி விடுதலைப் புலிகள் அமைப்பின் முக்கிய போராளிகளுக்கு தகவல் அறியத்தரப்பட்டதோடு 13 ஆம் திகதி அப்போதைய இந்தியத் தூதுவராக பணிபுரிந்த டிக்சித்துக்கு எழுத்து மூலம் உணவு ஒறுப்பு போராட்டத்திற்கான தகவல் பரிமாறப்பட்டது.

செப்ரெம்பர் 15 ஆம் திகதி அதிகாலை கொக்குவில் பொற்பதி வீதியில் அமைந்திருந்த விடுதலைப்புலிகளின் முகாமிலிருந்து திலீபன் அகிம்சையின் திருவுருவமாக புறப்படுகிறான். நல்லூர் கந்தனின் பின் வீதியில் அமைந்திருந்த கந்தன் கருணை இல்லத்தினை சென்றடைகின்றான்.

அங்கிருந்த போராளிகள், தளபதிகளுடன் கலந்துரையாடியபடி அளவளாவினான். அங்கிருந்து புறப்பட்டு நல்லூர் ஆலய வீதியில் அமைந்திருந்த போராட்ட மேடைக்கு போராளிகள் மற்றும் தளபதிகளின் அழைப்பாணையோடு அழைத்துச் செல்லப்படுகின்றான்.

### தாயின் ஆசீர்வாதம்

இந்த சந்தர்ப்பத்திலே தமிழீழத்தின் தாயொருத்தி திலீபனை இடைமறித்து நெற்றியில் வீபூதிப் பூச்சிடுகிறாள். வீரத்திலகம் இட்டு இலட்சிய வேள்விக்கு ஆசீர்வாதமளித்து வழியனுப்பி வைக்கிறாள். மேடையில் அமைதியின் மொத்த வடிவமாக அகிம்சை எனும் ஆயுதம் கொண்டு கொலுவிருத்தப்பட்டவன் ஆகாரம் எதுவுமின்றி உயிரை உருக்க ஆரம்பம் தருகிறான். அகிம்சையை அகிலத்துக்கு அறிமுகப்படுத்தியதாக சொல்வித்தை காட்டிய பாரத தேசத்துக்கு சரிநிகர் சமானமாய் ஆகாரத்தின் ஆதாரமின்றிய தியாக வில்வித்தையை புயபலமாக, மனதிடமாக திலீபன் எடுத்தியம்புகிறான்.

### அண்ணனின் அரவணைப்பு

போராட்டத்தின் முதல் நாள் இரவு 11 மணி வரை உரையாடிக் கொண்டிருந்த திலீபனைச் சூழ சலசலப்பு ஆரவாரமுறுகிறது. தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் மேடைக்கு வருகின்றார். அவரோடு தளபதிகளான சொர்ணம்,



இம்ரான் போன்றோரும் வருகை தந்திருந்தனர். திலீபனுக்கு அருகில் இருந்து உரையாடி நிலமைகளை தெளிவுபடுத்துகின்றார். உரையாடல் முடித்து வெளியேறும் போது தலைவர் மேடையில் உள்ள சக போராளிகளை அழைத்தார், "திலீபன் நீரும் அருந்தாமல் இருப்பதனால் அதிகம் பேச அனுமதியாதீர்கள். சோர்வடைந்து விடுவான். அவன் மீது கரிசனை எடுங்கள்" எனத் தெரிவித்து விடை பெறுகின்றார். திலீபனின் போராட்டத்தை அறிந்து கொண்ட மக்கள் குடாநாட்டின் பல பகுதிகளில் இருந்தும் நல்லூரை நோக்கி படையெடுக்கத் தொடங்கினர். 16 ஆம் திகதி மக்கள் முன்னிலையில் திலீபன் உரையாற்றினான்.

### ஆன்ம உருக்கத்தின் கால ஓட்டம்

இரண்டாம் நாள் போராட்டத்தைத் தொடர்ந்து. அகிம்சையின் ஒளி எங்கும் வியாபித்தபடியே இருந்தது. பாரத தேசமும் நிலமைகளை அவதானித்து நிஜங்களின் நிழல் விம்பங்களை சற்றே உணரத் தொடங்குகிறது. நாழிகைகளும், நாள்களும் காலத்தோடு முட்டிமோதிக் கடந்து ஆர்ப்பரித்தன. உரிமையின் தாகத்தை எங்கும் வியாகபம் செய்தன.

எங்கும் சோகத்தின் ஆரவாரம். அதன் வழியே விடுதலை உணர்வின் தேடல். தமிழின விடியலுக்கான இலட்சிய வேள்வி எல்லோர் மனங்களிலும் சுடர் விட வேண்டும் என்பதான உறுதியுரை தன்னிலை பெற்று எல்லோரிடமும் இயைபுறுகிறது. இந்தத் தருணங்களிடை தியாகப் பயணத்தின் 12 ஆம் நாள் புலர்கிறது. எந்த மாற்றங்களும் தென்படவில்லை. மக்கள் அனைவரும் ஒருவரையொருவர் முகம் பார்த்துக் கொள்கின்றனர். ஆனால் உரையாட மனதில் திடமின்றி இருந்தனர். மருத்துவரை அழைத்துவரத் தயாராகின்றனர். யாழ்.போதனா மருத்துவமனையில் அப்போது கடமையில் இருந்த மருத்துவர் சிவகுமாரன் திலீபனை மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தி நிலமைகளை அறிந்து கொண்டு மக்களுக்கு அதனை தெரியப்படுத்தினார்.

### உணர்வின் ஞாபகம்

அன்றைய நாளில் என்ன நடந்தது என்பதை மருத்துவர் சிவகுமாரன் கூறும்போது, "போராளிகள் இருவர் மருத்துவமனைக்கு வருகை தந்தனர். திலீபனின் உடல்நிலை தொடர்பில் என்னிடம் எடுத்துக்கூறினர். நோயாளர் காவு வண்டியில் எல்லோருமாக ஏறிக் கொண்டோம். நல்லூரை நோக்கி வேகமாகப் பயணிக்கிறோம். நோயாளர் காவு வண்டியானது புறப்பட்டு சில நிமிடங்களில் வீரமாகாளி அம்மன் கோவிலை அடைகின்றது. எங்கும் மக்கள் கூட்டம். வாகனத்தில் செல்ல சாரதி முயற்சிக்கின்றார். முடியவில்லை. நல்லூர் ஆலய முன்றலை நோக்கி நடக்க ஆரம்பித்தோம். அதுவும் முடியாத காரியமாகவே இருந்தது. நீண்ட முயற்சிகளின் பின்பு மேடையை அடைந்தோம். திலீபனின் நாடித் துடிப்பினை அறிய முயன்ற போது அவனது ஆத்மா அணைந்துவிட்டதை உணர்ந்து கொண்டேன். அவனது பாதத்தினை தொட்டு வணங்கி அங்கே கூடியிருந்த மக்களை பார்த்தும் வணங்கினேன். அனைவரும் நிலமையை புரிந்து கொண்டனர். அப்போது எழுந்த மக்கள் குரல் இப்போதும் ஞாபகங்களை கண்ணீரிடை கனதியாக்குகிறது" - என்றார்.

### மன உறுதியின் படிப்பினை

*'கந்தன் கருணை' யிலிருந்துன்*
*கால் நடந்த போது*
*கோயில் வீதியே குளிர்ந்து போனது.*
*கூட்டி வந்து கொலுவிருத்தினோம்.*
*சாட்சியாக எல்லாவற்றையும்*
*பார்த்தபடி*
*வீற்றிருந்தாள் முத்துமாரி.*
*பன்னிரண்டு நாட்களாக உள்ளொடுங்கி*
*நீ உருகியபோது*
*வெள்ளை மணல் வீதி விம்மியது.*
*உன்னெதிரே நின்று எச்சில்*
*விழுங்கியபோது*
*குற்றவுணர்வு எம்மைக் குதறியது.*
*வரண்டவுடன் நாவு அண்ணத்தில்*
*ஒட்டியபோது*
*திரண்டிருந்த சுற்றம் தேம்பியது.........!!*

நேரம் சரியாக 10.48 மணி, மக்கள் கூட்டத்திடை இருந்து எழுந்த அழு குரல்களையும் அவல ஓசைகளையும் எவராலும் கட்டுப்படுத்த முடியவில்லை. திலீபனின் உடலை மேடையிலிருந்து கீழே இறக்கி வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்காக வாகனத்தில் ஏற்றினோம். அப்போது நேரம் நண்பகலை தாண்டியிருந்தது.

இராணுவச் சீருடை தரித்த திலீபனின் பூதவுடல் தலைவரின் அஞ்சலிக்காக எடுத்துச் செல்லப்படுகின்றது. அதனைத் தொடர்ந்து நல்லையின் வீதியில் அவன் தியாக வேள்வியை ஆரம்பித்த அதே மேடையிலே மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்படுகின்றது. மக்கள் சோகத்தை வார்த்தைகளில் வர்ணிக்க முடியவில்லை. இந்த நிலையிலே 2 மணி நேர கால அவகாசம் வழங்கப்படும். திலீபனின் உடல் அடக்கம் செய்யப்பட வேண்டும் என்பதான உத்தரவினை இந்திய இராணுவம் புலிகளிடம் தெரியப்படுத்துகின்றது. புலிகள் மேலும் கோபம் கொள்கின்றனர். உத்தரவுகளை செவிமடுக்கவுமில்லை தமது மன உறுதியை கைவிடவுமில்லை. நிலமைகளை உணர்ந்துகொண்ட இந்திய இராணுவம் மாலை வேளையிலே ஊரடங்கு அறிவித்தலை வெளியிடுகின்றது. எதனையும் பொருட்படுத்தாது இலட்சக்கணக்கான மக்கள் நல்லையின் வீதியெங்கும் ஒன்றுகூடுகின்றனர். மிக அமைதியாக தமது இறுதி வணக்கத்தினை செலுத்துகின்றனர். அங்கிருந்து திலீபனின் தியாக உடல் அஞ்சலிக்காக குடாநாட்டின் சகல பகுதிகளுக்கும் ஊர்வலமாக அலங்கரிக்கப்பட்ட ஊர்தியில் எடுத்துச் செல்லப்பட்டது.

### தீராத தாகம்

மருத்துவபீட மாணவனாக இருந்து தியாகச் சாவடைந்த இலட்சிய வேள்வியில் உயர்ந்தவனின் இன்னுமோர் எண்ண மேலீடு ஏற்றுக்கொள்ளப்படுகிறது. அவனது புகழுடல் மருத்துவ பீட மாணவர்களின் கற்கைக்காக ஒப்படைக்கப்பட்டது. அவனது ஈகம் தமிழீழத்தின் உன்னத தியாக வரலாற்றை உலகெங்கும் பறைசாற்றியது. பல பாடங்களை உலகறியச் செய்தது.

கட்டுரை

# தொடரும் அவலம்

ந. லோகதயாளன்

அள்ள அள்ளக் குறையாமல் வந்துகொண்டே இருக்குமாம் அட்சய பாத்திரத்தில் இருக்கும் பதார்த்தம். அது அமுதசுரபி. ஆனால், எழுத எழுத அவலங்களை மட்டுமே சுமந்து நிற்கின்றது எமது முல்லை மண். இறுதிப்போரில் இடம்பெற்ற எமது உடன் பிறப்புக்களின் அழிப்புப் படலத்துக்குள் இராணுவ இயத்திரத்தின் ஓர் எறிகணை வெடித்து ஓய்ந்தபோது அவனை "மகனே..!" என அழைக்கும் தாயினதும், தந்தையினதும் குரல்களும் அடங்கி ஓய்ந்தன. இருப்பினும் அப்போது தனக்குண்டான அந்த இழப்பை முழுமையாக அறியாத பாலகனாக இருந்தான் கனகலிங்கம் பிரதாபன் எனும் அந்தச் சிறுவன். இராணுவ எறிகணைக்குப் பலியிடப்பட்ட தமிழர்களின் பட்டியலில் பெற்றோரைப் பறி கொடுத்த அந்தச் சிறுவனுக்கு பேத்தியாரும், மாமன், மாமியுமே ஆறுதலாக இருந்தனர். அவர்கள் வயது முதிர்ந்தவர்கள்.

**வறியப்பட்டவர்களுக்கு மேலும் வஞ்சனை**

அவனுடைய பேத்தியோ அல்லது மாமன், மாமியோ வெளிநாட்டுப் பணத்தில் வாழ்க்கை நடத்தவில்லை. மாமனார் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தயவால் வீதிகளில் உள்ள பற்றைகள், புற்கள், பூண்டுகளை அகற்றும் பணியிலேயே ஈடுபட்டுள்ளார். ஏனைய இருவரும் வீட்டுப் பணிகளுடன். அவ்வளவுதான் அந்தக் குடும்பத்தின் பொருளாதாரம். சிறுவன் தஞ்சமடைந்து வாழ்ந்த மாமா, மாமியாருக்குக்கூட இறைவன் வஞ்சணை செய்யத் தவறவில்லை. ஆம் அவர்களின் ஒரு பிள்ளைக்கு நடப்பதில் சிரமம் ஏற்பட்டிருந்தது. அது பிறப்பால் ஏற்பட்ட குறைபாடு. இறுதிப் போரின் பின்பு மெனிக்பாம் முகாமின் வதைகளையும் நிறைவு செய்து ஒருநேரக் கஞ்சியை அருந்தக்கூடிய நிலையில் சொந்த ஊரான முல்லைத்தீவு - ஒலுமடு கிராமத்தில் அந்தக் குடும்பம் மீளக்குடியமர்ந்தது. வனமும்வனம்சூழ்ந்ததுமானது அந்தப் பகுதி. இப்போது பிரதாபன் அந்தக் குடும்பத்தின் 3ஆவது பிள்ளை. மாமா, மாமியின் முதல் இருவரும் பெண் பிள்ளைகள். இவர்களின் எதிர்காலம் கருதி அரசால் வழங்கப்பட்ட ஒரு வீடு மட்டும் ஒருவாறு இவர்களுக்குக் கிடைத்தது.



**நீர் எடுக்கச் சென்றவேளையில் நிகழ்ந்த சோகம்**

இவர்களின் மூத்த இரு பெண் பிள்ளைகளும் முல்லைத்தீவில் உள்ள இல்லமொன்றில் தங்கி நின்று கல்வி கற்கின்றனர். இந்த நிலையிலேயே அந்தச் சோக நிகழ்வு கடந்த 13ஆம் திகதி மாலை சிறுவனின் இல்லத்தில் இடம்பெற்றது. அதாவது சிறுவனின் பசிக்கு உணவளித்த மாமியார் குடத்துக்குள் எஞ்சியிருந்த நீரை எடுத்துச் சாப்பிட்டுக்கொண்டிருக்கும் சிறுவனுக்கு வழங்கி விட்டுக் குடிநீர் எடுப்பதற்காகச் சென்றுள்ளார். வீட்டில் இருந்து சுமார் 300 மீற்றர்கள் தூரம் வரைக்கும் செல்ல வேண்டும் அந்த நல்ல தண்ணீர் கிணற்றுக்கு. அவ்வாறு நீர் எடுக்கச் சென்றவர் நீரை எடுத்து வருவதற்கு கிட்டத்தட்ட 20நிமிட இடைவெளி ஏற்பட்டிருக்கிறது. அவ்வளவு இடைவெளிக்குப் பிறகு வீடு திரும்பியவருக்கு அதிர்ச்சி காத்திருந்தது. அதாவது வீட்டுக்கு முன்பாகச் சிலர் கூடி நின்றனர். அதை அவதானித்தவர் ஓடிச் சென்று சிறுவனைக் கண்டு அதிர்ந்து போனார். உயிரற்றுக் கிடந்தான் அவன். உடனடியாக மாங்குளம் வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றார். அங்கு சேர்க்கப்பட்ட சிறுவனின் உயிர் பிரிந்திருந்தது உறுதி செய்யப்பட்டது.



**புரையேறியதிலேயே பிரிந்தது உயிர்**

இவ்வாறு உயிரிழந்த சிறுவனின் உடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. அங்கே சடலத்தைப் பரிசோதித்த சட்ட மருத்துவ அதிகாரி குறித்த விடயத்தை மாவட்ட நீதிமன்றின் கவனத்துக்குக் கொண்டு சென்றார். குறித்த விடயத்தை ஆராய்ந்த மாவட்ட நீதிமன்றம் சிறுவனின் வயதைக் கருத்தில் எடுத்து உடலை ஓர் சட்ட வைத்திய நிபுணரைக் கொண்டு ஆய்வு செய்து அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டது. இதன் அடிப்படையில் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு சட்ட மருத்துவ நிபுணரான மயூரதன் கடந்த வியாழன் இரவு சிறுவனின் சடலத்தைப் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தினார்.

பிரேத பரிசோதனையின் அடிப்படையில் உணவருந்திக்கொண்டிருந்த சினுவனின் காலில் மிகச் சிறிய காயம் ஒன்று ஏற்பட்டுள்ளது. இது எலி போன்ற ஏதாவது கடித்திருக்கலாம் எனக் கருதப்படுவதாகவும் அதன்போது ஏற்பட்ட அச்சம், வலியால் சிறுவன் அழுதவேளையில் உணவு புரையேறி மூச்சுத் திணறல் ஏற்பட்டே சாவு சம்பவித்திருக்கலாம் என முடிவுக்கு வரப்பட்டது.

**இவர்களைப் போன்றோர் இனியாவது கவனிக்கப் படுவார்களா?**

தாயும் இன்றித் தந்தையும் இன்றி வாழ்ந்த சிறுவனின் பராமரிப்பாளர்களின் வாழ்விடங்கள் போதிய அடிப்படை வசதிகள் இல்லாதவை. சிரமத்தின் மத்தியிலானவாழ்வை அவர்கள் வாழ்கிறார்கள். அதிலும் குடிநீரைப் பெறுவதற்குத் தொலைதூரம் செல்லவேண்டியிருப்பது கவனிக்கத்தக்கது. இதற்கும் மேலாக அந்தக் குடும்பத்தின் பொருளாதாரப் பின்னணி மிகவும் குறைந்திருக்கின்றது. இறந்த சிறுவனின் உறவுகளுக்கு தமது அன்றாட உணவைத் தேடுவதே வாழ்க்கையாக இருக்கின்றது. இவர்களைப் போன்று இன்றும் ஏராளம் ஏராளமாக இந்த மண்ணில் இவ்வாறு வாழும் குடும்பங்கள் பலவும் இருக்கின்றன. இனியாவது அரசும், எமது அரசியல்வாதிகளும் இப்படி அல்லல் பட்டுக்கொண்டிருக்கும் மக்களை எட்டிப்பாப்பார்களா? அல்லது 20ஆம் சரத்தென்றும், சமஷ்டி எனவும் வடக்கு-கிழக்கு இணைப்பு என்றும் இன்னும் காலத்தைக் கடத்தித் தமது வாழ்க்கையை உயர்த்திக் கொண்டிருப்பார்களா? விடையில்லாமல் தொடரும் கேள்வியைப்போலவே இந்த மக்களின் அவலங்களும் தொடர்கின்றன.

கவிதை

# பிசாசுகளுக்காகக் காத்திருப்போம்!

சூரியநிலா



எங்கள் வாழ்க்கை
தங்கச் சுரங்கத்தின்
காபன் மொனெக்சைட்டுக்களால்
தழுவிக் கொள்ளப்படுகின்றது!

வடக்கின் வறட்சியைப்போல
வங்குறோத்து அரசியலும்
எங்களைக் காக்க வைத்தபடி
காய்ந்து போய்க் கிடக்கிறது!

நீதி தேடிப் படியேறிய
எங்களை
கண்களைக் கட்டிய
தேவதைகள்
கண்டபடி
குத்திக் கொள்கின்றன!
தராசுகளின்
தாழ்ந்த பக்கங்களால்
எங்களுக்கான நீதிகள்
உயர்ந்த பக்கத்தில்
அமர்ந்து விடுகின்றன!

இனி...
பாவமன்னிப்புப் பெற்ற
பிசாசுகளுக்காக்
காத்திருப்போம்
அவற்றின் கண்களாவது
திறந்திருக்கட்டும்



விளையாட்டு

பிரகாஸ்

# மட்ரிட்டின் செல்லப்பிள்ளை மார்செலோ

ஸ்பெய்னின் புகழ்பெற்ற கால்பந்தாட்டக் கழகமான ரியல் மட்ரிட்டின் செல்லப்பிள்ளையாக மார்செலோ தொடர்ந்தும் இருப்பார் என்பதற்கு அவருக்கும், மட்ரிட் கழகத்துக்கும் இடையில் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய ஒப்பந்தம் தக்க சான்றாக அமைந்துள்ளது.

பிரேசில் அணியின் நட்சத்திர வீரரான மார்செலோ, ஸ்பெய்னின் ரியல் மட்ரிட் கழகத்துக்காகவும் விளையாடி வருகிறார். மட்ரிட்டின் முக்கியப் புள்ளிகளில் ஒருவராகவும் அவர் விளங்குகிறார். அணியின் வெற்றிக் கொண்டாட்டங்களில் மார்செலோவுக்கு முக்கிய இடம் வழங்கப்படும். இதனால் மார்செலோவை மட்ரிட்டின் செல்லப்பிள்ளை என்றே பன்னாட்டு ஊடகங்கள் பலவும் குறிப்பிட்டன. அவருக்கும் மட்ரிட்டுக்கும் இடையிலான ஒப்பந்தம் இந்த மாத்துடன் முடிவுக்கு வரும் நிலையில் இருந்தது. எதிர்பார்க்கப்பட்டதைப் போல் மார்செலோவின் வின் ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது. அதுவும் அடுத்த 2022ஆம் ஆண்டு வரை இந்த ஒப்பந்த நீட்டிப்பு கைச்சாத்தாகியுள்ளது.





# 100 வருடங்களின் பின்னர்...

சரியாக 100 வருடங்களின் பின்னர் ஒலிம்பிக் தொடரை மீண்டும் நடத்தவுள்ளது பிரான்ஸின் தலைநகர் பரிஸ்.

ஒலிம்பிக் தொடரை நடத்துவதை ஒவ்வொரு நாடும் பெரும் வரமாகக் கருதுகிறது. இதற்கேற்ப ஒலிம்பிக் தொடரின் உரிமத்தைப் பெறுவதில் வளர்ச்சியடைந்த நாடுகளிடையே கடும் போட்டி நிலவும். கடந்த வருட ஒலிம்பிக் தொடர் தென்னமரிக்க நாடானபிரேசிலின்ரியோடிஜெனிரோ நகரில் இடம்பெற்றது. அடுத்த ஒலிம்பிக் தொடர் எதிர்வரும் 2020ஆம் ஆண்டு ஜப்பானின் தலைநகர் டோக்கியோவில் நடைபெறவுள்ளது.

2024ஆம் ஆண்டு ஒலிம்பிக் தொடரை நடத்தும் உரிமத்தை வென்றுள்ளது பிரான்ஸின் பரிஸ் நகரம். ஹங்கேரியின் புடாபெஸ்ட், அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர்களை பின்னுக்குத் தள்ளி இந்த வாயப்பைப் பெற்றது பரிஸ். முன்னதாக இரண்டு தடவைகள் பரிஸில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்றுள்ளது.

கடைசியாக 1924ஆம் ஆண்டு அங்கு ஒலிம்பிக் தொடர் நடைபெற்றது. தற்போது சரியாக 100 வருடங்களின் பின்னர் மீண்டும் அங்கு ஒலிம்பிக் தொடர் நடைபெறவுள்ளது.




# மெஸ்ஸியா, ரொனால்டோவா மீண்டும் கருத்து மோதல்கள்




கடந்த ஒருமாத காலத்துக்கும் அதிகமாக மௌனித்து இருந்த 'மெஸ்ஸியா ரொனால்டோவா' என்கிற வாங்குவாதங்கள் தற்போது மீண்டும் புத்துயிர் பெற ஆரம்பித்துள்ளன.

ஐரோப்பியக் கழகங்களுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக், ஸ்பானியக் கழகங்களுக்கு இடையிலான லா லிகா தொடர் ஆகியன மீண்டும் (2017 - 2018 பருவகாலம்) ஆரம்பமாகியுள்ளன. கடந்த ஒரு மாத காலத்துக்கும் மேலாக வீரர்கள் முழு ஓய்வில் இருந்தனர். தொடர்கள் மீண்டும் ஆரம்பித்ததும் மெஸ்ஸியா ரொனால்டோவா யார் சிறந்த வீரர் என்ற வாக்குவாதங்களும் ரசிகர்களிடையே பரவலாக ஆரம்பித்துள்ளது. மெஸ்ஸி பார்சிலோனாவுக்காகவும், ரொனால்டோ ரியல் மட்ரிட் கழகத்துக்காகவும் விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# நம்பிக்கை!

விரைவில் பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ண மொன்றை வெல்வேன்.



பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ணமொன்றை விரைவில் வென்றேதீருவேன் என்று சபதமெ டுத்துள்ளார் ரஷ்ய ரென்னிஸ் வீராங்கனை மரிய செரபோவா.

கடந்த 2015ஆம் ஆண்டு நடை பெற்ற ஆஸ்திரேலியத் தொடரின் போது செரபோவாவிடம் இருந்து பெறப்பட்ட குருதி மாதிரிகளில் தடைசெய்யப்பட்ட ஊக்க மருந்தான மெல்டோனியம் இருந்தமை கண்டறியப்பட்டது.

இதையடுத்து இரண்டு வருடங்கள் அவருக்குத் தடை விதிக்கப்பட்டது. இந்தத் தடைக்கலாம் முடிந்து மிக அண்மையிலேயே செரபோவா களத்துக்குத் திரும்பியிருந்தார். கடந்த வாரம் முடிவடைந்த அமெரிக்கத் தொடர்தான் செரபோவா தடைக்குப் பின்னர் எதிர்கொண்ட முதலாவது பன்னாட்டு அந்தஸ்துபெற்ற பகிரங்கத் தொடராக அமைந்தது. இந்தத் தொடரில் செரபோவா மீது பெரியளவில் எதிர்பார்ப்பிருந்தது. எனினும் அவர் சாதிக்கவில்லை. என்றாலும் தான் விரைவில் பன்னாட்டு அந்தஸ்து பெற்ற கிண்ண மொன்றை வெல்வேன் என்று அவர் சபதமெடுத்துள்ளாராம்.

# மண் வாசனை

(25ஆம் பக்கத் தொடர்ச்சி)

"ஓகோ, அப்ப நான் கிழவன். நீ இப்பவும் வாலைக் குமரி என்று நினைப்போ. அதுக்கென்ன போட்டு வா."

வாயாட வாயில்லை பூரணத்துக்கு. சருவச் சட்டியையும் செம்பையும் 'தொம்' என்று வைரமுத்தருக்கு முன்னே வைத்துவிட்டு மாடு கட்டப் போய்விட்டாள் கிழவி.

வைரமுத்தர் எழுந்து கால், முகங் கழுவிக் கொண்டு வந்து அதேயிடத்தில் அமர்ந்தர். பூரணம் இன்னும் வரவில்லை. மெதுவாக இலையைத் தூக்கிப் பார்த்தார். உள்ளே பழஞ்சோறு, ஒடியற் பிட்டோடு மரவள்ளிக்கிழங்குப் பழங்கறியும் சேர்த்துத் தயிர்விட்டுக் குழைத்த கொழு கொழுவென்ற குழையல் பார்க்கப் பார்க்க வாயூறியது. பசி கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. என்றாலும் எல்லாவற்றையும் அடக்கிக் கொண்டார். அதற்குக் காரணம் இருந்தது. பூரணம் திரட்டித் திரட்டிக் கையில் வைத்தால் அல்லவா அவரால் தின்ன முடியும். மூடி வைத்துவிட்டு இருந்தார்.

பூரணம் கடு கடுப்போடுதான் வந்தாள். நெற்றியிலே முத்து முத்தாக வியர்வை துளிர்த்திருந்தது. கன்னம் இரண்டிலும் வியர்வை ஆறு, கால்வாய்கள் கண்டு ஓடியது. வாளிப்பான அந்த உடலை அசைத்தெடுத்தது நெடுமூச்சு.

"இந்த வேலையெல்லாம் இனிமேல் என்னாலை ஏலாது. என்னாலை ஏலாதென்றால் உங்களாலும் ஏலாதுதான். பேசாமல் ஒரு பிள்ளையோடு போயிருப்பம்" எத்தனையோ காலமாகச் சிறு சிறு ஊற்றாக ஊறி உள்ளே நிறைந்து அலைமோதிய ஆசைவெள்ளம். கிழவனது ஆண்மை ஆணையிட அடங்கிக் கிடந்த அது, வேளைகிடைத்த வேளையிலே வெளியே பெருகத் தொடங்கியது.

"என்ன அழையா விருந்தாளியாப் போகச் சொல்லிறியோ?" கிழவன் வேடிக்கை பண்ணினான். ஆனால், அதனுள்ளீடாகப் புருடத்துவ கம்பீரம் நிமிர்ந்து நின்றது.

"பேச்சைப் பாருங்கோ பேச்சை இவர் பெரிய மகாராசா கொடி, குடை, ஆலவட்டத்தோடு வந்து அழைக்க வேணுமாம். மீசை நரைச்சாலும் ஆசையும் அதிகாரமும் நரைக்கவில்லை."

"பின்னை என்ன, உனக்கும் எனக்கும் என்ன குறைவாம். நான் ராசா நீ ராசாத்தி. அவர்கள் வந்து கூப்பிட்டபோது பார்த்துக் கொள்ளலாம் இப்ப உனக்கோ எனக்கோ எதுவும் வந்துவிடவில்லையே"

"ஐயையோ மறந்துபோனன். காலமை இரண்டு காயிதம் வந்தது. ஒருவேளை வரச் சொல்லித்தான் இரண்டுபேரும் எழுதியிருக்கோ என்னவோ. கொண்டு வரட்டோ"

பூரணத்தின் ஆசை வெகு மூர்க்கமாக நிமிர்ந்தது. இரு கடிதங்களையும் பற்றிக் கொண்டு தன்னை வெளிக்காட்டியது.

"கொஞ்சம் பொறு. அதுக்கு இப்ப என்ன அவசரம். சாப்பிட்டு முடியட்டும்" வைரமுத்தர் கிழவியின் ஆசைக் கலவைகளைப் பிரித்துத் தனிக் கூறுகளாக்கிப் பார்த்தார். கிழவனிடம் குறும்பு முளைத்தது.

"ம் கோபியாதை, உள்ளதைச் சொல்... பிள்ளைகளைப் பார்க்க ஆசைப்படுகிறாயா? பேரப்பிள்ளைகளைக் கொஞ்சிச் சீராட்டவோ அல்லது சாகக்கு முந்திக் கொஞ்ச நாளைக்காவது மாமியார் அதிகாரம் பண்ணவோ... அல்லது..."

"எப்பவும் நையாண்டிதான். இன்னும் எத்தனை நாளைக்கோ. உள்ளே அழுகத் தொடங்கிவிட்ட இந்தப் பூசணிக்காயைப் பெருமான் எப்ப தூக்கி எறிகிறாரோ அப்ப சளிஞ்சுபோய், வாயைப் பிளந்து கிடக்க வேண்டியதுதான். அதுக்கிடையில கொஞ்ச நாளைக்காவது..." பூரணம் வெம்பி வெடித்துக் கண்ணீர் சிந்தினாள்.

பிள்ளைகளையும் பேரப்பிள்ளைகளையும் நினைத்தபோது அவள் உள்ளத்தின் உள்ளெல்லாம் உருகி நெகிழ்ந்தது. தாய்மைத் துடிப்பு உடலணுக்கள் எல்லாவற்றிலும் ஊறியது. பழஞ்சோறு திரட்டி எடுத்த கை நடுங்கியது. அவள் உணர்ச்சிப் பெருநெருப்பிலே கருகி, ஒரு கணம் தன்னை மறந்து மூச்சிழந்திருந்து வெளி வந்தாள். அவளைக் கண்டு வைரமுத்தரின் கண்களும் குளமாகிவிட, தனது சால்வைத் துண்டையெடுத்துப் பூரணத்தின் கண்ணீரைத் துடைத்தார்.

'என்ன பூரணம், உன்னத்தனை பாவமும் வருத்தமும் எனக்கில்லையோ உன்னது தாய்ப்பாசம் அடங்காது. என்னதை அடக்கியடக்கி, குமைந்து குமைந்து பார்க்கிறேன். நினைத்தவைகளை நினைத்து, நினைத்து நினைக்க முடியாதவைகளையும் நினைத்துப் பார்த்து நான் படும் பாடு... எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்த பிறகு ஒரு முடிபுக்கு வந்துவிட்டன்..."

பூரணம் கண்களை அகல விரித்துக்கொண்டு. அந்தக் கண்களிலே ஆசை, இரசவோட்டமாய் ஓட, அந்தக் கண்களினாலே கேட்டாள், 'என்ன' என்று.

"இரண்டு பேரையும் வரச்சொல்லி இண்டைக்கே எழுதப்போறன். வந்ததும் சொத்தெல்லாத்தையும் இரண்டாய்ப் பிரிச்சு எழுதிப்போட்டு..."

கிழவனைக் கட்டியணைத்து, கொஞ்சிக் குலவவேண்டும்போல அத்தனை மகிழ்ச்சி கிழவியிலே கிளர்ந்தெழுந்தது. அதற்கு அணையிட அவள் விரும்பாவிட்டாலும். வயது அணையிட்டது.

"அது தான் சரி, நாங்கள் வாழ்ந்தது போதும். சின்னஞ் சிறுசுகள் ஆண்டனுபவிக்கட்டும். இந்தாருங்கோ தண்ணி. சருவச் சட்டிக்கை கையைக் கழுவிப்போட்டுக் குடியுங்கோ காயிதத்தை எடுத்துக்கொண்டு வாறன்."

பூரணம் சேலைத்தலைப்பிலே கையைத் துடைத்துக்கொண்டு குடுகுடுத்தாள். அடுத்த நெடியிலே கண்ணாடிக் கூடும் இரண்டு கடிதங்களும் கொண்டு வந்தாள்.

வைரமுத்தர் கண்ணாடியைத் துடைத்து மாட்டிக்கொண்டு, ஒரு கடிதத்தைப் பிரித்து வாசித்தார். அவர் முகத்திலே கணத்துக்குக் கணம் உணர்ச்சித் திவலைகள் அள்ளித்தெளிக்கப்பட்டன. அந்தத் திவலைகளைக் கொண்டே, கடிதத்தில் என்ன இருக்கிறதென்று கண்டுகொள்ள முயன்று தவித்தாள் பூரணம். ஈற்றிலே முகத்திலே துலாம்பர மாகத் தெரிந்த வெறுப்போடு அக்கடித்தை மடித்து வெகு நிதானத்தோடு துண்டு துண்டாகக் கிழித்தார். பட படவென அடித்துக் கொள்ளும் மனப் பறவையின் ஒரு சிறகை யாரோ வெட்டிவிடுவது போலத் துடித்தாள் கிழவி.

"என்னவாம்..." அவள் குரலில் ஏக்கம் குடியிருந்தது.

"இது உன் மூத்த மகன் எழுதினது. மூத்த பேரன் பூனாவுக்கோ எங்கேயா விவசாயம் படிக்கப் போறானம். இப்ப தன்னிடம் பணம் இல்லையாம் தன்ரை பங்கை வித்துத் தரட்டாம்"

"அதுக்கென்ன என்ர செல்வங்கள் படிச்சு நல்லாய் வரட்டும். அப்பனே முருகா! அந்தக் குஞ்சுகளுக்கு ஒரு குறையும் வர விடாதை"

"ம்... அப்படியே?" வைரமுத்தர் கடைவாய்க்குள் சிரித்துவிட்டு மற்றக் கடிதத்தைப் படித்தார். மீண்டும் பூரணம் அவரது முகத்தில் எழுதப்படும் உணர்ச்சி வரிகளை வாசிக்க முயன்றாள். கடிதத்தைப் படித்து முடித்த வைரமுத்தர் மிக மிக நிதானத்தோடு அதையும் துண்டாக்கினார். மற்றச் சிறகும் அரிபட்ட பூரணத்தின் மனப் பறவை மேலுங்கீழுந்தொங்கி அவத்தைப் பட்டது.

"என்ன" பூரணம் ஏங்கினாள்.

"இளையவன் இன்னுமொரு கடை எடுத்து விட்டானாம். வியாபாரத்தைப் பெருக்க வேண்டுமாம் பெருவாரியாகக் காசு தேவையாம். அதற்காகத் தன் பங்கு காணி, பூமிகளைத் தரட்டாம் விற்பதற்கு"

"இளையவன் எப்பவும் கெட்டிக்காரன்தான். பாவம் நாலு பெண்ணைப் பெற்றுவிட்டான். சம்பாதிக்கத்தானே வேணும்"

"ம்... அப்படியா' அதற்குமேல் எதுவும் பேசாமல், பல பல எண்ணங்களை உள்வாங்கி மனக்கல்லில் மோதி மோதிச் சிதறுதேங்காய் அடித்து விளையாடினார் வைரமுத்தர்.

"இப்ப என்ன செய்யப் போறியள் எழுதுங்கோவன்"

"எழுதத்தான் போறன்"

"என்ன எழுதப்போறியள்?"

"உடனே வாருங்கோ என்றுதான்"

"இப்படி எழுதுங்கோ, இந்தக் கடிதத்தைத் தந்தியாய்ப் பாவிச்சு உடனே வரச்சொல்லி, என்ன..."

"வேறென்ன எழுத வேணும்..."

"வாறபோது தனியே வரவேண்டாம். பொடிச்சி, பேரப்பிள்ளைகள் ஒருத்தர் தவறாமல் வரவேணும்... அதுவும் பத்துப் பதினைஞ்சு நாள் நிற்கக் கூடியதாய் வரவேணும்..."

"வேறென்ன..."

"வேறென்னத்தை நான் சொல்ல..."

"பார் பூரணம், எழுதப்போறன் எல்லாரும் உடனே வாருங்கோ பெண்சாதி பிள்ளைகளோடு வாருங்கோ. பத்து நாளல்ல ஒரு மாதம் நிற்கக் கூடிய ஆயத்தத்தோடு வாருங்கோ... ஆனால், நீயும் நானும் இருக்கிற வரையில் எதையும் விற்பதற்காக எவனும் வரவேண்டாம். இந்த நிலம்தான் இந்தக் குலத்தாய். அவளை விற்று விட்டுக் கிடைக்கிற படிப்பும் வேண்டாம் வியாபாரமும் வேண்டாம். நாங்கள் இப்போது யாருக்கும் எதையும் எழுதிக் கொடுக்கிற யோசனையில்லை. இப்படித்தான் எழுதப்போறன் சரிதானே..."

"பூரணம் விக்கித்துப் போனாள். மடை திறந்தாற்போலக் கண்ணீர் ஆறாகப் பெருகியது. கண்ணீர்த்திரையினூடாக அவள் தன் கணவனைப் பார்த்தாள். தன் முப்பத்திரண்டு வருடக் குடும்ப வாழ்க்கையில் கண்டிராத புதுமைக் கணவனை அவள் கண்டாள். மனம் பெருமையால் விம்மிப் பொங்கிப் பூரித்தது

'நான் ஒரு மடைச்சி"

"சீ, யாக் அப்படிச் சொன்னது? நீ ஒரு பெண் என் மனைவி இரு பிள்ளைகளின் தாய்"

"ஓகோ, அப்ப நான் கிழவன். நீ இப்பவும் வாலைக் குமரி என்று நினைப்போ. அதுக்கென்ன போட்டு வா." வாயாட வாயில்லை பூரணத்துக்கு. சருவச் சட்டியையும் செம்பையும் 'தொம்' என்று வைரமுத்தருக்கு முன்னே வைத்துவிட்டு மாடு கட்டப் போய்விட்டாள் கிழவி.



# கனவுப் பொதி

கவிதை

மயூரன்

யாரும் கொண்டிராத
கனவுப் பொதிக்கு
சொந்தக்காரர்கள் அவர்களே.
நிகரற்ற தியாகத்தாலும்
விண்துளைத்த வீரத்தாலும்
உதிரத்தாலும்
சதைகளாலுமானது
அக்கனவுப் பொதி

பிரித்துப்பார்க்க எண்ணினேன்
முடியவில்லை
பிரித்துப்பார்க்கும்
அருகதை எனக்கில்லை
அடி நெஞ்சில் மூண்ட தீயிலும்
ஆழியின் ஆழத்தை விஞ்சிய
அர்ப்பணிப்பிலும்
உருப்பெற்றதல்லவா அக்கனவுகள்

மரிக்காத ஒருவரிடம்
இன்னதைக் கேட்டிருந்தேன்
உள்ளிருப்பதைக் கூறிச்சென்றார்

அக்கனவுகளில் அவர்களில்லை
பச்சை வயல் வரப்பில்
நானும் என் தோழர்களும்
பட்டம் ஏற்றுகிறோம்

யாருமற்ற
பெருவெளியில்
நடு இரவில்
தோழிகள் இருவர்
நட்சத்திரங்களைக்
கணக்கிடுகிறார்கள்.



# உங்களுக்கு மீன்தொட்டி வேதாந்தம் தெரியுமா?

தஞ்சாவூர்க் கவிராயர்



எனது வீட்டில் ஒரு மீன்தொட்டிஇருக்கிறது. அதில்குறுக்கும் நெடுக்குமாய் அழகு மீன்கள் நீந்துகின்றன. தங்கமீன்கள் இரண்டு. கருப்புமீன்கள்நான்கு, நீலவண்ணமீன்கள்இரண்டு. அழுக்கு நிறத்தில் மீன் தொட்டியின் கண்ணாடிச் சுவரில் ஒட்டிக்கொண்டு ஒருமீன்.

ஒருநாள் எனக்கு அலுவலக விடுமுறை. மீன்தொட்டியை வேடிக்கை பார்க்க உட்கார்ந்தேன். மீன்களின் சுறுசுறுப்பான நளினமான அசைவுகளுடன் கூடிய நீச்சல்பார்க்கத்தெவிட்டவில்லை. இவ்வளவுஇயக்கத்தின் நடுவிலும் தொட்டிக்குள் நிசப்தம் நிலவியது.

தங்கமீன்களின்வயிற்றில்தங்கமுலாம்பூசியிருக்கிறது. முதுகும் வாலும் ஒரேஞ்ச் நிறம்.

முகத்தில்இரண்டும்கலந்தஅற்புதப்பூச்சு. கரும்புள்ளிக் கண்கள். இரண்டு மீன்களும் கணவன் மனைவி போலும். நீலவண்ண மீன்களைப்பார்த்தால் தம்பதிகளாகத் தெரியவில்லை. நண்பர்களாக இருக்கக்கூடும்.

### மீசை ராஜா

'டாங்க் க்ளீனர்' என்று அழைக்கப்படும் மீனுக்கு 'சாமியார் மீன்' என்றுபெயர்சூட்டினேன். சதா சர்வகாலமும் தொட்டியின் கண்ணாடிச் சுவரில் ஒட்டிக்கொண்டு தியானத்தில் மூழ்கியிருந்தது.

பாசிகள் விருட்சங்களாக நிற்கின்றன. கூழாங்கற்கள் பாறைகளாய்த் தோன்றின. திடீரென்று பாறையின் பின்னாலிருந்து பெரிய மீசையுடன் ஒரு மீன்வெளிப்பட்டது. மீனின் உடம்பை விட நீளமான மீசை. இப்படி பெரியமீசையுடன்ஒருமீனைநான்பார்த்ததுஇல்லை. மீசைக்காரன்மீசையைஆட்டியபடிதொட்டியைச்சுற்றி வந்தான். மீசையின் ஓரங்களில் நெடுகக் கூரான முட்கள். ஆக மீசை என்பது ஒரு உறுப்பு மட்டுமல்ல, ஆயுதமும் கூட என்று தோன்றியது.

மீசைக்காரனின்தோரணைஏதோஅந்தக்கண்ணாடித் தொட்டியேதன்ஆட்சிக்குஉட்பட்டபிரதேசம்போலவும் அங்கு நீந்தும் மற்ற மீன்கள் அதன் பிரஜைகள் போலவுமாக இருந்தது.

எல்லாம் ஒழுங்காகவும் செம்மையாகவும்நடைபெறுகிறதாஎன்பதுபோல்பார்த்துவிட்டுப் பாசியின் பின்னிருந்த ஒரு இருண்டபகுதிக்குள்மறைந்துவிட்டான்.

### திடீர்த் தாக்குதல்

நான் பார்த்துக்கொண்டிருக்கும்போதே அந்த 'விபரீதம்' நிகழ்ந்தது. பாசியின்பின்புறமிருந்து மீசைக்காரன் வெளிப்பட்டான். அமைதியாக நீந்திக்கொண்டிருந் தங்கமீனின் முகத்தில் மீசையால் ஒரு பிராண்டு பிராண்டிவிட்டு விடுக்கென்று மறைந்துவிட்டான். தங்கமீன் துடித்துப் போய்விட்டது. அப்போதுதான் கவனித்தேன் அதன் வயிறு உப்பி இருந்தது. பிள்ளைத்தாய்ச்சி போலும், அடப்பாவமே! மீசைக்காரன் மறுபடியும் வெளிப்பட்டர்ன். மறுபடி தங்கமீனை நெருங்கினான். தங்கமீன் பாசிக்குள் பதுங்க முயன்றது. ஆனால்... பிரயோசனமில்லை! ஒரு பாய்ச்சல், ஒரு பிராண்டல் மீசைக்காரன் மறைந்துவிட்டான். இந்த முறைதங்கமீனின் வயிற்றில் தாக்குதல் பலமாக இருந்தது. சிவந்தகோடு தெரிந்தது. தங்கமீன்துடிதுடித்தபடிபுருஷனிடம் சென்றது. புருஷன் ஆக்ரோஷத்துடன் தொட்டியைச் சுற்றி வந்தான்.

மீசைக்காரனை வெளியே இழுத்துவிட்டான். மீசைக்காரனின் மீசை சாட்டை போல் சுழன்றது.

நீலமீன்கள்இரண்டும்இப்போதுதங்கமீனுக்குப் பரிந்துகொண்டு மீசைக்காரனைத் தாக்கின! மீன்தொட்டியில் திடீரென்று ஏற்பட்ட களேபரத்தில் பாசிமரங்கள் ஆடின. தொட்டிநீர் கலங்கிப்போய் மீன்களையே பார்க்க முடியவில்லை. என்னநடக்கிறதுஎன்றேதெரியவில்லை.

### அகிம்சைப் பாடம்!

மீன்கள்எல்லாம் ஒரே சமயத்தில் சண்டைபோடத் தொடங்கிவிட்டன. இவ்வளவு ரகளைக்குநடுவிலும் மீன்தொட்டியின் கண்ணாடிச் சுவரில் அழுக்கு மீனின் (சாமியார் மீன்!) தியானம் தொடர்ந்தது. மழை வரும்போல் இருந்தது. நான் மொட்டைமாடியில் காயப்போட்ட துணிகளை எடுத்துவரப் போனேன். திரும்பியபோது தொட்டியைக் கவனித்தேன். என்ன ஆச்சரியம்!

தொட்டிநீர் தெள்ளத் தெளிவாக இருந்தது. மீன்கள் எல்லாம்ஒற்றுமையாகநீந்திக்கொண்டிருந்தன. தங்கமீன்களுடன்மீசைக்காரன்விளையாடிக்கொண்டிருந்தான். நீல மீன்கள் மேலும் கீழும் நீந்தின. சற்றுமுன் போர்க்களமாகக் காட்சியளித்த மீன் தொட்டியில் அமைதியும் நிசப்தமும் நிலவின. அடடா! வாழ்க்கையை ஒரு சின்னஞ்சிறு கண்ணாடித் தொட்டிக்குள் கழிக்குமாறு சபிக்கப்பட்ட பரிதாப ஜீவன்கள்!

அவற்றுக்குள் ஏற்பட்ட சண்டை, களேபரம் மறைந்து நான்சற்றுஅகன்றுதிரும்புவதற்குள்சமாதானம்ஏற்பட்டிருக்கிறது.

இப்போது அவற்றுக்கு இடையே எத்தனை ஒற்றுமை, அன்னியோன்னியம்! காரணம் எதுவானாலும் (மீன்களின் உலகத்தை மனிதக் கண்கள் கொண்டு பார்க்க முடியாது என்றாலும்) ஒரு சிறு கண்ணாடித் தொட்டிக்குள் அது சாத்தியமாகியிருக்கிறது என்ற எண்ணம் எனக்குள் எழுந்தது! என் யோசனைகளைக் கலைத்துக்கொண்டுநண்பரின்குரல்கேட்டது. அவர் முகத்தில் வருத்தம், வாட்டம். "வீட்டில்ஒரேகளோபரம். உப்புப்பெறாதவிஷயத்துக்குசண்டைசோர். மனசேசரியில்லை. நீங்கள்தான் ஆறுதலாக ஏதாவது சொல்லவேண்டும்" என்றார்.

"உங்களுக்குமீன்தொட்டிவேதாந்தம்தெரியுமா?"என்று நான் ஆரம்பித்தேன்.

*நன்றி - தஹிந்து*


## மணமகள் தேவை

கனடா கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 33 வயதுடைய (1984.08.02) Waiting for Medical Recidancy Present Working as Pharamedic Tech ஆக தொழில் புரியும் மகனுக்கு (25 - 32) வயதுடைய நன்கு ஆங்கிலம் பேசக்கூடிய (Fullnt English) மணமகள் தேவை.

தொடர்புகளுக்கு:
Nathan48@live.com +6479833164(Canada)

குறுகிய, காலத்தில் நீங்களும் ஒரு பட்டதாரியாகலாம்.

**BA, BBA, BCOM, BSC, MA, MSC, MBA, ETC**

உங்களின் கடந்தகால தகைமைகளையும், அனுபவங்களையும் வைத்து RPL என்படும் சர்வதேச முறையினால் பட்டங்கள் பெற்றுத்தரப்படும்.

**Can be Used for :**
Government / Private Jobs | Promotions
Migrations | Higher Studies, etc
(UGC & Foreign Ministry Approved)

**Amazon College** — முகவர்கள் தேவை.
294, 2nd Floor, Galle Road,
Peoples Bank Building, Bambalapitiya,
Tel : 0114 386 126, Hot Line : 0765-204-605
directdegree2014@gmail.com
www.amazoncollege.lk

பழமை வாய்ந்த ஏழு தலைமுறைகளாக செய்து வரும்
## ஆதி சக்தி வாய்ந்த மலையாள மந்திரம்



01. ஆண்/பெண் வசியம்
02. பிரிந்து சென்றவர்களை மூன்று பொழுதில் சேரும் படி செய்யமுடியும்.
03. வியாபார முன்னேற்றம்.
04. வீட்டில் ஒற்றுமை உண்டாக
05. போலியானவர்களிடம் ஏமாந்து விடாதீர்கள்

Note: (உங்களால் நேரில் வரமுடியாவிட்டால் தபால் மூலம் செய்து கொள்ளலாம்)
ரகசியம் பாதுகாக்கப்படும்

ஒருமுறை எம்மை வந்து சந்தித்துப் பாருங்கள் !!

**ரெங்கசாமி காளியம்மா** 077 327 2302, 076 466 4153, 075 509 5887.
மாத்தளை வீதி, கண்டி.

**LNR CONSTRUCTIONS (PVT) LTD.**

## ENGINEERS AND SENIOR TECHNICAL OFFICER

We, **LNR Constructions (Pvt)** ltd is one of the leading and fast developing Company specialised in Construction of luxury houses and buildings across various sector.

We are hiring an energetic and enthusiastic candidate for our ongoing and future projects.

**Qualification :**
- B.sc in Engineering (Civil) with at least Three years experience

Or

- NDT/NCT with at least 5-10 years experience in Construction Industry.

**Key Roles:**
- Managing and coordinating of project resources including Subcontractors.
- Supervise other Site Technicians and Subcontractors' personals.
- Reporting all project progress to Project Manager regularly.
- Assisting the Project Manager with project preparation and any other technical issues

**Salary: Negotiable**

**Accommodation:** Will be arranged

Your Resume or CV and Covering Letter must be sent to E.Mail: lnrnel2015@gmail.com before 25thSeptember 2017.

Only eligible candidates will be shortlisted and interviewed.

பின்வரும் வேலைகள் தொடர்பில் ஒப்பந்த வேலையாள்கள் தேவைப்படுகின்றது.
- மேசன் (Mason)
- மரம் அடித்தல் (Shutering)
- கம்பி வேலை (Steel Work)
- மாபிள் பதித்தல் ( Tile Work)
- கதவு யன்னல் (Carpentry work)
- வர்ணம் பூசுதல் ( Painting)

ஒப்பந்தத் தொகை மற்றும் காலம் இருசாராரும் ஒன்றிணைந்து தீர்மானிக்கப்படும்.
தங்குமிட வசதிகள் வழங்கப்படும்.

**TP: 021 226 1000 No 37, Vigneshwara College Road, Nelliady, Jaffna.**

## WE OFFER YOU THE BEST JOB !

புதிய தொழில் தேடுபவரா . செய்யும் தொழிலில் திருப்தி இல்லையா . எம்முடன் நீங்கள் இணைவீர்கள் ஆயின் எம்மிடம் இருந்து உங்களுக்கு
- குறுகிய கால இலவச பயிற்சி
- நிரந்தர தொழில்
- குறுகிய கால பதவியுயர்வு
- திறமைக்கேற்ற வருமானம்
- பதவிக்கேற்ற மேலதிக சலுகைகள்

இவையனைத்திற்கும் தகைமை ஓர் தடையல்ல. அனுபவம் அவசியமற்றது. சாதாரணதரம் Or உயர்தரம் உண்டெனில் எமது GMI கம்பனியில் வடக்கு கிளைகளில் தொழில் புரிய இணையலாம்.

**077 999 4807/ 077 802 1371**

## FLORANCE NIGHHTINGAALE SCHOOL OF NURSING
## தாதியர் பயிற்சி பாடசாலை

A/L பரீட்சை முடித்து விட்டு தொழில் ஒன்றை தேடுகின்றீர்களா ?



நாங்கள் அதற்கான வாய்ப்பை உங்களுக்கு தருகின்றோம்.


- ஒருவருட தாதியர் பயிற்சிப் பாட நெறி.
- பின் 3 மாதங்கள் தனியார் வைத்தியசாலையில் பயிற்சிகள்
- பின் நிரந்தர வேலை வாய்ப்புகள்
- தகைமை O/L 6 பாடம் சித்தி
- வயது 18 - 35

சந்திக்கும் நேரம்: திங்கள் - ஞாயிறு வரை (8.30 - 4.00)

பாட முடிவின் பின் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

**K.K.S ROAD, MARUTHANARMADAM.**
**077 718 6438**

# லலித்துக்காக பிச்சையெடுத்த பிக்குகளிடம் ஒரே நாளில் ரூபா 15 லட்சம் சேர்ந்தது



கொழும்பு. செப். 17
கொழும்பு மேல் நீதிமன்றத்தால் குற்றவாளிகளாக அறிவிக்கப்பட்டுச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட, முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் செயலர் லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்காக பௌத்த பிக்குகளின் மூலம், மகிந்த அணி நிதி சேகரித்து வருகிறது.

அரசு நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய இவர்கள் இருவருக்கும் தலா 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்திருந்த கொழும்பு மேல் நீதிமன்றம், இரண்டு பேரும் தலா 50 லட்சம் ரூபாவை இழப்பீடாகவும், 20 லட்சம் ரூபாவைத் தண்டமாகவும் செலுத்த வேண்டும் என்று உத்தரவிட்டிருந்தது.

இழப்பீடு மற்றும் தண்டப் பணத்தைச் செலுத்தாவிடின், மேலும் 3 ஆண்டுகள் சிறையில் இருக்க நேரிடும் என்றும் நீதிமன்றம் எச்சரித்திருந்தது.

இந்த நிலையில், லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு விதிக்கப்பட்டுள்ள இழப்பீடு மற்றும் தண்டப்பணத்தை செலுத்துவதற்கான நிதி, பாதயாத்திரை மூலம் கொழும்பில் பிக்குகள் திரட்டினர். நேற்று முன்தினம் மாத்திரம், 1.5 மில்லியன் ரூபா திரட்டப்பட்டதாக மகிந்த அணி தெரிவித்துள்ளது. (5)

# மகிந்த குடும்பத்தின் மாளிகைகள் எங்கே?

## அவர்களுக்கு அது தெரியாது என்கிறார் கபீர் காசிம்

கொழும்பு, செப். 17
முன்னைய ஆட்சியாளர் மகிந்த ராஜபக்சவின் குடும்பத்தினர் கட்டிய மாளிகைகள் அவர்களுக்கே நினைவில்லை. அவர்களுக்கு அவ்வளவு மாளிகைகள் உள்ளன. இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலரும், அமைச்சருமான கபீர் காசிம் தெரிவித்தார்.

கேகாலை மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் கூட்டத்தில் கலந்து கொண்டு அமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரச குடும்பம் மிகப்பெரிய மாளிகைகளைக் கட்டிக் கொண்டது. மல்வானையில் மிகப்பெரிய மாளிகையொன்றைப் பசில் ராஜபக்ச கட்டினார். ஆனால் அது நினைவில்லை என்று அவர் கூறுகின்றார். நிர்மாணித்த வீடுகள் எங்கே இருக்கின்றன என்பது குறித்தும் அவர்களுக்கே தெரியாது. ஏனென்றால் அவ்வளவு காணிகள் உள்ளன.

ஆனால் அனைவருக்கும் நிழல் என்ற வீடமைப்புத் திட்டத்தை எமது அரசு ஆரம்பித்திருக்கிறது. ஆட்சியாளர்களுக்கு வீடுகள் அல்ல மக்களுக்கான வீடுகளே நிர்மாணிக்கப்படுகின்றன.



அரசின் அதிகாரங்களை ஐக்கிய தேசியக் கட்சி, சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்பட பிரதான கட்சிகள் அனைத்திற்கும் பகிர்ந்தளிக்கப்பட்டே இன்று ஆட்சி முன்னெடுக்கப்படுகின்றது.

நாங்கள் அதிகார மோகத்திற்கு உட்பட்டவர்கள் அல்லர். ஆரம்ப வருடமானது மிகவும் கடினமான காலமாகும். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மூன்று சுமைகள் முன்வைக்கப்பட்டன. சடலங்களின் மலை, குப்பை மலை, கடன் மலை அவையாகும். இவை உட்பட ஒட்டுமொத்தப் பொருளாதாரத்தையும் புரட்டிப்போடுவதற்கு தலைமை அமைச்சருக்கு நேரிட்டது. சுமனே (மகிந்தவின் சோதிடர்) சொன்னதற்காக மகிந்த ராஜபக்ச முன்கூட்டியே தேர்தலை நடத்தவில்லை. உடனடியாகத் தேர்தலை நடத்தாவிட்டால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ந்துவிடும் என்று மகிந்தவின் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்ததனால்தான் அவர் உடனடியாகத் தேர்தலை நடத்தினார் - என்றார். (5)




# சைட்டத்துக்குப் புதிய மாணவர்கள் இணைப்பது இடை நிறுத்தம்

கொழும்பு. செப். 17
சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்குப் புதிய மாணவர்களை இணைத்துக் கொள்ளும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. .

புதிய கொள்கைகளுக்கு அமைவான வர்த்தமானி அறிவித்தல் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவால் வெளியிடப்படவுள்ளதால் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31ஆம் திகதி வரை இந்த இடைநிறுத்தம் நடைமுறையில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (5)

# அரச தலைவர் தேர்தல்கால மற்றொரு மோசடி அம்பலம்

கொழும்பு, செப். 17
2015ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தலின்போது அரசின் சாதனைகளை விளக்கும் கையேடு வெளியிடுவதற்கு 30 லட்சம் ரூபா நிதி முறையற்ற விதத்தில் செலவிடப்பட்டுள்ளது அம்பலத்துக்கு வந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

2014ஆம் ஆண்டு அரச தலைவர் தேர்தல்க் காலத்தில் மகிந்த அரசின் எட்டு வருட சாதனைகளை விளக்கும் வகையில் சிறுகுறிப்புகள் கொண்ட கையேடு வெளியிடப்பட்டுள்ளது.

அரச தகவல் திணைக்களம் மூலமாக வெளியிடப்பட்ட கையேட்டின் நிர்மாணம் மற்றும் வரைகலை செயற்பாடுகளுக்காக 30 லட்சத்து 57 ஆயிரத்து 600 ரூபா செலவிடப்பட்டுள்ளது.

அதற்கான நிதியைப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு ஊடாகத் தருவதாக உறுதியளித்தே கையேடு வெளியிடப்பட்ட போதிலும் பின்னர் அதற்கான நிதி அரச தகவல் திணைக்களத்துக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை என்பது தற்போது தெரிய வந்துள்ளது.

பொலிஸ் நிதி மோசடிப்பிரிவினர் இது தொடர்பான அறிக்கையொன்றை நீதிமன்றத்துக்குச் சமர்ப்பித்துள்ளதுடன், மிக விரைவில் அது தொடர்பாகவும் வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர். (5)

# சுற்றாடல் தொடர்பில் அனைத்துத் தரப்பும் கவனம் செலுத்த வேண்டும்

## அரச தலைவர் மைத்திரிபால தெரிவிப்பு



கொழும்பு, செப். 17
சுற்றாடல், பாதுகாப்பு, மதிப்பீடு- பெறுமானங்கள் தொடர்பில் அனைவரும் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் உரியவாறு நிறைவேற்ற வேண்டும். இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் 'இயற்கை இல்லம்' எனும் பெயரிலான கட்டடத் தொகுதியைத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மாவட்டச் செயலர், பிரதேச செயலர் உள்ளிட்ட அலுவலர்கள் அனைத்து மாவட்டங்களிலும் சுற்றாடல் சட்ட விதிகளை நடைமுறைப்படுத்த வேண்டும். அதிகாரத்திலுள்ள மற்றும் அதிகாரத்தில் இல்லாத அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் அரசியல் பேதங்களின்றி ஒத்துழைப்பு வழ்ங்கவேண்டும். எதிர்கால நலன்களுக்காக இன்றைய பணிகளை முறையாக ஆற்ற வேண்டும் - என்றார். (5)

# தேடப்படுவோர் பட்டியலிருந்து 150பேர் நீக்கம் இலங்கை அரசின் கோரிக்கையும் காரணமாம்

## இன்ரபோல் விளக்கம்

சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டு தேடப்பட்டு வருவோர் பட்டியலில் உள்ளடக்கப்பட்டிருந்த 150 இலங்கையர்களின் பெயர்கள் இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைவாக நீக்கப்பட்டுள்ளதாகப் பன்னாட்டுப் பொலிஸாரால் (இன்ரபோல்) தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலைக் கொழும்புச் சிங்கள ஊடகம் வெளியிட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள், அவர்களுக்கு ஆதரவானவர்கள் என்று கூறப்படும் 150 பேரின் பெயர்களைத் தேடப்படுவோர் பட்டியலிருந்து நீக்கியிருந்தது.

இந்தப் பெயர்கள் என்ன காரணத்துக்காக நீக்கப்பட்டன என்பது தொடர்பில், பன்னாட்டுப் பொலிஸாரிடம் மின்னஞ்சல் ஊடாகக் கேள்வி எழுப்பப்பட்டது. இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைவாகவே அந்தப் பெயர்கள் நீக்கப்பட் டுள்ளதாகப் பதிலளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் சிலர் உயிரிழந்துள்ளனர் என்பதனாலேயே அந்தப் பெயர்கள் பட்டியலிருந்து நீக்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. (5)



# ட்ரம்ப் - பாப்பரசர் இடையேயான உறவு மேண்மையுற வேண்டும்

## மாற்றங்கள் குறித்த பிரார்த்தனை

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை

திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் அமெரிக்க அரசதலைவர் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையே இடம்பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு குறித்து கடந்த வார ஆக்கத்தில் பேசியிருந்தோம். அதன் தொடர்ச்சியான கதையாடல்கள் இவ்வார ஆக்கத்திலும் பேசப்படுகிறது. அது குறித்து நோக்குவோம்.

**கத்தோலிக்க திருச்சபையின் தனித்தன்மை**

பாப்பிறை,பாப்பரசர்,போப்பாண்டவர் போன்ற பெயர்கள் அனைத்துமே கத்தோலிக்கத் திருச்சபையின் இவ்வுலகத் தலைவரான திருத்தந்தையைக் குறிக்கும் பெயர்கள் உரோமை நகரின் ஆயர்,உரோமை தலைமைக்குரு,புனித பேதுருவின் வழிவந்தவர் போன்ற பல பெயர்களாலும் இவர் அழைக்கப்படுகிறார். இயேசு கிறிஸ்துவின் முத ன்மைச்சீடராய் விளங்கிய தூய பேதுரு உரோமையில் கிறித்தவ சமயத்திற்கு வித்திட்டு அங்கு உயிர்துறந்தார் என்னும் வரலாற்றுச் செய்தியின் அடிப்படையில் இப்பெயர் வழக்கு எழுந்தது. இங்கு தூய பேதுரு தலைகீழாக சிலுவையில் அறையப்பட்டு உயிரிழந்தார் எனக் கூறப்படுகிறது. தூய பேதுருவே கத்தோலிக்கத் திருச்சபையின் முதல் திருத்தந்தை ஆவார். 2013 ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி அன்று திருத்தந்தை பிரான்சிஸ் கத்தோலிக்க திருச்சபையின் 266ஆவது திருத்தந்தையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். திருத்தந்தை என்ற பெயர் தந்தைக்குரிய அன்பையும் பாசத்தையும் கொண்டிருப்பதால் திருத்தந்தை என்ற பெயரையே எமது ஆக்கங்களில் பயன்படுத்திக்கொள்கிறோம்.

**கத்தோலிக்கமே உலகில் மிகப்பெரிய சமயப்பிரிவு**


உலகின் மிகச்சிறிய நாடு வத்திக்கான். உரோமையின் நகரம் என அழைக்கப்படும் வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடமாகத் திகழ்கிறது. உரோமாபுரியின் ஆயரும் உலக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவருமான திருத்தந்தை இதன் அரசியல் தலைவராவர். திருச்சபையின் வாசஸ்தலம் வத்திக்கான் நகரிலேயே அமைந்துள்ளது. திருத்தந்தை அலுவலகம் ஒன்றோடு ஒன்றாக இணைக்கப்பட்ட பல கட்டடங்களைக் கொண்டது. அங்குள்ள மொத்த அறைகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமானதாக காணப்படுகிறது.

ஐ.நா.சபையில் வத்திக்கான் ஓர் உறுப்பினர் இல்லை. இருந்தபோதிலும் நிரந்தரப் பார்வையாளர் அந்தஸ்தினைப் பெற்றுள்ளது. 2008 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதிய கணக்கின்படி ஒரு பில்லியன் 166 மில்லியன் கத்தோலிக்க மக்களை கொண்ட உலக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவராக திருத்தந்தை விளங்குகிறார். இதனடிப்படையில் கத்தோலிக்கமே உலகில் மிகப்பெரிய சமயப்பிரிவாக விளங்குகிறது.

> உலகின் மிகச்சிறிய நாடு வத்திக்கான். உரோமையின் நகரம் என அழைக்கப்படும் வத்திக்கான் நகரம் கத்தோலிக்க திருச்சபையின் தலைமைப்பீடமாகத் திகழ்கிறது. உரோமாபுரியின் ஆயரும் உலக கத்தோலிக்கத் திருச்சபையின் தலைவருமான திருத்தந்தை இதன் அரசியல் தலைவராவர். திருச்சபையின் வாசஸ்தலம் வத்திக்கான் நகரிலேயே அமைந்துள்ளது. திருத்தந்தை அலுவலகம் ஒன்றோடு ஒன்றாக இணைக்கப்பட்ட பல கட்டடங்களைக் கொண்டது. அங்குள்ள மொத்த அறைகளின் எண்ணிக்கை ஆயிரத்துக்கும் அதிகமானதாக காணப்படுகிறது.

**வத்திக்கான் நகரில் இராணுவம் கிடையாது**

வத்திக்கான் என்ற பெயர் வத்திக்கான் மலை எனப் பொருள்படும் இலத்தீன் வார்த்தையான 'வட்டிகனசில்' இருந்து பெறப்பட்டது. இதன் ஆட்சிப்பகுதியானது புனிதப்பேதுரு பேராலயம்,திருத்தூதரக அரண்மனை, சிசுடைன் சிற்றாலயம் மற்றும் பல அருங்காட்சியகக் கட்டடங்களை உள்ளடக்கியதாக உள்ளது. இப்பகுதியானது 1929 ஆம் ஆண்டு வரை இத்தாலியப் பேரரசின் ஒரு பகுதியாக இருந்தது.



1929 ஆம் ஆண்டு 'இலாத்தரன்' ஒப்பந்தத்தின் போது முன்மொழியப்பட்ட பகுதிகளின் எல்லைகள் ஏற்கனவே இருந்த சுற்றுச் சுவர் மூலம் வரையறுக்கப்பட்டது. மேலும் இந்நகரத்தின் எல்லைகள் இத்தாலியில் இருந்து ஒரு வெள்ளை கோடு மூலம் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும் 'இலாத்தரன்' உடன்படிக்கையின் படி இந்த நகரின் பகுதிகள் மட்டுமல்லாது இத்தாலிய ஆட்சிப்பகுதிக்குள் அமைந்துள்ள ஆலயங்களும் வத்திக்கான் நகர ஆட்சிப்பகுதியாக அமைய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இங்கு குற்றம் புரிவோர் இத்தாலி நாட்டுச் சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள். வத்திக்கான் நுழைவாயில்களை மைக்கல் ஆஞ்சலோவினால் வடிவமைக்கப்பட்ட கண்கவரும் உடைகளோடு 'சுவிஸ்காட்ஸ்' என அழைக்கப்படும் சுவிட்சர்லாந்து வாசிகள் காவல் புரிகின்றனர். வத்திக்கான் நகரில் இராணுவம் கிடையாது. வத்திக்கான் நகரில் அதிகமாக பதிவாகும் குற்றங்களாக வழிப்பறி மற்றும் திருட்டு காணப்படுகிறது. முக்கியமாக தேவாலய பகுதியில் இவை அதிகம் இடம்பெறுகின்றன. வத்திக்கான் நகர காவல்த் துறையினர் பொதுவாக எல்லை பாதுகாப்பு,போக்குவரத்து,சட்டம் ஒழுங்கு, பராமரிப்பு ஆகிய பணிகளைச் செய்துவருகின்றனர். வத்திக்கானில் சிறைகள் இல்லை. இங்கு குற்றம் புரிவோர் இத்தாலி நாட்டுச் சிறைகளில் அடைக்கப்படுகிறார்கள்.

**திருத்தந்தை மற்றும் அமெரிக்க அரச தலைவர் சந்திப்பு**

இந்த விளக்கத்தின் பின்னணியிலேயே திருத்தந்தை பிரான்சிஸ் மற்றும் அமெரிக்க அரச தலைவர் ட்ரம்ப் ஆகியோருக்கு இடையே இடம்பெற்ற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சந்திப்பு விளங்கிக்கொள்ளப்பட வேண்டியுள்ளது. கத்தோலிக்கத் திருச்சபை வெளிப்படுத்திய கண்டனம் அமெரிக்க அரச தலைவராக டொனால்ட் ட்ரம்ப் பதவி ஏற்றதன் பின்பாக உலகின் முழுக் கவனத்தையும் அவர் பக்கமே திரும்பியது எனலாம். அவர் வெளிப்படுத்திய அதிரடியான அறிவிப்புக்களும், அட்டகாசமான நடவடிக்கைகளும் முழு உலகின் கவனத்தையும் அவர் பால் ஈர்த்தன. உலகின் அதிக பலம் மிக்க அரச தலைவரின் இந்தச் செயற்பாடுகளுக்கு எதிராக கத்தோலிக்க திருச்சபையின் தலைவர் திருந்தந்தை கண்டனத்தை வெளியிட்டமை பலராலும் பாராட்டப்பட்டுள்ளது.

உலகின் மிக பிரசித்தி பெற்ற அதிகாரம் மிக்க மனிதராகத் திகழும் அமெரிக்க அரசதலைவரின் அதிகாரங்களும் பலமும் எல்லையற்றது என்றே கூறலாம்.



டொனால்ட் ஜோண் ட்ரம்ப் (பிறப்பு 1946) குடியரசுக் கட்சி வேட்பாளராக கடந்த 2016 ஆம் ஆண்டு இடம் பெற்ற தேர்தலில் போட்டியிட்டு அமெரிக்க வரலாற்றில் அதிக வயதில் (70) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள முதலாவது அரச தலைவராக திகழ்கிறார். ட்ரம்ப் தனது தேர்தல் பிரசாரத்தின் போது பேசிய பேச்சுக்கள் அனைவரையும் கவலையடச் செய்தது. அவருக்கு எதிராகக் குரல் எழுப்பவோ, கண்டனம் தெரிவிக்கவோ எவரும் முயலவில்லை. ஆனாலும் திருத்தந்தை துணிந்து பேசினார். அன்பை முறிக்கிறோம் என்றோ, சர்ச்சையை கிளப்புகிறோம் என்றோ, வெறுப்பைச் சாதிக்கிறோம் என்றோ எண்ணவில்லை. அவர் உலக அரங்கில் துணிந்து பேசினார். சவால் விட்டார். இதன் பின்னரும் அன்பாக இருக்க முடியும். பண்பாக உறவாட முடியும் என்பதை நிரூபித்தார். இதனால் ட்ரம்ப் தனது செயற்பாடுகளை மாற்றிக் கொண்டார் என்றே கூறலாம்.

**அமெரிக்க ஆயர்களின் கண்டனம்**

நாட்டைக் காப்பாற்றுகிறோம் என்ற பெயரில் அமெரிக்க அரச தலைவரின் செயற்பாடுகள் முன்னேற்றத்தை நோக்கிய வழியில் பின்னோக்கிச் சென்றுள்ளது. அது மட்டுமன்றி விவிலியப் பாதையை விட்டும் விலகியுள்ளது என்று அமெரிக்காவின் ஆயர் பேரவை கருத்துரைத்துள்ளது. பாரக் ஒபாமா அரசத்தலைவராக இருந்த வேளையில் குழந்தைகளாக, இளையோராக அமெரிக்க நாட்டை அடைவோருக்கு பாதுகாப்பு அளிக்கும் வகையில் உருவாக்கிய 'டீ.எ.சி.எ' என்ற திட்டத்தை தற்போதைய அரச தலைவர் டொனால்ட் ட்ரம்ப் நீக்க முடிவு செய்துள்ளதை ஆயர்கள் வன்மையாகக் கண்டித்துள்ளனர். ஒபாமாவின் திட்டப்படி அமெரிக்காவில் தஞ்சம் புகும் இளையோர் தங்கள் கல்வியைத் தொடரவும், வேலை வாய்ப்பைத் தேடிக்கொள்ளவும் வசதிகள் செய்து தரப்பட்டதை தற்போதைய அரசு நீக்குவதாக கடந்த 6 ஆம் திகதி அறிவித்திருப்பது வரவேற்கத்தக்க விடயமல்ல என்பதை ஆயர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆயர், பேரவைத் தலைவர், கர்தினால், துணைத் தலைவர், பேராயர் மற்றும் ஏனைய ஆயர்கள் இணைந்து கையொப்பமிட்டுள்ள இந்த அறிக்கையில், "ட்ரம்ப் அரசு மிகக் குறுகிய கண்ணோட்டத்துடனும் எவ்வித இரக்கமும் இன்றி செயற்படுவது வேதனையைத் தருகிறது" என்ற விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

**ட்ரம்ப் அரசுக்கு விண்ணப்பம்**

அமெரிக்காவில் தஞ்சம் புகுந்திருக்கும் இளையோரைக் காப்பாற்றுவதற்கு ஏற்ற விதமாக கடந்த 2012ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட 'டீ.எ.சி.எ' திட்டத்திற்கு முழு ஆதரவளித்து அமெரிக்காவில் இயங்கிவரும் இயேசு சபைக் கல்விக்கூடங்களைச் சேர்ந்த ஆயிரத்து 400 இற்கும் அதிகமான கல்வியாளர்கள் ட்ரம்ப் அரசுக்கு விண்ணப்பம் ஒன்றை அனுப்பியுள்ளனர். குறிப்பாக, 'டீ.எ.சி.எ' திட்டத்தின் கீழ் தங்கள் கல்விமனைகளில் பயின்று வரும் இளையோர் கடினமாக உழைப்பவர்கள் என்றும், பல்வேறு தடைகளைத் தாண்டி அவர்கள் தங்கள் கனவுகளை நிறைவேற்ற எடுத்துக்கொள்ளும் முயற்சிகள் தங்களுக்கு பெரும் உந்து சக்தியாக அமைந்துள்ளன என்றும் இயேசு சபை கல்வியாளர்கள் கூறியுள்ளனர்.

இது குறித்துக் கருத்துரைத்துள்ள அமெரிக்க இயேசுசபையினரின் தலைவர் ஆயர் ஆஸ்டின், " 'டீ.எ.சி.எ' திட்டத்திற்கு முழு ஆதரவு தருவதைக்காட்டிலும் சிறந்ததொரு சாட்சியம் இருக்கமுடியாது. இந்தத் திட்டத்தில் இணைந்துள்ள இளையோர் குழந்தைகளாக இருக்கும்போதே இந்த நாட்டிற்கு வந்துவிட்டதால் அவர்களுக்குத் தெரிந்த ஒரே நாடு அமெரிக்கா மட்டுமே என்பதை தற்போதைய அரசு மறந்துவிடக்கூடாது" என்று தெரிவித்துள்ளார்.

ஆக. அமெரிக்க அரசுத்தலைவர் டொனால்ட் ட்ரம்ப் மற்றும் திருத்தந்தை ஆகியோர் இடையேயான உறவு மேலும் வளரவும் அதன் வழி உலக நடவடிக்கைகள் என்றும் புதுமைப்படுத்தப்பட வும் இறைவரம் வேண்டுவோம்.

## அத கோடிபதி

சீட்டிழுப்பு வாரம்: 17
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2017.09.16

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 54,613,280/-

வெற்றி இலக்கங்கள்: 08 36 47 62 L

13 59 63 69

தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk

## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

வெற்றி வாரம் 2930 திகதி 16.09.2017

வெற்றி எண்கள் மற்றும் ஆங்கில எழுத்து: 38 39 67 68 X

போனஸ் இல.: 42

திங்கட்கிழமை ஜக்பொட்: 42, 001, 110/-

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 13 21 57 73

நீல நிற டிக்கட்டுக்கள்
2017.09.18 ஆம் திகதி திங்கட்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றிபெற்ற டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

தொ.பே : 011 4824824
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
www.dlb.lk

## சம்வர்தன வாசனாவ – Development Fortune

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு வாரம் 075
சீட்டிழுப்பு திகதி 16.09.2017 சனிக்கிழமை

வெற்றி இலக்கங்கள்: 09 18 39 40
சுப்பர் இலக்கம்: 01
அதிர்ஷ்ட மாதம்: பெப்

அடுத்த மிகப்பெரிய ஜக்பொட் ரூ. 16, 866, 038/=
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3, 505, 316/=
அடுத்த ஜக்பொட் ரூ. 2, 916, 296/=


இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 12 16 23 65

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம் 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000ம் வெல்ல முடியும்.

2017.09.21ஆம் திகதி வியாழக்கிழமை நீல நிற டிக்கட்டுகள் சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர்.டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.
தொலைபேசி: 011 333 546-47 துரித அழைப்பு 0114 824 824 www.dlb.lk

## மரண அறிவித்தல்



### திருமதி விஜயலட்சுமி மாணிக்கவாசகர்

யாழ்ப்பாணம், நாச்சிமார் கோவிலடியைப் பிறப்பிடமாகவும் கொழும்பு, கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி மாணிக்கவாசகர் கடந்த (14.09.2017) வியாழக்கிழமை இயற்கை எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற காளமேகம் - தர்மாம்பாள் தம்பதியரின் இளையபுதல்வியும் விஷ்வகுலத்தைச் சேர்ந்த மாணிக்கவாசகரின் அன்பு மனைவியும் இராமநாதன் - சுகந்தினி (ஜேர்மனி) அவர்களின் பாசமிகு தாயாரும் ஆறுமுகம் - இராமநாதன் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமியும் அபிஷேக் (அபி), சாரா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் சீதாலட்சுமி - மாணிக்கம் ஆகியோரின் இளைய சகோதரியும் வனிதா - தில்லைநாதன், சின்னராசா - செல்வரட்ணம், சுமதி - மகிவரன், கேதீஸ்வரன் - குமிதா, தெய்வலஷ்மி - தேவகுமார் ஆகியோரின் சிறிய தாயாரும் ரம்மியராகுலன் (விளையாட்டு உத்தியோகத்தர் - சங்கானை), துவாரகா - சிறிதரன், பிறேம்நாத் - சுவேதிகா, டக்ஷன், கீர்த்திகா, துளசிகா, கிருஷிகன் சாங்கவி, சிவரஞ்சனி மயூரன், ரிஷாவினி, குமார், சகோஜித், சாக்கோஜித் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.09.2017) ஞாயிற்றுக்கிழமை மு.ப.11.00 மணியளவில் இல.1010/28, தலையாழி ஒழுங்கை, நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள அவரது சகோதரியின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**[illegible], 075 0711977,**
**076 237 5959**

**தகவல்: குடும்பத்தினர்.**

## காணி குத்தகைக்குண்டு

நாவற்குழி A9 வீதியில் குடிநீருடன் உள்ள காணி குத்தகைக்குண்டு.
தொடர்பு -
077 981 9733, 077 635 9201

## வாடகைக்கு / குத்தகைக்கு

129, நாவலர் றோட், யாழ்ப்பாணம் (ஐந்து சந்திக்கு அருகில்) எனும் முகவரியிலுள்ள முற்றிலும் மாபிள் பதிக்கப்பட்ட மேல்மாடி வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு விடப்படும். (நிறுவனங்கள் விரும்பத்தக்கது)

**076 927 7796**

## வேலையாள்கள் தேவை

- தேநீர் தயாரிப்பவர்
- உணவு பரிமாறுபவர்
- பார்சல் கட்டுபவர்
- சமையல் உதவியாளர் (Second)

**077 465 2860**
183,ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

## உணவகத்திற்கு இடம் தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் உணவகம் நடத்துவதற்கு கடை தேவை. **தொடர்பு-077 036 0555**

## நாய்க்குட்டி விற்பனைக்கு

45 நாள் நிரம்பிய அல்சேசன் (யேமன் சப்பட்) நாய்க்குட்டி விற்பனைக்குண்டு.

**077 907 3894**

## பணிப்பெண் தேவை

நல்லூர் பகுதியில் வசிக்கும் இளம் குடும்பத்திற்கு நடுத்தரவயது கொண்ட பணிப்பெண் தேவை. மாலை 5.00 மணிக்கு பின் தொடர்பு கொள்ளவும்.

**- 0777 756 178**

## அறைகள் வாடகைக்குண்டு

யாழ். கைலாசப்பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நவீன வசதி களுடன் கூடிய A/C, NON A/C அறைகள் வாடகைக்குண்டு. வியாபார ஸ்தாபனங்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு - 077 981 9733**
**077 635 9201**

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் கந்தர்மடத்தில் வீடு வாடகைக்குண்டு. உத்தியோகத்தர்கள் விரும்பத்தக்கது.

**தொடர்பு: 0767347397**

## கடை வாடகைக்குண்டு

இரண்டு பெரிய கடை வாடகைக்கு உண்டு.
எந்தவிதமான வியாபாரமும் செய்வதற்கு உகந்த இடம். கடைக்கு முன் தனிப்பட்ட வாகன தரிப்பிட வசதியும் உண்டு.

**076 785 1067**
199, கொழும்புத்துறை வீதி, பாண்டியன் தாழ்வு

## விற்பனைக்கு

போட்டோ கொப்பி மிசின் டொசிபா - 167
(Photo Copy Machine Toshiba -167)
மற்றும் Pickup வாகன Tyreகள் Size, 15 மற்றும் 16 விற்பனைக்கு உண்டு.

**தொடர்பு - 077 654 4428, 077 397 3166**

## வாகன சாரதி தேவை

AD ரக
வாகன சாரதி தேவை.
40 வயதுக்கு மேற்பட்டவர் விரும்பத்தக்கது.

**077 721 1763/ 077 758 5412**

## காணி விற்பனைக்கு உண்டு

வல்லை வீதி, சங்கானையில் $4\frac{1}{2}$ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு.

**077 665 5643**

## SB Travels and Tours Pvt Ltd.

இல.212, கஸ்தூரியார் வீதியில் அமைந்துள்ள SB Travels and Tours நிறுவனத்திற்கு Marketting செய்வதற்கு வேலையாள்கள் தேவை.
ஆண்கள் விரும்பத்தக்கது. (O/L பரீட்சை எழுதியவர்களும் தொடர்பு கொள்ளலாம்.)

**021 222 8555/ 076 691 1082**

## காணி விற்பனைக்கு

யாழ். நகர் மத்தியில்
கந்தப்பசேகர வீதியில்
உள்ள சுமார்
62 பேர்ச் (நெ.ப $9\frac{1}{4}$)
அளவுடைய காணி
விற்பனைக்குண்டு.

**077 758 7535**

## வேலை வாய்ப்பு

1. அலுமினியம் வேலை செய்பவர் (Aluminium Fabricator)
2. வர்ணம் பூசுபவர் (Painter)

**076 826 4864, 077 712 0945**

## வேலை வாய்ப்பு

1. பட வரைஞர்
Certificate in Draughtsman and AutoCAD - 2D

**077 712 0945**
E-Mail- vacancynsc@gmail.com

## குறும்படம்

யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப் பட்ட நினைவுகளை சுமந்து வெளிவந்த சோமீதரனின் "எரியும்நினைவுகள்" ஆவணப்படம்யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கேட்போர்கூடத்தில் இன்று பி.ப. 3 மணிக்குத் திரையிடப்படும்என்று அறிவிக்கப்பட்டது. (4)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



வலி.வடக்கு பிரதேச சபையில் தரம் I தொழில்நுட்ப உத்தியோகத்தராகக் கடமையாற்றும்
**திரு. கனகசிங்கம் சற்குணராசா**
அவர்கள் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப் பிரமாணம் செய்துள்ளமையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:-
**உற்றார், உறவினர், நண்பர்கள், நலன் விரும்பிகள்.**

Best Wishes

## SUPER BALL

உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 703
சீட்டிழுப்பு திகதி 16.09.2017 சனிக்கிழமை

B 12 35 43 69

சுப்பர் ஜக்பொட் ரூ. 59, 625, 332/=

இரண்டாவது சீட்டிழுப்பு வெற்றி இலக்கங்கள்: 05 13 24 59


ஊதா நிற டிக்கட்டுகள் 2017.09.18 ஆம் திகதி திங்கட்கிழமை கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றிபெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

2 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.20ம், 3 இலக்கங்கள் பொருந்துமாயின் ரூ.500ம் மற்றும் 4 இலக்கங்களும் பொருந்துமாயின் ரூ.50,000 வெல்லமுடியும்.

தொ.பே : 011 4062002 / 011 4062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்

## கண்ணீர் அஞ்சலி

### தர்மலிங்கம் தர்மசீலன்



அவர்கள் 16.09.2017 அன்று அகாலமரணம் அடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**அன்னாரின் பிரிவால் துயருறும்**
**நண்பர்கள் (அரியாலை)**

## மரண அறிவித்தல்

### திருமதி
### இலங்கநாயகி இராசரத்தினம் *(நெசவு ரீச்சர்)*

***(ஓய்வுபெற்ற நெசவுப் போதனாசிரியர் )***



குரும்பசிட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலி, தலங்காவல் பிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இலங்கநாயகி இராசரத்தினம் 15.09.2017 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் இராசரத்தினத்தின் (விநாயகர் சிற்பாலயம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் – சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, தையல்நாயகி, இரத்தினகோபால், அன்னம்மா, குணபாலசிங்கம் மற்றும் நாகம்மா, பாக்கியம் (ஆஸ்திரேலியா), செல்லம்மா (மலேசியா) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்ற கனகம்மா மற்றும் தவமணிதேவியின் அன்பு மைத்துனியும் ரேணுகா (நோர்வே), வத்சலா (ஆசிரியர், யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விஜயகுமார் (நோர்வே), பாலமகிந்தன் (முகாமையாளர் கனினி வளநிலையம், தீவக கல்வி வலயம்) ஆகியோரின் பாசமிகு மாமியும் வருண், கவிஸ்னா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.09.2017) திங்கட்கிழமை பி.ப. ஒருமணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருநெல்வேலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**86, தலங்காவல் பிள்ளையார் கோவிலடி,**
**திருநெல்வேலி மேற்கு,**
**யாழ்ப்பாணம்.**

**தகவல்: குடும்பத்தினர்.**
**சு.இராசரத்தினம் (கணவர்)**
**077 912 4060**

## தேர்தல்...

தியை நாடாளுமன்றமே தீர்மானிக்கும் வகையிலும் 20ஆவது திருத்தச் சட்டவரைவு அரசால் முன்வைக்கப்பட்டது. இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 13 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. வழக்குகளை விசாரணை செய்த உயர் நீதிமன்ற நீதியரசர்கள் குழாம், தமது வியாக்கியானத்தை அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், சபாநாயகர் கரு ஜெயசூரியவுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

அரசால் முன்வைக்கப்பட்ட வடிவத்தில் 20ஆவது திருத்தச் சட்டவரைவை நிறைவேற்றுவதற்கு, நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் மாத்திரம் போதாது. பொது வாக்கெடுப்பும் நடத்த வேண்டும்என்று நீதிமன்றம் குறிப்பிட்டதாகத் தகவல்கள் வெளியாகின. இது அரசுக்குச் சிக்கலை ஏற்படுத்தியது. நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு முன்பாகவே, கடும் எதிர்ப்புக் காரணமாக திருத்த வரைவில் மாற்றங்களைச் செய்ய அரசு முடிவு செய்திருந்தது. அது பற்றி நீதிமன்றத்திலும் எடுத்துக் கூறியிருந்தது. ஆனால், மாற்றங்கள் குறித்த வர்த்தமானி அறிவித்தல் வெளியாகாத வரையில் அதனை ஏற்கமுடியாது என்று நிராகரித்த நீதிமன்றம் முன்னர் வெளியிடப்பட்ட வரைவின் அடிப்படையில் தனது கருத்தைத் தெரிவித்திருந்தது.

இதையடுத்து அரச தலைவர் மைத்திரிபால, தலைமை அமைச்சர் ரணில் உள்ளிட்ட உயர் மட்டத் தரப்பினர், அரச தலைவர் மைத்திரிபாலவின் வீட்டில் நேற்றுமுன்தினம் இரவு தீவிர ஆலோசனை நடத்தினர். அரச தலைவர் அமெரிக்காவுக்கு இன்று புறப்படுவதால், அதற்கு முன்னதாகவே இது தொடர்பில் முடிவு எடுப்பது சிறந்தது என்று கருதி இந்தச் சந்திப்பு ஏற்பாடு செய்யப்பட்டது.

உயர் நீதிமன்றம் தனது வியாக்கியானத்தில், பொது வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தாலும் அதற்கான காரணத்தைத் தெளிவுபடுத்தவில்லை என்று கூட்டத்தில் சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன், 20ஆவது திருத்தச் சட்டவரைவில் மாற்றங்களை மேற்கொள்ளத் தயாராக உள்ளதாக உயர்நீதிமன்றில் முன்னிலையாகி சட்டமா அதிபர் கூறியதையும் உயர் நீதிமன்றம் கவனத்தில் எடுக்கவில்லை என்பதும் சுட்டிக் காட்டப்பட்டது.

இவற்றின் அடிப்படையில் பொதுவாக்கெடுப்புக்குச் செல்லாமல், நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் 20ஆவது திருத்தத்தை எப்படி நிறைவேற்றலாம் என்பது தொடர்பில் சட்டமா அதிபர் உள்ளிட்ட, சட்டவல்லுநர்களுடன் முழு நேரக் கலந்துரையாடல்கள் நேற்றே உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன.

உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்துடன் இணைந்து செல்லக் கூடியதாக வரைவில் மாற்றங்களை மேற்கொள்வது என்றும், மாற்றங்களுடன் கூடிய வரைவை எதிர்வரும் 20ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

நாளைமறுதினம் 19ஆம் திகதி செவ்வாய்க் கிழமை நாடாளுமன்றக் கூட்டத் தொடர் ஆரம்பமாகின்றது. அன்றைய தினம் உயர் நீதிமன்றத்தின் வியாக்கியானத்தைச் சபாநாயகர் நாடாளுமன்றத்திற்கு அறிவிப்பார். மறுநாள் 20ஆம் திகதி 20ஆவது திருத்தச் சட்டவரைவின் இரண்டாம் வாசிப்பு இடம்பெறும். (உ-5)

## 3 மாகாண...

திருத்தச் சட்டத்தை நிறைவேற்ற பொதுவாக்கெடுப்பு நடத்தவேண்டும் என்று தனது விளக்கத்தை சபாநாயகருக்கும், அரச தலைவருக்கும் அனுப்பிவைத்துள்ளதாகக் கூறப்படுகிறது. அதைத் தொடர்ந்து மாகாண சபைத் தேர்தல்களை நடத்தியே ஆகவேண்டிய கட்டாயத்துக்கு அரசு தள்ளப்பட்டதாகக் கூறப்படுகிறது. ஆனால், அரசமைப்பின் 20ஆவது திருத்தத்தை மீண்டும் திருத்தி அதனை நிறைவேற்றுவதற்கான முயற்சிகளில் அரசு ஈடுபடுவதாகவும் கொழும்பு அரசின் தகவல்கள் கூறுகின்றன. இந்த நிலையில் தேர்தலை நடத்த வேண்டிய நிலை ஏற்பட்டால் அதற்குத் தாம் தயாராகவே இருப்பதாகத் தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்தது. இது குறித்து மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் தெரிவித்ததாவது:

நாடாளுமன்றத்தில் 20ஆவது திருத்தச் சட்டவரைவு நிறைவேற்றப்பட்டால் மாத இறுதியில் கலைக்கப்படும் மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் நடைபெறாது. தேர்தல் சட்டவரைவு நிறைவேற்றப்படவில்லையாயின், எதிர்வரும் 26ஆம் திகதி சப்ரகமுவ மாகாண சபை, 30ஆம் திகதி கிழக்கு மாகாண சபை, ஒக்ரோபர் முதலாம் திகதி வடமத்திய மாகாணசபை என்பன கலைக்கப்படும். 1988ஆம் ஆண்டு 2ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் அடிப்படையில், மாகாண சபைகள் கலைக்கப்பட்டு ஒரு வார காலத்தினுள் வேட்புமனு கோரப்பட வேண்டும். 26ஆம் திகதி கலைக்கப்படும் சப்ரகமுவ மாகாணசபைக்கு ஒக்ரோபர் 3ஆம் திகதிக்கு முன்னர் வேட்புமனு கோருதல் வேண்டும். இதற்கு அமைவாக மூன்று மாகாண சபைகளுக்கும் ஒக்ரோபர் 2ஆம் திகதி வேட்புமனு கோரப்படும்.

ஒக்ரோபர் மாதம் 16ஆம் திகதி அல்லது 23ஆம் திகதி நண்பகல் 12 மணியுடன் வேட்புமனுத் தாக்கல் முடிவடையும். வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்ததும் மிக விரைவாக தேர்தல் தினம் குறித்த வாக்கெடுப்பு அறிவிப்பை தெரிவத்தாட்சி அலுவலர் (மாவட்டச் செயலர்) வெளியிட வேண்டும்.

வேட்புமனுத் தாக்கல் முடிவடைந்ததிலிருந்து, தேர்தல் திகதியானது 5 வாரத்துக்கு குறையாததாகவும் 8 வாரத்துக்கு மேற்படாததாகவும், சனிக்கிழமை நடத்தக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

இதனடிப்படையில் டிசெம்பர் மாதம் 2, 9, 16ஆம் திகதிகள் பொருத்தமாக உள்ளன.

டிசெம்பர் முதலாம் திகதியும், மூன்றாம் திகதியும் விடுமுறை தினமாக இருப்பதால் டிசெம்பர் 2ஆம் திகதி தேர்தலை நடத்த முடியாது. டிசெம்பர் 16ஆம் திகதி, ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சை நடைபெறும் என்பதால் அன்றைய தினமும் தேர்தலை நடத்த முடியாது. எனவே டிசெம்பர் 9ஆம் திகதியே மூன்று மாகாண சபைகளுக்கும் தேர்தலை நடத்த முடியும் - என்றார். (உ-வ-5)

## தரம் 1...

முன்வைக்கும் நடைமுறை இந்த ஆண்டு முதல் கட்டாயம் ஆக்கப்பட்டுள்ளது என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சு தெரிவித்தது.

இது தொடர்பில் அமைச்சு மேலும் தெரிவித்ததாவது:

வடக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 2018ஆம் ஆண்டு தரம் ஒன்றில் கல்வி கற்பதற்காக மாணவர்களை உள்வாங்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டின் நடுப்பகுதியில் இருந்து பாடசாலைகளில் விண்ணப்பப் படிவங்களை வழங்கும் செயற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் எழுத்து வடிவில் முழுமைப்படுத்தப்படல்வேண்டும். அதன் பின்னர் இணையத்தில் பதிவேற்றப்பட்டு உறுதிப்படுத்தப்படவேண்டும். அதன் பின்னரே அந்த விண்ணப்பப் படிவம் முழுமையாக நிரப்பப்பட்டதாகக் கருதப்படும்.

www.edudept.np.gov.lk என்ற இணையத் தளத்தில் இதற்கான படிவத்தை, விவரத்தைப் பெறலாம். விண்ணப்பப் படிவங்களை நிரப்புதல் பற்றிய விவரங்களும் இணையத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. வடக்கு மாகாண பாடசாலைகளில் இவ்வாறு இணையத்தளம் மூலமாக தரம் ஒன்று மாணவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

ஒரு பிரதேசத்தில் உள்ள பாடசாலையில் உள்ள மாணவர்களுக்கு அனுமதி வழங்காமல் குறித்த பிரதேசத்தில் இருந்து தூரமாக உள்ள மாணவர்களைப் பரிந்துரையின் அடிப்படையில் உள்வாங்கும் செயற்பாடுகள் சில இடம்பெற்று வருகின்றன.

அத்துடன், ஒரு வகுப்பில் உள்ளடக்க வேண்டிய மாணவர் எண்ணிக்கை போன்ற பல்வேறு விடயங்களைக் கண்காணிக்கவும், அனுமதி வழங்கப்படும்போது தவறுகள் நடைபெறாமல் இருப்பதற்குமாக இணையம் மூலமான பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதனைக் கருத்திற் கொண்டு பெற்றோர்கள் பாடசாலை நிர்வாகங்கள் செயற்பட வேண்டும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (வ-4-ரி)

## குற்றம்...

சேகா கேள்வி எழுப்பியுள்ளார்.

கொட்டகேனா பரமானந்த மாவத்தையில் உள்ள விகாரையில் பெரஹராவின் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் நடைபெற்றது. சரத் பொன்சேகா இந்த நிகழ்வில் கலந்து கொண்டார்.

காணாமற்போனோர் அலுவலகம் இராணுவத்துக்கு அச்சுறுத்தலாக அமையும் என்று தெரிவிக்கப்படுவது தொடர்பாகவும், இராணுவத்தை சரத் பொன்சேகா காட்டிக் கொடுப்பதாகக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுவது தொடர்பிலும் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளித்த பொன்சேகா மேலும் தெரிவித்ததாவது:

காணாமற்போனோர் விடயத்தில் பொறுப்புக் கூறுவதற்கே காணாமற்போனோர் அலுவலகம் அமைக்கப்பட்டுள்ளது. காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்களுடன் இராணுவத்தினருக்குத் தொடர்பு இல்லை என்றால் அவர்கள் பயப்பட வேண்டியதில்லையே. போர்க் காலத்தில் காணாமல் ஆக்கப்படுதல் சம்பவங்கள் இடம்பெறவில்லையாயின் இராணுவம் அச்சமடையத் தேவையில்லையே.

தலைநகரில் மாணவர்கள் கடத்தல் உள்ளிட்ட சில சம்பவங்களில் இவற்றை யார் செய்தார்கள் என்பது நீதிமன்றில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. குற்றங்கள் கண்டறியப்பட வேண்டும். தண்டனை வழங்கப்படவேண்டும். நான் இராணுவத்தைக் காட்டிக் கொடுக்கவில்லை. குற்றங்கள் விசாரிக்கப்பட்டால், இராணுவம் அதிலிருந்து விடுவிக்கப்பட்டால் இராணுவத்துக்குத்தான் நற்பெயர் ஏற்படும் -என்றார். (உ-5.31)

## தேர்தலை...

“விரைவில் அந்தத் தேர்தல் நடத்தப்படுவது நல்லது என்றே நினைக்கின்றோம்” தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், அந்தக் கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

“2012ஆம் ஆண்டு கிழக்கு மாகாணசபைத் தேர்தல் நடைபெற்றது. அதில் குளறுபடிகள், மோசடிகள் நடைபெற்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மிகச் சொற்ப வாக்குகள் வித்தியாசத்திலேயே ஆசனங்களை இழந்தது. இப்போது தேர்தல் நடைபெற்றால், அவ்வாறான குளறுபடிகள் மோசடிகள் நடைபெறாது என்றே எதிர்பார்க்கின்றோம்” என்றார். (உ-5)

## மின்சாரம்...

அரியாலையிலுள்ள வீடு ஒன்றுக்கு மின்னிணைப்பு வேலையில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோதே அவர் மின்சாரத்தால் தாக்கப்பட்டார் என்று ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணை இடம்பெறுவதாக யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர். (உ-4.106)

## பலவந்தமாக...

நிகழ்வில் தலைமை அமைச்சர் பங்கேற்றிருந்தார். பாடசாலைக்கான அடிக்கல் நடுதல் உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டிருந்தார். நிகழ்வின் முடிவில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பலவந்தமாகக் காணாமல் ஆக்கப்படுதலைக் குற்றமாக அறிவிக்கும் பன்னாட்டுச் சமவாயத்தில் 2015ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் கையெழுத்திட்டோம். அதனை எமது நாட்டில் சட்டமாக நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். நாடாளுமன்றத்தில் அதற்காக சட்டவரைவு முன்வைக்கப்பட்டுள்ளது.

நாம் பன்னாட்டுச் சமவாயத்தில் கையெழுத்திட்ட திகதிக்குப் பிற்பட்ட காலங்களில் நடைபெறும் சம்பவங்களுக்கு இந்தச் சட்டம் பொருந்தும். அதற்கு முற்பட்ட காலத்தில் நடந்த சம்பவங்களுக்கு இந்தச் சட்டம் பொருத்தமானது அல்ல. இந்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக எதிர்காலத்தில் இவ்வாறான பலவந்தமாக காணாமல் ஆக்கப்படுதல் நடக்காமல் நடவடிக்கை எடுக்க முடியும்.

இந்தப் பன்னாட்டு சமவாயத்தில் நாம் கையெழுத்திட்டமை தொடர்பில் பலர் பல்வேறு கருத்துக்களைத் தெரிவிக்கின்றனர். இது நாட்டுக்குப் பாதகம் என்கின்றார்கள். நாம் கையெழுத்திட்டமையால் நாட்டுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை என்று நான் சொல்கின்றேன். இலங்கையின் அரசமைப்புக்கு உட்பட்டே நாம் செயற்பட்டுள்ளோம்.

இதேவேளை போர்க்குற்றங்கள் தொடர்பில் இராணுவத்தினரை நாம் பன்னாட்டு நீதிமன்றுக்கு அனுப்பப் போகின்றோம் என்றெல்லாம் சொல்லப்படுகின்றது. எமது இராணுவத்தினரை பன்னாட்டு நீதிமன்றுக்குக் கொண்டு செல்வது எமது நிலைப்பாடு அல்ல. அவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் எமது நாட்டின் சட்டத்துக்கு அமைவாக விசாரணை நடத்தப்படும். அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அந்த உறுதிமொழியை வழங்கியிருக்கின்றார். அந்த உறுதிமொழியை உடைத்துக் கொண்டு யாரும் செல்ல மாட்டார்கள் -என்றார். (உ-5,31)

# புதிய வாக்காளர் பட்டியலின் படியே மாகாணத் தேர்தல்

யாழ்ப்பாணம், செப். 17

கிழக்கு, வடமத்தி, சப்ரகமுவ ஆகிய மூன்று மாகாண சபைகளுக்கும் விரைவில் தேர்தல் நடத்தப்பட்டால், 2017ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப்பட்டியலே பயன்படுத்தப்படும் என்று தேர்தல்கள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

20ஆவது திருத்தச் சட்டவரைவு நிறைவேற்றப்படாவிட்டால், இந்த மாத இறுதியில் கலையும் மூன்று மாகாண சபைகளுக்கும்
டிசெம்பர் 9ஆம் திகதி தேர்தல் நடத்தப்படும். 2017ஆம் ஆண்டு வாக்காளர் பெயர்ப் பட்டியலின் அடிப்படையில் அது நடத்தப்படும்.

நடப்பு ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளன. இந்த மாதம் 30ஆம் திகதி அது வெளியிடப்படும்.

2017ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் பெயர்ப் பட்டியல் வெளியிடப்பட்ட பின்னர் தேர்தல் நடைபெறுமாயின் இந்த வாக்காளர் பட்டியலையே பயன்படுத்த வேண்டும். எனவே புதிய வாக்காளர் பட்டியலின் அடிப்படையிலேயே மாகாணத் தேர்தல்கள் நடைபெறும். (வ-5)

## தேர்தலுக்கான...

ஆயத்த நடவடிக்கைகளைத் தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதை நோக்காகக் கொண்ட 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில், அரசுக்குச் சாதகமான முடிவை உயர் நீதிமன்றம் அறிவிக்கவில்லை.

இதனால் சப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய மாகாணசபைகளுக்கான தேர்தலை டிசெம்பர் 9ஆம் திகதி நடத்த வேண்டிய நிர்ப்பந் அனைத்து மாகாண சபைகளுக்கும் ஒரே நாளில் தேர்தலை நடத்துவதை நோக்காகக் கொண்ட 20ஆவது திருத்தச் சட்டவரைவு தொடர்பில், அரசுக்குச் சாதகமான முடிவை உயர் நீதிமன்றம் அறிவிக்கவில்லை.

இதனால் சப்ரகமுவ, கிழக்கு, வடமத்திய மாகாணசபைகளுக்கான தேர்தலை டிசெம்பர் 9ஆம் திகதி நடத்த வேண்டிய நிர்ப்பந் தம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்து தேர்தலுக்கான ஏற்பாடுகளை தேர்தல்கள் ஆணைக்குழு முன்னெடுத்துள்ளது.

இருப்பினும், அரசின் உயர்மட்டத்திலிருந்து தேர்தலை நடத்துவதற்கான பச்சைக் கொடி நேற்றுவரை காண்பிக்கப்படவில்லை என்று உதயன் அறிந்தது. (உ-5)

## வடக்கில்...

“கரையோரப் பிரதேசங்களில் கடல் கொந்தளிப்பாக இருக்கும். வடக்கு, வடமேல், வடமத்திய மாகாணங்கள் மற்றும் மலையகத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்யும் சாத்தியக்கூறுகள் உள்ளன.

காலி, கேகாலை, இரத்தினபுரி மற்றும் களுத்தறை ஆகிய மாவட்டங்களில் 100 மில்லி மீற்றர் மழை பெய்யக் கூடும்” என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் சுட்டிக்காட்டியது. (வ)

## திலீபனின்...

நினைவேந்தல் கடைப்பிடிக்கப்படும் இவ்வேளையில் இந்த விசமச் செயல் செய்யப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு எதிராக அகிம்சை ரீதியில் போராடி வீரச்சாவடைந்த தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் 30ஆவது ஆண்டு நினைவுநாள் தமிழர் தாயக மண்ணில் நேற்றுமுன்தினம் உணர்வெழுச்சியுடன் ஆரம்பமானது. நல்லூரில் திலீபனின் நினைவுத் தூபி அமைந்துள்ள இடத்திலும் நினைவு நாள் நிகழ்வு நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் நேற்றிரவு 10 மணியளவில் நினைவுத் தூபிக்கு முன்பாக ரயர் போட்டுக் கொளுத்தப்பட்டது.

இச்சம்பவம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த திலீபன் நினைவேந்தல் ஏற்பாட்டுக் குழு இச் சம்பவத்தை மிகவும் வன்மையாகக் கண்டிப்பதாக தெரிவித்தது. (வ-101)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், செப். 17

**சிவகுருநாதன் ஞாபகார்த்த கரப்பந்தாட்டத் தொடர்**

சிவகுருநாதன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் இளவாலை மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அச்சுவேலில் யுத் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை மத்திய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. இரவு 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டத் தொடர்**

கிளிநொச்சி மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் கிளிநொச்சி பிறிமியர் லீக் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் கிளிநொச்சி மத்திய கல்லூரி, சாந்தபுரம் விளையாட்டுக் கழக மைதானங்களில் இடம் பெற்றுவருகின்றன. சாந்தபுரம் விளையாட்டுக்கழக மைதானத்தில் இன்று காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மத்திய தீரா அணியை எதிர்த்து தூய தமிழ் அணி மோதவுள்ளது. நண்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் புதிய பாரதி அணியை எதிர்த்து இளந்தாரகை அணி மோதவுள்ளது. பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூ ஸ்ரார் அணியை எதிர்த்து கிருஸ்ண பாரதி அணி மோதவுள்ளது. கிளிநொச்சி மத்திய கல்லூரி. மைதானத்தில் காலை 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் இந்து இளைஞர் அணியை எதிர்த்து மகாதீபம் அணி மோதவுள்ளது. நண்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் பப்ரிஸ் அணியை எதிர்த்து யுனைற்ரெட் அணி மோதவுள்ளது. மதியம் 2.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து தலைவர் அணி மோதவுள்ளது.

**சரஸ்வதி ச.ச.நிலைய கால்பந்தாட்டத் தொடர்**

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் அரியாலை கால்பந்தாட்ட பயிற்சி நிலைய மைதானத்தில் இடம் பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் அண்ணா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நசரேத் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நவஜீவன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 1.45 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 3 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டத்தில் றேஞ்சர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் குறிஞ்சிக் குமரன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டத் தொடர்**

யாழ்ப்பாண மாவட்ட துடுப்பாட்டச் சங்கம் தனது அங்கத்துவக் கழக்களுக்கு இடையில் நடத்தும் துடுப்பாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில இன்று நடைபெறவுள்ளன. யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இன்று காலை 8 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் யாழ்ப்பாண பல்கலைக் கழக அணியை எதிர்த்து றைட்ரோன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 11 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஜொனியன்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கே.ஸி.ஸி.ஸி. விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஹாட்லி யைட்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஓல்ட் கோல்ட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அரியாலை விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சிறிகாமாட்சி விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

(ம-23)

# ஆவரங்கால் இந்து இளைஞர் கரப்பந்தாட்டத்தில் சம்பியன்



யாழ்ப்பாணம், செப். 17

கைதடி வளர்மதியின் கரப்பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் கிண்ணம் வென்றது.

கைதடி வளர்மதி சனசமூக நிலைய ஆண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. யாழ்ப்பாண மாவட்டத்தின் பலம்பொருந்திய அணிகளான ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகமும் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகமும் பலப்பரீட்சை நடத்தின.

ஐந்து செற்களைக் கொண்டதாக ஆட்டம் அமைந்தது. முதலாவது செற்றை 25:17 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞர் அணி இலகுவாகக் கைப்பற்றியது. அந்த அணி இரண்டாவது செற்றை 27:25 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:0 என்று முன்னிலை வகித்தது. இந்து இளைஞரிடம் கிண்ணம் செல்வதைத் தவிர்க்க வேண்டுமாயின் மூன்றாவது செற்றைக் கைப்பற்ற வேண்டும் என்ற நெருக்கடி ஆவரங்கால் மத்திக்கு ஏற்பட்டது. எனினும் அந்த செற் 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் இந்து இளைஞரின் வசமாக அந்த அணி 3:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது.

ஆட்ட நாயகனாக இந்து இளைஞர் அணியின் ஜெனகனும் தொடராட்ட நர்யகனாக மத்தியின் சிந்துவும் தெரிவாகினர்.

(ம-23,108)

## கலைமதி – டயமன்ஸ் இறுதியில் பலப்பரீட்சை

யாழ்ப்பாணம், செப். 17

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் 35 வயதுக்கு மேற்பட்ட அணிகளுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் நவிண்டில் கலைமதி அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி இன்று மோதவுள்ளது.

இமையாணன் மத்திய விளையாட்டுக் கழக மைதானத்தில் இன்று மாலை இந்த இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. இறுதியாட்டத்துக்கு முன்னதாக பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் மூன்றாம் இடத்துக்கான ஆட்டத்தில் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கரவெட்டி பிரதேச செயலக அணி மோதவுள்ளது. இந்த ஆட்டத்தைத் தொடர்ந்து இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. (ம-23)

## செந்தாரகை வி.கழக கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், செப். 17

கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் அணிக்கு 11 வீரர்கள் பங்குபற்றும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு.

சென். சேவியர் விளையாட்டுக் கழக அணிக்கும், கலைமகள் விளையாட்டுக் கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் சென். சேவியர் விளையாட்டுக் கழக அணி 6:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

வலைப்பாடு ஜெகமீட்பர் விளையாட்டுக் கழக 'பி' அணிக்கும், அல்லைப்பிட்டி சென். பிலிப்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையிலான ஆட்டத்தில் அல்லைப்பிட்டி சென்.பிலிப்ஸ் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது.

கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக அணிக்கும், பூநகரி இளந்தளிர் விளையாட்டுக் கழக அணிக்கும், இடையிலான ஆட்டத்தில் கிராஞ்சி செந்தாரகை விளையாட்டுக் கழக அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

(ம - 23)

## அன்ரனிஸ் டயமன்ஸ் இறுதியில் மோதல்

யாழ்ப்பாணம், செப். 17

உரும்பிராய் சென். மைக்கல் விளையாட்டுக் கழகம் மின்னொளியில் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்தில் பாசையூர் சென். அன்ரனீஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி இன்று மோதவுள்ளது.

உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இரவு 7 மணிக்கு இந்த இறுதியாட்டம் நடைபெறவுள்ளது. பரிசளிப்பு நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக உரும்பிராய் சென். மைக்கல் ஆலயத்தின் பங்குத் தந்தை பத்திநாதன் அடிகளார் கலந்து கொள்ளவுள்ளார். (ம-23)



உலகப் பதினொருவர் அணிக்கும், பாகிஸ்தான் அணிக்கும் இடையிலான மூன்றாவதும் இறுதியுமான ரி-20 ஆட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இந்த ஆட்டத்துக்கு முன்பாக பாகிஸ்தான் அணியின் முன்னாள் வீரர்களான மிஸ்பா, அப்ரிடிக்கு அந்த நாட்டு கிரிக்கெட் சபையால் கௌரவிப்பு நிகழ்வுகள் நடத்தப்பட்டன. (ம)

## எக்காலத்திலும் அவர் சிறந்தவர்

*டோனி குறித்து மலிக்* ரசிகர் ஒருவர் கேட்ட கேள்விக்கு டோனி ஒரு 'GOAT' என ஒரே வார்த்தையில் பதில் வழங்கி புகழாரம் சூட்டியுள்ளார் பாகிஸ்தான் வீரர் சொயிப் மலிக். Greatest Of All Time என்பதன் சுருக்கம் தான் GOAT. இதற்கு 'எல்லாக் காலத்திலும் சிறந்தவர்' என்பது பொருள்.

ரசிகர் ஒருவர் டோனி குறித்து ஒரு வரியில் உங்களின் அபிப்பிராயத்தை பதிவிடுங்கள் என்று மலிக்கிடம் கேட்க, அதற்கு மலிக் 'டோனி எக்காலத்திலும் சிறந்தவர்' என்று பதில் வழங்கியுள்ளார். பாகிஸ்தான் வீரர் ஒருவர் டோனி குறித்து பெருமிதமாகக் கருத்துத் தெரிவிப்பது இதுவொன்றும் முதல் முறையல்ல. மலிக் மட்டுமல்ல பாகிஸ்தான் வீரர்கள்பலரும்டோனிகுறித்து பெருமிதமாகக் கருத்துத் தெரிவித்துள்ளனர். அப்ரிடி, இன்சமாம் உல ஹக் என்று இந்தப்பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். பாகிஸ்தான் அணியின் தற்போதைய தலைவர் சர்பிராஸ் அகமட் தனது முன்மாதிரி டோனி என்று ஏற்கனவே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)





# இந்தியா – ஆஸி. ஆட்டம் ஆரம்பம்

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது. சென்னையில் இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது. சுமார் 30 வருடங்களின் பின்னர் ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் சென்னையில் பலப்பரீட்சை நடத்துகின்றன.

ஆஸ்திரேலிய அணி இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளது. இந்த இரண்டு அணிகளுக்கும் இடையில் ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகிறது. பகலிரவு ஆட்டமாக இன்றைய ஆட்டம் நடைபெறவுள்ளது.

இந்தத் தொடர் இந்தியாவில் நடைபெறுவதால் இந்திய அணி கிண்ணம் வெல்வதற்கான வாய்ப்பு அதிகம் என்று கருதப்படுகிறது. பன்னாட்டு டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள இந்திய அணி, ஆஸ்திரேலிய அணியை 4:1 என்ற அடிப்படையில் வீழ்த்தினால் ஒருநாள் தரப்படுத்தலிலும் முதலிடம் பிடிக்க வாய்ப்பு அதிகம்.

### ஆடுகளம் எத்தகையது?

இந்திய ஆடுகளங்கள் சுழல்பந்து வீச்சுக்குச் சாதகமானவை என்றவொரு பொதுவான அபிப்பிராயம் உள்ளது. ஆனால் இந்தத் தொடருக்கான இந்திய அணியில் இருந்து சுழல்பந்து வீச்சாளர்களான ஜடேயா மற்றும் அஸ்வின் இருவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இதனால் ஆடுகளம் வேகப்பந்துவீச்சுக்கு ஒத்துழைக்கக்கூடிய வகையிலும் இருக்கலாம் என்றும் பொதுவான எதிர்பார்ப்பு நிலவுகிறது.

### கடும் பயிற்சி

இந்தத் தொடரில் தத்தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட இரண்டு அணிகளும் நேற்றும், நேற்றுமுன்தினமும் கடும் வலைப்பயிற்சியில் ஈடுபட்டன. இந்திய அணியின் வீரர்களை விடவும் ஆஸ்திரேலிய வீரர்கள் சற்று அதிகமான மணித்தியாலங்களை வலைப்பயிற்சியில் செலவிட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

### ஏனைய ஆட்டங்கள்

ஒருநாள் தொடரின் ஏனைய ஆட்டங்களும் முறையே இந்த மாதம் 21ஆம் திகதி, 24ஆம் திகதி, 28ஆம் திகதி, ஒக்ரோபர் மாதம் முதலாம் திகதி ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளன. முறையே கொல்கத்தா, இந்தூர், பெங்களூர், நாக்பூர் ஆகிய மைதானங்களில் நடைபெறவுள்ளன. (ம)

# கோக்லியை சீண்டாதீர்கள்; ஆஸ்திரேலிய வீரர்களுக்கு கிலெஸ்பி அறிவுரை



“ ஆஸ்திரேலிய வேகப் பந்து வீச்சாளர்கள் பவுன்சர் பந்துகளை வீசி, விராட் கோக்லிக்கு பின்னடைவைக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். பவுன்சர்கள் அவரை யோசிக்க வைக்க வேண்டும். அதைவிடுத்து வார்த்தைப் போரில் ஈடுபடுவது கோக்லியைக் கட்டுப்படுத்தாது

“இந்திய அணியின் தலைவர் கோக்லியை ஆஸ்திரேலிய வீரர்கள் சீண்டக்கூடாது” என்று அறிவுரை வழங்கியுள்ளார் ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் வீரர் கிலெஸ்பி.

இந்தியா - ஆஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகின்ற நிலையில் இவ்வாறு அறிவுரை வழங்கியுள்ளார் கிலெஸ்பி.

“விராட் கோக்லியை சீண்டாதீர்கள். கோக்லி மிகவும் அற்புதமான வீரர். ஒருமுறை நீங்கள் களத்தடுப்பு வியூகத்தை கோட்டைவிட்டால் அதைப் பயன்படுத்தி அவர் பாதுகாப்பாகத் துடுப்பெடுத்தாடுவார். கோக்லிக்கு எதிராக வார்த்தைப் போரில் ஈடுபட வேண்டும் என்று ஆஸ்திரேலிய வீரர்கள் நினைக்கக் கூடாது சரியான திசையில் பந்து வீசி அவரை நெருக்கடிக்குள்ளாக்குவதே சிறந்த வழியாகும். ஆஸ்திரேலிய வேகப்பந்து வீச்சாளர்கள் பவுன்சர் பந்துகளை வீசி, விராட் கோக்லிக்கு பின்னடைவைக் கொடுக்க வேண்டும் என்று விரும்புகிறேன். பவுன்சர்கள் அவரை யோசிக்க வைக்க வேண்டும். அதைவிடுத்து வார்த்தைப் போரில் ஈடுபடுவது கோக்லியைக் கட்டுப்படுத்தாது” என்று கிலெஸ்பி மேலும் தெரிவித்தார்.

இவ்வாறான கருத்தை பிரபல கிரிக்கெட் விமர்சகரான இயன் சப்பல், ஆஸ்திரேலிய அணி இறுதியாக இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு டெஸ்ட் தொடரில் விளையாடிய போது ஆஸ்திரேலிய வீரர்களிடத்தில் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# கிண்ணத்தைக் கைப்பற்றியது பாகிஸ்தான்




உலகப் பதினொருவர் அணிக்கு எதிராக நடைபெற்ற ரி- 20 தொடரில் 2:1 என்ற அடிப்படையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது பாகிஸ்தான்.

தென்னாபிரிக்க அணியின் தலைவர் பிளாசிஸ் தலைமையில் உலகப் பதினொருவர் அணி பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் செய்து மூன்று ஆட்டங்கள் கொண்ட ரி-20 தொடரில் விளையாடியது. முன்னதாக முடிவடைந்த முதல் இரண்டு ஆட்டங்களில் இரண்டு அணிகளும் தலா ஒரு வெற்றியைப் பெற்றிருந்தமையால் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மூன்றாவதும் இறுதியானதுமான ஆட்டமே கிண்ணத்தைத் தீர்மானிக்கக்கூடிய ஆட்டமாக அமைந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற உலகப் பதினொருவர் அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 4 இலக்குகளை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக அகமட் செசாட் 89 ஓட்டங்களையும், அசாம் 48 ஓட்டங்களையும், சமன் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பெரேரா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்.

பதிலுக்குக் களமிறங்கிய உலகப் பதினொருவர் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 பந்துப்பரிமாற்றங்கள் வரை தாக்குப்பிடித்த போதிலும் 8 இலக்குகளை இழந்து 150 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இதனால் 34 ஓட்டங்களால் வெற்றிபெற்று கிண்ணம் வென்றது பாகிஸ்தான். அதிகபட்சமாக திசர பெரேரா 32 ஓட்டங்களைப் பெற்றார். வெறும் 13 பந்துகளில் அவர் 32 ஓட்டங்களைக் குவித்திருந்தார்.

பந்துவீச்சில் ஹசன் அலி 2 இலக்குகளையும், இமாட் வசிம், உஸ்மன் கான், ரயீஸ் மூவரும் தலா ஓர் இலக்கைக் கைப்பற்றினர்.

### நீண்ட நாள் கனவு

இலங்கை அணி கடந்த 2009ஆம் ஆண்டு பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்ட போது இலங்கை வீரர்கள் பயணித்த பேருந்து மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்த அசம்பாவிதத்துக்குப் பின்னர் எந்த அணியும் பாகிஸ்தானுக்குச் சென்று விளையாடியது கிடையாது. அனைத்து நாடுகளின் கிரிக்கெட் சபைகளும் தத்தமது அணியை பாகிஸ்தானுக்கு அனுப்ப மறுத்துவிட்டன. இடையே சிம்பாப்வே மட்டும் ஒரு தடவை பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. சிம்பாப்வே அவ்வளவு பெரிய அணியல்ல. இதனால் பாகிஸ்தான்-சிம்பாப்வே இடையிலான தொடர் பெரியளவில் எடுபடவில்லை. இந்த நிலையில் பாகிஸ்தானுக்கு வந்து விளையாடச் சம்மதித்த வீரர்களை ஒன்றிணைத்து ஒரு அணியாக்கி (உலகப் பதினொருவர் அணியை உருவாக்கி) அந்த அணியை பாகிஸ்தானுக்கு எதிராக களமிறக்க பாகிஸ்தான் கிரிக்கெட் சபை திட்டமிட்டது. பன்னாட்டு கிரிக்கெட் சபையும் இதற்கு சம்மதம் தெரிவித்தது. இந்தப் பின்னணியில் இந்தத் தொடர் நடைபெற்று முடிந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## VACANCIES TEACHERS

Pre-School & Primary Level ( Female )

**Qualifications:**

Ability to handle Maths, Science, English, Geography, ICT and History OF UK Curriculum.
1 year English medium teaching experience.

**Salary: Rs. 13500 to 25000**
(based on the experience)

Internationally recognised teacher certification will be provided at the end of the tenure!

Apply: within 7 days by post or email to
admin@visalamholdings.com

Visahlam INTERNATIONAL VIDYALAYA
127/1, TEMPLE ROAD, JAFFNA.
021 221 9695   075 979 9695

## பகிரங்க அறிவித்தல்

இத்தால் சகலருமறிக யாழ்ப்பாணம் இல: 44, 42 பெரியகடை வீதியில் இயங்கும் T. Kumarasamy Textiles (T.K), இல: 52, பெரியகடை வீதியில் இயங்கும் T. Kumarasamy Textiles (T.K) மற்றும் இல: 252, K.K.S. வீதி, யாழ்ப்பாணத்தில் இயங்கும் T. Kumarasamy & Sons (T.K) என்ற வியாபார ஸ்தாபனங்களுக்கு யாழ். மாநகர சபை எல்லைக்குள்ளோ அல்லது குடாநாட்டின் வேறெந்தப் பகுதியிலோ (T.K) என்ற பெயரில் எந்த கிளை ஸ்தாபனங்களும் இல்லை. அத்துடன் மேற்படி பெயர்களைக் கொண்ட எமது வியாபார ஸ்தாபனங்கள் கடந்த 50 வருடங்களுக்கு மேலாக வியாபார பெயர்கள் பதிவுச் சட்டத்தின் கீழ் முறையாக பதிவு செய்யப்பட்டு நடாத்தப்பட்டு வருகின்றன.

எனவே மேற்குறித்த முகவரியில் இயங்கும் எமது வியாபார ஸ்தாபனங்களைத் தவிர வேறு எந்தவொரு வியாபார ஸ்தாபனங்களும் எமக்கு இல்லை என்பதை இத்தால் எமது வாடிக்கையாளர்களுக்கு பகிரங்கப்படுத்துகின்றோம்.

**உரிமையாளர்:**
**T. Kumarasamy Textiles (T.K)**
**T. Kumarasamy & Sons (T.K)**

### அழகுக்கலை நிபுணர் தேவை (Beautician)

யாழ்ப்பாணத்தில் பல கிளைகளை கொண்ட Beauty Parlour (அழகுக்கலை) இற்கு அழகுக்கலை நிபுணர் தேவை. பழக விரும்புவர்களும் தொடர்பு கொள்ள லாம்.

**076 938 8052**

### Delivery Boy தேவை

- வயதெல்லை 18 -25
- License இருத்தல் அவசியம். (Light Vehicle License விரும்பத்தக்கது)
- ஓரளவு சுமைகளைத் தூக்க கூடியவராக இருத்தல் விரும்பத்தக்கது.

**076 316 3623**

### காணி விற்பனைக்கு

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகில் 5¼ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**077 634 1545, 077 029 3263**

### விரைவான வியாபாரத்திற்கு வியப்பான இலாபம் !

விரைவாக விற்பனையாகும் பொருள். 3 மடங்கு இலாபத்தையும் பெற்றுத் தரும்




தமிழில் தொடர்பு கொள்ள :
**077 391 8870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD

### வீடு வாடகைக்கு உண்டு

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் சகல வசதிகளுடனும் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.
(நிறுவனங்களுக்கு உகந்தது)

**070 399 7717, 077 454 4418**

உயர்தரப் பரீட்சையின் பின்னர்...

## Diploma in Spoken English

Full / Part time

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்

கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற

Now prepare for your **IELTS** Academic / General
Full time / Part time

Next exam date in Jaffna. 30 Sep. 2017 / 28 Oct. 2017

idp www.idp.com/srilanka

திருமணம் முடித்து Spouse விசாவில் *UK* செல்லவுள்ளவர்களுக்கு

**IELTS Life Skills A1 B1**

ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்

சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்

| | |
|---|---|
| ஜேர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி | Deutsch |
| நெதர்லாந்து மொழிப் பாடநெறி | Dutch |
| பிரான்ஸ் மொழிப் பாடநெறி | French |

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
565, Peradeniya Rd, Kandy. 13, 1st Chapel Rd, Colombo -6

British College of Educatin - **IELTS** பரீட்சை நிலையம்

## SharmilaTravels

TICKETS | HOTELS | HOLIDAYS | VISA | INSURANCE

**எமது யாழ் கிளை அலுவலகத்திற்கு**

- **Marketing**
- **Ticketing**
- **Visa விண்ணப்பங்களை நிரப்புதல்**

போன்றவற்றிற்கு அலுவலகர்கள் தேவைப்படுவதால் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்கள் தங்கள் சுயவிவரக்கோவைகளை பின்வரும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள்

**pettah@sharmilatravels.com**

ஒரு மாத கால பயிற்சி கொழும்பு தலைமை அலுவலகத்தில் வழங்கப்படும்

தொடர்புகளுக்கு: Sharmila Travels
289, Stanly Road, Jaffna.
021 222 0266

## ஹோட்டல், கேட்டரிங் உரிமையாளர்களே !!




தமிழில் தொடர்பு கொள்ள **077 391 8870**
WINRICH INTERNATIONAL(PVT)LTD


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 17.09.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.